D
V211,31'P00
P00.107.1
252784

வெளியீடு 25-4-2001 Issued 25-4-2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை மே 16, 2000 – தொகுதி 107 – எண் 1

**Tuesday the 16th May, 2000 – Volume 107 – No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai-600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

D
V211,31 Ꞩ00
Ꞩ00.107.1

222784

16-5-2000

## உள்ளடக்கம்

பக்கங்கள்

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் vii-x

Personnel of the Government of Tamil Nadu xi-xiv

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் xvii-xviii

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) xix-xxix

*1.* வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 1-41

*2.* சிறப்புக் கவன ஈர்ப்பு—

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விலை வீழ்ச்சியையொட்டி எழுந்துள்ள போராட்டம் 41-52

*3.* தகவல் கோரல்—

(அ) திருச்சி மாநகராட்சி விழா பற்றி மேயருக்கு முன்கூட்டியே தெரிவிக்காதது 52-56

(ஆ) தமிழ்நாடு கால்நடை உதவி மருத்துவர்கள் வேலைநிறுத்தம் 56-58

(இ) திருவில்லிபுத்தூர் பனை ஏறும் தொழிலாளர்மீது போடப்பட்டுள்ள வழக்குகளைத் திரும்பப் பெறுதல் மற்றும் கிருஷ்ணன்கோயில் ஊருக்குக் காவல் நிலையம் கொடுத்தல்—நன்றி நவிலல் 58-60, 61

(ஈ) சேலம் பேருந்து நிலையம் அருகேயுள்ள நிலம் பற்றிய வழக்கில் தனியாருக்கு சாதகமாக வந்த தீர்ப்பின்மீது தடையாணை பெறப்பட்டது 60, 61-63

பக்கங்கள்


4. கவன ஈர்ப்பு—

கோவை புதூர் சி.பி.எம். கல்லூரியில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தோர்க்கான பேராசிரியர் பணியிடங்களை நிரப்பக் கோரி ஆசிரியர்-அலுவலர் சங்கக் கூட்டமைப்பினரின் தொடர் உண்ணாவிரதம் — 64-68

5. அறிக்கைகள் அளித்தல்—

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு — 69

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) தமிழ்நாடு சட்டமன்ற (உறுப்பினர் தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2000 — 69-70

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 70-71

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 71-72

(ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 72-73

(உ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 73-74

(ஊ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 74-75

(எ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2000 — 177

7. அறிவிப்புகள்—

(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆஇ) — 70

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆஇ) — 71




பக்கங்கள்


7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆஇ) — 72

(ஈ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆஇ) — 73

(உ) பேரவை அலுவல் — 78

(ஊ) உறுப்பினர்களுக்கு மதிய உணவு வழங்குதல் — 106

(எ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2000 (ஆஇ) — 177

8. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1989-90, அளித்தல் — 75-77

9. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 41 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்
(ஆ) கோரிக்கை எண் 42 - பல்வகை
(இ) கோரிக்கை எண் 60 - பல்வகை மூலதனச் செலவு
(ஈ) கோரிக்கை எண் 61 - மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்
(உ) கோரிக்கை எண் 7 - மாநில சட்டமன்றம்
(ஊ) கோரிக்கை எண் 8 - தேர்தல்கள்
— 78-176

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 79,84,88,92, 95,101,106,117, 131,143,144, 151-161

டாக்டர் அ. செல்லக்குமார் — 108-112

திரு. பா. துரைசாமி — 112-115

திரு. வை. சிவபுண்ணியம் — 80,85,89,93,96, 102,116-120, 162,165,169, 171,174

| | பக்கங்கள் |
|---|---|
| **9. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி** | |
| திரு. கே. சுப்பராயன் | 80,85,117,143, 145,162,165 |
| திரு. ஜி. பழனிசாமி | 118 |
| திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் | 120-122 |
| திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் | 80,85-86,89,93, 97,102,122-125, 162,165,167, 169, 171,174 |
| திரு. சி. வேலாயுதன் | 125-127 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 128-132 |
| டாக்டர் மு. தேவராஜன் | 132-134 |
| *திரு. லா. சந்தானம் | 134-136 |
| திரு. டி. மணி | 137-138 |
| திரு. இரா. விசுவநாதன் | 138-142 |
| திரு. ஐ. கணேசன் | 79,84-85,89,92, 96,102,142-148, 162,164,167, 169,171,174 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 143 |
| திரு. சி. ஞானசேகரன் | 79,84,88-89, 92,95,101,148, 162,164,167, 169,171,174 |
| *திரு. வி.கே. லட்சுமணன் | 83,94,100,105, 148-151,163, 170,173,175 |
| **10. அரசினர் தீர்மானம்—** | |
| அரசுப் பணியிடங்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் இட ஒதுக்கீடு சம்பந்தமான வெள்ளை அறிக்கை | 178-268 |

| | பக்கங்கள் |
|---|---|
| **10. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி** | |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 178,181,182,183, 192,193,194, 196,210,211, 215,235,239,242, 245,256,258-268 |
| திரு. சி. ஞானசேகரன் | 179-189,242-243 |
| மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 181,184,185-186, 187-188, 192,215-216, 229,241 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 186,194-195 |
| *மாண்புமிகு திரு. கா.நா. நேரு | 186,187,188 |
| *மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் | 186,187,235 |
| திரு. ஜி.கே. மணி | 189-200,210 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 195, 257 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 182,196-197, 199, 200, 219, 229-230, 238, 239, 247-248 |
| *திரு. வி.கே. லட்சுமணன் | 199 |
| திரு. குழந்தை தமிழரசன் | 201-205 |
| திரு. ஜி. பழனிசாமி | 205-209,211 |
| *டாக்டர் க. கிருஷ்ணசாமி | 211-221 |
| *திரு. சி.டி. தண்டபாணி | 222-226 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 226-232 |
| திரு. இரா. விசுவநாதன் | 232-236 |
| *திரு. ஜி. நிஜாமுதீன் | 236-240, 242 |
| திரு. பா.மு. முபாரக் | 240 |

| | பக்கங்கள் |
|---|---|
| 10. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி | |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 240,241 |
| *திரு. லா. சந்தானம் | 243-246 |
| மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 243-245 |
| திரு. சி. வேலாயுதன் | 246-249 |
| *திரு. சி. அன்பரசன் | 249-251 |
| திரு. டி. மணி | 251-253 |
| திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் | 253-255 |
| திரு. மு. அப்பாவு | 247,255-258 |
| திரு. கே. சுப்பராயன் | 256 |
| 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 268-270 |



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**
பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு, மற்றும் வணிக வரிகள்.

2. கல்வி அமைச்சர் : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**
தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. வருவாய்த் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:**
வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**
நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

| | |
|---|---|
| 6. வேளாண்மைத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு. |
| 7. பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற் திட்டப் பணிகள், வனம் மற்றும் சின்கோனா. |
| 8. போக்குவரத்துத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம். |
| 9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள். |
| 10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை. |
| 11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள். |
| 12. பால்வளத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு. |



| | |
|---|---|
| 13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்). |
| 14. சட்டத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல். |
| 15. கைத்தறித் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** கைத்தறி, துணித் தொழில். |
| 16. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன் வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர். |
| 17. இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** விளையாட்டு, இளைஞர் பணிப்படை மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு |
| 18. வீட்டு வசதித் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி. |

| | |
|---|---|
| 19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு. |
| 20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்: செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம். |
| 21. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் | : மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்: கால்நடை பராமரிப்பு. |
| 22. சமூக நலத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்: மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம். |
| 23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங் குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர். |
| 24. சுற்றுலாத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்: சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம். |
| 25. கதர்த் துறை அமைச்சர் | : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு: கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம். |
| 26. மீன் வளத் துறை அமைச்சர் | : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம். |



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. **Chief Minister** | .. **The Hon. Kalaignar M. Karunanidhi:** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes. |
| 2. **Minister for Education** | .. **The Hon. Prof. K. Anbazhagan:** Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-Servicemen. |
| 3. **Minister for Health and Electricity** | .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:** Health, Medical Education and Family Welfare and Electricity. |
| 4. **Minister for Revenue** | .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:** Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors. |
| 5. **Minister for Rural Development and Local Administration** | .. **The Hon. Thiru Ko. Si. Mani:** Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply. |

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works and Forest** .. **The Hon. Thiru Duraimurugan:**
Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Forest and Cinchona.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:**
Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:**
Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K.N. Nehru:**
Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:**
Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:**
Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:**
Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:**
Handlooms, Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Youth and Pollution Control** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**
Sports, Youth Service Corps and Environmental Pollution Control.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:**
Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:**
Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information, Publicity and Printing** .. **The Hon. Thiru V. Mullaivendan:**
Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press.

| | | |
|---|---|---|
| 21. | **Minister for Animal Husbandry** .. | **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. | **Minister for Social Welfare** .. | **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. | **Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. | **Minister for Tourism** .. | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. | **Minister for Khadi** .. | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 26. | **Minister for Fisheries** .. | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

1. **திரு. அ.லெ. சுப்பிரமணியன்**
2. **திரு. சி.டி. தண்டபாணி**
3. **திரு. குத்தாலம் பி. கல்யாணம்**
4. **டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்**
5. **திரு. நா. பெரியசாமி**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின்
## முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன் பி.எஸ்.சி., பி.ஜி.எல். | - | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் |
| 5. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் |
| 6. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | - | குழு அலுவலர் |
| 7. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன் எம்.ஏ., பி.எல். | - | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 11. | திரு. சு. ராஜகுரு | - | குழு அலுவலர் |
| 12. | திரு. சௌரி அய்யாத்துரை | - | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 13. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 14. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 15. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| 16. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| 17. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன் எம்.எஸ்.சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| 29. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | - தலைமை நிருபர் |
| 30. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ | - தலைமை நிருபர் |
| 31. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 32. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| 33. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| 34. | திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| 35. | திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| 36. | திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - தலைமை நிருபர் |
| 37. | திரு. தி. உமாபதி, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| 38. | திருமதி ப. சரஸ்வதி எம்.ஏ., பி.ஜிஎல். | - சார்புச் செயலாளர் |
| 39. | திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| 40. | திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | - அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | - மயிலாடுதுறை |
| 4. | அப்துல் லத்தீப், திரு. ம. | - வாணியம்பாடி |
| 5. | அப்பாவு, திரு. மு. | - இராதாபுரம் |
| 6. | அமரமூர்த்தி, திரு. டி. | - அரியலூர் |
| 7. | அய்யலுசாமி, திரு. வி. | - கோவில்பட்டி |
| 8. | அருண்குமார், திரு. பா. | - மேட்டுப்பாளையம் |
| 9. | அழகராஜா, திரு. என்.ஆர். | - தேனி |
| 10. | அழகிரி, திரு. ச. | - சிதம்பரம் |
| 11. | அழகுவேலு, திரு. ச. | - கண்டமங்கலம் (செ.வ.) |
| 12. | அன்பரசன், திரு. சி. | - அறந்தாங்கி |
| 13. | அன்பழகன், திரு. வ. | - செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 15. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | - ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | - பவானிசாகர் |
| 18. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | - வில்லிவாக்கம் |
| 19. | ஆலடி அருணா, திரு. | - ஆலங்குளம் |

20. ஆவுடையப்பன், திரு. இரா. - அம்பாசமுத்திரம்
21. ஆறுமுகம், திரு. தி.ப. - திருச்செங்கோடு
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆனந்தன், திரு. பால. - வந்தவாசி (செ.வ.)
24. இரகுமான்கான், திரு. அ. - இராமநாதபுரம்
25. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. - மேலூர்
26. இராசமாணிக்கம், திரு. பி. - ஓரத்தநாடு
27. இராசன், திரு. வி.பி. - இராஜபாளையம் (செ.வ.)
28. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ - ஆண்டிமடம்
29. இராமசாமி, டாக்டர் வை. - பண்ருட்டி
30. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
31. இராமச்சந்திரன், திரு. ஒ.ஆர். - கம்பம்
32. இராமச்சந்திரன், திரு. சி.இரா. - தொண்டாமுத்தூர்
33. இராமச்சந்திரன், திரு. மா. - திருவோணம்
34. இராமலிங்கம், திரு. ஏ. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
35. இராமலிங்கம், திரு. செ. - திருவிடைமருதூர்
36. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
37. இராமஜெயம், திரு. ந. பூ. - மயிலாப்பூர்
38. இராஜ ரெட்டி, திரு. ச. - தளி
39. இராஜேந்தர், திரு. டி. - பூங்கா நகர்
40. இளங்கோ, திரு. கோ. - அவினாசி (செ.வ.)
41. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ.)



42. உதயசூரியன், திரு. தா. - சங்கராபுரம்
43. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
44. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
45. கணேசன், திரு. கே.சி. - ஜெயங்கொண்டம்
46. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
47. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
48. கருப்பண்ண உடையார், திரு. ந. - பாபநாசம்
49. கருப்புசாமி, திரு. டி. - உப்பிலியாபுரம் (ஆவா.)
50. கன்னையன், திரு. க. - தொட்டியம்
51. காஞ்சனா கமலநாதன், டாக்டர் - கிருஷ்ணகிரி
52. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
53. கிருஷ்ணசாமி, டாக்டர் க. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)
54. கிருஷ்ணன், திரு. எஸ்.வி. - நாங்குநேரி
55. கிருஷ்ணன், திரு. சீ. வெ. - வேடசந்தூர்
56. குண்டன், திரு. டி. - உதகமண்டலம்
57. குத்தாலம் பி. கல்யாணம், திரு. - குத்தாலம்
58. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
59. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. - கும்மிடிப்பூண்டி
60. குழந்தை தமிழரசன், திரு. - விருத்தாசலம்
61. கோதண்டம், திரு. ஏ. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
62. கோபால், திரு. பா. - மேட்டூர்
63. கோபு, திரு. சி. - அணைக்கட்டு

64. கோமதி சீனிவாசன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
65. கோவிந்தன், திரு. ப. - தாரமங்கலம்
66. கோவிந்தன், திரு. வெ. - பேரணாம்பட்டு (செ.வ.)
67. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
68. சண்முகம், திரு. கோ. - திருப்பத்தூர்
69. சண்முகம், திரு. சி. - ஆலந்தூர்
70. சண்முகம், திரு. ம. - கிணத்துக்கடவு
71. சண்முகம், திரு. வி.சி. - நெல்லிக்குப்பம்
72. சந்தானம், திரு. லா. - சோழவந்தான்
73. சந்திரசேகரன், திரு. சி. - சேந்தமங்கலம் (ஆவா.)
74. சந்திரசேகரன், திரு. துரை. - திருவையாறு
75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. - சமயநல்லூர் (செ.வ.)
76. சம்பத், திரு. ஏ.ஜி. - முகையூர்
77. சரஸ்வதி, திருமதி ஆர். - தாராபுரம் (செ.வ.)
78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
80. சிங்காரவேலு, திரு. வி.பி. - வால்பாறை (செ.வ.)
81. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
82. சிவராமன், திரு. ஆர். - திருப்பத்தூர்
83. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். - பனமரத்துப்பட்டி
85. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி



86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருத்தணி
87. சின்னய்யா, திரு. வெ. - திருமயம்
88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். - விருதுநகர்
89. சுகவனம், திரு. இ.ஜி. - பர்கூர்
90. சுடலைமுத்து, திரு. அ. - போடிநாயக்கனூர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. சு. - பொன்னேரி (செ.வ.)
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தரம், திரு. பி.ஆர். - இராசிபுரம்
95. சுந்தர், திரு. கே. - உத்திரமேரூர்
96. சுப்பராயன், திரு. கே. - திருப்பூர்
97. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. - திருவள்ளூர்
98. சுப்பிரமணி, திரு. பி.என். - ஆற்காடு
99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. - திருநெல்வேலி
100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி - மொடக்குறிச்சி
101. சுரேஷ் ராசன், திரு. என். - கன்னியாகுமரி
102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. - மருங்காபுரி
103. செங்கை சிவம், திரு. - பெரம்பூர் (செ.வ.)
104. செல்லக்குமார், டாக்டர் அ. - தியாகராய நகர்
105. செல்வம், திரு. ரெ. - குளித்தலை
106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. - கொளத்தூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. து. - உடுமலைப்பேட்டை

108. சேகரன், திரு. ஆர்.ஆர். - ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா. - திண்டிவனம்
110. சைதை கா. கிட்டு, திரு. - சைதாப்பேட்டை
111. சொக்கர், திரு. ஆர். - சிவகாசி
112. ஞானசேகரன், டாக்டர் ஆ - மேல்மலையனூர்
113. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
114. டேவிட் செல்வின், திரு. எஸ். - ஸ்ரீவைகுண்டம்
115. தங்கமணி, திரு. கே. - மானாமதுரை (செ.வ.)
116. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
117. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
118. தங்கவேல், திரு. அ.ல. - சேலம்-2
119. தண்டபாணி, திரு. சி.டி. - கோயம்புத்தூர் மேற்கு
120. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. - இளையான்குடி
121. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். - அரக்கோணம் (செ.வ.)
122. தமிழ்மணி, திரு. வீ. - செங்கல்பட்டு
123. தளபதி, திரு. கோ. - சேடப்பட்டி
124. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. - சேலம்-1
125. தனபால், திரு. வி.ஜி. - குடியாத்தம்
126. தாமரைக்கனி, திரு. இரா. - ஸ்ரீவில்லிபுத்தூர்
127. திசைவீரன், திரு. உ - பரமக்குடி (செ.வ.)
128. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
129. திருவேங்கடம், திரு. பெ.சு. - கலசப்பாக்கம்
130. துரைசாமி, திரு. பா. - வரகூர் (செ.வ.)



131. துரை. திரு. சே. - திருவெறும்பூர்
132. துரைமுருகன், திரு. - காட்பாடி
133. தெய்வநாயகம், திரு. எ. - மதுரை மத்தி
134. தேவராஜன், டாக்டர் மு. - பெரம்பலூர் (செ.வ.)
135. நடராசன், திரு. ஆ - பேரூர்
136. நடராஜன், திரு. த. - செஞ்சி
137. நயினா முகமது, திரு. கோ. - கடையநல்லூர்
138. நன்னன், திரு. கொ.வீ. - செங்கம் (செ.வ.)
139. நாகரத்தினம், திரு. ச. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
140. நாசர், திரு. ஏ.வி.ஏ. - புவனகிரி
141. நாஞ்சில் கி. மனோகரன், திரு. - திருவல்லிக்கேணி
142. நிஜாமுதீன், திரு. ஜி. - நாகப்பட்டினம்
143. நேரு, திரு. கா.நா. - லால்குடி
144. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. - சிவகங்கை
145. பத்மா, டாக்டர் - நன்னிலம் (செ.வ.)
146. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
148. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
149. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். - மதுரை மேற்கு
150. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
151. பன்னீர்செல்வம், திரு. மு. - சீர்காழி (செ.வ.)
152. பாண்டுரங்கன், திரு. ந. - பெரணமல்லூர்
153. பாலகிருஷ்ணன், திரு. சோ. - முதுகுளத்தூர்

154. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். - பவானி
155. பாலசுப்பிரமணியன், திரு. ப. - பட்டுக்கோட்டை
156. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
157. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
158. புரட்சிமணி, திரு. ச. - மங்களூர் (செ.வ.)
159. பூவேந்தன், திரு. த. - பழனி (செ.வ.)
160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. என். - தூத்துக்குடி
162. பெரியசாமி, திரு. என்.கே.கே. - ஈரோடு
163. பெரியசாமி, திரு. நா. - பெருந்துறை
164. பெருமாள், திரு. வி. - ஏற்காடு (ஆ.வா.)
165. பெர்னார்டு, திரு. இரா. - குளச்சல்
166. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - சிங்காநல்லூர்
167. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
168. பொன்முடி, திரு. எஸ்.எஸ். - பல்லடம்
169. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
170. மகேந்திரன், திரு. இரா. - நாட்ராம்பள்ளி
171. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. - திருநாவலூர்
172. மணி, டாக்டர் அ. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
173. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
174. மணி, திரு. டி. - விளவங்கோடு
175. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
176. மணி நாடார், திரு. எஸ்.எஸ். - சாத்தான்குளம்



177. மணிமாறன், திரு. இரா. - திண்டுக்கல்
178. மணிவர்மா, திரு. க. - தண்டராம்பட்டு
179. மதிவாணன், திரு. இரா. - இராயபுரம்
180. மதிவாணன், திரு. செ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
181. மனோகரன், திரு. கு. - தருமபுரி
182. மாயவன், திரு. தி.ப. - ஸ்ரீரங்கம்
183. மாரி அய்யா, திரு. பே. - புதுக்கோட்டை
184. மாரிமுத்து, திரு. அ. - வானூர் (செ.வ.)
185. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். - அரவக்குறிச்சி
186. முகம்மது கோதர் மைதீன், திரு. - பாளையங்கோட்டை
187. முத்து, திரு. வி. - சங்கரி (செ.வ.)
188. முத்துராமலிங்கம், திரு. ம. - திருமங்கலம்
189. முபாரக், திரு. பா.மு. - கூடலூர்
190. முருகேசன், திரு. பொ. - காஞ்சிபுரம்
191. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
192. முனிரத்தினம், திரு. ஆ.மு. - சோளிங்கர்
193. மூக்கப்பன், திரு. இரா. - சின்னசேலம்
194. மூக்கையா, திரு. எல். - பெரியகுளம்
195. மோகனதாசன், திரு. கோ. - பூம்புகார்
196. மோகன் கந்தசாமி, திரு. ப. - பொங்கலூர்
197. மோசஸ், டாக்டர் எம். - நாகர்கோவில்
198. ரங்கநாதன், திரு. எம். - குன்னூர் (செ.வ.)

199. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
200. ரவி அருணன், திரு. கே. - தென்காசி
201. ரவிசங்கர், திரு. கு. - விளாத்திகுளம்
202. ராசேந்திரன், திரு. ஏ. - போளூர்
203. ராணி, செல்வி க. - தலைவாசல் (செ.வ.)
204. ராமசாமி, திரு. ஏ.எம். - ஆத்தூர்
205. ராமச்சந்திரன், திரு. செ. - திருப்பரங்குன்றம்
206. ராஜு, திரு. எஸ். - பொள்ளாச்சி
207. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. - சத்தியமங்கலம்
208. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். - காங்கேயம்
209. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு
210. வல்லரசு, திரு. பி.என். - உசிலம்பட்டி
211. வாசுகி முருகேசன், திருமதி - கரூர்
212. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
213. விஜயகுமார், திரு. கே.எம். - சாத்தூர்
214. விஜயன், திரு. டி.சி. - திருவொற்றியூர்
215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. - வீரபாண்டி
216. வீரப்பன், திரு. கே.கே. - கபிலர்மலை
217. வெங்கடசாமி, திரு. பி. - ஓசூர்
218. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி
219. வெங்கடாசலம், திரு. ஜி.எல். - பாலக்கோடு
220. வெங்கடேசன், திரு.ச.க. - மதுராந்தகம்



221. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். - காவேரிப்பட்டினம்
222. வெங்கிடு, திரு. ஜி.பி. - கோபிச்செட்டிப் பாளையம்
223. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். - அரூர் (செ.வ.)
224. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
225. வேலாயுதன், திரு. சி. - பத்மநாபபுரம்
226. வேலுசாமி, திரு. வ. - மதுரை கிழக்கு
227. வேல்சாமி, திரு. க. - நாமக்கல் (செ.வ.)
228. வேல்துரை, திரு. பா. - சேரன்மகாதேவி
229. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்
230. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். - திருச்செந்தூர்
231. ஜோதிகண்ணன், திரு. மு.ந. - முசிறி
232. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
233. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு
234. ஆன் டி' மான்டி, திருமதி - நியமனம்
235. வெற்றிடம் - திருப்போரூர் (செ.வ.)

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. கே.வி. வெங்கடபதி - அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வைகாசி 3, விக்கிரம-திருவள்ளுவர் ஆண்டு 2031
## 2000 மே 16, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பிடிஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய*
*சுற்றத்தால் சுற்றப் படும்".*

வள்ளல் தன்மையும், வாஞ்சைமிகு சொல்லும் உடையவனை அடுத்தடுத்துச் சுற்றத்தார் சூழ்ந்துகொண்டே இருப்பார்கள்.

### 1. வினாக்கள்-விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் *641, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

**641—**

#### மருத்துவமனைக்கு வசதிகள்

***29320—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி, வத்தலகுண்டு அரசு மருத்துவமனைக்குப் போதுமான இட வசதி, உள்நோயாளிகளுக்குப் படுக்கை வசதி, மருத்துவமனையை விரிவுபடுத்துவதற்கும் மற்றும் மருத்துவர்களுக்குக்

குடியிருப்பு வசதி செய்வதற்கும் மருத்துவமனை அருகிலுள்ள இடத்தைக் கையகப்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வருங்காலத்தில் மருத்துவமனையில் கூடுதல் வசதிகள் உருவாகும் சமயத்தில் கூடுதல் இடம் தேவைப்படும் என்பதால், மருத்துவமனையின் அருகில் உள்ள இடத்தைக் கையகப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுக்க, திண்டுக்கல் மாவட்ட நலப் பணிகள் இணை இயக்குநரும், வத்தலகுண்டு அரசு மருத்துவமனை அலுவலரும் பணிக்கப்பட்டுள்ளனர்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வத்தலகுண்டில் — அதாவது கொடைக்கானல், பண்ணைக்காடு, தாண்டிக்குடி ஆகிய பகுதிகளிலே இருந்து எல்லாம் நிறைய மக்கள் — அந்த ஆஸ்பத்திரிக்கு வருகிறார்கள். தினசரி 600, 700 பேருக்கு மேல் வருகிறார்கள். 100 பேருக்கு மேலே உள்நோயாளிகள் வந்துகொண்டிருக்கிறார்கள். அங்கே இட வசதி மிகவும் போதாமல் இருக்கின்ற காரணத்தினாலேதான் — Golden Jubilee என்ற ஒரு கட்டடம் அருகிலேயே இருக்கிறது. அதற்கு என்று ஒரு emergency notice அனுப்பிக் கூட விரைவிலேயே அதையும் கையகப்படுத்த வேண்டும். அது மாத்திரம் அல்லாமல், M.L.A. நிதியிலிருந்துகூட இந்த ஆண்டு அந்தக் கட்டடம் கட்டுவதற்கு நானும் அந்தப் பணத்தை ஒதுக்கிக் கொடுக்கின்றேன் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனவே, அதன்மீது விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே பலமுறை எடுத்துச் சொன்னதன் அடிப்படையிலேதான் அந்த இடத்தைக் கையகப்படுத்தும்படி மாவட்ட நலப் பணிகள் இணை இயக்குநருக்கு அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அவர் உடனடியாக அந்த நிலத்தை அரசுக்கு ஒப்படைத்தவுடன் மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இந்த ஆண்டே கட்டடம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 642, திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**642—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***29589**—திரு. ம. முத்துராமலிங்கம்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, கூடக்கோவில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் கிளையை வீரபெருமாள்புரம் அல்லது சிவரக்கோட்டையில் நிறுவ அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வீரபெருமாள்புரம் மற்றும் சிவரக்கோட்டை கிராமங்களில் ஏற்கெனவே துணை சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இந்தத் துணை சுகாதார நிலையங்கள் கூடக்கோவில் ஆரம்ப சுகாதார நிலையத்தினைச் சார்ந்தவை. வீரபெருமாள்புரம் கிராமத்திற்கு 12 கிலோமீட்டர் தொலைவில் கள்ளிக்குடி ஆரம்ப சுகாதார நிலையமும், சிவரக்கோட்டை கிராமத்திற்கு 10 கிலோமீட்டர் தொலைவில் திருமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுகின்றன. மேலும், இக் கிராமங்கள் அடங்கிய கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகைக்குப் போதுமான அளவில் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் வீரபெருமாள்புரம் மற்றும் சிவரக்கோட்டை கிராமங்களில், புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது கிளை அமைக்க சாத்தியக்கூறுகளில்லை.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடக்கோவில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உட்பட்ட இந்தப் பகுதிகளில் கிளை சுகாதார நிலையம் செயல்படுவதில் கடந்த கால ஆட்சியில் மருத்துவ உதவியாளர்கள் வருவதில்லை என்ற அடிப்படையில்தான் இந்தக் கேள்வி போடப்பட்டது. தற்போது மருத்துவ உதவியாளர்கள் எல்லாம் அங்கு சிகிச்சைக்கு வருகிறார்கள். ஆனால், வாரத்திற்கு ஒரு முறை அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தினுடைய டாக்டர் அங்கே வர வேண்டும் என்று மக்கள் மிகவும் விரும்புகின்றார்கள். எனவே, இந்தக் கிளை சுகாதார நிலையங்களுக்கு வாரத்திற்கு ஒரு முறையாவது அந்த டாக்டர்கள் வந்து மருத்துவ சிகிச்சை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோர் ஆரம்ப சுகாதார நிலையத்திலும் இருக்கக்கூடிய டாக்டர்கள் வாரத்திற்கு ஒரு முறை அங்கே இருக்கக்கூடிய துணை சுகாதார நிலையங்களுக்குப் போய், நோயாளிகளைப் பார்க்க வேண்டுமென்று ஏற்கெனவே அரசு ஆணை இருக்கிறது. அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை இந்த அரசு நிறைவேற்றும்.

**திரு. மு. அப்பாவு:** அய்யா....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அய்யா, தெரிகிறது, உட்காருங்கள்.

வினா எண் 643, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**643—**

**வேளாண்மைக் கிடங்கு**

***23003**—திரு. க. மணிவர்மா:*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, தானிப்பாடியில் வேளாண்மைக் கிடங்கு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?





(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா, இருக்கையில் இல்லை.

வினா எண் 644, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**644—**

**ஏரியைத் தூர் வாருதல்**

***9679**—திரு. குழந்தை தமிழரசன்:*

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் வட்டம், வயலூர் ஏரியைத் தூர் வாரி குடிமராமத்துச் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்போது நிறைவுபெறும்?

(இ) அத்திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் வட்டம், வயலூர் ஏரியைத் தூர் வாரி புனரமைப்புச் செய்யும் பணி, ஏரிகள் தூர் வாரும் திட்டத்தின்கீழ் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இப்பணி முழுமையாக 30-9-1998-ல் முடிக்கப்பட்டது.

[2000 மே 16

(இ) இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 14.00 இலட்சம் ஆகும்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே எழுப்பிய வினா இது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஏரியை 14 இலட்சம் ரூபாயிலே செப்பனிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அந்த ஊர் மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு என் தொகுதியைச் சேர்ந்த புலியூர் மற்றும் கங்கைகொண்டான் ஆகிய ஏரிகளை எடுத்துத் தூர் வாரி சீரமைத்துத்தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன். அத்தோடு, வேறு சந்தர்ப்பம் இல்லாததால் ஒரு வினாவை எழுப்ப விரும்புகிறேன். என் தொகுதியைச் சேர்ந்த வெள்ளாற்றில் ஒவ்வோர் ஆண்டும் நிகழ்கிற வெள்ளப் பெருக்கினால் தேவங்குடி, கீரமங்கலம், கீரனூர், காவனூர் ஆகிய பகுதிகளிலுள்ள கிராமங்களில் கரையை ஒட்டி இருக்கின்ற வீதிகள் எல்லாம் ஆற்றிலே அடித்துச் செல்லப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அதுகுறித்து நான் கோரிக்கை கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதனை அதிகாரிகளுக்கு அனுப்பி, திட்ட மதிப்பீடு தயார் செய்யச் சொன்னார்கள். அவர்களும் பகுதி-2-ல் அதைச் சேர்த்திருக்கிறார்கள். அதற்கும் முன்னுரிமை கொடுத்து எடுத்து, அந்த ஆற்றிலே தடுப்புச் சுவர் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடுப்புச் சுவரைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு நிதிநிலைமைக்கேற்ப எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய ஆண்டு நிறைய குட்டைகளெல்லாம் கிராமப் பகுதிகளிலே வெட்டுவதற்கு அனுமதி கொடுத்தீர்கள். நிலத்தடி நீர் மேலே வருவதற்கு அது மிகுந்த பயனுள்ளதாக இருந்தது. ஆனால், சென்ற ஆண்டு அது இல்லை. இந்த ஆண்டாவது கொஞ்சம்— எங்களுடைய பகுதிகளிலே ஏரிகள் கிடையாது, 10, 12 குட்டைகள் வேண்டும் என்று நிறைய விவசாயிகள், கிராமத்துப் பெருமக்கள்



2000 மே 16]

எல்லாம் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஏரிகள் தூர் வாரும் திட்டத்தின் அடிப்படையில், தொகுதிக்கு ஒரு ஏரி என்று எடுத்து, அந்தப் பணி செம்மையாக முடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த ஆண்டு NABARD-னுடைய நிதி உதவியோடு முதல் கட்டமாக 44 ஏரிகளும், இரண்டாவது கட்டமாக 150 ஏரிகளும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. கூடுமானவரையில், அதுவும் தொகுதிக்கு ஒரு ஏரி என்று வருகிற வகையில் பரந்து எடுக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு நான் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய பகுதியிலே ஏரிகள் அதிகம் இல்லை, குட்டைகள்தான் இருக்கின்றன என்கிறார்கள். அந்தக் குட்டைகளுக்கு நீர் ஊறுகின்ற வகையில்தான், இப்போது மடை விட்டு மடை நீர்ப்பாசனம் நம்முடைய P.A.P.-ல் அளித்திருக்கிறோம். எனவே, அந்தக் குட்டைகளுக்குத் தண்ணீர் வரும். குறிப்பாக, ஏதாவது ஓரிரு குட்டைகளைச் சொன்னால், அவற்றை எடுத்துக்கொள்வதற்கு அரசு ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவைத் தொகுதிக்கு ஒரு இடத்தில் ஏரியை ஆழப்படுத்துகிறோம் என்று மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாகக் கடிதங்கள் வந்து, நாங்களும் எழுதிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். கடந்த 4 ஆண்டுகளாகக் கடிதங்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறோமே தவிர, நாங்கள் எழுதிக்கொடுக்கின்ற ஏரிகள் இதுவரையிலேயும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆகவே, நடப்பாண்டிலாவது அந்த ஏரிகளை எடுத்துச் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தூர் வாரும் திட்டத்தின் அடிப்படையிலேயே ஏரிகளைத் தூர் வார

எடுத்துக்கொள்கிறோம். மற்றவர்களுக்காவது தொகுதிக்கு ஒன்று. நான் அதை வெளியிட்டால் அதிகம் ஆகும். உங்களுடைய தொகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட ஏரிகளை நாங்கள் தூர் வாரியிருக்கிறோம். எனவே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தொகுதிக்கு ஒரு ஏரி என்பதைத் தவிர்த்து, தூர் வாரும் பணியின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் வேண்டாம்.

வினா எண் *645*, திரு. செங்கை சிவம், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**645—**

**பறவைகள் சரணாலயம்**

***25151*—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி அருகே புதியதாகப் பறவைகள் சரணாலயம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி அருகே கூத்தங்குளம்—காடாங்குளம் என்ற இடத்தில் *129.00* எக்டேர் பரப்பளவு கொண்ட பகுதி பறவைகள் சரணாலயமாக *1994* ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு, அது இப்போது நடைமுறையில் இருக்கிறது. அதைத்தவிர, புதியதாக பறவைகள் சரணாலயம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்த திருநெல்வேலிக்கு அருகிலுள்ள பறவைகள் சரணாலயத்திற்கு வெளிநாட்டுப் பறவைகள் எவையேனும் வருகின்றனவா? எந்த வகைப் பறவைகள் வருகின்றன? அவற்றின் எண்ணிக்கை எவ்வளவு? அங்கு சுற்றுலாப் பயணிகள் அதிகம் செல்கிறார்களா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டுப் பறவைகள் நிறைய வருகின்றன. பறவைகள் பலவிதம், ஒவ்வொன்றும் ஒருவிதம். அவற்றில் எதைச் சொன்னால் உங்களுக்குப் புரியப் போகிறது, எனக்கும் தெரியப் போகிறது? (சிரிப்பு) நம் ஊரை எடுத்துக்கொண்டால், கொக்கு, நாரை, மைனா என்றால் புரியும். வெளிநாட்டுப் பறவைகளுக்கு கிரே பெலிகான், பெயிண்டட் ஸ்டார்க், பெலிவிகான், ஓப்பன் பலாக் என்றெல்லாம் பெயர்கள் இருக்கின்றன. எதைச் சொன்னாலும், நீங்கள் பறவை என்று நினைத்துக்கொண்டு போகவேண்டியதுதான். (சிரிப்பு) எனவே பலவிதப் பறவைகள் வெளிநாடுகளிலிருந்து வருகின்றன. சுற்றுலாப் பயணிகளும் நிறையப் பேர் வருகின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலிக்கு அருகே மூன்றடைப்பு, கூத்தன்குளம், காடான்குளம் போன்ற பகுதிகளில் குளிர் காலத்தில் ஆஸ்திரேலியா போன்ற தூரக் கிழக்கு நாடுகளிலிருந்தெல்லாம் நிறையப் பறவைகள் வருகின்றன. ஜனவரி மாதத்தில் அங்கே குளங்களில் நீர் வற்றியவுடன் அந்தப் பறவைகள் மீண்டும் தங்களுடைய இருப்பிடங்களுக்குச் சென்றுவிடுகின்றன. ஆகவே, தொடர்ந்து — கூத்தன்குளம், மூன்றடைப்பு போன்ற ஊர்க் குளங்களில் — அவை மணிமுத்தாறு பாசனத்தில் வருகின்றன. அந்தக் குளங்களில் — போதிய அளவுக்கு நீரை நிரப்பிக் கொடுத்தால், அந்தப் பறவைகள் வந்து தங்குவதற்குள்ள வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால், ஆண்டு முழுவதும் அந்தப் பறவைகள் அங்கே வரும் என்று பெரியவர்களெல்லாம் சொல்கிறார்கள். அவ்வாறு செய்வதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

[2000 மே 16

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் இருந்து பறவைகள் ஒரு Season-க்குத் தான் வரும். செப்டம்பர் மாதம் வந்தால், நவம்பர் மாதத்திற்குள் போய்விடும். நீங்கள் மணிமுத்தாறிலிருந்து தண்ணீர் ஊற்றி வைத்தாலும் சரி, A.C. பண்ணிவைத்தாலும் சரி, அல்லது இரையைக் கொண்டுபோய் அதன் கூடுகளிலேயே போட்டுவைத்தாலும் சரி, அவை நிற்காது. அந்தப் பறவைகள் குறிப்பிட்ட காலத்தில் வரும், திரும்பவும் போய்விடும். யாரோ பெரியவர்கள் சொன்னார்களாம், ஆண்டு முழுவதும் இருக்கும் என்று. நானும் ஒரு பெரியவன்தான். அவை நிற்காது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 646, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**646—**

**பேருந்து இயக்குதல்**

***3664*—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பத்தூர் இரயில் நிலையம் அருகில் அமைந்திருக்கும் பூம்புகார் நகரிலிருந்து ஆவடிக்கு நேரடிப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அம்பத்தூர் இரயில் நிலையம் அருகில் அமைந்திருக்கும் பூம்புகார் நகரிலிருந்து ஆவடிக்கு நேரடிப் பேருந்து இயக்க ஏதுவான சாலை வசதியில்லை. பூம்புகார் நகரிலிருந்து ஆவடிக்கு நேரடியாகச் செல்லும் பயணிகளின் அடர்வு போதுமானதாக இல்லை. அருகில் அமைந்திருக்கும் அம்பத்தூர் இரயில் நிலைய நிறுத்தத்தைப் பயணிகள் பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, பூம்புகார் நகரிலிருந்து ஆவடிக்கு நேரடிப் பேருந்து இயக்கத் தேவை எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 647, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



2000 மே 16]

**647—**

**கூடுதல் பேருந்து**

***17211*—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் தொகுதியில் கிராமப் பகுதிகளில் கூடுதல் பேருந்து வசதிகள் ஏற்படுத்தித் தந்திட அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*19-3-1997* அன்று சட்டமன்றப் பேரவையில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும், அவரவர் விருப்பம்போல் இருவழித் தடங்களில் அரசுப் பேருந்துகள் இயக்கப்படும் என அறிவிப்புச் செய்ததன்பேரில், திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட இருவழித் தடங்களில் புதிய பேருந்துகள் ஒதுக்கீடு செய்து, அவை இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவை நீங்கலாக, *13-5-1998*-க்குப் பிறகு திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் பேருந்து வசதி — ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கின்ற நகரப் பேருந்துகள் மூலம் இடைப்பட்ட கால நேரங்களில், திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு, திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கிராமங்களில் கூடுதல் பேருந்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திண்டுக்கல் நகரம் அந்த மாவட்டத்தினுடைய தலைநகராக இருக்கின்ற காரணத்தினால், அந்த நகரத்தைச் சுற்றியுள்ள 20 கிலோமீட்டர் தூரத்திலிருந்து தினசரி ஐம்பதாயிரம் மக்கள் வந்து செல்கின்ற அளவுக்கு ஒரு பெரிய நகரமாக திண்டுக்கல் விளங்குகிறது. காலை, மாலை நேரங்களில் உடல் உழைப்புத் தொழிலாளர்கள் வந்து செல்வதற்குப் போதுமான பேருந்து வசதி இல்லாத காரணத்தினால் கூடுதலாக அனைத்துப் பகுதிகளிலும் பேருந்து வசதி ஏற்படுத்தித்

தருவதற்கு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்களுடைய கோரிக்கைகளை ஏற்று, அந்தத் தொகுதியில் மட்டும் 43 வழித் தடங்களில் இந்த நான்காண்டுகளில் 145 நடைகள் கூடுதலாகப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எந்தத் தொகுதியிலும் இல்லாத அளவுக்கு 145 நடைகள் கூடுதலாக அங்கே இயங்குகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், பொதுமக்களும் மேலும் கேட்பார்கள் என்று சொன்னால், அவர்களுடைய தேவைகள் குறித்து இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 648, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**648—**

### ஆலயங்களைத் தத்தெடுத்தல்

***34541**—திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமயம் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு அறநிலையத் துறை சார்பில் வருமானம் இல்லாத ஆலயங்களைத் தத்தெடுக்க, தொழிலதிபர்களை ஊக்கப்படுத்துமா?

(ஆ) ஆம் எனில், அதன் நிலை என்ன?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



(அ) மற்றும் (ஆ) தமிழக அரசு அறநிலையத் துறையின் சார்பில் வருமானம் இல்லாத ஆலயங்களுக்கு, தொழிலதிபர்களை அணுகி தத்தெடுக்குமாறு வேண்டுகோள் விடுக்க செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

முற்பகல் 9-45

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய போளூர் தொகுதியிலேகூட டி.வி.எஸ். நிறுவனத்தின் சார்பாக பல இலட்சம் ரூபாய் செலவு செய்து, அந்த ஜவ்வாது மலை அடிவாரத்திலே நல்ல கோயில்களை எல்லாம் கட்டி இருக்கிறார்கள். அதிலே பற்று இருக்கின்றவர்கள், இதுபோன்ற அறநிலையத் துறையின்கீழ் வருகின்ற திருக்கோயில் காரியங்களுக்குச், செலவு செய்ய வேண்டும் என்று எண்ணுகிற தொழிலதிபர்கள் இருக்கிறார்கள். அவர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அழைத்துப் பேசி, கவனிக்கப்படாமல் இருக்கின்ற பல்வேறு புராதனச் சின்னங்களாக விளங்குகின்ற கோயில்களை புனருத்தாரணம் செய்ய நடவடிக்கை எடுப்பார்களா என நான் அறிய விரும்புகிறேன்.

அதோடு இன்னொன்று, சமீபத்திலே திருவண்ணாமலையில் இருக்கின்ற அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் இருக்கின்ற கொடிக் கம்பம் சூறாவளிக் காற்றினால் சாய்ந்துவிட்டது. அந்தப் பகுதி மக்கள் அதைப் பெரிய விஷயமாக, ஏதோ நடக்கக்கூடாத ஒரு காரியம் நடந்துவிட்டது என்கிற எண்ணத்திலே இருக்கிறார்கள். அதற்குக்கூட டி.வி.எஸ். நிறுவனம் 75 இலட்சம் ரூபாய் அளவிலேகூட செலவழித்து அந்தக் கம்பத்தைப் புதுப்பிக்க உதவி செய்யத் தயாராக இருப்பதாக அந்தக் கோயில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொன்னார்கள். அதுபோன்ற நல்ல காரியங்களுக்கு அமைச்சர் அவர்கள் தீவிர நடவடிக்கை எடுத்து, விரைவாக அந்தக் கொடிக் கம்பத்தை மீண்டும் நிலைநாட்ட நடவடிக்கை எடுப்பார்களா என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே இப்போது நடைபெறுகின்ற திருப்பணிகள் அனைத்துமே நம்முடைய துறையிலிருந்து தரப்படுகின்ற பணத்தால் மட்டும் நடைபெறுவது இல்லை. இந்த 4 ஆண்டு காலத்தில் 1,856 கோயில்களுக்குத் திருப்பணிகள் நடந்திருக்கின்றன என்று சொன்னால், அதில் பெரும்பாலான கோயில்களுக்கு

[2000 மே 16

நன்கொடையாளர்கள் தந்த தொகையை வைத்துத்தான் அந்தத் திருப்பணிகள் சிறப்பாக நடைபெற்று இருக்கின்றன. எடுத்துக்காட்டாகச் சொல்லப்போனால், பட்டீஸ்வரம் துர்கை அம்மன் கோயிலுக்கு 2 கோடி ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டு இருக்கிறது. ஆனால் துறை தந்த தொகை போக தனி ஒருவரே 1 கோடி ரூபாய் கொடுத்து, அந்தத் திருப்பணிகளை மேற்கொண்டு இருக்கிறார்.

இதுபோன்று ஆங்காங்கு உள்ள அந்தக் கோயில்களின்மீது நம்பிக்கை உள்ளவர்கள், அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற இறைப்பணியாளர்கள், பற்றாளர்கள், வசதி வாய்ப்புப் படைத்தவர்கள், அவர்களுக்கு இருக்கிற வாய்ப்புக்கேற்ப அந்தந்தக், கோயில்களுக்கு உதவி செய்து திருப்பணிகளை மேற்கொள்கிறார்கள். எனவே, ஆங்காங்கு இருக்கிற கோயில் அறங்காவலர்களும், இணை ஆணையர்களும் தக்கவர்களை அணுகித்தான் இந்தப் பணிகள் நடைபெறுகின்றன.

அதுமட்டுமல்லாமல், இராமேஸ்வரம் கோயிலுக்கு இப்போது 14 கோடி ரூபாயில் திருப்பணிகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கு வடபுலத்தில் இருக்கின்ற சில குறிப்பிடத்தக்க பெருமக்கள் பெருந்தொகை தருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதை மதிப்புமிகு சங்கராச்சாரியார் அவர்களே உறுதி செய்து, அதற்கான உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நீண்டகாலமாக, மொட்டைக் கோபுரமாக இருக்கிற இரண்டு கோபுரங்கள் இராஜகோபுரங்களாக மாற்றப்பட வேண்டுமென்ற அடிப்படையில் அதற்கு திட்டமிடப்பட்டு இருக்கிறது. எனவே, ஏற்கெனவே தொழில் அதிபர்கள், வாய்ப்புக்கேற்பவும், வசதிக்கேற்பவும் தங்களுடைய உதவிகளைச் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரையும் சந்தித்துக் கேட்பது என்பதை நம்முடைய தமிழகத்தினுடைய அறநிலையத் துறையில் இருக்கிற ஏறத்தாழ 600-க்கும் மேற்பட்ட அலுவலர்களும் மேற்கொண்டு இருக்கிறார்கள். அறங்காவலர் குழுத் தலைவர்களும் மேற்கொண்டு இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நல்லதங்காள் பிறந்த ஊர் ஒன்று திருவில்லிப்புத்தூர் தொகுதி வத்திராயிருப்பு அருகே



2000 மே 16]

அச்சினாபுரம் என்ற இடத்தில் இருக்கிறது. அந்தக் கிணற்றிலேதான் வறுமையின் கொடுமையால் 7 குழந்தைகளைக் கிணற்றில் போட்டு இறந்துவிட்டாள் நல்லதங்காள். அவரைத் தெய்வமாகவே கும்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தை இலட்சக்கணக்கான பேர் கும்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தொழில் அதிபர்களோ, இந்து சமய அறநிலையத் துறையோ தத்து எடுத்துப் பிரபலமாக்க, நாட்டிற்கு எடுத்துக்காட்டாக விளங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிவலிங்கமோ அல்லது வேறு வகையான சிலையோ நிலை பெறுமானால் அதைக் கண்டுபிடித்துப் கோயில் கட்டி வழிபடுவதுதான் வழக்கம். ஆனால் நல்லதங்காள் தூக்கி வீசிய குழந்தைளைக் காவு கொண்ட ஒரு கிணற்றிற்கு இவ்வளவு வரவேற்பு இருக்கிறது என்று சொன்னால் மக்கள் எதை எதிர்பார்க்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. என்றாலும், அந்த இடம் கோயிலுக்கு உரிய — ஆகம விதிகளின்படி — சிறப்புத் தன்மை பெறுமா என்பதை ஆய்வு செய்து, அதற்குத் தக்கபடி முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்று முன்பு அமைச்சர் அவர்கள் பேசும்போது, ஒன்று குறிப்பிட்டார். மிகப் பெரிய தொழில் அதிபர்கள் — வடபுலத்திலே எல்லாம் பார்த்தால் பிர்லா மந்திர் என்று ஏராளமான கோயில்களை பிர்லா அவர்கள் — கட்டியிருக்கிறார்கள். அதுபோல, தமிழகத்திலேயும் பணம் படைத்தவர்கள் முன்வந்தால் தனியாகச் சில கோயில்களை எடுத்துச் செய்ய முடியும். அதற்கு, அரசின் துணையும் வேண்டியிருக்கிறது. உதாரணத்திற்கு, பவானி சங்கமேஸ்வரர் கோயிலில் இப்போது மரியாதைக்குரிய மகாலிங்கம் அவர்கள் எடுத்துச் செய்கிறார்கள். ஆனால் எவ்வளவுதான் நிதி வசூலித்தாலும், அரசு கொடுக்கின்ற நிதி போதவில்லை என்ற உணர்வு இருக்கிறது. இதுபோன்ற புகழ் வாய்ந்த கோயில்களுக்கு அரசு கொஞ்சம் தாராளமாக நிதி உதவி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அருமைக்குரிய நண்பர் சொன்னதுபோல, அருணாச்சலேஸ்வரர் கோயில் கொடிக் கம்பம் சாய்ந்ததை மக்கள் துர்சகுனமாகக் கருதுகிறார்கள். ஆகவே, அதில் உடனடியாகத்

தலையிட்டு அந்தக் கொடிக் கம்பத்தை மீண்டும் நிலைநிறுத்துவதற்கு அறநிலையத் துறை ஆவன செய்யுமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு விடைகள். ஒன்று, அருணாச்சலேஸ்வரர் கோயிலின் கொடிக் கம்பம் சூறாவளிக் காற்றால் சாய்ந்துவிட்டது. உடனடியாகச் சரிசெய்வதற்கு டி.வி.எஸ். நிறுவனம் முன்வந்திருக்கிறது. அதற்கான ஏற்பாடுகள் விரைந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வெகுவிரைவில் அந்தப் பணி முடிவுறும். இது ஒன்று.

இரண்டாவது, சங்கமேஸ்வரர் கோயிலைப் பொறுத்தவரை, ஏறத்தாழ 3 கோடி ரூபாய்க்குத் திட்டமிட்டு, அதற்கு இப்போது அரசு மட்டுமே 50 இலட்சம் ரூபாய் தருகிறது, அரசினுடைய பங்குத் தொகையாக. அதுபோக எஞ்சிய பகுதிகளை ஏற்கெனவே இருக்கிற நன்கொடையாளர்களிடம் பெற்றுத்தான் தரவேண்டும் என்பதுதான் பொதுவான விதி. அதுமட்டுமல்ல, உங்களுக்கே தெரியும். இப்போது நாம் கிட்டத்தட்ட 1856 கோயில்களுக்குக் குடமுழுக்குச் செய்திருக்கிறோம் என்று சொன்னால், அரசு நிதி என்பதிலே இதில் ஒரு சின்ன சிக்கல் இருக்கிறது. மற்ற துறைகளைப்போல நிதியெல்லாம் ஒட்டுமொத்தமாகத் திரட்டப்பட்டு அரசினுடைய கருவூலத்திற்குப் போய்த் திரும்பி வருவதில்லை. பழனி கோயிலுக்கு வருமானம் வருகிறது என்றால், பழனி கோயிலில்தான் அந்தப் பணம் இருக்கும். அது இந்த அரசுக்கு எந்தக் காரணம் கொண்டும் வராது. அரசு தன்னுடைய விருப்பத்தின் அடிப்படையில் சில பகுதிகளை ஒதுக்கி, அதற்கென்று சில பணிகளைச் செய்து தருகிறது. குறிப்பாக், ஆதிதிராவிட கோயில்களுக்கு 25 இலட்சம் ரூபாய் அரசு தருகிறது. பொதுவான சிறு சிறு திருப்பணிகளுக்கு 75 இலட்சம் ரூபாய் தருகிறது. அதுபோக, வேறுசில தவிர்க்க முடியாத பெரிய நிலைகளுக்குக் கொஞ்சம் பணம் தருகிறது. இதுதான் அரசு தரமுடியும். மற்றபடி அந்தந்தக் கோயிலில் இருக்கிற நிதியைக் கொண்டு செய்வது மட்டுமல்லாமல், — 8110 கோயில்களுக்கு ஒருகால பூசைக்குப் பணம் தந்து கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், அது முழுக்க; முழுக்க பழனி போன்ற பெருங்கோயிலிலிருந்து





எடுக்கப்பட்ட நிதியை வைப்பு நிதியாக வைத்து, அதிலிருந்து வருகிற வட்டியைக் கொண்டு தரப்படுகிறது. எனவே, அந்தப் பணிகள் முறையாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அரசு 50 இலட்சத்திற்கு மேல் தருவது என்பது நடைமுறை சாத்தியமல்ல. ஏற்கெனவே பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்களை நானும் சந்தித்தேன். அவர் வெகுவிரைவில் குடமுழுக்குச் செய்வதற்குத் தயார் நிலையில் இருக்கிறார். எனவே, தாங்கள் அதற்குக் குறுக்கே வரமாட்டீர்கள் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 649, திரு. ஏ.வி.ஏ. நாசர், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**649—**

### கலாச்சாரச் சீரழிவைத் தடுத்தல்

***36214*—திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

*மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சென்னையில் டிஸ்கோ நடனங்கள் என்ற பெயரால் கலாச்சாரச் சீரழிவு நடைபெறுவதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், இதனைத் தடுக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பண்பாட்டுச் சீரழிவு ஏற்பட்டுள்ளது என அறுதியிட்டுக்கூற இயலாது.

(ஆ) இதனைத் தடுக்க அரசிடம் நேரடி நடவடிக்கை ஏதும் இல்லை. ஆயினும் நல்ல தமிழிசை நடனங்களை ஊக்குவிப்பதன் மூலம் வேற்று மரபுசாராத கலைகளின் தாக்கம் வெகுவாகக் குறைக்கப்படும் என எதிர்பார்க்கலாம்.

[2000 மே 16

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிஸ்கோ நடனம் என்ற பெயரிலே இப்போது மாணவர்களின் ஆபாச நடனங்கள் காவல் துறையின் துணையோடுகூட நடந்து கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, சில நட்சத்திர ஓட்டல்களில் இப்போது Disco theque என்ற, கூட்டு நடனங்கள் என்ற பெயரிலே இளைஞர்களும், இளைஞிகளும் வழிகெட்டுப் போகக்கூடிய நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. இதன் காரணமாக குடி மற்றும் டான்ஸ் என்பது விடிய விடிய, நடக்கிறது. நான் ஒருமுறை என்னுடைய தொகுதியிலிருந்து கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக வரும்போது ஓரிடத்திலே பார்த்தேன். கிட்டத்தட்ட 200, 300 பேர், எல்லோரும் 20, 25 வயதுள்ள இளைஞர்களும், இளைஞிகளும். அவர்கள் எல்லோரும் குடித்துவிட்டு, கும்மாளமிட்டு, ஆடிப் பாடிக்கொண்டு வந்து கொண்டிருந்தார்கள். எனவே, இந்த மாதிரி நிலையில் தமிழகம் சென்று கொண்டிருந்தால், இளைஞர்களுடைய எதிர்காலம் நிச்சயமாக நாசமாகும். இதில் கலாச்சாரம் சீரழிகிறது என்பது மட்டுமல்ல, எதிர்கால இளைஞர்கள் வாழ்வும் சீரழிகின்ற காரணத்தால், இதில் அரசு தலையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, Disco theque போன்ற நடனங்களைக் கட்டுப்படுத்த ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே தமிழ்நாட்டில் அறிவியல் மேம்பாடுகள் அதிகமாக இல்லாத காலத்தில் நம்முடைய கலைகள் மட்டுமே சிறப்பாகப் பேணப்பட்ட காலத்தில், பரத நாட்டியம் என்ற முறையான கலைகள் மட்டுமே பயிற்றுவிக்கப்பட்டன. காலப்போக்கில் தெருக்கூத்துகள் வருகின்ற காலத்தில், கொஞ்ச காலத்திற்குப் பின்னால், நான் சொல்வது கிட்டத்தட்ட 20, 30 ஆண்டுகளுக்கு முன்னால், இசைத்தட்டு நடனங்கள் என்ற பெயரில் Record dance மிக அதிகமாக மேடைக்கு வந்துவிட்டது. நடிகவேள் எம்.ஆர். இராதா அவர்கள், நம்முடைய தலைவர் அவர்களோடு 'தூக்கு மேடை' நாடகத்தில் நடித்து, சீர்திருத்தக் கருத்துக்களை ஒருசேரப் பரப்பியவர். 1967ல் அவருக்கும், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் ஏற்பட்ட சிக்கலுக்குப் பின்னால் சிறைச்சாலையிலே இருந்தார். பிறகு வெளியில் வந்து நாடகம் நடத்தினார். இதோடு தொடர்புடையது என்பதற்காகப் பதில் சொல்கிறேன். அவர் ஒரு நாடகம் நடித்தபோது தலையிலே துண்டைப் போட்டுக் கொண்டு மேடைக்கு வந்தார். "என்ன இப்படி தலையிலே துண்டைப் போட்டுக் கொண்டு வருகிறீர்களே" என்று கேட்டபோது, அவர் சொன்னார், 'ஒன்றுமில்லை, நான் கொஞ்ச நாளாக வெளியூருக்குப் போயிருந்தேன், இப்போது வந்து பார்த்தால், நம் நாடு எவ்வளவோ முன்னேறியிருக்கிறது' என்று சொன்னார். ஏனென்று கேட்டால், ஓரிடத்திற்குப் போனேன். அங்கே இசைத் தட்டு நடனம் நடந்து கொண்டிருந்தது, அதற்கு ஒரு பாட்டை அவரே சொல்லி, ஆடியும் காண்பித்தார். 'அடி, நல்லா, நல்லா, நல்லா, நல்லா, பாருங்கடி' என்கிற பாட்டை. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், பொதுவாகவே தமிழ்நாட்டில் கலைகளால் பண்பாடுகள் சீரழிக்கப்படக் கூடாது என்று கருதி அன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்கள் பாண்டியனாகவும், அதற்கு எதிர்நிலையில் அழிம்பன் என்ற பாத்திரத்தில் நம்முடைய எம்.ஆர். இராதா போன்றவர்கள் நடித்த காலத்தில், பண்பாட்டை வளர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் அந்த நாடகங்களெல்லாம் போடப்பட்டன.



2000 மே 16]

முற்பகல் 9-55

காலப்போக்கில் சீரழிவு ஏற்படுகிறது என்ற உணர்வை அவரே உணர்ந்திருந்தார். ஆனால், இப்போது இருக்கின்ற இந்த 20 ஆம் நூற்றாண்டு நாகரீக காலத்தில் அதிகமான அளவிற்கு இளைஞர்கள், இளைஞிகள் இதுபோன்று கூடி நடனமிடுகிற அல்லது வரம்பு மீறுகின்ற, ஆபாசங்களைத் தொடுகிற அல்லது விரசத் தன்மைகளை உண்டாக்குகின்ற நடனங்கள் அதிகமாக இருப்பதாகவே கருதப்படுகின்றன.

அண்மையில்கூட ஓர் இதழில், இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னால், நம்முடைய மாமல்லபுரம் பகுதியில் இதேபோன்று 200, 300 இளைஞர்கள், இளைஞிகள் இதுபோன்று நடனம் ஆடினார்கள். அது கூச்சமாக இருந்தது என்று அந்த இதழ் எழுதியிருக்கிறது. எனவே, இதுபோன்ற தன்மைகள் தடுக்கப்படுவதற்கு, நேரடியாக நடவடிக்கைகள் என்பது ஒருபுறம் இல்லாமல், மரபுசார்ந்த கலைகளை வளர்ப்பதில் அதிகக் கவனம் இந்த அரசு செலுத்துகிறது என்பதை நீங்கள் அறியாதவர்கள் அல்ல. மூன்று கல்லூரிகளின் வாயிலாக பரதநாட்டியம் பயிற்றுவித்த நிலைமை போய் இன்றைக்கு 21 நிறுவனங்கள் வாயிலாக பரதநாட்டியம் பயிலப் பெற்றிருக்கிறது. எனவே, அதிகமான கலைகளுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. எனவே, இந்தச் சூழலில் ஒரு பக்கம் நேர் நிலையில் நின்று பண்பாட்டுச்

சீரழிவை உண்டாக்காமல், பண்பாட்டை, மரபைப் பாதுகாப்பதற்கு முயற்சி எடுக்கிற அதே நேரத்தில், பண்பாட்டுச் சீரழிவுகள் என்று திட்டவட்டமாக அறிந்தால் கண்டிப்பாகக் காவல் துறை நடவடிக்கை எடுக்கும். அதற்கும் அரசு ஆவன செய்யும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு விளக்கத்திற்குப் பிறகும் இன்னும் கையைத் தூக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

*வினா எண் 650, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

**650—**

**கணினி மையம் நிறுவுதல்**

***21736*—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் எந்தெந்தக் கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களில் கணினி மையம் நிறுவ அரசு நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின்கீழ் இயங்கி வரும் கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் நடத்தி வரும் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சியில் கணிப்பொறிப் பாடம் இல்லாததால் இந்நிலையங்களில் கணினி மையம் அமைக்கப்படவில்லை.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே பள்ளிகளிலே படிக்கக்கூடிய பிளஸ் 2 மாணவர்களுக்கு, சென்ற ஆண்டிலிருந்து நம்முடைய அரசால் கணினிப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு 10 ஆவது படிக்கக்கூடிய அனைத்துப் பள்ளிகளிலும் கணினிமயமாக்கி, அவர்களுக்குப் பயிற்சி அளிக்கக்கூடிய இந்தக் காலகட்டத்திலேகூட, கூட்டுறவுத் துறை மாணவர்களுக்கு கணினிப் பயிற்சி அளிக்காமல் இருப்பது ஒரு வருந்தத்தக்க செய்தி. இந்த ஆண்டிலாவது, கூட்டுறவு





மாணவர்களுக்கு அந்தப் பயிற்சியை அளித்து கூட்டுறவுத் துறை மூலம் நடத்தப்படக்கூடிய அனைத்து வங்கிகளையும் கணினிமயமாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடையிட்டு விடை சொல்வதற்கு மன்னிக்க வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிளஸ் 2 மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி அளிக்கப்படுவதைக் குறிப்பிட்டுவிட்டு, 10 ஆவது வகுப்பு மாணவர்களுக்கு அனைத்துப் பள்ளிகளிலும் அளிக்கப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். 10 ஆவது வகுப்பு மாணவர்களும் பிளஸ் 2வில் இருக்கிற அந்தப் பள்ளிகளில் அவர்கள் விரும்பிச் சேர்ந்து பயிலலாம் என்பதே தவிர உயர்நிலைப் பள்ளி என்ற அளவிலே உள்ள பள்ளிகளில் கணினிப்பொறிக் கல்வியை நேரடியாக அரசால் வழங்க இப்போது வாய்ப்பு இல்லை. அந்த அடிப்படையில் அந்தக் கேள்வியைக் கருதலாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் கணினிப் பாடத் திட்டம் இந்தக் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சியிலே சேர்க்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அதை அறிவித்திருக்கிறோம். நேரடியாகக் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலமாக 16 இடங்களிலே கூட்டுறவுப் பட்டயப் பயிற்சிக் கல்லூரிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போது 8 பாடத் திட்டங்கள் மட்டுமே எடுத்திருக்கிறோம். 1. கூட்டுறவுக் கொள்கை வரலாறு மற்றும் திட்டமிட்ட முன்னேற்றம், 2. கூட்டுறவுக் கடன், 3. கூட்டுறவு வங்கிகள், 4. கடன் சார்பற்ற கூட்டுறவுச் சங்கங்கள், 5. கூட்டுறவுச் சட்டம் மற்றும் தொடர்புடைய சட்டம், 6. கூட்டுறவுக் கணக்கியல், 7. கூட்டுறவுத் தணிக்கை, 8. கூட்டுறவு மேலாண்மை மற்றும் நிருவாகம். இந்த ஆண்டு 9ஆவது பாடத் திட்டமாக கணினிப் பயிற்சியும் இணைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 651, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

[2000 மே 16

651—

### உப்பு விற்பனை

*23917—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நியாயவிலைக் கடைகளில் அயோடின் மற்றும் இரும்புச் சத்து சேர்க்கப்பட்ட உப்பை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 284, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 7-10-1997 இல் அயோடின் உப்பு நியாயவிலைக் கடைகள் மூலம் விற்க வரையறுக்கப்பட்ட பொருள்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனைத்து நியாயவிலைக் கடைகளிலேயும், அயோடின் உப்பு விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்வதாகக் கூறியுள்ள நிலையில், கூடுதலாக மக்கள் விலை கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில், இன்று மத்திய அரசுகூட அயோடின் மற்றும் இரும்புச் சத்து சேர்ந்துள்ள உப்பை பயன்படுத்துவதற்குப் பதிலாக சாதாரணமாக மக்கள் பயன்படுத்தும் உப்பையே தூய்மைப்படுத்தி, குறைந்த சகாய விலையிலே கொடுக்கக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று முடிவெடுத்துள்ளது. அந்த நிலையை இங்கே, தமிழகத்திலேயும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாதாரண உப்பையே ஏழை எளியவர்கள் வாங்கிப் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு, தூய்மையான நிலையிலே கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.



2000 மே 16]

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்வி அயோடின் கலந்த உப்பு நியாயவிலைக் கடைகளில் விற்கப்படுமா என்பது. விற்கப்படுகிறது என்று சொன்னேன். இப்போது சாதாரண உப்புக்கு, மானிய விலையிலே தருவதுபோல என்று இதைக் கேட்கிறார். நம்முடைய தலைவர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்ட முதல் ஆண்டு, உணவுத் துறையினுடைய மானியம் 300 கோடி. இந்த ஆண்டு 1867 கோடி ரூபாய், இதற்காக இந்த அரசு செலவிடுகிறது. மேலும் கூடுதலான செலவை எடுத்துக்கொள்ளக்கூடிய நிலை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 652, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

652—

### வீடுகள் கட்டுதல்

*29445—திரு. ச. அழகுவேலு:

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலம் விக்கிரவாண்டி பேரூராட்சிக்கு வீடுகள் கட்டவும், தெரு மேம்பாடு செய்யவும் அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதைக்கு . இல்லை.

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி பேரூராட்சியில் குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் மூலமாக குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், குடிசையிலே இருக்கக்கூடிய மக்களுக்கு மாடி வீடுகள் கட்டித் தரவும், கடந்த ஆண்டு தங்களிடம் மனு கொடுத்தேன். குடிசை மாற்று வாரியத்தினுடைய அதிகாரிகள் அங்கே சர்வே செய்து, கடந்த ஆண்டு பொருளாதாரம் இடம் கொடுக்கவில்லை, இந்த ஆண்டு

கவனிக்கப்படும் என்று பதில் அளித்திருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு கருணை கூர்ந்து விக்கிரவாண்டி பேரூராட்சிக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அதனுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி பேரூராட்சிப் பகுதியில் குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகளான தெரு விளக்கு அமைத்தல், குடிநீர், கழிவுநீர்க் கால்வாய் வசதிகள், கழிப்பறை மற்றும் தெரு வசதிகள், 2000-2001 ஆம் நடப்பு நிதி ஆண்டில் மேற்கொள்ள நடவடிக்கைகள் தொடரப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 653, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**653—**

## தமிழ்ப் பட்டதாரிகளுக்கு வேலை

***11958—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழில் படித்துப் பட்டம் பெற்று, வேலை இல்லாமல் இருப்பவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு வேலையளிக்க அரசு ஏதேனும் சிறப்புத் திட்டம் ஏற்படுத்தியுள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்திய விடையைப் படிக்கத் தங்கள் அனுமதி கோருகிறேன்.

(அ) தமிழில் படித்துப் பட்டம் பெற்று, வேலையில்லாமல் இருப்பவர்களின் எண்ணிக்கை 1,10,956.



(ஆ) போதனா மொழி அடிப்படையில் வேலைவாய்ப்பில் முன்னுரிமையோ மற்றும் சலுகையோ அளிப்பது இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்று இந்திய உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே வழக்கு ஒன்றில் தீர்ப்பளித்துள்ள நிலையில், தமிழில் படித்துப் பட்டம் பெற்று வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வேலையளிக்கச் சிறப்புத் திட்டம் ஏதுமில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை. தமிழ்நாட்டில் தமிழில் படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு வேலை பெற இயலவில்லை என்பது துரதிருஷ்டமானதாகும். மாநில அரசு தமிழில் பட்டம் பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கலாம் என்று ஓர் அரசியல் நிலை எடுத்தாலும்கூட, அவற்றை நடைமுறையில் சாத்தியப்படுத்துவதற்குரிய அரசியல் சாசன ரீதியான வழிவகை இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளித்து இருக்கிறார்கள். எனவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது, அரசியல் சாசனத்தை அந்தந்த மாநிலத்தில் நிலவுகிற தாய்மொழியில் பட்டம் பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்குகிற முறையில் சட்டம் கொண்டு வருவதற்கு வழி ஏற்படுத்துகிற முறையில், திருத்தம் செய்ய மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வு பரிசீலிக்கக்கூடிய ஒன்றாகும். குறிப்பாக பயிற்சி மொழியாக, மாநில மொழியிலே படித்து பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதும், சலுகை தருவதும் இப்போது எந்த மாநிலத்திலும் இல்லை. ஆனால், ஆந்திராவிலே Service Commission நடத்தக்கூடிய Gazette-லே பதிவு பெறாத பணியிடங்களுக்கு பரீட்சை நடத்தி அதிலே கலந்துகொள்கிற — medium of instruction — தெலுங்கு மொழியிலே பட்டம் பெற்றவர்கள் அல்லது தெலுங்கு மொழியிலே படிப்பை முடித்தவர்களுக்கு 5 மார்க், கூடுதலாகக் கொடுக்கலாம் என்ற ஓர் உத்தரவைப் போட்டார்கள். ஆனால், துரதிருஷ்டவசமாக நீதிமன்றம், ஆந்திராவில் இருக்கக்கூடிய Tribunal, மக்கள் எல்லோருக்கும் சம உரிமை வேண்டும்; சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்ற அரசமைப்புச் சட்டம் 14-ஆவது பிரிவு, 16-ஆவது

பிரிவிற்கு விரோதமானது என்று சொல்லி, அந்த உத்தரவை ரத்து செய்துவிட்டது. High Court-ம் ரத்து செய்துவிட்டது. ஆனால், Division Bench-லே ஓர் அருமையான தீர்ப்புச் சொன்னார்கள். மொழிவழி மாநிலப் பிரிவினைக்குப் பின்னாலே, அந்தந்த மாநிலங்கள் அந்தந்த மாநில மொழியை, அந்தந்த வட்டார மொழியை ஆட்சி மொழியாக, பயிற்சி மொழியாக, நீதிமன்ற மொழியாக வைப்பது வரவேற்கத்தகுந்த ஒன்று; மக்களின் நலன் கருதி, தாய்மொழி நலன் கருதி, வட்டார மொழியின் நலன் கருதி என்று அருமையான தீர்ப்பைக் கொடுத்தார்கள். ஆனால், துரதிருஷ்டவசமாக Supreme Court-லே அது அடிபட்டுவிட்டது; உத்தரவு செல்லாது என்று சொல்லிவிட்டார்கள். ஆந்திர அரசு அதைத் திரும்பப் பெற்று இருக்கிறது. என்றாலும் நிச்சயமாக முதல்வர் அவர்களோடு கலந்து இது குறித்து நல்ல முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *654*, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**654—**

**சிறைச்சாலை நெறிமுறைகள்**

***31809*—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா·

(அ) சிறைச்சாலைகளில் தேச பக்தி, தெய்வ பக்தி, ஒழுக்கம் போன்றவற்றை போதிக்க அரசு ஏற்பாடுகள் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், பலன் எந்த அளவிற்கு உள்ளது?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.



(ஆ) மேற்கண்ட நடைமுறைகள் சிறைவாசிகள் தேசபக்தி, தெய்வ பக்தி மற்றும் ஒழுக்கத்துடன் சிறையில் இருக்கும் காலங்களில் மட்டுமல்லாது, விடுதலைக்குப் பின்னும் அத்தகைய நெறிமுறையைக் கடைப்பிடித்து புதிய வாழ்வினை மேற்கொள்ள உதவுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன், இருக்கையில் இல்லை. திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலையிலே கைதிகள் நீண்ட நாட்களாக இருக்கின்றபொழுது அவர்களுக்கு நாட்டுப் பற்றையும் ஒழுக்கத்தையும் வளர்க்க வேண்டும் என்ற வகையில், சிந்தனையைத் தூண்டுகின்ற வகையில், அவர்களைச் சிந்திக்க வைக்கின்ற வகையில் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பக்கூடிய ஒரு சூழ்நிலையையும், மேலும் அவர்களுடைய வாழ்வில் சிறப்பினைப் பெறுகின்ற விதமாகவும் அங்கேயே பாடம் சொல்லித் தருகின்ற வகையிலே நூல்களைப் படிக்கின்ற வகையிலேயும் ஒரு நிலையினை ஏற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** பேரவைத் தலைவர் அவர்களே, சிறைவாசிகள் மத்தியில் பகுத்தறிவு ஊட்ட வேண்டும்; அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற கருத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வற்புறுத்தினார்கள். சிறையிலே நல்ல ஒழுக்கத்தை ஏற்படுத்துவதன் மூலமாகவும், அவர்களிடத்திலே கல்வியைப் புகட்டுவதின் மூலமும் பகுத்தறிவைப் பரப்ப முடியும் என்பதில் இந்த அரசுக்கு நம்பிக்கை இருக்கிறது. எனவேதான் எல்லா சிறைக்கூடங்களிலுமே பள்ளிக்கூடங்கள் வைக்கப்பட்டு இருக்கின்றன. அதில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். 1022 பேர் அந்தப் பள்ளிக்கூடங்களிலே படித்து வருகிறார்கள். இன்னும் பட்டப் படிப்பை எடுத்துக்கொண்டால், 1996-ல் 22 பேர் பட்டப் படிப்பை பெற்று இருக்கிறார்கள்; 1997-ல் 6 பேர்; 1998-ல் 12 பேர்; 1999-ல் 14 பேர் பெற்று இருக்கிறார்கள். அதிலே 8 பேர் எம்.ஏ. பட்டதாரிகளாவர். எனவே நல்ல முறையிலே படித்தாலே அவர்கள் பகுத்தறிவுவாதிகளாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையும் நமக்கு உண்டு.

[2000 மே 16

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலையில் இருக்கக்கூடிய கைதிகளைச் சீர்திருத்தவாதிகளாக மாற்ற முடியும் என்பதை திகார் சிறையில் பணி புரிந்த கிரண் பேடி அவர்கள் நிரூபித்து இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இப்போது சிறையில் இருக்கக்கூடிய அனைத்துக் கைதிகளுக்கும்—ஏனென்றால், மதங்கள் அனைத்துமே அமைதியைப் போதிக்கின்ற விஷயங்களைத்தான் சொல்கின்றன. ஆனால், அவர்களுக்குத் தவறான விஷயங்கள் போதிக்கப்படுவதன் காரணமாக, பலர் இப்போது தவறான வழியிலே சென்றுவிட்டார்கள்—அவர்களைச் சீர்திருத்துகின்ற வகையிலே உண்மையான மார்க்கம் எது; உண்மையான சமயம் எது என்று அவர்களுக்கு விளக்கி அவர்கள் மனிதர்களாக வாழ்வதற்கான வழிவகையைச் செய்ய அரசு அனுமதிக்குமா; ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையான மார்க்கம் எது; உண்மையான கடவுள் எது என்பதை இன்னமும் நாம் நிர்ணயிக்க முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறோம். என்றாலும், சிறைவாசிகள் அவரவர்களுடைய மதத்தை, அவரவர்களுடைய நம்பிக்கையைத் தனிப்பட்ட முறையில் சிறைக்குள்ளே இருக்கும்போது கடைப்பிடிப்பதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

முற்பகல் 10-10

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மத்திய சிறைச்சாலையிலுள்ள முதல் வகுப்பு அறைகள் எல்லாம் மிகவும் பழுதடைந்து, சீர்கெட்டு இருக்கின்றன. அவற்றையெல்லாம் சீர் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது உண்மையாக இருக்குமானால், அவை ஒழுங்குபடுத்தப்படும், சீர் செய்யப்படும் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2000 மே 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சிறைச்சாலைகளில், கிளைச் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளின் குறைகளைக் கேட்டு நிவர்த்தி செய்வதற்காக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஏற்கெனவே அமைக்கப்பட்டிருந்தது. தற்போது அத்தகைய குழுக்கள் கலைக்கப்பட்டு இருக்கின்றன. மீண்டும் அதுபோன்ற குழுக்களை அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய குழுக்கள் 1995-லே கலைக்கப்பட்டுவிட்டன என்பது உண்மை. அதற்குப் பிறகு அத்தகைய குழுக்களை அமைப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கெல்லாம் மடல்கள் எழுதப்பட்டன. இதுவரைக்கும் 4 மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலிருந்து பட்டியல்கள் பெறப்பட்டிருக்கின்றன. 3 மாவட்டங்களுக்கு அந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டுவிட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 655, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**655—**

**வணிக வளாகம்**

***29943*—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தேசூர், பெரணமல்லூர் மற்றும் சேத்பட்டு பேரூராட்சிகளில் பிற்படுத்தப்பட்ட நலத் துறையின் மூலம் வணிக வளாகம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2000 மே 16

*(அ) திருவண்ணாமலை மாவட்டம், தேசூர், பெரணமல்லூர் மற்றும் சேத்பட்டு பேரூராட்சிகளில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் வழியாக வணிக வளாகம் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

**திரு. ந. பாண்டுரங்கன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை மானியக் கோரிக்கை விவாதத்திலேயே பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக பேரூராட்சி, நகராட்சிகளிலே இதுபோன்ற வணிக வளாகங்கள் கட்டப்படும் என்று துறையின் மூலமாகத் தெரிவிக்கப்பட்டது. நான் குறிப்பிடுகிற சேத்பட்டு, பெரணமல்லூர் மற்றும் தேசூர் பேரூராட்சிகளிலே நெடுஞ்சாலையை ஒட்டி அரசு நிலம் உள்ளது. வணிக வளாகம் கட்டப்படுமானால் துறைக்கும் வருமானம் வரும். இந்தத் துறை நல்ல பெயர் எடுக்கிற வகையிலே, அந்தப் பகுதிகளிலே வணிக வளாகம் அமைக்க அரசு முன்வருமா? 3 பேரூராட்சிகளிலும் இடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்து, வணிக வளாகம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் மறுபரிசீலனை செயவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகத்தின் வாயிலாக வணிக வளாகங்கள் கட்டுவது குறித்து—சென்னையைத் தவிர்த்து—ஏனைய மாவட்டங்கள் அனைத்திலிருந்தும் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரைகள் கோரப்பட்டன. இதுவரையில், வேலூர், விழுப்புரம், மற்றும் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து மட்டும்தான் பரிந்துரைகள் கிடைக்கப்பட்டுள்ளன. மற்ற மாவட்டங்களிலிருந்து வணிக வளாகம் அமைப்பதற்கான பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றால், தேவையின் அடிப்படையில் வணிக வளாகம் கட்டுவது குறித்துப் பரிசிலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 656, பெருந்துறை திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*



2000 மே 16]

**656—**

### சிறுதொழில் கடன்

***27991*—திரு. நா. பெரியசாமி:**

*மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெருந்துறை வட்டம், விசயமங்கலம் பகுதியில் இருந்து சிறுதொழில் கடன் கேட்டு அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) ஆம்.*

*(ஆ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு மூன்று விண்ணப்பங்கள் வந்துள்ளன. ஒரு விண்ணப்பத்திற்கு ரூ. 7 இலட்சம் கடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மற்ற இரண்டும் ஆய்வில் உள்ளன.*

**திரு. நா. பெரியசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில் கோழி வளர்ப்பு, விசைத்தறி, கைத்தறி, சிறிய அளவிலான நூற்பாலைகள் போன்ற தொழிற்சாலைகள் வளர்ந்து வருகின்றன. இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய முயற்சியின் காரணமாக தொழில் வளர்ச்சி மையம் விரிவான முறையிலே செயலாற்றத் தொடங்கியிருக்கிறது. அங்குள்ள தொழில் முதலீட்டாளர்கள் எளிய முறையிலே கடன் பெறுவதற்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தினுடைய கிளை ஒன்றை பெருந்துறையிலே அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டிலே அமைக்கப்பட்டிருக்கின்ற தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாக* Fab Printers *என்ற நிறுவனத்திற்கு ஏற்கெனவே கடன் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஈரோட்டிலே*

[2000 மே 16

கிளை அலுவலகம் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் பெருந்துறையிலே ஒரு கிளை அலுவலகம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 657, பெண்ணாகரம் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**657—**

**திரையரங்கு கட்டணங்கள்**

**22288*—**திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக சினிமா திரையரங்குகளில் அனுமதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேலாக திரையரங்கு உரிமையாளர்கள் விருப்பம்போல் பொது மக்களிடம் கட்டணம் வசூலிப்பதை ஒழுங்குபடுத்த அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திரையரங்குகளில் அரசால் நிர்ணயிக்கப்பட்ட நுழைவுக் கட்டணத்தைவிட கூடுதலாகக் கட்டணம் வசூலிக்கும் திரையரங்கு உரிமதாரர்கள் மீது தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் 1955-ன்படி நடவடிக்கை எடுக்க சென்னையைப் பொறுத்தவரை, சென்னை மாநகரக் காவல் ஆணையருக்கும், மாவட்டங்களைப் பொறுத்தவரை . அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளது.

முற்பகல் 10-15

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரையரங்குகளில் வகுப்புகள்வாரியாக கட்டணங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அதுபோல ஒவ்வொரு வகுப்புக்கும் இத்தனை இருக்கைகள் என்று அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கு உரிமங்கள் எல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்றைய



2000 மே 16]

நிலையில் தமிழகம் முழுவதும் பரவலாக எல்லா திரையரங்குகளிலும் கூடுதலான கட்டணத்தை வசூலிக்கிறார்கள். அதே நேரத்தில் இருக்கைகள் அனுமதிக்கப்பட்டிருப்பதற்கு மேலாக எவ்வளவு பேர் வேண்டுமானாலும் அனுமதிக்கப்படுகிறார்கள். அதனால் நின்றுகொண்டு பார்ப்பது, வெளியே இருக்கைகளை எடுத்து வந்து அமர்ந்து பார்ப்பது போன்ற சங்கடங்கள் எல்லாம் திரையரங்குகளில் உருவாகின்றன. இதை எதிர்த்து பல்வேறு அரசியல் கட்சிகள், எல்லாம்கூடப் போராடி வருகின்றன. குறிப்பாக தர்மபுரியிலே பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகள் அமைப்புகள் எல்லாம் போராட்டங்களை நடத்தின. தொடர்ந்து போராட்டங்கள் நடத்துகிற நேரத்திலே வருவாய்த் துறை அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் அழைத்துப் பேசி இந்த நிலை உருவாகக்கூடாது என்று சொல்லி, இந்த நிலையைக் கட்டுப்படுத்தினாலும்கூடத் தொடர்ந்து அப்படிப்பட்ட நிலை உருவாகின்ற காரணத்தால் இந்தக் கட்டணத்தைச் சீர்செய்து இருக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்களும் மாநகரத்தைப் பொறுத்தவரையில் மாநகரக் காவல் ஆய்வாளர்களும் அவர்களுடைய நேரடி மேற்பார்வையில் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு மொத்தமுள்ள 2422 திரையரங்குகளில் 1761 திரையரங்குகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 137 வழக்குகள் கள்ளச் சந்தையில் நுழைவுச் சீட்டுகளை அதிகக் கட்டணத்திற்கு விற்றதற்காக நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதிலே 277 வழக்குகள் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களைவிட கூடுதலாகக் கட்டணம் வசூலிக்கப்பட்டதாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதுமாத்திரம் இல்லாமல் 'C' படிவம் உரிமம் தற்காலிகமாக 557 திரையரங்குகளுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. 387 திரையரங்குகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதுமாத்திரம் அல்லாமல், தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் 1955, பிரிவு 8-ன்கீழ் குற்றம் இழைத்த திரையரங்கு உரிமையாளர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு பணத் தண்டனை மூலம் 238 திரையரங்குகளிலிருந்து 3,08,575 ரூபாய்

வசூலிக்கப்பட்டிருக்கிறது. அவ்வப்போது துறைச் சார்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இருந்தாலும் அதிகக் கட்டணம் கொடுத்து டிக்கெட் வாங்குவது தவறு என்ற ஒரு நல்ல பழக்கத்தைப் பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டும். பேருந்துகளில் டிக்கட் வாங்குகிறபோது ஐந்து பைசா கண்டக்டர் குறைவாகக் கொடுத்தால்கூட அதற்காக சண்டைபோடுகிற பொதுமக்கள் திரையரங்குகளில்போய் 10 ரூபாய் கொடுத்துவிட்டு ஐந்து ரூபாய் டிக்கெட்டை வாங்கிக்கொண்டு, சில்லரை வாங்குவதற்குக்கூட நேரம் இல்லாமல் சினிமா மோகத்தின் காரணமாக ஓடுகிற அப்படிப்பட்ட பழக்கத்திலிருந்து விழிப்புணர்ச்சி ஏற்பட்டால்தான் இதற்கு நிரந்தரத் தீர்வு ஏற்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்சாதன வசதிகளைப் பெற்றுள்ள திரையரங்குகளில் பல நேரங்களில் இந்தக் குளிர்சாதன வசதியை நிறுத்திவிடுகின்றனர். மேலும் தோற்றத்தில் அழகாக உள்ள பல திரையரங்குகள் சுகாதாரத்தைப் பேணிக் காப்பதில் தவறி விடுகின்றன. எனவே, இதுமாதிரியான நிலைமைகளைக் கண்காணிப்பதற்கும் குறைகளைக் களைவதற்கும் நம்முடைய அரசு தனியாக ஒரு படையை அமைத்து அதன்மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரையரங்குகளில் பராமரிப்புக் கட்டணம் என்ற பெயரில் கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிக்கிற வகையில் உயர்ரக டிக்கெட்டுகளுக்கு 50 பைசாவும், ஏனைய கட்டணங்களுக்கு 25 பைசாவும், Service Charges வசூலிக்கப்படுகிறது. அதனைக் கொண்டு திரையரங்குகள் சுத்தமாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்று அரசால் அறிவுரைகள் வழங்கப்பட்டு அவ்வப்போது அதிகாரிகள் மேற்பார்வையின்போது A.C. போடாமல் இருப்பது மற்றும் சுகாதாரச் சீர்கேடுகள் குறித்தும் தண்டனைகள் வழங்கப்படுகின்றன. திரையரங்கு உரிமைதாரர்கள் நாட்டு மக்களுடைய நலன் கருதி இப்படிப்பட்ட குறைபாடுகள் இல்லாமல் பார்த்துக்கொண்டு அரசினுடைய சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு ஒத்துழைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள தியேட்டர்களில் ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வொரு கட்டணம் ஒவ்வொரு தியேட்டரிலும் வசூல் செய்யப்படுகிறது. இதை அரசு ஒழுங்குபடுத்துமா? அதேசமயத்தில் இப்போது ஆபாசப் படங்கள் அதனுடைய சுவரொட்டிகள் எல்லாம் சென்னை நகரத்தில் அதிகமாக இருக்கின்றன. அவற்றைத் தடைசெய்வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய தொழில்நுட்பத் தணிக்கைக் குழுவினரால், திரைப்படச் சட்டம் 1952-ன்கீழ் ஆபாசப் படங்களை வெளியிடாமல் இருப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தணிக்கையின்போது ஆபாசப் படங்களை வெளியிடக்கூடாது என்று சான்றிதழ்கள் அளிக்க மறுக்கப்படுகிறது. இருந்தாலும்கூட சில திரைப்பட உரிமையாளர்கள் ஆபாசச் சுவரொட்டிகளை ஆங்காங்கே ஒட்டுவதை இந்த அரசு கண்காணித்து அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

சென்னை மாநகரத்தைப் பொறுத்த அளவில் திரையரங்குகளுடைய தரத்திற்கு ஏற்ற வகையில் அதனுடைய கட்டணம் நிர்ணயிக்கப்படுகிறது. முன்பு செல்வி ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, திரையரங்க உரிமையாளர்களே கட்டணத்தை நிர்ணயித்துக்கொள்ளலாம் என்கிற நிலை இருந்தது. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, திரையரங்கு உரிமையாளர்கள் விருப்பம்போல் கட்டணத்தை நிர்ணயித்துக்கொள்ளக் கூடாது அரசின் சார்பாகத்தான் அப்படிப்பட்ட கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்ற ஒரு நிலை எடுத்து கட்டுப்படுத்தி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. இராசமாணிக்கம்.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய நகரங்களில் மட்டுமல்லாமல் சிறிய நகரங்களில் கூட, பகல் நேரங்களில்கூட ஆபாசப் படங்கள் காட்டப்படுவது

[2000 மே 16

அரசுக்குத் தெரியுமா? அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கே ஆபாசப் படங்கள் காட்டப்படுகின்றனவோ அங்கெல்லாம் காவல் துறையும், மாவட்ட ஆட்சி நிர்வாகமும் நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட ஆபாசப் படங்கள் காட்டப்பெறும் இடங்களுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் செல்லாமல் இருப்பதோடு, மற்றவர்களையும் செல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்ள வேண்டும என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல தணிக்கை அனுமதி மறுக்கப்பட்ட காட்சிகள் திரையிடப்பட்ட திரையரங்குகள் மீது, அந்த திரைப்பட உரிமையாளர்கள் மீது அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஆபாசப் படங்களோ, தணிக்கை இல்லாத படங்களோ வெளியிடப்படுமானால் அப்படிப்பட்ட திரையரங்குகளுடைய 'C' படிவம் ரத்து செய்யப்படுகிறது. ஆகவே தியேட்டரே நடைபெறாமல் இருக்கிற ஒரு நிலையை அது உருவாக்குகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 658, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**658—**

**கால்நடை மருத்துவமனை**

***24153**—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 மே 16]

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கரம்பக்குடி ஒன்றியம், காட்டாத்தி ஊராட்சியில் இயங்கிவரும் பகுதி நேர கால்நடை மருத்துவமனையை முழு நேர மருத்துவமனையாக மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம், கரம்பக்குடி ஒன்றியம், காட்டாத்தி ஊராட்சியில் உள்ள கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்துவது குறித்து, தகுதி மற்றும் அரசின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே……

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம், உட்காருங்கள்.

வினா எண் 659, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**659—**

**கால்நடை மருந்தகம்**

***24193**—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு வட்டம் பொதட்டூர்ப்பேட்டையில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவத்தைப் பொறுத்தவரையிலே கிராமப்புறங்கள் மிகப் பெரிய அளவில் அரசிடம் எதிர்பார்க்கின்றன. குறிப்பாக இந்தப் பகுதியிலே கீசளம் கிராமத்திலே ஒரு புதிய மருத்துவமனை வேண்டும் என்றும் அதேபோல் பொதட்டூர்ப்பேட்டையில் புதிய கால்நடை மருந்தகம் வேண்டும் என்றும் நாங்கள் பல ஆண்டுகாலமாக கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கின்றோம். இந்த ஆண்டு எத்தனை கால்நடை மருந்தகங்கள் அரசால் அளிக்கப்படவிருக்கின்றன என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தின் கீழ்வரும் பொதட்டூர்ப்பேட்டையில் தற்போது ஒரு கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும் அக்கால்நடை கிளை நிலையத்திற்கு பானரவேடு என்ற இடத்தில் பார்வைக் கிளை நிலையம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. அதைப்போல பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் அருங்குளம், பள்ளிப்பட்டு ஆகிய இரண்டு இடங்களில் கால்நடை மருந்தகங்களும், அத்திமாஞ்சேலிபெட், உச்சிலி, நெடியம் ஆகிய மூன்று இடங்களில் கால்நடை கிளை நிலையங்களும் இவற்றிற்கு முறையே கோணச சமுத்திரம், கீழ்ச்சலம், கரிம்பேடு ஆகிய மூன்று இடங்களில் பார்வைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த ஆண்டு எத்தனை மருந்தகங்கள் தொடங்கப்பட்டன என்று கேட்டார். இந்த ஆண்டு கால்நடை மருந்தகங்கள் புதிதாகத் தொடங்குவதற்கு அரசால் நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை என்றாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த சிறப்புக் கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் சிறப்புச் சிகிச்சை முகாம்கள் சிறப்பான முறையில் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 660, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.



**660—**

**பிளாஸ்டிக் படகுகள்**

***32128*—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

*மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 1999-2000 ஆண்டில் மீனவர்களுக்கு அரசு மானியத்தில் எத்தனை பிளாஸ்டிக் படகுகள் வழங்கப்பட்டுள்ளன?*

*(ஆ) அவை எங்கெங்கே வழங்கப்பட்டன?*

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையைப் படிக்கிறேன்.*

*(அ) 1999-2000 ஆண்டில் மீனவர்களுக்கு அரசு மானியத்தில் கண்ணாடி இழையிலான படகுகள் 96 வழங்குவதற்கு ரூ.24 இலட்சம் நிதி ஒப்பளிப்பிற்கு ஆணை வழங்கும்படி கேட்டு அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டது. அரசு கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறையினால், 10-12-1999-ல் 249 எண்ணிட்ட அரசாணையில் கண்ணாடி இழையிலான கட்டுமரங்கள் வழங்க 1999-2000-க்கான மானியம் ரூ.11 இலட்சம் ஒப்புதல் வழங்கப்பட்டது. அதன்படி 44 பயனீட்டாளர்களுக்கு, ஒரு பயனீட்டாளருக்கு ரூ.25,000 வீதம் மானியம் வழங்கப்பட்டது.*

*(ஆ) கீழ்க்கண்ட மாவட்டங்களில் கண்ணாடி இழையிலான கட்டுமரங்கள் மானியத்தில் வழங்கப்பட்டன:*

*செங்கல்பட்டில், 26 கண்ணாடி இழையிலான கட்டுமரங்களும், கடலூரில் 16ம் தஞ்சாவூரில் 22-ம், ஆக மொத்தம் 44 வழங்கப்பட்டன.*

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதியிலே 9 மீனவக் குப்பங்கள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு எத்தனை படகுகள் வழங்குவதற்கு அனுமதி பெற்றிருக்கிறார்கள்? அதிலே தாம்பரம் தொகுதிக்கு ஒரு குப்பத்திற்கு 2 படகுகளாவது மானியத்திலே வழங்குவதற்கு ஏற்பாடு செய்வாரா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

[2000 மே 16

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தில் 100 கண்ணாடி இழையிலான கட்டுமரங்கள் வழங்குவதற்கு அரசால் 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு வழங்கப்பட்டது. ஒரு பயனீட்டாளருக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் மானியம் வழங்குவதற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டது. அப்படி அரசாணை பிறப்பிக்கப்பட்டதில், முதல் கட்டமாக 1998-99 ஆம் ஆண்டு 56 நபர்களுக்கு நாங்கள் வழங்கிவிட்டோம். அப்படி வழங்குகின்ற தருணத்தில், திருவாளர் பி.ஏ. பூமரான் உரிமையாளர் காந்திராஜன் என்பவர் மாருதி கட்டுமர உரிமையாளர் சரவணன் என்பவர் மீது சென்னையிலே ஒரு வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கின் தடையாணையின்படி நாங்கள் அந்தக் கண்ணாடி இழையிலான கட்டுமரங்கள், மீதமுள்ள 46 கட்டுமரங்கள் வழங்குவதை நிறுத்தி வைத்திருந்தோம். வழக்கு வாபஸ் பெற்றதால் மீண்டும் அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டு அந்த 46 கட்டுமரங்களையும் வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு, அந்த 46 ஐயும் வழங்கிவிட்டோம். ஆக மொத்தம், பகுதி இரண்டு திட்டத்தில், 1998-99 ஆம் ஆண்டுக்குப் பெறப்பட்ட 100 கண்ணாடி இழையிலான கட்டுமரங்களையும் நாங்கள் வழங்கிவிட்டோம். ஆனால், இது 50 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. இன்னொன்று, தமிழ்நாடு மாநில மீனவ முதன்மைக் கூட்டுறவு இணையத்தின் மூலம் 25 சதவீத மானியம் இதுபோன்ற மானியங்கள் எல்லாம் மீனவக் கூட்டுறவுச் சங்கங்ளுக்கு வழங்கப்படுகின்றன. அதன் மூலம் தங்கள் பகுதியிலுள்ள மீனவக் கிராமங்கள் பயனடையலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கண்ணாடி இழையிலான படகுகள் வழங்குவதில், மாவட்ட வாரியாக எந்த அளவுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன? கன்னியாகுமரி மாவட்டத்திற்கு கடந்த நிதியாண்டில் எவ்வளவு வழங்கப்பட்டது? புதிய நிதியாண்டில் எவ்வளவு வழங்க இருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.



2000 மே 16]

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கண்ணாடி இழையிலான கட்டுமரங்கள் மற்றும் இயந்திரங்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு கடல் பகுதிக்கும் வேறு, வேறு விதமான கலங்களை மீனவர்கள் செலுத்துகிறார்கள். இந்தக் கண்ணாடி இழையிலான கட்டுமரங்கள் கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களுக்கு வழங்கப்படவில்லை. காரணம் என்னவென்றால், அந்தப் பகுதியிலுள்ள மீனவர்கள் அந்தக் கலத்தைப் பயன்படுத்துவதில்லை. மேலும், Marine Fly-wood பலகையினாலான கட்டுமரங்களை அங்கே வழங்குவதற்கு அரசில் கருத்துரு இருக்கிறது. அரசாணை பிறப்பிக்கப்பட்டவுடன் அதை மானிய விலையில் வழங்க இருக்கிறோம். 1998-99 ஆம் ஆண்டில் கண்ணாடி இழையிலான கட்டுமரங்கள், சென்னை மாவட்டத்திற்கு 4-ம், செங்கற்பட்டு மாவட்டத்திற்கு 41-ம், கடலூர் மாவட்டத்திற்கு 4-ம், விழுப்புரம் மாவட்டத்திற்கு 6-ம், தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ஒன்றும், ஆக மொத்தம் 56-ம் முதல் பதிலிலே நான் வாசித்த அந்த 44-ம் சேர்த்து 100 வழங்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விலை வீழ்ச்சியையொட்டி எழுந்துள்ள போராட்டம்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திற்கு மற்ற மாவட்டங்களிலிருந்து சுற்றுலாப் பயணிகள் யாரும் வரக்கூடாது என்று மாவட்ட ஆட்சித் தலைவரே அங்கே ஓர் அறிக்கை விடக்கூடிய அளவுக்கு இப்போது அந்த மாவட்டம் போர்க்களம் ஆகிக்கொண்டிருக்கிறது. தேயிலை விலை வீழ்ச்சியின் காரணமாக, அங்கே இருக்கக்கூடிய மக்கள் எல்லாம் கொதித்தெழுந்து போகின்ற வாகனங்களை எல்லாம் உடைத்து, போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே இந்த அளவுக்கு அறிக்கை கொடுக்கக்கூடிய அளவுக்கு நிலைமை மோசமாகப் போய்க் கொண்டிருக்கின்ற

காரணத்தால், இந்த அரசு அந்தத் தேயிலை விவசாயிகளை எப்படியாவது அழைத்துப் பேசி, அவர்களுடைய தேயிலைக்கு உரிய விலை கிடைப்பதற்கு ஆவன செய்யுமா என்றும், மற்ற மாவட்ட சுற்றுலாப் பயணிகள் எல்லாம் அங்கே செல்வதற்கும் —ஊட்டி மலர்க் கண்காட்சியைக்கூட இப்போது cancel செய்திருக்கிறார்கள்— சுமூகமான சூழ்நிலையைக் கொண்டுவருவதற்கும் ஆவன செய்யுமா என்றும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(திரு. நா. பெரியசாமி, திரு. கே. சுப்பராயன், திரு. பி.ஆர். சுந்தரம் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லாம் இந்தப் பிரச்சினை குறித்து அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள், அவ்வளவுதானே? (குறுக்கீடு) சரி, நீங்கள் 3 பேரும் கொடுத்திருக்கிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் பதில் சொல்லுவார். (குறுக்கீடு) புதிதாக என்ன சொல்லப் போகிறீர்கள்? (குறுக்கீடு) ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். இப்போது ஓர் அசாதாரணமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சிறப்புக் கவன ஈர்ப்பு கொண்டுவருகிறீர்கள். நான் உங்கள் 3 பேர் பெயர்களையும் record செய்து கொள்கிறேன். முதலமைச்சர் பதில் சொல்லட்டும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பல்வேறு கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. ஒரு உறுப்பினர் பிரச்சினையைக் கிளப்பும்போது பல்வேறு உறுப்பினர்கள் silent ஆக இருந்தால் பிரச்சின ஏயைப் பிரதிபலிக்க முடியாது.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் யாரையும் silent ஆக இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. பெருந்துறை பெரியசாமி, பி.ஆர். சுந்தரம், எடப்பாடி கணேசன் ஆகிய எல்லோருமே அறிவிப்புக் கொடுத்திருப்பதாக record பண்ணிக் கொள்கிறேன். (குறுக்கீடு) சரி, ஆளுக்கு ஒரு நிமிடம் பேசுங்கள்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ........ (குறுக்கீடு)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பராயன், நீங்கள் எனக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும். கோபித்துக் கொள்வதில் அர்த்தம் கிடையாது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இல்லை என்று சொல்லவில்லை.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, அவர் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார் என்று......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரும் அனுமதி கேட்காமல் எழுந்து நிற்கக்கக்கூடாது.

**திரு. ஜி. பழனிசாமி:** ...... வழக்கமாகச் சொல்வீர்கள். ஒவ்வொரு கட்சிக்கும் ஒருவர் பேசுவார்கள்; இத்தனை பேர் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்; கட்சிக்கு ஒருவர் பேசவேண்டும் என்று வழக்கமாகச் சொல்வீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமிக்கு நன்றாகத் தெரிய வேண்டும். இதை நீங்கள் என் அனுமதி வாங்கிப் பேசவில்லை. நியாயமாகப் பார்த்தால், நான் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும். அப்புறம், நாளைக்கு ஜனநாயகமே இல்லையென்று ஒரு குற்றச்சாட்டு சொல்வீர்கள். சரி, பேசுங்கள்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......

**திரு. கே. சுப்பராயன்:** ஜனநாயகம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் மட்டும் நிறுத்தப்பட்டு விடக்கூடாது. எல்லோருக்கும் வழங்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது நியாயம்தான்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பிரச்சினைகளை எழுப்புகிறபோது, அரசு, அல்லது முதலமைச்சர், அல்லது அமைச்சர்கள் பதில் சொல்லக்கூடிய நிலைமை இருக்க வேண்டும். பதிலே சொல்ல முடியாமல் பிரச்சினையைக் கிளப்பிவிட்டால், ஏதோ அந்த

நேரத்திற்கு ஏதாவது ஒன்றைப் பதிலாக நாங்கள் சொல்வோம்; அது வேறு. பிரச்சினைக்குத் தகுந்த பரிகாரம். கண்டு பதில் சொல்ல வேண்டுமானால் முன்கூட்டி இந்தப் பிரச்சினை அமைச்சர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அதற்குப் பின்னர் அவையில் எழுப்பினால்தான் மாண்புமிகு உறுப்பினருடைய கடமை செம்மையாக நிறைவேறும்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் சொன்னதையெல்லாம் நான் ஒத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள். இப்படி அனுமதி இல்லாமல் எழுப்புவது அத்துமீறல். இதை ஞானசேகரன் அடிக்கடிச் செய்கிறார். இப்போது, பெருந்துறை திரு. பெரியசாமி பேசுங்கள்.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலே தேயிலை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுடைய பிரச்சினை குறித்து ஏற்கெனவே இந்த மாமன்றம் விவாதித்து இருக்கிறது. மாமன்றம் விவாதித்து, சில தீர்வுகளை வழிமுறையாகச் சொன்னதற்குப் பிறகு, கடந்த 14 ஆம் தேதி அன்று நான் நீலகிரி மாவட்டத்திற்குச் சென்றிருந்தேன். கூடலூர் நகரத்திற்கும் சென்றிருந்தேன். அங்கெல்லாம் விவசாயிகளுடைய கருத்துகளை நேரடியாகக் கேட்கிற வாய்ப்பினையும் பெற்றேன். அந்த அடிப்படையில் நம்முடைய மாநில அரசு தேயிலைக்கு விற்பனை வரியை 4 சதவிகிதமாகக் குறைத்திருப்பதும், மத்திய அரசு தேயிலை விற்பனைக்கு 5 ரூபாய் மானியம் வழங்கியிருப்பதும், இறக்குமதி செய்யக்கூடிய தேயிலைக்கு சுங்கத் தீர்வையை 15 சதவிகிதத்திலிருந்து 35 சதவிகிதமாக உயர்த்தி இருப்பதும், தேயிலை சாகுபடி செய்கிற விவசாயிகளுடைய பிரச்சினைக்குத் தீர்வை நேரடியாக வழங்குவதிலே தவறி இருக்கிறது என்கிற உணர்வை இந்த மாமன்றத்தின் மூலமாக அரசுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தப் பின்னணியிலேதான், அந்தக் கூட்டமைப்பின் தலைவர் திரு. உச்சி கவுடர் அவர்கள் தலைமையிலே பல்வேறு விவசாயிகள் வழிநெடுகிலும் கறுப்புக்கொடி உயர்த்தி வைத்திருக்கிறார்கள். கறுப்புப் பட்டைகளை அணிந்திருக்கிறார்கள். தேயிலை விவசாயமே நிலை குலைந்து போய் இருக்கிற நிலையை எடுத்துக் கூறி இருக்கிறார்கள். தினசரி ஆர்ப்பாட்டங்களும், பேரணியுமாக நடந்து வந்திருக்கின்றன.





அந்த அடிப்படையிலேதான், நேற்றையதினம் நீலகிரி மாவட்டத்ினுடைய தலைநகரான ஊட்டியிலே (மணியடிக்கப்பெற்றது) சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். பல்வேறு பத்திரிகைகளுடைய செய்திகளைப் பார்க்கிறபோது, குறைந்தபட்சம் 10 ஆயிரத்திலிருந்து அதிகபட்சம் 25 ஆயிரம் விவசாயிகள் உதகமண்டலத்திலே பேரணியாகத் திரண்டு, அவர்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தியபோது, அந்தக் கோரிக்கைகளின்மீது பரிவோடு கவனித்து சுமூகத் தீர்வு காண வேண்டிய நிர்வாகம், வேறு வழிமுறைகளிலே செயல்பட்டு, போராடிய விவசாயிகள் மீது காவல் துறை தடியடி நடத்தும் செயலில் ஈடுபட்டிருக்கிறது. இது மிகுந்த வருத்தத்திற்கும், கண்டனத்திற்கும் உரிய செயலாகும். விவசாயிகளை ஆத்திரமூட்டக்கூடிய வகையிலே காவல் துறை நிர்வாகம் செயல்பட்டு இருக்கக்கூடாது என்பதை நான் இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

மலர்க் கண்காட்சி நடத்துவதிலேகூட விவசாயிகள் ஒத்துழைப்புத் தருவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நடத்திய பேச்சுவார்த்தையின்போது தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், விழா என்ற அடிப்படையிலே எடுக்கப்படாமல் மலர்க் கண்காட்சி நடத்தலாம் என்றுகூடக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், துரதிருஷ்டவசமாக மாவட்ட நிர்வாகமும், காவல் துறை நிர்வாகமும் நடந்துகொண்ட நிலைமையின் காரணமாகவே இன்றைக்கு மலர்க் கண்காட்சியை இரத்து செய்ய வேண்டிய நிர்பந்தமும் ஏற்பட்டுவிட்டதாகக் கருதுகிறோம். அதுமட்டுமல்லாமல்,.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. நா. பெரியசாமி:** பதற்ற நிலை ஏற்பட்டு இருக்கிறது என்று மாவட்ட நிர்வாகமே அறிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. சுற்றுலாப் பயணிகளையும், வெளி மாநிலத்தவரையும் ஈர்க்கும் மலை ராணி, இன்றைக்கு சொந்த பூமியிலே பிறந்த தேயிலை உற்பத்தியாளர்களை வெளியேற்றக்கூடிய அளவிற்கு ஒரு துர்பாக்கியமான நிலைக்கு ஆளாகியிருக்கிற சூழ்நிலையில், மாநில அரசு விவசாயிகளின் மீது, சாகுபடியாளர்களின் மீது பரிவோடு கவனம் செலுத்தி, தீர்வு காண முன்வர வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி, பேச்சினை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

[2000 மே 16

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேயிலை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு அந்தத் தேயிலைக்குச் சரியான விலை கிடைக்காததுபற்றியெல்லாம் இந்த மாமன்றத்திலே முன்பு விரிவாகப் பேசப்பட்டு, அதற்குச் சில சலுகைகள் எல்லாம் கொடுக்கப்பட்டு, அதற்குப் பிறகும் அந்தத் தேயிலையினுடைய விலை குறைந்து இருக்கிற காரணத்தினால், அந்த விவசாயிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து அங்கே ஒரு போராட்டம் நடத்தியிருக்கிறார்கள்.

ஏற்கெனவே நாங்கள் கூறினோம். மலர்க் கண்காட்சி, இந்தத் தடவை வேண்டாம்; அந்தப் பிரச்சினை முடிந்ததற்குப் பிறகுதான் அமைக்க வேண்டுமென்று கூறினோம். ஆனால், அரசு அதற்குச் செவி சாய்க்கவில்லை. மலர்க் கண்காட்சியும் அங்கே நடந்து கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு, அவர்கள் எல்லாம் போராட்டம் நடத்தி அவர்களுடைய கோரிக்கையை நியாயமான முறையிலே எடுத்துச் சொல்லிய பிறகும் — நேற்றைக்குத்தான் காவல் துறை மானியக் கோரிக்கையிலே முதல்வர் அவர்கள்கூடப் பேசினார்கள் — இன்றைக்கு அவர்களை எல்லாம் அழைத்துப் பேசாமல், போலீஸார் அவர்களை அடித்து விரட்டித் துன்புறுத்தியிருக்கிறார்கள். இதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்த மலர்க் கண்காட்சியை இப்போது இரத்து செய்திருக்கிறார்கள். ஏற்கெனவே அரசு, இதிலே விழிப்பாக இருந்திருக்குமேயானால், இங்கு சட்டமன்றத்திலே பேசிய பிறகு அவர்களையும் அழைத்துப் பேசி, ஒரு முடிவு ஏற்படுத்தியிருந்தால், இந்த அளவுக்கு, மலர்க் கண்காட்சியை நீங்கள் தற்போது இரத்து செய்ய வேண்டிய அவசியம் இருந்திருக்காது. அவர்களுடைய பிரச்சினையும் இவ்வளவு பெரிய பூதாகரமாக ஏற்பட்டிருக்காது. ஆகவே, உடனடியாக அரசு அவர்களை எல்லாம் அழைத்துப் பேசி சுமுகமான தீர்வு காண வேண்டுமென்று கூறி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில், பச்சைத் தேயிலைக்கு நியாயமான விலை



2000 மே 16] [திரு. ஐ. கணேசன்]

கிடைக்கவில்லை என்று நீண்ட நாட்களாக, அந்த விவசாயிகள் போராடி வருகிறார்கள். அவர்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 8 சதவிகித வரியை, 4 சதவிகிதமாகக் குறைத்துக் கொடுத்திருக்கிறார்கள். இருந்தாலும், விவசாயிகளுக்கு, உற்பத்திக்கு ஈடாக விலை கிடைக்காத காரணத்தினால், போராட்டம் நடத்தக்கூடிய ஒரு துர்பாக்கிய நிலை ஏற்பட்டு, அது விபரீதமாக இப்போது நடந்து கொண்டிருக்கிறது. அதைத் தடுக்கும் வகையிலேயும், அதேபோல், நம்முடைய தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கக்கூடிய அளவுக்கு மலைகளின் இராணியாகத் திகழும் ஊட்டியிலே மலர்க் கண்காட்சி 104 ஆண்டு காலமாக மிகச் சிறப்பான முறையிலே, நடந்து வந்தது; இது 105-வது ஆண்டு — இப்போது நிறுத்தக்கூடிய அளவுக்கும் அந்தப் பிரச்சினை மிக வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது என்பதை அரசு உணர்ந்து, பச்சைத் தேயிலைக்கு எந்த வகையிலாவது, அவர்களுக்கு உரிய விலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டு, அவையினுடைய கவனத்தைக் கவர்ந்திழுக்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.......

**HON. SPEAKER:** You have not given notice. (குறுக்கீடு) No. Nizamudeen has not given notice. (Interruption) அவர் சொன்னார் என்றால்........ (குறுக்கீடு) I am the Speaker. I am telling you. (குறுக்கீடு) நான் இதிலே கொடுத்தவர்கள் பெயர்கள் பூராவையும் படிக்கிறேன். (குறுக்கீடுகள்) அவரும் கொடுக்கவில்லை. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலேயும், அதேபோன்று நம்முடைய மாநிலத்தினுடைய பல மாவட்டங்களிலும் தேயிலை உற்பத்திக்கு ஏற்றவாறு விலை கிடைக்காத காரணத்தினால், ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் தெளிவாக நாம் இந்தப் பிரச்சினையை விவாதித்தும், இந்தப் பிரச்சினைக்குச் சரியான தீர்வு ஏற்படாத காரணத்தினால், நீலகிரி மாவட்டத்திலே இப்போது ஒரு பதட்டமான நிலை ஏற்பட்டு, தேயிலைக்கு நியாயமான விலை வேண்டுமென்ற கோரிக்கையை அந்த விவசாய மக்கள் முன்னே வைத்துப் போராட்டம் நடைபெற்று வருகிற நேரத்திலும்கூட, மத்திய அரசினுடைய இறக்குமதிக் கொள்கையினால் ஏற்பட்டிருக்கிற இந்தப் பிரச்சினை, இந்த

[திரு. டி. மணி] [2000 மே 16

மாநிலத்தில் தேயிலை உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் மீது ஒரு பெரிய தாக்குதலை ஏற்படுத்தியிருக்கிறது. ஏற்கெனவே, மாநில அரசும், மத்திய அரசும் அறிவித்த ஆதரவு விலையும், அல்லது வரிக் குறைப்பும் இருந்தாலும்கூட, விவசாயிகளுக்கு அதனுடைய பலன் கிடைக்காத காரணத்தினால், இந்தப் பிரச்சினை மீண்டும் உச்சகட்டத்தை எட்டியிருக்கிறது. எனவேதான் நான் மாநில அரசைக் கேட்டுக் கொள்வதெல்லாம், நம்முடைய மாநில அரசு இந்தத் தேயிலை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்குப் போதுமான ஆதரவு விலையைத் தருவதன் மூலமாகத்தான், அது நேரடியாக அந்த விவசாயப் பெருங்குடி மக்களின் கையிலே கிடைக்கக்கூடிய வகையில் அந்த ஏற்பாடுகளைச் செய்கின்றபோதுதான், இந்தப் பிரச்சினைக்கு ஒரு சரியான தீர்வை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்று நாங்கள் கருதுகிறோம். அந்த வகையிலே இப்போது விவசாயிகள் ஒரு போராட்டம் நடத்தி வருகிறார்கள். அந்தப் போராட்டம் பற்றி பல திசைகளிலே எடுத்துச் சொன்னாலும்கூட, இப்போது அவர்கள் தடியடிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தவகையிலே இந்தப் பிரச்சினையை இந்த அரசு ஆழமாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டு, இந்தத் தடியடி சம்பந்தமாக ஒரு விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டு, அரசினுடைய கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு வருகிறேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எழுதப்படாத ஒப்பந்தம், அறிவிக்கப்படாத விஷயம் என்பதைப் போல, எனக்குச் சொல்லப்படாமலே இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் அல்லது சிறப்புக் கவன ஈர்ப்பு இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. முன்கூட்டியே சொல்லியிருந்தால், மேலும் சில விவரங்களை என்னால் சேகரித்து இருக்க முடியும். ஒத்திவைப்புத் தீர்மானம் அல்லது சிறப்புக் கவன ஈர்ப்பு வந்த பிறகுதான், நீலகிரி மாவட்டத்திலிருந்து ஏதாவது செய்தி வந்திருக்கிறதா என்று உடனடியாக நான் என்னுடைய செயலாளர்களுக்கு தாக்கீது அனுப்பி, அவர்கள், வந்துள்ள செய்தியை எனக்கு அனுப்பி வைத்திருக்கின்றார்கள்.



2000 மே 16] [கலைஞர் மு. கருணாநிதி]

முதலில் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். நீலகிரி மாவட்டத்திலே எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த விவசாயிகளின் சார்பாக ஒரு குழு, இந்தத் தேயிலைப் பிரச்சினைக்காக அமைக்கப்பட்டது. அது அரசியல் ரீதியாக இல்லாமல், விவசாயிகளுடைய பிரச்சினையை மாத்திரம் ஒட்டுமொத்தமாகக் கவனிக்கின்ற குழுவாக அமைந்தது. ஆனால், சில "பிரபு"க்களின் சூழ்ச்சியின் காரணமாக, விவசாயிகளை பகடைக்காயாகப் பயன்படுத்துகின்றவர்கள், தங்களுடைய தோல்வியை எப்படியாவது இந்த முறையிலே பழி தீர்த்து, அதை மறைத்துவிட வேண்டும் என்பதற்காக, நிறையப் பணம் செலவழிக்கப்பட்டு, விவசாயிகள் அங்கே தூண்டிவிடப்பட்டு இருக்கின்றார்கள் என்பதுதான் எனக்கு வந்துள்ள உண்மையான தகவலாகும்.

இந்தப் பிரச்சினை மாண்புமிகு உறுப்பினர்களால், இந்த மாமன்றத்திலே எழுப்பப்பட்டபோது, இந்தப் பிரச்சினைக்கு, ஒருவழியாக மாநில அரசால் செய்ய முடிந்தது என்ற அளவில்— 8 சதவிகிதம் என்று இருந்த விற்பனை வரியை, 4 சதவிகிதம் என்று மாற்றியமைத்தது தமிழக அரசு. அதிலே திருப்தி அடைந்தவர்களைப் போல, அறிக்கையெல்லாம் விட்டார்கள், அந்தக் குழுவிலே உள்ளவர்கள். அந்தக் குழுவிலே உள்ள தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் அல்ல, எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அறிக்கையெல்லாம் விட்டார்கள். அதற்குப் பிறகு, இந்தக் குழுவினர் சென்று, மத்திய அரசினுடைய வர்த்தகத் துறை அமைச்சரைச் சந்தித்துப் பேசிய பிறகு, அவரும் மத்தியிலே உள்ள பிரதமர் போன்றவர்களைக் கலந்து பேசி, அவர்களும் 5 ரூபாய் மானிய விலையாகத் தருவது என்கின்ற அறிவிப்பைச் செய்தார்கள்.

அதுமாத்திரமல்ல, இறக்குமதி ஆகாமல் இருக்க, தடுப்பதற்கு, அதிகப்படியான சுங்க வரியை . விதிக்க வேண்டுமென்ற விவசாயிகளுடைய கோரிக்கை ஏற்கப்பட்டு, 15 சதவிகிதமாக இருந்த சுங்க வரி 35 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. இன்னும் சொல்லப்போனால், இறக்குமதி வரி உயர்த்தப்பட்டதே தவிர, இன்னும் எந்தப் பொருளும் வெளிநாட்டிலேயிருந்து, இந்தத் தேயிலை சம்பந்தமாக, எந்த இலையோ, எதுவுமோ இங்கே இறக்குமதி ஆகவில்லை. இதுதான் உள்ள சூழ்நிலை. இவ்வளவு தாராளமாக உதவிகளைச் செய்தும்கூட, தேயிலைப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியவில்லை என்றால், அது அரசின் குற்றமல்ல. ஆனால், ஏதோ அரசின் குற்றமாக ஆக்க வேண்டுமென்கின்ற ஒரு

எண்ணத்தில், சர்வகட்சிகளும், எல்லாக் கட்சிகளும் இருந்தும்கூட, சில கட்சிகளைப் பற்றி கவலைப்படாமல், குறிப்பாக ஆளும் கட்சியைப் பழி தீர்க்க வேண்டுமென்கின்ற எண்ணத்தோடு, ஒரு ஊர்வலத்தை நேற்றையதினம் நடத்தியிருக்கின்றார்கள். அதுபற்றிய குறிப்பு எனக்கு வந்திருக்கிறது.

நீலகிரி மாவட்டத்தில், சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் 7000 பேர் தங்கள் உற்பத்திப் பொருட்களுக்கு கூடுதல் விலை கோரி, 15-5-2000 அன்று காலை 11-00 மணியளவில் அரை நிர்வாண ஊர்வலத்தை, ஊட்டி பேருந்து நிலையத்தில் இருந்து, மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் வரை நடத்தினார்கள். ஊர்வலம் முடிந்து கூட்டம் கலையும் நேரத்தில் கூட்டத்தினர் கல்வீச்சுச் சம்பவத்தில் ஈடுபட்டார்கள். இது வந்த அறிக்கை மாத்திரமல்ல. இன்று காலையில் பத்திரிகைகளிலேகூட இந்தச் செய்தி வந்திருக்கிறது. அது தி.மு.க. சம்பந்தமுடைய, ஆளும்கட்சி சம்பந்தமுடைய பத்திரிகைகள் அல்ல. பொதுவான, பத்திரிகைகளிலேகூட, இந்தக் கல்வீச்சு சம்பவத்தைப் பற்றிய செய்தி வந்திருக்கிறது, ஈடுபட்டார்கள் என்று. கூட்டத்தின் ஒரு பகுதியினர் 1000 பேர், சாரிங் ரோடு, ஸ்டேன்ஸ் சந்திப்பில் சாலை மறியல் மற்றும் கல்வீச்சுச் சம்பவத்தில் ஈடுபட்டார்கள். மேலும் பாதுகாப்புப் பணியில் இருந்த காவல் துறையினரைச் சுற்றி வளைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள். நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள், பாதசாரிகள், சுற்றுலா பயணிகள் ஆகியோரைத் தாக்க முற்பட்டார்கள். காவல் துறையினர் கூட்டத்தினரைக் கலைந்து செல்லுமாறு விடுத்த எச்சரிக்கைகள் பயனளிக்காமல் போனதால், ஊட்டி காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் திரு. சுகுமாரன் அவர்களால், ஊட்டி வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில், கூட்டத்தைக் கலைக்க குறைந்த அளவிலான தடியடிப் பிரயோகம் நடத்தப்பட்டது.

முற்பகல் 10-45

இந்தக் கல்வீச்சுச் சம்பவத்தில், ஊட்டி காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் திரு. சுகுமாரன், ஊட்டி மத்திய நகரக் காவல் நிலைய ஆய்வாளர் திரு. கே.சி. நந்தகுமார், தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 4-ஆம் அணியைச் சேர்ந்த பெண் காவலர் அழகேஸ்வரி, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 7-ஆம் அணியைச் சேர்ந்த காவலர்கள் 1005 ஆம் நம்பர் உள்ள காளீஸ்வரன், 1019 எண்ணுள்ள இராஜசேகரன், ஈரோடு மாவட்டம், ஆயுதப்படையைச்



சேர்ந்த காவலர்கள்—1907 எண்ணுள்ள முருகேசன், 1814 எண்ணுள்ள முருகேசன், 1775 எண்ணுள்ள சுந்தரராஜன், 1823 எண்ணுள்ள பாண்டுரங்கன், 1787 எண்ணுள்ள தேவேந்திரன் மற்றும் ஊட்டி மத்திய நகரக் காவல் நிலையத்தைச் சேர்ந்த முதுநிலைக் காவலர் 626 எண்ணுள்ள சந்திரசேகரன் ஆகிய 11 காவல் துறை அதிகாரிகள் காயம் அடைந்துள்ளார்கள். இவர்களில், காவலர் காளீஸ்வரன் மற்றும் பெண் காவலர் அழகேஸ்வரி ஆகியோர் ஊட்டி அரசு மருத்துவமனையில் உள்நோயாளிகளாகவும், மீதமுள்ளவர்கள் புறநோயாளிகளாகவும் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். கலவரத்திலே ஈடுபட்டவர்கள் தரப்பில் மூன்று பேருக்குக் காயம் ஏற்பட்டது. அவர்களில் ஒருவர் உள்நோயாளியாகவும், இருவர் புறநோயாளிகளாகவும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இக்கல்வீச்சுச் சம்பவம் தொடர்பாக, ஊட்டி மத்திய நகரக் காவல் நிலைய குற்ற எண் 520/2000, சட்டப்பிரிவுகள் 147, 148, 427 506(ii) 307, 188 ஐ.பி.சி. 3 (1) P.P.P. Act மற்றும் 7(1) (a) CLA Act-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 47 நபர்கள் கைது செய்யப்பட்டு காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். கூட்டம் கலைந்து செல்லும் வேளையிலும், அக்கும்பல் சாலை மறியல் மற்றும் அரசு பேருந்துகள் மீது கல்வீச்சு போன்ற சம்பவங்களில் ஈடுபட்டது. பாறாங்கற்களை சாலைகளில் வைத்துப் போக்குவரத்தைத் தடை செய்தார்கள்.

ஊட்டி-குன்னூர் சாலையில் எல்லநள்ளியில் ஒரு கும்பல், 2000 பேர் உள்ளவர்கள், 13-00 மணியிலிருந்து 17-00 மணி வரையிலே போக்குவரத்தைத் தடை செய்துள்ளார்கள். அதிரடிப்படையைக் கண்டவுடன் கூட்டம் கலைந்து சென்றது. ஊட்டி-கேத்திக்கு இடையில் மேட்டுப்பாளையம் செல்லும் நீலகிரி எக்ஸ்பிரஸ் வண்டி, கலவரக்காரர்கள் ஏற்படுத்திய தடைகளால் மூன்று மணி நேரம் காலதாமதமாகச் சென்றது. ஆரவேலு, எலித்துறை செலஸ் ஆகிய இடங்களில் அக்கும்பல் சாலை மறியலில் ஈடுபட்டது. அதனால, ஊட்டி—கோத்தகிரி, ஊட்டி-கோயம்புத்தூர் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இந்தக் கல்வீச்சு சம்பவத்தில் சேதமான பொருட்களின் மதிப்பு பற்றிக் கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. பிரச்சினைக்குரிய இடங்களில் காவல் துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். கோவை நகர காவல் துறை ஆணையர் (கோயம்புத்தூர் சரக கூடுதல் பொறுப்பு), கூடுதல் படையோடு வந்து நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தார். தற்போது நிலைமை அமைதியாக உள்ளது.

[கலைஞர் மு. கருணாநிதி] [2000 மே 16

இதுதான் "மிகவும் அமைதியாக" நடைபெற்ற விவசாயிகளுடைய போராட்டம், இந்தப் போராட்டத்தை இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரிக்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. தேயிலைப் பிரச்சினைக்காக, மாநில சர்க்கார், மத்திய சர்க்கார், இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள், எல்லா கட்சித் தலைவர்களும், நாமும் எவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டு பாடுபட்டு வருகிறோம் என்பதை நீங்கள் எல்லாம் உளமார உணர்வீர்கள். அப்படியிருந்தும்கூட, வேண்டுமென்றே இதை அரசியலாக ஆக்க வேண்டும் என்கின்ற ஒரு வீண் முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதை அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்காது என்கின்ற எச்சரிக்கையோடு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள் என்கிறேன்.

## 3. தகவல் கோரல்

### (அ) திருச்சி மாநகராட்சி விழா பற்றி மேயருக்கு முன்கூட்டியே தெரிவிக்காதது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் கடந்த 12-5-2000......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், ஏற்கெனவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். என்னுடைய அறையிலே வந்து சொன்னால், நான் உடனே முதலமைச்சர் அவர்களிடம் சொல்லலாம். அறையிலே வந்து பார்க்கிறபோது சொல்லமாட்டேன் என்கிறீர்கள். நீங்கள் இப்படி என்றால், உங்களுடைய கட்சி உறுப்பினர் திட்டமிட்டு, தினமும் இப்படிச் செய்து கொண்டிருக்கின்றார். நான் எப்படி அவையை நடத்த முடியும்?



2000 மே 16]

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** ஒரு விளக்கத்திற்காகத்தான் சொல்கிறேன். பெரிய பிரச்சினை ஒன்றுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, விளக்குங்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத்தானே தவிர, இதை ஒரு பெரிய குற்றச்சாட்டாக, இங்கே நான் சொல்லவில்லை.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியிலே, 12-5-2000 அன்று, மாநகராட்சி சார்பாக, ஒரு அழைப்பிதழ் அடித்து, விழாவிற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நம்முடைய சென்னை மாநகர மேயர் அவர்கள், அந்த விழாவில் கலந்துகொள்வதாக அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். மேயர் அவர்கள் நான் வருகிறேன் என்று ஒரு தகவல் கொடுத்தால், எங்களுடைய திருச்சிராப்பள்ளி மாநகர மேயர் அவர்கள், அவர்களை நல்ல முறையில் வரவேற்று, சிறப்பான முறையில் விழா நடத்துவதற்கு ஏற்பாடு செய்யத் தயங்கமாட்டார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். இருந்தும்கூட அந்த மேயர் அவர்களுக்கு ஒரு அவமானம் ஏற்படுகின்ற வகையில் என்று தான் சொல்ல வேண்டும், அந்த அளவிற்கு ஒரு அழைப்பிதழை, அடித்துக் கொடுத்து, அவர்களை அங்கே விழாவிற்கு அழைத்திருக்கிறார்கள். இதுபோன்ற நிகழ்ச்சி ஏற்கெனவே ஒரு தடவை நடந்திருக்கிறது. சரி, இது ஏதோ நம்முடைய அரசியல் உறவு கெட்டதன் காரணமாகச் செய்கிறார்கள் என்று நினைத்து, அவர்களும் நாகரீகம் கருதி, அந்த விழாவிலே கலந்து கொண்டு மேயர் அவர்களைப் பாராட்டி, சிறப்பான வாழ்த்துரையையும் வழங்கிவிட்டு வந்தார்கள்.

முற்பகல் 10-50

இது இரண்டாவது தடவை. நம்முடைய திருச்சி மாநகராட்சி மேயர் அவர்களே பத்திரிகைக்கு ஒரு செய்தி கொடுத்திருக்கிறார்கள். "திருச்சி மாநகராட்சியின் பெயரால் அழைப்பிதழ் அச்சடிக்கப்பட்டுள்ள இந்த விழாக்கள் பற்றி எனக்குத் தெரிவிக்கக்கூட இல்லை. அழைப்பிதழே வியாழக்கிழமை மாலைதான் எனக்கு வந்தது. நான் வாழ்த்திப் பேசுவதாக அச்சடிக்கப்பட்டிருந்தாலும் என்னிடம் யாரும் ஒப்புதல் பெறவில்லை. நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவை மாநகராட்சி சம்பந்தப்பட்டவை.

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [2000 மே 16

தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினர் திரு. பரணிகுமார் நிதி ஒதுக்கி இருந்தாலும், மாநகராட்சிதான் எடுத்து செயல்படுத்துகிறது. இவ்வளவு காலமும் மாநகர மக்களின் நலன் கருதி நான் மிகவும் இணக்கமாகவே செயல்பட்டு வந்துள்ளேன். கரூர் புறவழிச்சாலையில் பாலத்தை நமது வணக்கத்திற்குரிய மேயர் ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தபோதுகூட நான் பின்னுக்குத் தள்ளப்பட்டேன் என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். என்றாலும்கூட, விழாவில் கலந்து கொண்டு, நாகரீகமாக வாழ்த்திப் பேசிவிட்டு வந்தேன். ஆனால், இந்த முறை இவர்களுடைய செயல்பாடுகள் மிகவும் புறந்தள்ளுவதாக இருக்கின்றன. எனவே, வணக்கத்திற்குரிய ஸ்டாலின் இன்று கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் புறக்கணிக்க முடிவு செய்துள்ளேன். எங்கள் கட்சி மேலிடத்திற்கு இதுபற்றித் தெரிவித்துவிட்டேன். இதுபற்றி முதல்வர் அவர்களுக்கு இன்றே பேஃக்ஸ் மூலம் செய்தி அனுப்பியிருக்கிறேன்." என்று நம்முடைய திருச்சி மாநகர மேயர் அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இது நம்முடைய — அதாவது சட்டமன்ற உறுப்பினருடைய நிதியிலிருந்து செய்தாலும்கூட, மாநகராட்சிதான் இதைச் செய்து கொண்டிருக்கிறது. இங்கே சென்னையிலே நடக்கின்ற விழாக்களில் எல்லாம், சட்டமன்ற உறுப்பினருடைய நிகழ்ச்சிகளில் மாநகர மேயர் அவர்கள் இல்லாமல்தான் நடத்துகிறார்களா? எங்களுடைய திருச்சி மாநகர மேயரை இவ்வளவு மிக மோசமான நிலையில் நடத்துவது நியாயம்தானா என்ற கோரிக்கையை மட்டும் வைத்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இதுவும் எதிர்பாராமல் தரப்பட்டுள்ள ஒரு தாக்கீது. தாக்கீது என்றால், செய்தி என்று எடுத்துக் கொள்ளலாம். தாக்குகிற முறையிலே வெளியிடப்படுகிறது என்றும் எடுத்துக்கொள்ளலாம். அதனால்தான் தாக்கீது என்ற பொதுவான வார்த்தையைப் போட்டுச் சொன்னேன். இந்தத் தாக்கீதுக்கு நான் சொல்கின்ற பதில், முதலில் எனக்கு ஒரு சந்தேகம்; அந்த சந்தேகத்தைத் தெளியவைக்க வேண்டும். ஒரு மாநகராட்சி மன்றத்தில் நடைபெற்ற விஷயத்தை ஒரு சட்டமன்றத்திலே விவாதிப்பது சரியா என்பது ஒரு சந்தேகம். சரியென்று இருந்தால்.....

**டாக்டர் அ. செல்லக்குமார்:** அதுவும் நிர்வாகம் பற்றியதுதான்....



2000 மே 16]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நீங்கள் உட்காருங்கள். உடனே எல்லாவற்றுக்கும் நீங்கள்தான் தீர்ப்புக்கூற வேண்டுமா? நீங்கள் என்ன நெடுஞ்செழியனா? (குறுக்கீடு) எல்லாவற்றிற்கும் எழுந்து நிற்கிறீர்களே என்ன? (குறுக்கீடு) இல்லை, நாங்கள் எல்லாமும் உறுப்பினர்கள்தான். எல்லோரும் உறுப்பினர்கள்தான். (குறுக்கீடு) அந்தச் சந்தேகம் எனக்கு உண்டு. (குறுக்கீடு) இல்லையென்றால், நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனாலும், ஏதோ, நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசியதிலிருந்து, திருச்சி மாநகராட்சியினுடைய மேயர் அம்மையார் புனிதவல்லி பழனியாண்டி அவர்களுடைய பெயரே இந்த invitation-லே போடவில்லை என்பதைப் போல ஒரு கருத்து எதிரொலிக்கிறது. அந்த invitation *12-5-2000* வெள்ளி அன்று நடந்த நிகழ்ச்சிக்கானது. அந்த நிகழ்ச்சியில் தலைமை கே.என். நேரு, உணவு அமைச்சர். அவர் விழாவில் தலைமையேற்கிறார். சென்னை மாநகர மேயர் ஸ்டாலின் அதிலே கலந்து கொண்டு அண்ணல் காந்தியடிகள் அரசினர் தலைமை மருத்துவமனையிலே இதய ஓட்டத்தைப் பதிவு செய்யும் கருவியை இயக்கி வைக்கிறார் அமைச்சர் திரு. செங்குட்டுவன், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மூர்த்தி, வணக்கத்திற்குரிய திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் திருமதி புனிதவல்லி பழனியாண்டி அவர்கள், ஆகியோர் முன்னிலை என்று இதிலே போடப்பட்டிருக்கிறது......

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** அது கடைசியாக அச்சடிக்கப்பட்டது. இந்த invitation-தான் முதலிலே அச்சடிக்கப்பட்டது. கடைசியாக விழாவிற்குப் போகிறபோது அதை அச்சடித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இல்லை, அதிலேயும் பெயர் போடப்பட்டிருக்கிறது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பெயர் கீழே போடப்பட்டு இருக்கிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இதிலே பெயர் போட்டு இருக்கிறது. நடந்தவை *12* நிகழ்ச்சிகளோ என்னமோ. அந்த *12* நிகழ்ச்சிகளில் *2* நிகழ்ச்சிகள் மாநகராட்சி நிகழ்ச்சிகள். பாக்கி எல்லாம் அரசாங்க நிகழ்ச்சிகள். இந்த நிகழ்ச்சிகள்தான் நடைபெற்றன. ஏதோ, புனிதவல்லி பழனியாண்டி அவர்களுக்கும், எங்களுக்கும் விரோதம் இருக்கிற மாதிரி நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் கற்பனை பண்ணுகிறார். உங்கள் கட்சியிலே எனக்கு ரொம்பப் பிடித்த தலைவர், முன்னோடி பழனியாண்டி அவர்கள்தான்.

அவரைக் கேட்டாலே சொல்வார். அதேமாதிரி அந்த அம்மையார் மேயராக முடியுமா, முடியாதா என்ற ஒரு சந்தேகம் வந்தபோது, அவர்கள்தான் மேயராக வேண்டும் என்று வலியுறுத்தியதும் நாங்கள்தான். ஏன் என்றால், நமக்குள்ளே அவ்வளவு உறவு இருந்தது. நான் சொல்வதைக் கேட்கக்கூடிய அளவிற்கு, அதைக் காதிலே வாங்கக்கூடிய அளவிற்கு, உறவு இருந்தது. அந்த அளவுக்கு அந்த அம்மாகிட்டே எனக்கு மரியாதை, மதிப்பு எல்லாம் உண்டு. இப்போதும் நான் திருச்சிக்குப் போகும்போதெல்லாம் விமான நிலையத்திற்கோ அல்லது இரயிலடிக்கோ வந்து அவர்கள் என்னை வரவேற்கத் தவறுவதில்லை. அவர்கள் மாத்திரமல்ல. திரு. பழனியாண்டி அவர்களும் வரத் தவறுவதில்லை.

*முற்பகல் 10-55*

பழனியாண்டி அவர்கள் ஒருமுறை நாடாளுமன்ற உறுப்பினராக ஆவாரா என்பது கேள்விக்குறியாக இருந்தபொழுது நான்தான் சதிசெய்து அவரை நாடாளுமன்ற உறுப்பினராக ஆக்கினேன் என்பதும் (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கும் தெரியும். எல்லோருக்கும் தெரியும். எனவே அப்படிப்பட்ட நட்பு எனக்கும் பழனியாண்டி அவர்களுக்கும் உண்டு. அவரேகூடச் சொன்னதாக நான் கேள்விப்பட்டேன். "ஏதோ நடந்து போய்விட்டது. அந்த விழாவை cancel பண்ணிவிட்டார்கள். மாநகராட்சிமன்ற விழாவையே — அந்த அம்மா கோபமாக இருக்கிறார்கள் என்றவுடனே — cancel பண்ணிவிட்டார்கள். நடந்தது நடந்து போய்விட்டது. என்னைச் சிலபேர் பிடித்து அதில் Politics பண்ணிவிட்டார்கள். அதைத் தலைவர் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று சொல்லுங்கள்" என்று எனக்கே செய்தி சொல்லி அனுப்பியிருக்கிறார்கள். இதுதான் விவரம்.

### (ஆ) தமிழ்நாடு கால்நடை உதவி மருத்துவர்கள் வேலைநிறுத்தம்

*(திரு. ஜி.கே. மணி, திரு. இரா. தாமரைக்கனி, திரு. இரா. விசுவநாதன், டாக்டர் தே. குமாரதாஸ் ஆகியோர் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். எதைப் பற்றிப் பேசப்போகிறீர்கள்?

**டாக்டர் தே. குமாரதாஸ்:** கால்நடை உதவி மருத்துவர்கள் பற்றி.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கால்நடை உதவி மருத்துவர்களைப் பற்றி எத்தனையோ பேர் பேசியாகிவிட்டது. இன்னும் என்ன பேச வேண்டும்? (குறுக்கீடு) இல்லை, அனுமதி கொடுக்கவில்லை. முதலமைச்சரிடம் கேட்டேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழ்நாடு முழுவதும் கால்நடை உதவி மருத்துவர்கள்....

**திரு. சி. ஞானசேகரன்:** இதெல்லாம் ஒரு arrangement தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த arrangement எல்லாம் நீங்கள் பண்ணுவதில்லை. அதைத்தான் நான் கடுமையாகக் கண்டிக்கிறேன், உண்மைதான். குமாரதாஸ் அவர்கள் முதலமைச்சரைக் கேட்டது உண்மைதான். திரு. சி. ஞானசேகரன், வரம்புமீறிப் பேசுவதே உங்கள் பழக்கமாகிவிட்டது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கால்நடை உதவி மருத்துவர்கள் 8-வது நாளாக தமிழ்நாடு முழுவதும் வேலைநிறுத்தத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தொடர்ச்சியான கோரிக்கைகளை நானும் சட்டமன்றத்தில் எழுப்புகிற போதெல்லாம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எத்தனையோ முறை பேசிவிட்டீர்கள் என்று சொல்கிறீர்கள். உண்மைதான். அவர்களுடைய நியாயத்தின் அடிப்படையிலே நான் இந்தக் கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். 1989-லே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த விவரம் எல்லாம் சொல்ல வேண்டாம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்தக் கருத்தைத் தங்களுடைய அறையிலேயே என்னிடத்திலே அவர் வலியுறுத்திவிட்டார். அப்போது சொன்னதை அவையிலே சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். இப்போதும் ஒன்றும் முடிந்து விடவில்லை. நான் நாளையோ, நாளை மறுநாளோ டில்லி செல்ல வேண்டியிருக்கிறது. ஆக அதற்குள் அவையும் நிறைவுறும், அதையொட்டி மீண்டும் அவர்களை அழைத்துப் பேசுமாறு நம்முடைய மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் திரு. செங்குட்டுவன் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். பேசுவார்கள். பேசி நல்ல முடிவு ஏற்படும் என்று கருதுகிறேன்.

[2000 மே 16

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, நீங்களும் இதைத்தான் வலியுறுத்துகிறீர்களா? அப்படியென்றால் உங்கள் பெயரையும் சேர்த்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. விசுவநாதன்:** தலைவர் அவர்களே, நானும் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். யார், யார் கொடுத்திருக்கிறார்களோ, எல்லோரையும் சேர்த்துக்கொள்கிறேன்.

**(இ) திருவில்லிபுத்தூர் பனை ஏறும் தொழிலாளர் மீது போடப்பட்டுள்ள வழக்குகளைத் திரும்பப் பெறுதல் மற்றும் கிருஷ்ணன்கோயில் ஊருக்குக் காவல் நிலையம் கொடுத்தல் — நன்றி நவிலல்.**

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் சாதிக் கலவரம் ஏற்பட்டது. தமிழக அரசு வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்கியது. ஆனால் சில வழக்குகளைப் பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சித்தலைவர் பரிந்துரை பண்ணுவதற்கோ, அல்லது செயற்குறிப்பு எழுதி அனுப்புவதற்கோ காலதாமதம் ஏற்பட்டது. நேற்று காவல்துறை மானியத்தில் பேசும்போது ஸ்ரீவில்லிபுத்தூர் நகரில் நடந்த சாதிக் கலவரத்தில் 66 பனையேறும் தொழிலாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் வாபஸ் வாங்கப்படவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் Collectorate-லிருந்து செயற்குறிப்பு வரட்டும் என்று சொன்னார்கள். அந்தப் பனையேறும் தொழிலாளர்கள், நாங்கள் காலையில் பதநீர் இறக்கப் போக வேண்டியிருக்கிறது......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அவர்கள் தொழிலைப் பற்றிப் பேச வேண்டாம். வழக்கை வாபஸ் வாங்கவில்லை என்று சொல்கிறீர்கள். அதற்கு முதலமைச்சர் பதில் சொல்வார், உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** இதோ பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன பேசப் போகிறீர்கள்? எல்லோரும் தேவையில்லாமல் எழுந்து நின்று கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?

**திரு. இரா. தாமரைக்கனி:** அதற்குள்ளே கோபப்படுகிறீர்களே?



2000 மே 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உண்மையான கோபமாக இருந்தால் அவைக்குறிப்பிலே நீங்கள் பேசுவதெல்லாம் ஏறாது. சீக்கிரம் பேசி முடியுங்கள். எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஒரு clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன clarification (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர் ஏதோ clarification கேட்கிறார். திரு. தாமரைக்கனி, உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே, உண்மையான கோபம் என்பது என்ன? இல்லை, போலியான கோபம் என்பது என்ன என்பதைத் தலைவர் அவர்கள் கொஞ்சம் விளக்கினால் எங்களுக்கு நன்றாக இருக்கும். (பலத்த சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போலியான கோபம் என்பதால்தான் கிட்டத்தட்ட 2 மாதங்களாக நடக்கின்ற சட்டமன்றத்திலே யாரையும் இதுவரைக்கும் வெளியேற்றவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைச் சிறப்பு இனமாகக் கருதி, வழக்குகளை வாபஸ் வாங்கினால்தான் நான் இரண்டு நாட்கள் கழித்து சட்டசபை முடிந்து ஊருக்குப் போகும்போது அந்தப் பொதுமக்கள் நன்றி சொல்வார்கள். அதற்கு ஆவன செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அந்த வழக்குகள் வாபஸ் ஆகிவிட்டன என்பதைப் பேரவைத் தலைவருடைய அறையிலே என்னிடத்திலே கேட்டுத் தெரிந்துகொண்டு அதை மீண்டும் கேட்டார். கேட்டதற்காக நன்றி. அது வாபஸ் ஆகிவிட்டது.

**திரு இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், நீங்கள் பேசாமல் உட்காருங்கள், ஒன்றும் வேண்டாம்.

[2000 மே 16

**திரு. இரா. தாமரைக்கனி:** வழக்கை வாபஸ் வாங்கியதற்காக ஒரு நன்றிகூட சொல்ல விடமாட்டேன் என்கிறீர்களே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம். நீங்கள் தனியாகப் போய் முதலமைச்சரைப் பார்த்து நன்றி சொல்லுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மைக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மைக் கொடுக்க முடியாது.

**(ஈ) சேலம் பேருந்து நிலையம் அருகே உள்ள நிலம் பற்றிய வழக்கில் தனியாருக்கு சாதகமாக வந்த தீர்ப்பின் மீது தடையாணை பெறப்பட்டது**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சேலம் பேருந்து நிலையம் அருகே 4 ஏக்கர் 91 சென்ட நிலம் தனியாருக்கு ஒதுக்கப்பட்டதற்கு தடையாணை பெற்று உள்ளதாக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தது குறித்து உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. பி.ஆர். சுந்தரம், சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** கால்நடைப் பிரச்சினையில் எல்லோரையும் பேசவிட்டிருந்தால் அவரவர்கள் கருத்தைத் தெரிவித்திருப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி, மூத்த உறுப்பினர். ஒரு கருத்தை உங்களிடம் சொல்கிறேன். நீங்கள் கேட்பது நியாயம். திரு. கே. சுப்பராயன் அடிக்கடி கேட்கிறது நியாயம். நீங்கள் எல்லோரும் பேரவைத் தலைவருக்குக் கட்டுப்பட்டு நடந்தால் நான் ஒழுங்காகச் செய்ய முடியும். இங்கே பல பேர் திட்டமிட்டே கட்டுப்பட்டு நடப்பதில்லை என்று வருகிறார்கள். என்னை என்ன பண்ணச் சொல்கிறீர்கள்? (குறுக்கீடு) உங்களைச் சொல்லவில்லை. உங்களுக்கு ஏற்படுகிற சங்கடம் மற்றவர்களால்தான் என்று சொல்கிறேன். (குறுக்கீடு) அவரைத்தான். நிச்சயமாகப் பாராட்டுகிறேன். அவரையும் பாராட்டுகிறேன்; சுப்பராயனையும் பாராட்டுகிறேன். எனக்கு உண்மையான கோபம் இருந்திருந்தால் முதல் நாளே வெளியேற்றி இருக்க வேண்டியது திரு. ஞானசேகரனை. (சிரிப்பு)



2000 மே 16]

**(இ) திருவில்லிபுத்தூர் பனை ஏறும் தொழிலாளர் மீது போடப்பட்டுள்ள வழக்குகளைத் திரும்பப் பெறுதல் மற்றும் கிருஷ்ணன்கோயில் ஊருக்கு காவல் நிலையம் கொடுத்தல்—நன்றி நவிலல்**—தொடர்ச்சி

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எல்லோரையும் பாராட்டுகிறீர்கள், சரி. தாமரைக்கனியை, எனக்கு நன்றி சொல்வதற்கு விடமாட்டேன் என்கிறீர்களே? (சிரிப்பு)

**திரு. இரா. தாமரைக்கனி:** மைக் கொடுங்கள், சார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மனித நேயத்தோடு, கருணை உள்ளத்தோடு எனது தொகுதியில் உள்ள பனை ஏறும் தொழிலாளர்களுடைய வழக்குகளை வாபஸ் வாங்கியதற்கும் எனது தொகுதியில் கிருஷ்ணன்கோயில் என்ற ஊருக்குக் காவல் நிலையம் கொடுத்ததற்கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**(ஈ) சேலம் பேருந்து நிலையம் அருகேயுள்ள நிலம் பற்றிய வழக்கில் தனியாருக்கு சாதகமாக வந்த தீர்ப்பின்மீது தடையாணை பெறப்பட்டது**—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் பஸ் ஸ்டாண்டு நிலம் 4 ஏக்கர் 91 சென்ட் நிலத்திலே அரசாங்க...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் இதைப்பற்றி ஏராளமாகப் பேசியிருக்கிறீர்கள். நீங்கள் ஒரே ஒரு கருத்தைத்தான் சொல்ல வருகிறீர்கள். நான் சொல்கிறேன், இருங்கள். அதிலே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், அந்த கீழ்க் கோர்ட் உத்தரவுக்குத் தடை வாங்கிவிட்டேன் என்று சொன்னார். உங்களுக்கு வந்த செய்தி, தடையாணை வாங்கவில்லை என்பது. அதை மட்டும் சொல்லிவிட்டு நிறுத்திக்கொள்ளுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், இங்கே

[திரு. பி.ஆர். சுந்தரம்] [2000 மே 16

பதில் கூறும்போது 27-4-2000 அன்று தீர்ப்பு இவ்வாறு கொடுக்கப்பட்ட உடனே மாவட்ட முன்சிப் கோர்ட்டில் அரசு வழக்கறிஞர் அப்பீல் செய்து, முதலில் அளித்த தீர்ப்பின் பேரில் தடையாணை வாங்கிய உடனே என்று கூறியிருக்கின்றார். எனக்குக் கிடைத்த தகவல்படி தடையாணை இன்னும் வாங்கப்படவில்லை. அரசானது மேல்முறையீடுதான் செய்திருக்கிறதே ஒழிய தடையாணை வழங்கப்படவில்லை. ஆகவே, அவைக்குத் தவறான தகவலை மாண்புமிகு அமைச்சர் கூறியிருக்கின்றார்கள். மேலும் அங்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அவ்வளவுதான்

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஜட்ஜ் என்ன சொல்லியிருக்கின்றார்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜட்ஜ் சொல்வதையெல்லாம் இங்கே சொல்லக்கூடாது. தடையாணை வாங்கியிருப்பதாக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் சொன்னது சரியில்லை என்கிறீர்கள். (குறுக்கீடு) வேறு ஒன்றும் சொல்ல அனுமதி கொடுக்க மாட்டேன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலம் 12-1-1951-ஆம் தேதி அரசு ஆணைப்படி தமிழ்நாடு அரசு சட்டம் எண் 26-1-1948-ன் கீழ்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த விவரங்கள் முழுவதும் இருக்கின்றன. அந்தத் தீர்ப்பு வந்தது 27-ந்தேதி. நீங்கள் தடை வாங்கியது என்றைக்கு என்று மட்டும் சொல்லிவிடுங்கள். அது போதும். அவர் தடை வாங்கவில்லை என்கிறார்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைச் சொல்வதற்கு முன்பு — ஏனென்றால், இந்த கண்ணியம் மிக்க பேரவையில் தொடர்ந்து ஒரு உண்மைக்கு மாறான தகவலைத் தந்து கொண்டிருப்பது சரிதானா என்பதை நீங்கள் ஒரு தீர்ப்பாகக்கூட வழங்க வேண்டும் என்பதற்காகத்தான். ஏனென்றால்....



2000 மே 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் சொல்வதால் நான் சொல்ல வருகிறேன். தடையாணையை நீங்கள் வாங்கியதாக ஆதாரத்தைக் காண்பித்தீர்கள் என்றால், நிச்சயமாக இதிலே உரிமைப் பிரச்சினை எடுப்பேன்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 27-4-2000 அன்று தீர்ப்பு பி.சி. பச்சையப்பன் என்பவருக்குச் சாதகமாக வழங்கப்பட்டது. அந்தத் தீர்ப்பின் மீது உடனடியாக Appeal செய்ய வேண்டியிருக்கிறது. "1. The State of Tamil Nadu, Rep. by the District Collector, Salem. 2. Anna Transport Corporation, 3. Salem Corporation by its Commissioner" ஆகியோர் சார்பாக தாசில்தார் அவர்கள் Affidavit ஒன்றை Court-லே தாக்கல் செய்கிறார்கள். அந்த Affidavit-ஐத் தாக்கல் செய்தபோது, முதல்நாள் தீர்ப்புக் கிடைத்த உடன் மாலையிலேயே Appeal செய்கிறார். 28 ஆம் தேதி தீர்ப்பு வழங்கிய அதே நீதிபதி

"Heard the petitioner. Perused, considered. In the interest of the justice in order to prevent any commotion, I grant interim stay for five weeks notice to the respondents by then call on 1-6-2000" என்று அதிலே Stay Order நீதிபதி அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். ஆக, தடையாணை வழங்கவில்லை என்று சொல்வது உண்மைக்கு மாறான ஒரு செய்தி. தடையாணை வழங்கப்பட்டு இருக்கிறது என்பதை இந்தப் பேரவைக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு யார் சொன்னார்கள்? அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். நான் இரண்டு record-களையும் பார்த்து என்னுடைய தீர்ப்பைச் சொல்வேன். தடையாணை இருந்தால் நிச்சயமாக இதை உரிமைக் குழுவிற்கு அனுப்புவேன். (குறுக்கீடு) இல்லை, இதற்கப்புறமும் நீங்கள் ஏதாவது சொல்ல வேண்டும் என்றால், என்னுடைய அறையிலே வந்து சொல்லுங்கள்.

## 4. கவன ஈர்ப்பு

### கோவை புதூர் சி.பி.எம். கல்லூரியில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தோர்க்கான பேராசிரியர் பணியிடங்களை நிரப்பக் கோரி ஆசிரியர்—அலுவலர் சங்கக் கூட்டமைப்பினரின் தொடர் உண்ணாவிரதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன் கீழ் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு அறிவிப்பினை டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றார்கள்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை புதூர் சி.பி.எம். கல்லூரியில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தோர்க்கான பேராசிரியர் பணியிடங்களை நிரப்பக் கோரி ஆசிரியர் அலுவலர் சங்கக் கூட்டமைப்பினர் நடத்தி வரும் தொடர் உண்ணாவிரதம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் .அவர்களே, இதற்கான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

#### அறிக்கை

கோயம்புத்தூரில் உள்ள அரசு நிதியுதவிபெறும் கல்லூரியான சி.பி.எம். கல்லூரியில், 1981 முதல் 1988-89 வரை, கடந்த 8 ஆண்டுகளில் இக்கல்லூரிக்கு அளிக்கப்பட்ட 34 ஆசிரியர் நியமனங்களில் 7 பணியிடங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பு மற்றும் பழங்குடியினர் வகுப்பிற்கு ஒதுக்கப்படாமல், அந்த இன ஆசிரியர்களை நியமிக்காமல் அக்கல்லூரி நிர்வாகம் அரசாணையை மீறி உள்ளது.

இக்கல்லூரி நிர்வாகம் அனைத்துத் துறை ஆசிரியர்களுக்கும் ஒரே இனவாரி சுழற்சிப் பட்டியலைப் பின்பற்றாமல், ஒவ்வொரு பாடப் பிரிவிற்கும் துறை வாரியாக தனித்தனிப் பட்டியல் வைத்ததால்,





இந்தத் தவறு நடந்துள்ளது. தற்போது இக்கல்லூரிக்கு 7 ஆசிரியர் பணியிடங்கள் வழங்கப்பட்டு, அதை தாழ்த்தப்பட்ட/ பழங்குடியினர் இன ஆசிரியர்களை மட்டுமே கொண்டு நிரப்பப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. 1989 வரை நியமனம் செய்யப்பட்ட 34 ஆசிரியர் நியமனங்களில், 17 ஆசிரியர்களுக்கு அடிப்படை ஊதியமும் அதற்கான படிகளும் மட்டுமே வழங்கப்படுகின்றன. பல ஆண்டுகளாக ஆண்டு ஊதிய உயர்வுகள், பணி முன்னேற்றம் போன்ற ஏனைய பலன்கள் அளிக்கப்படவில்லை. இவர்களுடைய பணியும் இதுவரை வரன்முறைப்படுத்தப்படவில்லை. இக்கல்லூரி நிர்வாகம் இனச்சுழற்சி விதிகளை முறையாகப் பின்பற்றாமல் நியமனங்களை மேற்கொண்டு வந்தது. இனச்சுழற்சி விதிமுறைகளைப் பின்பற்றாமல் செய்யப்பட்ட மேற்காண் 17 ஆசிரியர்களின் நியமனங்களை, முதலில் 50 எண்கள் இனச் சுழற்சி முறையில் பொருத்தி, பின்னர் 100 எண்கள் இனச்சுழற்சி முறையில் பொருத்திக் கணக்கிடப்பட்டபோது, 7 தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கான பணியிடங்கள் விடப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது.

மேற்காண் 17 ஆசிரியர்களின் நியமனங்களுக்குப் பின்னேற்பு அளிப்பது குறித்துப் பரிசீலிக்க, தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள 7 பணியிடங்களில் ஏற்கெனவே நிரப்ப விடுபட்ட 7 தாழ்த்தப்பட்ட வகுப்பினரைக் கொண்டு நிரப்புமாறு அக்கல்லூரி மேலாண்மை இயக்குநரால் கோரப்பட்டது. அவ்வாறு நிரப்பிட உறுதிமொழி அளிக்குமாறு மேலாண்மைக்குத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது 3 இடங்களில், வேலை வாய்ப்பகத்தில் தாழ்த்தப்பட்ட இனத்தவர் பெயர்ப் பட்டியல் கோரப்பட்டபோது, அந்த இனத்தில் தகுதி வாய்ந்தவர் இல்லை என்ற சான்று பெற்று, வேறு இன ஆசிரியர்கள் மண்டல இணை இயக்குநரின் அனுமதி பெறாமலே நியமிக்கப்பட்டுள்ளனர். இதனைத் தளர்வு செய்யக்கோரும் நிர்வாகத்தின் கோரிக்கை ஏற்கெனவே இயக்குநரால் நிராகரிக்கப்பட்டுள்ளது. ஆளின்மைச் சான்று பெற்றுவிட்டதினால் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குரிய இடம் முடிவடைந்துவிடாது என்றும், எனவே ஏற்கெனவே தெரிவித்திருந்தவாறு 7 தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குரிய விடுபட்ட பணியிடங்களை நிரப்பியே ஆக வேண்டும் என்று அக்கல்லூரிச் செயலாளருக்கு கோவை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அறிவுறுத்தியுள்ளார். கல்லூரிச்

செயலரின் உறுதிமொழி பெற்ற பின்னர் 17 ஆசிரியர்கள் நியமனங்களுக்கும் பின்னேற்பு அளிப்பது குறித்துக் கல்லூரிக் கல்வி இயக்குநரால் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் ஏதாவது இரண்டு கேள்விகளைக் கேட்கலாம்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். (குறுக்கீடு) ஆமாம். பார்த்தேன். பொதுவாக, தமிழ்நாட்டிலே, இருக்கக்கூடிய அரசுக் கல்லூரிகளில் மட்டுமல்ல அரசு உதவி பெறக்கூடிய கல்லூரிகளிலேயும் பேராசிரியர்கள் மற்ற.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இந்தக் குறிப்பிட்ட கல்லூரியைப் பற்றி மாத்திரம் பேசுங்கள். மற்றவற்றை மாலையில் வெள்ளை அறிக்கையிலேகூட நீங்கள் பேசிக் கொள்ளலாம். இந்தக் குறிப்பிட்ட கல்லூரியைப் பற்றி மாத்திரம் இப்போது பேசுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அரசுக் கல்லூரிகளில் மட்டுமல்ல, தனியார் கல்லூரிகளிலேயும் இட ஒதுக்கீட்டை நிரப்ப வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். அந்த அடிப்படையிலே தனியார் கல்லூரியாகிய கோவை மாவட்டம், சி.பி.எம். கல்லூரியில் 7 உதவிப் பேராசிரியர்கள் நியமிக்கக் கோரி அரசு வலியுறுத்தியும் அந்த சி.பி.எம். கல்லூரி நிர்வாகம் தொடர்ந்து தட்டிக்கழித்து வருகிறது. எனவே, பல அறிவுறுத்தலுக்குப் பிறகும், அந்தக் கல்லூரி, அரசாணையை, அரசு அறிவுறுத்தலை நிராகரித்ததனுடைய அடிப்படையில், அந்த நிர்வாகத்தின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில் ஆசிரியர்களைத் தேர்வு செய்வதில் 1989ஆவது ஆண்டுவரையில் roster முறையிலே நியமிக்கப்படுவதில் குறிப்பிட்ட துறைக்கான ஆசிரியர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்திலே கேட்கப்பட்டபோது, தாழ்த்தப்பட்ட சமூகத்திலே கிடைக்கவில்லை என்று காரணம் காட்டி, அதனால் மற்ற சமூகத்தைச் சேர்ந்தவர்களை அந்த இடங்களிலே நிரப்பிவிட்டார்கள். அப்படி நிரப்ப வேண்டிய அவசியம்





இருக்குமானால் அதற்கும் முன்கூட்டியே அரசினுடைய அனுமதியைப் பெற வேண்டும். இன்ன சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இந்த இடத்தில் நிரப்பப்பட வேண்டும்; அந்தச் சமூகத்தைச் சேர்ந்த ஆசிரியர் கிடைக்கவில்லை என்றும், வேலை தேடுகிறவராகப் பதிவு செய்திருக்கவில்லை என்றும் தெரிவித்து, அரசு அனுமதி பெற்று வேறு சமூகத்தைச் சேர்ந்தவரை நியமித்தால், அது அந்தக் காலக் கட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும். ஆனால், அவர்கள் 34 ஆசிரியர் நியமனங்களில் ஏறத்தாழ தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த 7 ஆசிரியர்களை இடம்பெறச் செய்வதற்கு தொடர்ந்து தவறி இருக்கிறார்கள்.

முற்பகல் 11-10

அது அறியப்பட்டது 1998 ஆவது ஆண்டு. ஏனென்றால், அரசுக்கு அவர்கள் தெரிவிக்காத நிலையில் 1998 ஆம் ஆண்டு Audit Report மூலமாக, இந்தச் சமூகத்தைச் சார்ந்தவர் இடம்பெறாமல் வேறு சமூகத்தைச் சேர்ந்தவர் இடம்பெற்றிருக்கிறார் என்ற விவரம் தெரிய வந்து, அதற்குப் பின்னர் அரசு அவர்களுக்குத் தருகின்ற, நிர்வாகத்திற்காகத் தருகின்ற மானிய உதவியை நிறுத்தி வைத்து இருக்கிறது. மேலும் அவர்கள் நியமித்த ஆசிரியர்களுக்கான பதவி உயர்வை வழங்குவதிலேயும், 7 ஆசிரியர்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்களை நிரப்பியதற்குப் பின்னர்தான் நீங்கள் அதற்கான உயர் ஊதியங்களைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம் என்று தெரிவித்து, அவர்களிடத்திலே உறுதிமொழி தருமாறு கேட்டுள்ளது. ஒரு நிர்வாகம் என்ற முறையில் நாங்கள் இனி அடுத்து வருகின்ற பணிகளில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களை நிரப்பிவிடுகிறோம் என்ற உறுதிமொழியைக் கொடுத்து, அப்படிச் செய்வார்களேயானால், அந்த ஆசிரியர்களுக்கும் சேர்த்து ஏற்பட்டிருக்கின்ற ஊதியக் குறைபாடுகளை அரசாங்கம் சரிசெய்யும். நிறுத்தி வைத்திருக்கின்ற சலுகைகளை பின்னர்தான் வழங்கும் என்று திட்டவட்டமாக அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறது; அந்த முறையிலேதான் நிர்வாகத்தின் மீது அரசு நடவடிக்கை எடுக்கக்கூடிய வாய்ப்பு இப்போது இருக்கின்றது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நான் இன்றுவரையிலும் கேள்விப்படுவதென்னவென்றால் அந்த நிர்வாகம் அரசுக்கு எந்தவிதமான உத்தரவாதமும் கொடுப்பதற்குத் தயாராக இல்லை.

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2000 மே 16

எனவே அப்படிப்பட்ட, முரண்டுபிடிக்கக்கூடிய நிர்வாகத்தின் மீது 1989 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்டோர் மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தினுடைய நோக்கமும், அதனுடைய இலட்சியமும் வேறு. இது நிர்வாக முறையிலே ஏற்படுகின்ற குறைகள். இந்தக் குறைகளுக்குக்கூட நியாயங்கள் இருக்குமானால் இந்த அரசுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டு அனுமதி பெற்றிருக்கலாம். ஆனால் அவர்கள் அனுமதி பெறவில்லை. இன்னும் பல்வேறு கல்வி நிலையங்களில் நிரப்பப்படுகிறபோது, குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட பதவிக்குத் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் யாரும் இல்லாத காரணத்தால் அடுத்த சமூகத்தைச் சேர்ந்தவர்களை இடம்பெறச் செய்கிறோம் என்று அரசைக் கேட்டுக்கொள்கின்ற முறை . இருக்கின்றது. அவர்கள் அப்படிக் கேட்காத காரணத்தால்தான் இந்த 7 இடங்களையும் நிரப்பிய பின்னரே அங்கேயுள்ள ஆசிரியர்களுக்கு முன்னரே முதுநிலை வழங்கியிருந்தாலும்கூட, அரசு தேர்வு நிலை வழங்காமல் மறுத்திருக்கிறது. அரசாங்கம் தரக்கூடிய சலுகைகளை நிறுத்துவதன் மூலமாகவும், நிர்வாகத்திற்குத் தருகின்ற மானியத்தை Grant-ஐ நிறுத்துவதன் மூலமாகவும் நடவடிக்கை எடுத்து இருக்கிறது. மேலும் வேறு பிரிவினர் யாரையும் நியமிக்க அவர்களால் முடியாது. அந்தக் கல்லூரியைக் காப்பாற்ற வேண்டுமானால், அடுத்து வருகின்ற ஆசிரியர் பணிகளைத் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு வழங்கி சரி செய்ய வேண்டும் என்று இயக்குநர் வலியுறுத்தி இருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, (குறுக்கீடு) என்ன? எத்தனை தடவை எழுந்திருப்பீர்கள்? திரு. சுந்தரம், உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நேற்று மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பிறகு பதில் சொல்கிறேன் என்று சொன்ன பிரச்சினை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் உட்காருங்கள். பிறகு கேட்கலாம்.



## 5. அறிக்கைகள் அளித்தல்

### பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, 1999-2000 ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து ஒன்றாவது முதல் ஐம்பத்து எட்டாவது வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு சட்டமன்ற (உறுப்பினர் தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2000 ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (உறுப்பினர் தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (உறுப்பினர் தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

[2000 மே 16

**மாண்புமிகு திரு. ஆற்காடு வீராசாமி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2000 மே 16] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள், (அறிமுகம் செய்தல்). 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன் வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— தொடர்ச்சி.

### (ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள், (அறிமுகம் செய்தல்). 2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"2000 ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஈ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000 ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி.

### (உ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள், (அறிமுகம் செய்தல்). 2000 ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

[2000 மே 16

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஊ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000 ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2000 மே 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 8. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1989-90—அளித்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1989-90 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1989-90 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ், முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்குமேல் சில இனங்களில் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது எனத் தெரிய வந்துள்ளது. அந்த ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

பொதுக் கணக்குக் குழு 1989-90 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்து சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 1989-1990 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின் கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்குமேல்

செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டப் பேரவைமுன், மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாமென்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அதற்கிணங்க, 1989-90 ஆம் ஆண்டு மிகைச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள் குறித்த அறிக்கை, தற்போது பேரவையில் வைக்கப்படுகிறது. இம்மிகைச் செலவு, மொத்தம் ரூபாய் 12 கோடியே 11 இலட்சமாகும்.

ஐந்தாம் சம்பளக் குழுவின் பரிந்துரையின் பேரில் திருத்தச் சம்பள வீதங்களின்படியான ஊதியங்களையும் நிலுவைகளையும் கொடுத்தது குறித்து ஏற்பட்ட கூடுதல் செலவே மானியக் கோரிக்கைகள் பலவற்றில் மிகைச் செலவு ஏற்பட்டதற்கு முக்கிய காரணமாகும். இது தவிர, நாடாளுமன்றத்திற்குப் பொதுத் தேர்தல்கள் நடத்தியது, 18 முதல் 21 வரை வயதானவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளும் வகையில் சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களைத் திருத்தும் தனிப் பணியை மேற்கொண்டது, காவல் துறையில் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவை ஏற்படுத்தியது, ஆதிதிராவிடர் வகுப்பைச சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்கும் பொருட்டு, அவர்களின் பெற்றோர்களது ஆண்டு வருமான வரம்பை உயர்த்தியதன் விளைவாக, ஆதிதிராவிடர் மாணவர்களுக்கான படிப்புதவித் தொகைச் செலவு உயர்ந்தது, கட்டடங்கள் பராமரிப்பின் மீது கூடுதல் செலவு செய்தது, கேளிக்கை வரியில் வருவாய் கூடுதலாக வசூலானதால், உள்ளாட்சி மன்றங்களுக்குக் கேளிக்கை வரி வருவாயை அதிக அளவிலே பகிர்ந்தளித்தது ஆகியவை மானியக் கோரிக்கைகளில் மிகைச் செலவு ஏற்பட்டதற்கான ஏனைய காரணங்கள் ஆகும்.

1989-90 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவினங்களுக்குரிய முக்கியமான காரணங்களை நான் இங்கே சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். பேரவைமுன் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் இந்த இனங்களுக்கும், ஏனைய இனங்களுக்கும் உரிய முழு விவரங்கள் இடம் பெற்றுள்ளன.

1989-90 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான இம்மானியக் கோரிக்கைகள் குறித்த இந்த அறிக்கையை ஏற்று, ஒப்புதல் அளிக்குமாறு இப்பேரவையை வேண்டுகிறேன்.



| கோரிக்கை | (ரூபாய்) |
|---|---|
| அ. வருவாய்க் கணக்கில் செலவு | |
| 2. மாநில ஆயத்தீர்வைத் துறை | 1,25,24,081 |
| 6. பத்திரப் பதிவு | 86,64,402 |
| 8. தேர்தல்கள் | 1,03,28,008 |
| 14. சிறைச்சாலைகள் | 2,23,277 |
| 15. காவல் துறை | 5,53,506 |
| 21. மீனளம் | 54,23,623 |
| 29. தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் | 27,41,814 |
| 31. பழங்குடியினர் ஆதிதிராவிடர் முதலியோர் நலன் | 1,91,67,850 |
| 37. பொதுப் பணிகள்-கட்டடங்கள் | 1,74,57,083 |
| 38. பொதுப் பணிகள்-பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் | 57,22,225 |
| 46. இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 1,68,14,371 |
| மொத்தம்—அ.—வருவாய்க் கணக்கில் செலவு | **9,96,20,240** |
| ஆ. வருவாய்க் கணக்கின் கீழ்வராத மூலதனச் செலவு | |
| 53. பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 1,63,91,363 |
| **மொத்தம்—ஆ. வருவாய்க் கணக்கின் கீழ்வராத மூலதனச் செலவு** | **1,63,91,363** |
| பெருமொத்தம் | **11,60,11,603** |

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (உ) பேரவை அலுவல்

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற 1989-90 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 17-5-2000 அன்று விவாதமின்றி வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும்.*

*உடனடியாக, உரிய நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு பேரவையில் அறிமுகம் செய்யப்படும். மேற்படி நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 18-5-2000 ஆம் நாளன்று விவாதமின்றி ஆய்வு செய்யப்பட்டு, நிறைவேற்றப்படும்.*

*(திரு. பி.ஆர். சுந்தரம் எழுந்து நின்றார்)*

*அதைப் பிறகு கேட்டுச் சொல்கிறேன். உடனே கேட்க வேண்டுமா? தனியாக அமைச்சரைக் கேட்டு நாளைக்குச் சொல்கிறேனே! (குறுக்கீடு) திரு. பி.ஆர் சுந்தரம் எழுப்பிய மின்சாரம் குறித்த பிரச்சினையை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாமா?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *சரி.*

## 9. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்**

**(ஆ) கோரிக்கை எண் 42—பல்வகை**

**(இ) கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு**

**(ஈ) கோரிக்கை எண் 61—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்**

**(உ) கோரிக்கை எண் 7—மாநில சட்டமன்றம்**

**(ஊ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள்**



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2000-2001 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.2592,97,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1921, திரு. சி. ஞானசேகரன்.*

**திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓய்வூதியம் பெறுபவர்களுக்குச சேரவேண்டிய ஓய்வூதியத்தினை மாத முதல் தேதியன்றோ அல்லது முதல் வேலை நாளன்றோ வழங்க ஆவன செய்யவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ2592,97,00,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 4893, திரு. ஐ. கணேசன்.*

**திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இந்திய சுதந்திரத்திற்காக உயிர் துறந்த தியாகிகள் குடும்பங்களுக்கு தாராளமாக ஓய்வூதியங்களும் சலுகைகளும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2592,97,00,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2871, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2592,97,00,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3568, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2592,97,00,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2642, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுதந்திரப் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள் குடும்பத்தாருக்கு வழங்கப்படும் சலுகைகளையும் ஓய்வூதியங்களையும் உயர்த்திக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2592,97,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1310, திரு. க. மணிவர்மா.



**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு பயணச் சலுகை வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2592,97,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3525, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2592,97,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3143, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2592,97,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3911, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை மேலும் உயர்த்தி வழங்கவேண்டியதன் அவசியத்தைக் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2592,97,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2403, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2592,97,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4184, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை உயர்த்தித் தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2592,97,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3097, திரு. பி. வெங்கடசாமி

**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முதியோர், விதவைகளுக்கு அளிக்கப்படும் ஓய்வூதியம் தாமதமின்றி உடனுக்குடன் மாதாமாதம் கொடுக்கப்படவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2592,97,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 198, திரு. கே. ரவி அருணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1983, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அருகிவரும் விடுதலைப் போராட்ட வீரர்களில் இன்னும் ஒரு சிலருக்கு ஓய்வூதியம் வழங்க துரித நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2592,97,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3552, திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2811, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2592,97,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 42—பல்வகை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மானியக் கோரிக்கை எண் 42, பல்வகை. மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.394,41,09,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1918, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் சத்துவாச்சாரி மலைகளில் மரம் வைத்து பசுமையான காடுகளை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 394,41,09,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் என் 4164, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்லகை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 394,41,09,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4906, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேதாரண்யத்தில் ராஜாஜி அவர்கள் உப்பு சத்தியாக்கிரகம் செய்த



இடத்தில் உள்ள நினைவுச் சின்னம் பழுதடைந்துள்ளதால் அங்கு மண்டபம் கட்டி அதைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற 394,41,09,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2870, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 394,41,09,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3566, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையிழ் ஒதுக்கப்பெறுகின்ற 394,41,09,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2649, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் திரையரங்குகளில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்திற்கு மேல் கட்டணம் வசூல் செய்வதைத் தடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற 394,41,09,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3526, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற 394,41,09,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3142, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற 394,41,09,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4484, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கெண்டையனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த மருக்கம்பட்டியில் துணை ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று நடப்பு ஆண்டில் ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற 394,41,09,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2404, திரு. எ. தெய்வநாயகம்.



**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற 394,41,09,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3195, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 3794, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் போலி லாட்டரிச் சீட்டுகள் விற்பனை செய்வதைக் கண்டுபிடித்து அவற்றை முற்றிலுமாக ஒழிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற 394,41,09,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5082, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற 394,41,09,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2253, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேர்வராயன் மலை அடிவாரத்திலுள்ள குருவம்பட்டி வன நிலத்தை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.394,41,09,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2810, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.394,41,09,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**(இ) கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.831,74,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2881, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் காவல் துறை அலுவலகம், முதன்மை வனத் துறை அலுவலர் அலுவலகம் ஆகியவற்றை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.831,74,68,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4734, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் அரசு கலைக் கல்லூரி ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.831,74,68,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3150, திரு. கே. சுப்பராயன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 3661, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.831,74,68,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2711, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பவானி நகராட்சியிலும், பேரூராட்சிகளிலும் சாலைகள் மிக மோசமாக உள்ளதால் சாலைகளைச் செப்பனிட்டு மேம்படுத்திக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.831,74,68,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3543, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.831,74,68,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4468, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கெண்டையனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த மேட்டுக்காட்டில் குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக இருப்பதால் அங்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.831,74,68,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2416, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.831,74,68,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3774, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் பாபநாசம் பகுதியில் பெண்களுக்குக் கல்லூரி ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.831,74,68,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5092, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.831,74,68,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2309, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கே. மோரூரில் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கென ஒரு விடுதி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.831,74,68,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

(ஈ) கோரிக்கை எண் 61—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 61—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.393,31,17,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2879, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளின் கூட்டுறவுக் கடனைத் தள்ளுபடி செய்ய அரசு மானியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.393,31,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4723, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதியிலுள்ள சிறு விவசாயிகளுக்கு கோழி வளர்க்க அதிக அளவில் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற 393,31,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3660, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 393,31,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2718, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியிலுள்ள விவசாயிகளுக்கு ஆடுகள் வளர்க்கக் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.393,31,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3993, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் புஞ்சை நிலம் மட்டும் வைத்துள்ள சிறு விவசாயிகளுக்கு ஆடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் ஆடு வளர்க்க அதிக அளவில் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.393,31,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2417, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.393,31,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3792, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசத்தில் உள்ள விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு சிறிய டிராக்டர் வாங்க மானியத்துடன் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.393,31,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1981, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்களில் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்வதோடு வட்டியையும் தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.393,31,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2313, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியிலுள்ள சிறு விவசாயிகளுக்கு ஆடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் அதிக அளவில் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



*"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.393,31,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2791, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.393,31,17,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."*

### (உ) கோரிக்கை எண் 7—மாநில சட்டமன்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 7—மாநில சட்டமன்றம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"மாநில சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.11,26,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1719, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மராட்டிய மாநிலத்தில் வழங்குவதுபோல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதத்திற்கு ரூ.35,000 சம்பளமும் படியும் வழங்க வேண்டியதின் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

*"மாநில சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,26,53,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1434, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,26,53,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4715, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளிர்கால வரவு செலவுக் கூட்டத்தையும் அதிக நாட்களுக்கு நடத்தி உறுப்பினர்களுக்கு சட்டமன்றத்தில் கருத்துரைக்க அதிக வாய்ப்பு அளிக்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,26,53,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1841, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக சட்டமன்றப் பேரவைக்கு புதிய நவீன வசதிகளுடன் கூடிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,26,53,000-ல் ரூ.100/ குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1520, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.



**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, தமிழகத்தில் பேருந்து பாஸ் இலவசமாக வழங்கியுள்ளதுபோல், இரயிலில் செல்வதற்கும் இலவச பாஸ் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,26,53,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1237, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தியா முழுவதும் இரயிலில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதியளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,26,53,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3453, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அனைத்து விமானப் படிகளையும் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,26,53,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2777, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. கே. தங்கமணி] [2000 மே 16

"மாநில சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,26,53,000-ல் ரூ.100/ குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3982, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சகல வசதிகளுடன் புதிய சட்டமன்றப் பேரவை வளாகம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,26,53,000-ல் ரூ.100/ குறைக்க வேண்டும்."

*முற்பகல் 11-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3628, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றக் குழுக்களின் தலைவர்களுக்கு என சட்டமன்றச் செயலகத்தில் தனி அறைகள் ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,26,53,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2373, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,26,53,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."



2000 மே 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3207, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4003, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஓர் இளநிலை உதவியாளர் நியமிக்க வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,26,53,000-ல் ரூ.100/ குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2937, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பிற மாநிலங்களில் வழங்கப்படுவதைப் போல் சம்பளத்தையும் பிற சலுகைகளையும் உயர்த்திக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,26,53,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1389, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, 'To discuss the need to provide Gym and Yoga Centre in the new Legislators quarters to be opened shortly I move—

"That the sum of Rs.11,26,53,000/- allocated under Demand No.7—State Legislature be reduced by Rs.100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5023, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றம் இயங்கும் கட்டடத்தில் தமிழக சட்டமன்றம் என்ற பெயர்ப் பலகை வைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,26,53,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1456, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதிய சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி திறக்கப்பட்ட பின்பு பழைய விடுதியில் கூட்டுறவாளர்கள் தங்குவதற்கு அனுமதி அளிக்க வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,26,53,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2052, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக சட்டமன்றத்திற்கு நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,26,53,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2733, டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்கான சட்டமன்ற மேம்பாட்டு நிதியை ரூ.1 கோடியாக உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மாநில சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.11,26,53,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

### (ஊ) கோரிக்கை எண் 8-தேர்தல்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.31,71,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1721, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் தொகுதியில் உள்ள காட்பாடி இரயில்வே நிலையம் இரயில்வே குடியிருப்பு பகுதியை காட்பாடி தொகுதியில் சேர்க்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,71,00,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1948, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் எல்லா வாக்காளர்களுக்கும் அடையாள அட்டை உடனே வழங்கப்பட வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானிய கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,71,00,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4710, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேர்தல்களில் வயது வந்த அனைவரும் வாக்களிக்க வசதியாக வாக்காளர்கள் அனைவருக்கும் அடையாள அட்டைகளை உடனடியாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,71,00,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1838*, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட மேலநெம்மேலி ஊராட்சிக்குட்பட்ட கீழநெம்மேலி கிராம மக்கள் சுமார் 5 கி.மீ. தூரம் நடந்து வாக்களிக்க வேண்டிய நிலை உள்ளதால், அவர்கள் கீழநெம்மேலி கிராமத்திலேயே வாக்களிக்க ஏதுவாக அங்கு புதிய வாக்குச்சாவடி ஒன்று அமைத்திட வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,71,00,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1522*, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேர்தல்களில் கள்ள ஓட்டுப் போடுவதைத் தடுப்பதற்காக புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டைகள் உடன் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,71,00,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1232*, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தண்டராம்பட்டு தொகுதியிலுள்ள மேல்வளசை மற்றும் கீழ்வளசை



மலைக் கிராமங்களில் புதிய வாக்குச் சாவடிகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியம் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,71,00,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3458*, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,71,00,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2776*, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,71,00,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3850*, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாக்குச் சாவடியிலிருந்து 3 கி.மீ. தூரத்திற்குமேல் உள்ள கிராமங்களிலிருந்து வரும் வாக்காளர்களுக்கு அரசு வாகன வசதி செய்துதர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,71,00,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3630*, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆர்.கே. பேட்டையில் புதிய வாக்குச் சாவடி அமைப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,71,00,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2374*, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,71,00,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4001*, திரு. பி.ஆர். சுந்தரம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *2951*, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள வாக்காளர்களுக்கு வரும் தேர்தல் ஆண்டிற்குள்ளாக புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் அட்டையை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,71,00,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1388*, திரு. பி. வெங்கடசாமி.



**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, 'To discuss the need to issue identity cards to all the voters in Tamil Nadu and to introduce Electronic Voting Machines for the coming General Elections in Tamil Nadu', I move—

"That the sum of Rs.31,71,00,000/- allocated under Demand No.8—Elections be reduced by Rs.100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1473*, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து வாக்காளர்கட்கும் உடனடியாக புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,71,00,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் என் *2059*, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியிலுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை உடனே வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,71,00,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2339*, திரு. ச. புரட்சிமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1852*, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி புதுக்குறிச்சி மக்கள் சட்டமன்ற நாடாளுமன்ற தேர்தல்களில் புதுக்குறிச்சியிலேயே வாக்குச் சாவடி அமைத்து வாக்களிக்க வசதி செய்ய வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. எஸ்.வி. கிருஷ்ணன்] [2000 மே 16

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.31,71,00,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்காகப் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே 'ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும், பல்வகை, பல்வகை மூலதனச் செலவு, மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும், தேர்தல்கள் ஆகிய மானியக் கோரிக்கைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாநிலச் சட்டமன்றம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பினை அச்சியற்றி வழங்குவது நடைமுறையில் இல்லை. மற்றவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், அவற்றுக்கு என்னுடைய பதிலுரையில் எனக்குத் தோன்றுகிற விளக்கங்களை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஊ) உறுப்பினர்களுக்கு மதிய உணவு வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு மாநில சட்டமன்றம் குறித்த மானியக் கோரிக்கை என்பதால் இன்று 16-5-2000 மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் பேரவை பிளாசாவில் மதிய உணவருந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 271 முதல் 336 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I முதல் V ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



2000 மே 16] [பேரவைத் தலைவர்]

இன்று மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம் கடைசி நாள். பேரவை விதி 185/3-ன்படி விவாதமும், பதிலுரையும் பிற்பகல் 1-30 மணிக்குள் முடிந்து, மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இன்று விவாதத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள் மிகவும் சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே, பேரவை பிளாசா என்கிறீர்கள். எங்களுக்கு இதுவரை பேரவை பிளாசா எங்கேயிருக்கிறது என்று தெரியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோ அங்கேயிருக்கிறது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதுதானா? (சிரிப்பு)

## 9. மானியக் கோரிக்கைகள், 2000-2001
## விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்

### (ஆ) கோரிக்கை எண் 42—பல்வகை

### (இ) கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு

### (ஈ) கோரிக்கை எண் 61—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்

### (உ) கோரிக்கை எண் 7—மாநில சட்டமன்றம்

### (ஊ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் 13 பேர் பேச வேண்டும். மாண்புமிகு அமைச்சர் ஏராளமான மானியக் கோரிக்கைகள் மீது 1½ மணிக்குள் பதில் சொல்லி வாக்கெடுப்பு எடுக்க வேண்டும். ஆகவே, உங்கள் பேச்சை அப்படி அமைத்துக்கொள்ள வேண்டும். எனக்குத் தெரிந்தவரை எந்த உறுப்பினரும் 5 நிமிடத்திற்கு மேல் பேசாமல் இருந்தால் உதவியாக

இருக்குமென்று சொல்லி, முதலிலே பேசுகின்றவருக்கு 7 நிமிடங்கள் கொடுக்கலாம் என்ற கருத்தைச் சொல்லி, டாக்டர் செல்லக்குமார் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண் வளம், நீர்வளப் பாதுகாப்புக்கு என்று 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளதாக கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

இந்தத் தரிசு நில மேம்பாட்டிற்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்கின்ற ஒரு கால கட்டத்தில் நாட்டிற்கு வளத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற மண் இப்போது அதிகார வர்க்கத்தால் ஒரு பக்கம் சுரண்டப்பட்டுக்கொண்டிருக்கிறது என்கிற செய்தியை இந்த மாமன்றத்திற்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Rule 39 of Tamil Nadu Minor Minerals Concession Rules, 1959 என்ற அடிப்படையில் under Rule 39-ஐ இந்த அரசு 27-6-1996 அன்று இரத்து செய்திருக்கிறது. ஆனால், இப்பொழுது ஏறத்தாழ 500 ஏக்கருக்கும் அதிகமான இடங்கள், பாலாறு என்று சொல்லப்படுகிற, சென்னை நகரத்து மக்கள் அதிகமாக நேசிக்கின்ற மணலைப் பெற்றிருக்கின்ற அந்த பாலாறையொட்டி மதுராந்தகம், பாண்டூர் போன்ற பகுதிகளில் நீதிமன்றத்திலே தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதற்கு மேல்முறையீட்டிற்கு அரசு 4 வாரத்திற்குள்ளே செல்ல வேண்டுமென்கிற First Bench நீதிமன்றத்தினுடைய உத்தரவு வெளியிட்ட பிறகும்கூட, இந்த அரசு மாதக்கணக்கிலே மேல்முறையீடு செய்யாத காரணத்தினால், ஏறத்தாழ 100 கோடி ரூபாய்க்கும் அதிகமாக இப்பொழுது இந்த நாட்டினுடைய வளமான மண் அரசுக்கு வந்து சேருவதற்குப் பதிலாக, அந்த நிதி வந்து சேருவதற்குப் பதிலாக தனியாருடைய பாக்கெட்டுகளுக்கு அது சென்றுகொண்டிருக்கிறது. மறைமுகமாக அல்ல நேரடியாக அதிலே அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று நான் பகிரங்கமாகச் சொல்ல முடியும். ஏனென்று சொன்னால், எதிர்க்கட்சி வரிசையிலே வீற்றிருந்தவர்கள் இப்பொழுது ஆளும் கட்சிக்கு வரிசையாக அணி வகுக்கின்ற சூழலை உருவாக்கியிருப்பதற்கு இந்த அஸ்திரம்தான் காரணமாக இருந்திருக்கிறது என்பதையும் நான் ஆணித்தரமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசு கொள்கை ரீதியாக Rule 39 இரத்து செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும்,



அதை ரத்து செய்ததற்காக தனியார், நீதிமன்றத்திலே சென்று அந்த இரத்து ஆணையை மீறியும் அந்த மணல் குவாரி நடத்திக்கொண்டிருப்பவர் மீது தடை உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டுமென்று சொன்னபோது நீதிமன்றத்திலே, அரசினுடைய வழக்கறிஞர்கள் வாதாடுகிறபோது ஆணித்தரமாக அவர்கள் சொல்கிறார்கள், அதை நீதிபதியே குறிப்பிட்டிருக்கிறார்கள். சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவருடைய அனுமதியோடு அதை நான் வாசிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். Learned Government Pleader appearing on behalf of their respondents, அதாவது அரசு, while strongly opposing the prayers இந்தக் குவாரிகளுக்கு தடை விதிக்க வேண்டுமென்று சொன்ன அந்த prayer-ஐ கடுமையாக எதிர்த்து they submitted that only six months period remains and that at this stage the respondents should not be disturbed. நான் அரசைக் கேட்கிறேன் Rule 39 இரத்து செய்யப்பட்டது என்று அதற்கான பெருமைகளைத் தட்டிக்கொண்டு செல்கிறபோது அந்த Rule-னுடைய அடிப்படையிலே அரசுக்கு, ஆளும் கட்சிக்கு எதிராக இருப்பவர்களுடைய குவாரிகளை மட்டும் நீங்கள் தடை செய்துவிட்டு, அரசுக்குச் சாதகமாக இருப்பவர்கள் அல்லது இந்த ஆட்சிக்கு ஒரு பக்கத்திலே நிதியைத் தந்து கொண்டிருப்பவர்கள், அவர்களுடைய குவாரியை நீங்கள் அனுமதித்துக் கொண்டிருப்பீர்கள் என்று சொன்னால், இது யாரை ஏமாற்றுவது என்பது எனக்குப் புரியவில்லை. ஏனென்று சொன்னால், நான் இதைச் சொல்கிறபோது ஆணித்தரமாகச் சொல்ல முடியும். இப்பொழுது செங்கல்பட்டு மாவட்டத்திலே மட்டும் ஏறத்தாழ 5 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான பகுதிகளிலேயிருந்து மணல் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எல்லா மாவட்டங்களிலும் Rule 39 இரத்து செய்யப்பட்டு அதற்கான டெண்டர்கள் கோரப்பட்டபோது, செங்கல்பட்டு மாவட்டத்திலே மட்டும் ஏன் அந்த Rule இரத்து செய்யப்பட்டு அதற்கு டெண்டர்களை கோரவில்லை என்கிற கோரிக்கையினை, கேள்வியினை இந்த அரசு மீது வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-40

இன்னொரு பக்கம் திருவள்ளூர் மாவட்டத்திலே பல்வேறு குவாரிகளை Rule 39-ல் இரத்து செய்திருக்கிறார்கள். ஆனால் முத்துகொண்டாபுரம் திருத்தணி தாலுக்காவிலே இன்றைக்கும் மணல் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் குவாரியைப்

பொறுத்தவரை அது Rule 39லே வருகின்ற குவாரி. அதை இன்றைக்கும் அனுமதித்துக் கொண்டிருக்கிறீர்கள். அங்கே மணல் எடுப்பதற்கான இரசீதுகளை நான் இந்த மன்றத்திலே காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன்.

அதே நேரத்திலே இன்னொரு குவாரியைப் பார்க்கிறேன். இராமன்சேரி என்கிற குவாரி. இந்த அரசு எந்த அளவிற்குப் பாரபட்சமான முறையிலே நடந்துகொண்டிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்கிறேன். இராமன்சேரி என்கிற குவாரியிலே இதேபோன்று Rule 39ஐ நீதிமன்றம் இரத்து செய்த பிறகு, அவர்கள் மேல்முறையீட்டுக்குச் செல்கிறார்கள். மேல்முறையீட்டிலே செல்கின்றபோது, அந்த குவாரியை அனுமதியுங்கள் என்று நீதிமன்றம் சொன்னபிறகும்கூட, இன்றைக்கும் அரசினுடைய வழக்கறிஞர்கள் சொல்கிறார்கள், அது நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு, அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் ஆலோசனை சொன்னபிறகும்கூட, இப்பொழுது சுப்ரீம் கோர்ட்டிலே நீங்கள் வழக்காடுவதற்காகச் சென்றுகொண்டிருக்கிறீர்கள். ஒருபக்கம் சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்கிறீர்கள். இன்னொரு பக்கம் அரசு மேல்முறையீடு செய்வதற்கு நான்கு வாரங்கள் அவகாசம் கொடுத்த பிறகும்கூட நீங்கள் மேல்முறையீட்டுக்கு செல்லவில்லையென்று சொன்னால், மறைமுகமாக மக்களுடைய பணத்தையெல்லாம் சுரண்டிக்கொண்டிருக்கிற ஒரு அரசாக இது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று நான் ஆணித்தரமான குற்றச்சாட்டைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) சார், ஏழு நிமிஷம் என்று அல்லவா சொல்லியிருக்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிஷம் இருக்கிறது.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** அதே நேரத்திலே இப்பொழுது பார்க்கவேண்டும். சென்னையிலே மட்டும், செங்கல்பட்டிலே ஏறத்தாழ 4000 லாரிகள் இன்றைக்கு ஒரு நாள் மணல் எடுத்துக்கொண்டு வந்துகொண்டிருக்கின்றன. ஒரு லாரி மூன்று லோடு மணல் என்று சொன்னால், ஏறத்தாழ சுமார் 10 ஆயிரம் லோடுகள் இன்றைக்கு ஒரு நாளில் அங்கேயிருந்து மணல் அப்புறப்படுத்தப்படுகிறது. பாலாற்றிலே மட்டும், பாண்டூரில் அந்தப் பகுதி மக்களே லாரிகளைச் சிறைப்படுத்திய செய்திகள் பத்திரிகைகளிலே வந்திருக்கின்றன. நான் உதாரணத்திற்காக கணக்குப் போட்டுச் சொல்கிறேன். 10 ஆயிரம்



லாரி, ஒரு லாரிக்கு 350 ரூபாய் என்று சொல்லி, அவர்கள் வசூல் செய்து, ஒரு மாதம் மட்டும் ஏறத்தாழ 15 கோடி ரூபாய் அவர்கள் வசூல் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்சி வந்த பிறகு, இத்தனை மாதங்கள் என்று கணக்குப் போட்டுப் பார்க்கின்றபோது, நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் இப்போது ஆளும் கட்சியினுடைய, பல்வேறு நண்பர்களுடைய ஆதிக்கத்திலே இருக்கிறது. இந்தத் தவறான முன்னோட்டம் காரணமாக, நிர்வாகம் காரணமாக, தமிழக அரசுக்கு வந்து சேரவேண்டிய ரெவின்யு இன்றைக்குக் கொள்ளையடிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்கிற செய்தியை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மணல் குவாரிகளை குத்தகைக்கு விடுவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் செல்லக்குமார் அவர்கள் தன்னுடைய கருத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பொதுவாக, இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டவுடன், எந்த குவாரியாக இருந்தாலும், அரசுக்கு வருவாய் வருகின்ற வகையிலே அதை ஏலம் போட்டுத்தான் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் ஏற்கெனவே உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. சிலர் நீதிமன்றத்திலே போய் தடை வாங்கி விடுகிறார்கள். அப்படித் தடை வாங்கிய சில வழக்குகளிலே மேல்முறையீடும் செய்திருக்கிறோம். இப்படி இருக்கின்ற நேரத்திலே அதிலே ஆளும் கட்சியா, எதிர்க்கட்சியா எந்தக் கட்சி என்பது அல்ல. இன்னும் சொல்லப்போனால், சிலபேர் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள்கூட கடந்த கால ஆட்சியிலே குத்தகை எடுக்கப்பட்டு இன்னமும் நீதிமன்றத்திற்குப் போய் இடைக்காலத் தடை வாங்கி எடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஒரு லாரிக்கு 350 ரூபாய் என்று வசூலிக்கிறார்கள். 10 ஆயிரம் லாரி என்று சொன்னால் ஒரு கணக்குப் போட்டு 15 கோடி ரூபாய் எங்கேயோ போகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார்கள். சென்னையிலே கட்டடப் பணிகளுக்கு மணல் இல்லாமல் ஒரு பக்கத்திலே அவதிப்படுகிறார்கள். செங்கல் வியாபாரிகள் மணல் இல்லாமல் வேதனைப்படுகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் மக்களுடைய நன்மையையும் கருதி, அதே நேரத்திலே அரசாங்கத்திற்கு வருவாயும் வரக்கூடிய வகையிலே தான் அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. எங்கேயாவது தனிப்பட்ட முறையிலே ஆளுங்கட்சிக்காரர்கள் தவறு

செய்தால், அதைக் குறிப்பிட்டுச் சொன்னால், அதுகுறித்து நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று சொல்கிறீர்கள். நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. ஏனென்று சொன்னால், நீதிமன்றத்திலே சென்று வழக்காடுகிறார்கள். தனியார், நீதிமன்றத்திலே சென்று தடையாணை பெறுகிறார்கள். அதற்குப் பிறகு அந்தக் குறிப்பிட்ட நபர்கள் சென்று First Bench-லே நீதிமன்றத்திலே சென்று. அவர்கள் தடையாணை பெறுகிறார்கள். அந்தத் தடையாணை பிறப்பிக்கின்றபோது நீதிபதி சொல்லியிருக்கிறார்கள் Notice to the respondent. Notice to the respondent என்று சொன்னால் அது. returnable in four weeks. அதுவரைக்கும் interim stage என்று சொன்னால், நான்கு வாரத்திற்குள்ளாக அரசு மேல்முறையீடு செய்திருக்கவேண்டும். ஆனால், மாதக் கணக்கிலே, ஆண்டுக் கணக்கிலே மேல்முறையீடு செய்யவில்லை என்று சொன்னால், இன்னொரு பக்கம் நீங்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்கிறீர்கள். ஆனால், ஏறத்தாழ ஐயாயிரத்திற்கும் அதிகமான ஏக்கர் நிலங்களில் இன்றைக்கு குவாரி செய்துகொண்டிருக்கிறார்கள் மணலை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே நீங்கள் மேல்முறையீடு செய்வதற்குக்கூட நான்கு வாரகால அவகாசம் நீதிமன்றம் கொடுத்தபிறகுகூட, மேல்முறையீடு செய்யவில்லை என்று சொன்னால், அதிலே இருக்கிற மர்மம்தான் என்ன என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. அதைப்போலத்தான் (மணியடிக்கப்பெற்றது) இன்றைக்கு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பா. துரைசாமி. (குறுக்கீடுகள்) குவாரியைப்பற்றி முழுவதுமாகச் சொல்லிவிட்டீர்களே. அதற்கு அமைச்சர் பதில் சொன்னார். (குறுக்கீடு) திரு. பா. துரைசாமி (குறுக்கீடு) 10 நிமிஷம்தான் ஆகிவிட்டதே!

*முற்பகல் 11-45*

**திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தல்கள், பல்வகை மூலதனச் செலவு, மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும், மாநில சட்டமன்றம், ஆகிய இந்த மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த



தங்களுக்கும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், சென்னை நகரை சிங்காரச் சென்னையாக ஆக்குகின்ற தளபதி அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைச் சொல்லி இந்த மானியக் கோரிக்கைகள் மீது எனது கருத்துகளைச் சொல்ல விழைகிறேன்.

தமிழக அரசு பொறுப்பு ஏற்ற பிறகு, தமிழகத்தில் தேர்தல்கள் மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்ததற்காக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். அரசு பொறுப்பு ஏற்ற உடனேயே உள்ளாட்சிமன்றத் தேர்தல்கள், நாடாளுமன்றத் தேர்தல்கள், சட்டமன்ற இடைத்தேர்தல்கள் இப்படிப்பட்ட தேர்தல்களையெல்லாம் மிகச் சிறப்பாக நடத்தியதற்கு நம்முடைய தமிழக அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். உள்ளாட்சித் தேர்தல் என்றாலே, அங்கு சட்டம் ஒழுங்கு, கலவரம், கொலைகள் நடைபெறுவதை நீங்களெல்லாம் கண்டிருக்கிறீர்கள். ஆனால், நம்முடைய கழக அரசு பொறுப்பு ஏற்ற பிறகு அந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்களெல்லாம் மிகச் சிறப்பாக அமைதியான முறையில் நடந்தமைக்கு நம்முடைய தமிழக முதல்வர் அவர்களையும், தேர்தல் ஆணையத்தையும் நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இப்பொழுது வாக்காளர் பட்டியல் தயாரிப்பதிலே கணினி மயமாக்கும் திட்டத்தை நான் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். வாக்காளர் பட்டியல் தயாரிக்கும்போது double entry உள்ளதை தேர்தல் ஆணையம் தடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

இப்பொழுது விடுதலை போராட்ட வீரர்களுக்கும், முன்னாள் இராணுவத்தினருக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் அரசு பல்வேறு சலுகைகளை அளித்து வருகிறது. உதாரணத்திற்கு சொல்லவேண்டுமானால் அவர்களுக்கு மருத்துவ வசதி, கல்வி வசதி, படிப்பதற்கு பல வசதிகளை இப்பொழுது அரசு அளித்து வருகிறது. வீட்டு வசதித் துறை மூலமாகவும் அரசு அவர்களுக்கு சலுகைகள் அளித்து வருகிறது. போக்குவரத்தில் இலவச பஸ் பாஸ் அவர்களுக்கு அரசு அளித்து வருகிறது. அதேபோன்று ஈமச் சடங்குகளுக்கும் அந்த முன்னாள் இராணுவத்தினருக்கும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அரசு பல சலுகைகளை அளித்து வருகிறது. தந்தை பெரியார் அவர்களுடைய பெயரில் உள்ள சமத்துவபுரத்தில்

அவர்களுக்கு வீடுகளை தமிழக அரசு ஒதுக்கி வருவதை நான் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். அதேபோன்று மத்திய, மாநில அரசுகள் வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருவதை நான் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு ஊழியர்கள் இறந்துவிட்டாலோ அல்லது ஓய்வு பெற்றாலோ அவர்களுக்கு உடனடியாக ஓய்வூதியங்களை வழங்குவது தமிழக அரசுதான் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்கின்றேன். ஓய்வூதியத்தை ரூ.375-லிருந்து ரூ.1275 ஆக உயர்த்தி மாற்றியமைத்த தமிழக அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பில் காவல் துறை, எழுதுபொருள் அச்சுத் துறை, குடிநீர் வழங்கல், துப்புரவு, வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி, ஆதிதிராவிடர், பழங்குடியினர் வளர்ச்சி, ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் வளர்ச்சி, சமூகப் பணிகள், மீனளம், மலை வளம் போன்ற இனங்களுக்கு அதிக நிதி ஒதுக்கியதற்கு நம்முடைய மாநில அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். இதிலே காவல் துறையினருக்கு வீடுகள் கட்ட ரூ.59.10 கோடி நிதி ஒதுக்கியதை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோன்று குடிநீர் வசதிக்கு, உள்ளாட்சி கட்டமைப்புக்கு மானியமாக ஏறத்தாழ ரூ.80 கோடியும், ஊரக குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.411 கோடியும் வழங்கியுள்ளதை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

என்னுடைய வரகூர் தொகுதியிலே உள்ள வேப்பூர் ஒன்றியம், ஆலத்தூர் ஒன்றியம் ஆகியவை மிகவும் வறட்சியான பகுதிகள்; அந்தப் பகுதிகளில் நிலத்தடி நீர் மிகவும் வற்றிய நிலையில் உள்ளது. எனவே அதைக் கருத்தில் கொண்டு பக்கத்தில் உள்ள பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள ஆண்டிமடம் தொகுதியிலே, பெரம்பலூர் தொகுதியிலே, ஜெயங்கொண்டம் தொகுதியிலே கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை உருவாக்கியுள்ளார்கள். எனது தொகுதியில் உள்ள வேப்பூர் ஒன்றியத்திற்கும் ஆலத்தூர் ஒன்றியத்திற்கும் அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கித் தருமாறு நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.



இப்பொழுது தமிழக அரசு வீட்டு வசதித் துறை மூலம் மாவட்டந்தோறும், வட்டந்தோறும் பல கட்டடங்கள் கட்டி செயல்பட்டு வருகிறது. அதேபோன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நல்ல வசதியுடன் கூடிய வீடுகளை சிறப்பாகக் கட்டி செயல்படுத்தி வருகிறது. அது விரைவில் திறக்கப்பட இருக்கிறது. அதற்காக தமிழக அரசுக்கு நான் பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசிமுடித்துவிடுகிறேன்.

ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு பள்ளிக் கட்டடங்கள் கட்ட ரூ.144 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று மாணவர் இல்லம் கட்ட ரூ.13.80 கோடி நிதி ஒதுக்கியுள்ளதற்கும் நான் பாராட்டுத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

தற்பொழுது அனைத்து ஆதிதிராவிடர்களும் மயானத்திற்குச் செல்வதற்கு பாதையின்றி தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாதை அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமாய் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

*முற்பகல் 11-50*

நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால்தான் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பல்வேறு நிலைகளிலே சம்பளத்தை உயர்த்தியிருக்கிறது. இருந்தாலும் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது இந்தச் சம்பளம் சற்றுக் குறைவாக இருக்கிறது. மஹாராஷ்டிரா, கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் ஏறக்குறைய 15,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாய் வரை சம்பளம் தருகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று வழங்கப்படுகின்ற தொகுதி மேம்பாட்டு நிதியை ஒரு கோடியாக உயர்த்தித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வை. சிவபுண்ணியம்,** 5 நிமிடங்களுக்குள் பேசி முடிக்க வேண்டும். உங்களுக்கு முன்பாக பேசிய உறுப்பினர் சரியாக 5 நிமிடங்களுக்குள் பேசி முடித்துவிட்டார். அதே மாதிரி நீங்களும் பேசி முடிக்கவேண்டும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்காகவும் சேர்த்து சில கோரிக்கைகளை வைத்து, பேச இருக்கிறேன். சிறிது அதிக நேரம் பேச வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோருடைய கோரிக்கைகளையும் 5 நிமிடங்களுக்குள் பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** கொஞ்சம் நேரம் கொடுத்து உதவ வேண்டும்.

தேர்தல் ஆணையம் சமீபத்தில் ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. வரக்கூடிய தேர்தலுக்குள்ளாக எல்லோருக்கும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்குவதற்கான முதற்கட்டப் பணிகள் முடிவடைந்து பலருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அதிலே பல குளறுபடிகள் இருப்பதாகச் செய்திகள் வருகின்றன. பல இடங்களிலே பல நபர்கள் கையிலே ஒப்படைக்கப்பட்டு அவர்கள் கொடுக்காமல் இருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. இதுகுறித்து அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். தேர்தல் ஆணையம் கவனித்து செயல்படச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்குவதற்கான இரண்டாம் கட்டப் பணிகள் இன்னும் தொடங்கப்படாமல் இருக்கின்றன. அதை உடனடியாகத் தொடங்கி, அடையாள அட்டையை வருகின்ற தேர்தலிலே பயன்படுத்தச் செய்வதற்கான உத்தரவாதத்தினை அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன. காலம் போதாது. சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவையிலே பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதிலே குறிப்பாக, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பற்றி பல்வேறாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தற்போது, நாடாளுமன்றத்திலே, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதி 2 கோடி ரூபாய் என இருந்ததை 4 கோடி ரூபாயாக உயர்த்துவதற்கான



முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு அது விவாதத்திலே இருக்கிறது. அனேகமாக அது நிறைவேற்றப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்குரிய தொகுதி மேம்பாட்டு நிதியை 1 கோடியாக இந்த ஆண்டே உயர்த்தித் தர வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான முன்மொழிவுகளை நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அனுப்ப வேண்டும்.

இப்போது சென்னை நகரத்திலே கடுமையான வெப்பம். 109 டிகிரி. இரவிலே கனவு வருகிறது. நேற்று முன் தினம் வந்த கனவிலே நம்முடைய பேராசிரியர் வந்தார். (சிரிப்பு) வந்த அவர் சொன்னது, இந்த மானியக் கோரிக்கையில் பேசுகின்றபோது ஒரு கோடி ரூபாய் தேவை என்ற கோரிக்கையை நீங்கள் அவசியம் வைக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்திலே இருக்கிறது என்று சொன்னார். (மணியடிக்கப்பெற்றது) நேற்று இரவு சரியாக 1-00 மணிக்கு..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உடனே கனவிலே ஐஸ் மழை பொழிந்திருக்குமே! (சிரிப்பு)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் நான் அவருடைய கனவிலே வந்ததாகச் சொல்லி ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவருடைய கருத்து கனவாகி விடக் கூடாது. (சிரிப்பு)

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்குள் வந்து இருக்கையில் அமர்ந்தார்கள்.)

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கண்ட கனவை நனவாக்குவதற்குரிய கடவுளாக நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள் வந்திருக்கிறார்கள். எனவே, ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என்கின்ற அவருடைய கனவை நனவாக்குவீர்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக வழங்கப்படும், கனவில். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதையாவது பேசி, வருவதைக்கூட வராமல் செய்து விடாதீர்கள். (சிரிப்பு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்போதும் கோரிக்கை வைக்கிறபோது கனவாகவே நினைத்து முதலமைச்சரிடத்தில் கோரிக்கை வைப்பதில்லை. நிறைவேற்றப்படும் என்கின்ற நம்பிக்கையோடுதான் வைக்கிறோம். ஆகவே, இதையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கனவை நனவாக்கிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் இருக்கிறபோது, அந்தக் கவலையே தேவையில்லை என்றுதான் நான் கருதுகிறேன். அன்றைக்கு பேராசிரியர் கனவில் வந்தார், நேற்றைய தினம் இரவு சரியாக 1-00 மணிக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் புன்முறுவலோடு, அந்த மஞ்சள் மகிமையோடு எனக்குக் காட்சியளித்தார். (சிரிப்பு) அவர் காட்சியளிக்கிறபோது சொன்ன செய்தி 1 கோடி என்ற செய்தியைக் கேள், உடனடியாக இந்த அவையிலே இன்றைக்கு அறிவித்துவிடுவேன் என்று சொல்லியிருக்கின்றார். 1 கோடி ரூபாய் பரிசுக்கான பம்பர் சீட்டு முடிவுகள் ஒரு வார காலத்தில் அறிவிக்கப்பட இருக்கிறது. சீட்டைச் சொல்லியோ அல்லது கனவைச் சொல்லியோ தவிர்த்துவிடாமல் கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த 1 கோடி ரூபாய்த் திட்டத்தினை இன்றையதினமே அறிவித்து எல்லா உறுப்பினர்களையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்த வேண்டுமென்று அன்போடு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து, பல கோரிக்கைகள் இருக்கின்றன. ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். நீங்கள் அறிந்ததுதான். அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 60 சதவீதத் தொகையை உடனடியாக வழங்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அரசினிடத்திலே நிதி நெருக்கடி, பல பிரச்சினைகள் இருக்கின்றன என அரசு தெரிவித்திருக்கிறது. 2003-2004-ஆம் ஆண்டு வழங்கப்படும் என்பதை அவர்கள் காலத்திலேயே, இந்த ஆண்டிலேயே வழங்கினால் அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்ற கருத்து



சொல்லப்பட்டிருக்கிறது. அதையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரத்தை ஆண்டுவந்த முத்துராமலிங்க சேதுபதி வெள்ளையர்களை எதிர்த்து போராட்டம் நடத்தி சிறைச்சாலையிலேயே இருந்து வீர மரணம் அடைந்திருக்கிறார். அவர்களுடைய வாரிசுகளைக் கண்டுபிடிப்பதற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்களே, நீங்கள் ஒரு குழுவை அமைத்தீர்கள். அந்தக் குழு அமைக்கப்பட்டு அதனுடைய அறிக்கையும் இந்த அரசுக்கு அளிக்கப்பட்டுவிட்டது. கிட்டத்தட்ட 177 பேர்களை வாரிசுதாரர்களாக அடையாளம் காட்டி நம்முடைய அரசுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்குரிய உதவித் தொகையை வழங்குவதற்கு, அவர்களை அழைத்துப் பேசி பரிசீலனை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). இன்னும் ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

*முற்பகல் 11-55*

அதுபோல சட்டமன்றப் பேரவைச் செயலகத்திற்குள்ள சில கோரிக்கைகளை வைக்க வேண்டியிருக்கிறது. காரணம் இங்கே ஆண்டு முழுவதும் பணியாற்றுகிறபோது அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்தப் பேரவைச் செயலகத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கிற நம்முடைய நிருபர்களுக்குரிய சில கோரிக்கைகள். நாடாளுமன்றத்தில் பணியாற்றுகின்ற நிருபர்களுக்கு இணையாக அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படவேண்டும். அவர்களுக்குச் சிறப்பு ஊதியமாக நாடாளுமன்றத்தில் வழங்கப்படுவதுபோல 400 ரூபாய் வழங்க வேண்டும். சிறப்புப் படியாக 100 ரூபாய் வழங்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இதிலே இருக்கிற ஊதிய முரண்பாடுகளைக் களைந்து அவர்களுக்கு உதவ வேண்டும்.

அதுபோல சட்டமன்றப் பேரவைச் செயலகத்திலே பணியாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கு over time பார்ப்பவர்களுக்குச் சில தகுதிகளின் அடிப்படையில் 32 ரூபாய், 37 ரூபாய் மற்றும் 42 ரூபாய் என்று வழங்கப்படுகிறது. அவற்றை 60 ரூபாய் 75 ரூபாய் மற்றும் 90 ரூபாய் என்று உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே சட்டமன்றப் பேரவையில் பணிபுரிகிற தற்காலிகப் பணியாளர்கள் பல கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவர்கள் நீண்டகாலமாக 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் பணியாற்றுகிறார்கள். அவர்களை ஏதாவது ஒரு துறையிலே அல்லது இந்தச் சட்டமன்றச் செயலகத்திலே பணி நியமனம் செய்ய வேண்டும். இவற்றையெல்லாம் செய்வதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியை 1 கோடியாக உயர்த்தித் தர அறிவிக்க வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக்கொண்டிருக்கிற மானியக் கோரிக்கைகள்மீது தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பிலே சில கோரிக்கைகளை எடுத்து வைக்க முன்வருகிறேன். நடைபெற்றுக்கொண்டிருக்கிற சட்டமன்றப் பேரவையினுடைய இறுதிக் கட்டத்திலே இங்கே பேசுகின்ற வாய்ப்பை வழங்கிய உங்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிற சம்பளமானது இப்போது குறைந்த அளவில் இருக்கிறது. மற்ற மாநிலங்களில் வழங்குவதுபோன்று கூடுதலாக சம்பளம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையினை மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய உறுப்பினர் அத்தனை பேர்களும் இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் நம்முடைய கல்வித் துறை அமைச்சர், அவை முன்னவர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பளத்தைக் கூடுதல் செய்து கொடுக்க வேண்டும்.

அதேபோன்று முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்கள் ஓய்வு பெற்றவுடன் பெறுகின்ற ஓய்வூதியத்தை கூடுதலாக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓர் உதவியாளர் தேவை என்று தொடர்ந்து கடந்த 4 ஆண்டுகளாக எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்கள் தொகுதியில் பணியாற்றுவதற்குரிய கட்டடத்தைக் கட்டுவதற்கு நீங்கள் அனுமதி வழங்கியிருக்கிறீர்கள். அப்படி அந்தக் கட்டடம் கட்டப்பட்டுவிடுமேயானால் அங்கே பணியாற்றுவதற்கு ஒரு உதவியாளர் தேவை. அத்தோடு சேர்த்து தட்டச்சர் ஒருவரை நியமனம் செய்து கொடுக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோன்று, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பஸ் போக்குவரத்திற்கு நீங்கள் இலவசமாக பாஸ் வழங்கியிருக்கிறீர்கள். சில சட்டமன்ற உறுப்பினர்கள் பஸ் போக்குவரத்துப் பிரயாணம் செய்ய முடியாத நிலையிலே இருக்கின்றவர்கள் இரயிலிலே பிரயாணம் செய்கின்றார்கள். நீங்கள் இரயிலுக்கு அதற்காக ஒரு கட்டணத் தொகையை வழங்குகிறீர்கள். அந்தத் தொகையை வழங்குவதற்குப் பதிலாக நீங்கள் சட்டமன்ற உறுப்பினருடன் உதவியாளரும் சேர்ந்து தமிழகத்திலே இரயிலில் பிரயாணம் செய்வதற்கு இலவசமாக இரயில் பாஸ் வழங்குவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி வளர்ச்சிக்காக வழங்கப்படுகிற நிதி 35 இலட்சம் ரூபாயிலிருந்து, 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டு இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 60 இலட்சம் ரூபாய் என்று உயர்த்தி அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிற இந்தத் தொகை மூலமாகத்தான் மக்களுக்குச் செய்யப்படுகின்ற சேவைகள், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து செல்லுகின்றது. சட்டமன்ற உறுப்பினர் இந்தத் தொகையை சாலைக்காக கொடுத்திருக்கிறார், தெருவிளக்குக்காகக் கொடுத்திருக்கிறார், சாக்கடை வசதிக்காகக் கொடுத்திருக்கிறார், சிமெண்ட் ரோடுக்காகக் கொடுத்திருக்கிறார் என்று மக்கள் மத்தியிலே ஒரு செய்தியைப் பரப்புவதற்கு சட்டமன்ற உறுப்பினர் நிதி கூடுதலாகத் தேவைப்படுகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொகுதிக்கு ஓர் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று வழங்கியிருக்கிறார்கள். இதை நீங்கள் இரண்டாக வழங்க வேண்டுமென்ற கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதையும் கனிவோடு பரிசீலித்து அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை இரண்டாக அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று இப்போது நீங்கள் 60 இலட்சம் ரூபாய் என்று உயர்த்திக் கொடுத்திருப்பது போதாது. அதை 1 கோடி ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று

[திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்] [2000 மே 16

கேட்டுக்கொள்கிறேன். காரணம், தார் ரோடுகளெல்லாம், முன்பு 1 கி.மீ. 3 அல்லது 4 லட்சம் ரூபாயிலே போடப்பட்டன. இப்போது 6 இலட்சம் ரூபாய் முதல் 7 இலட்சம் ரூபாயாக — தரம் உயர்த்தப்பட்டிருக்கின்ற காரணத்தினால் — ஒதுக்கப்பட்டுள்ள தொகையானது 10 ரோடுகளுக்குக் கூட கொடுக்கப்பட முடியாமல் போய்விடும் என்பதை உணர்ந்து நீங்கள் அதை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*நண்பகல் 12-00*

ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, மன்னராக இருந்து போர்க்குரல் கொடுத்தவர் ரிபல் முத்துராமலிங்க சேதுபதி அவர்கள். அவர்கள் பிரிட்டிஷாரை எதிர்த்து 34 ஆண்டுகள் இந்த சென்னையிலே செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே தங்கி இருந்து இங்கே உயிர்நீத்து இருக்கின்றார்கள். அவர்களுக்காக மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் சுப. தங்கவேலன் அவர்களுடைய தலைமையிலே குழு அமைக்கப்பட்டு அக்குழுவானது ஆய்வு செய்து அறிக்கையை சமர்ப்பித்து இருக்கிறது. ஆகவே நாடு சுதந்திரம் அடைவதற்காக, சுதந்திரப் போராட்ட வீரர் கட்டபொம்மன் வாரிசுகளாக இருந்து இங்கே மரணம் அடைந்து இருக்கின்ற அவரது குடும்ப வாரிசுதாரர்கள் 177 பேர் இனம் காட்டப்பட்டு இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று பல்வகை மூலதனச் செலவு, சட்டமன்றம், தேர்தல் ஆகிய மானிய கோரிக்கைகளின் மீது பேசுவதற்குண்டான வாய்ப்புக் கொடுத்ததற்காக தங்களுக்கு நன்றியைத் தெரிவித்து, ஒருசில கருத்துகளை இந்த அவை முன் வைக்க விரும்புகின்றேன். குறிப்பாக, நேரம், காலம் போதாமையின் காரணமாக விரிவாக பேசமுடியாத சூழ்நிலையில், சுருக்கமாக கருத்துகளைச் சொல்ல விரும்புகின்றேன்.



2000 மே 16] [திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்]

குறிப்பாக விடுபட்டுப் போன வாக்காளர்கள் 1 கோடியே 72 இலட்சம் பேருக்கு புகைப்படம் எடுக்க வேண்டுமென்று கொள்கைக் குறிப்பிலே கூறியிருப்பதை வருகின்ற சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக அனைத்து வாக்காளப் பெருமக்களுக்கும், புகைப்படம் எடுத்து அட்டையை உடனடியாக வழங்கி வாக்குப் பதிவின்போது கள்ள ஓட்டுகள், பதிவு செய்யப்படாத சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கையை உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக பல்வேறு பகுதிகளிலே வாக்குச் சாவடிகள் நிறைய இருக்கக்கூடிய—பள்ளிக்கூடம் அமைக்கக் கூடிய நிலையில் அருகிலேயே வாக்குச் சாவடிகள் அமைக்கக் கூடிய சூழ்நிலையை — வகையில் வருங்காலத்திலே 1 கிலோ மீட்டருக்குள்ளாகவே வாக்குச் சாவடிகள் அமைத்துக் கொடுக்க வேண்டும். குறிப்பாக கிராமப் பகுதிகளிலே வாக்காளர்கள் வாக்குகளைப் பதிவு செய்கின்றபோது மாலை 5 மணியளவிலிருந்து 8 மணிவரை சென்றால்தான் வாக்காளர்களைப் பார்த்து உண்மையான வாக்குகளைப் பதிவு செய்ய முடியும். அந்த நிலையை ஏற்படுத்தி வாக்காளர் அனைவரும் வாக்களிக்கக் கூடிய வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும்.

குறிப்பாக எதிர்காலத்திலே வாக்களிக்காத வாக்காளர்களுக்கு அரசின் மூலமாக கிடைக்கக்கூடிய சில சலுகைகளையாவது குறைப்போம் என்ற உறுதியினை கூறுகின்ற அந்த நேரத்தில், எதிர்காலத்தில் அனைத்து நபர்களும் வாக்களிக்கக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்ததாக, சட்டமன்றத்தைப் பொறுத்த வரையில் குறிப்பாக இங்கே இருக்கக்கூடிய ஏகோபித்த அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய விருப்பத்தின் அடிப்படையில் எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் தெள்ளத் தெளிவாகக் கூறியபடி இன்று சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி வளர்ச்சி நிதியை — நாடாளுமன்றத்தில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு 4 கோடி ரூபாய் வழங்கி இருக்கின்ற இந்த சூழ்நிலையில் — மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு உறுதியாக இந்த சட்டமன்றத்திலே 60 லட்சம் ரூபாய் என்பதை 1 கோடி ரூபாயாக ஒவ்வோர் உறுப்பினருக்கும் அறிவிப்பார்கள் என்று நம்புகின்றேன். அறிவிக்க வேண்டும் என்று அன்போடு இந்தச் நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமாத்திரமல்ல, இன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கக்கூடிய தொலைபேசி வசதிகள், வாகன வசதிகள் இவையெல்லாம் எங்களைப் போன்றவர்கள் சொல்லி மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே வாகன வசதிகளைப் பயன்படுத்திக்கொள்வதற்கு, உதவியாளர்களைப் பயன்படுத்திக்கொள்வதற்கு, தட்டச்சர்களைப் பயன்படுத்திக்கொள்வதற்கு, தொகுதியிலே சுற்றுப்பயணம் செய்வதற்கு, தொலைபேசிக் கட்டணத்தைக் கட்டுவதற்கு ஏற்ற வகையிலே அதிகபட்சமாக அகவிலைப்படியை, மற்ற படிகளை உயர்த்தி குறைந்தபட்சமாக மாதம் ஒன்றுக்கு ரூ.25,000 ஆவது சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கிடைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக இன்று ஓய்வூதியத்திலே, பென்சன்தாரர்கள் எல்லாம் பென்சன் கிடைக்கக் கூடிய கருவூல அலுவலத்திற்குச் செல்லுகின்ற நேரத்திலே அந்த பென்சன்தாரர்கள், அந்தக் கருவூலத்தில் இருக்கக் கூடிய அதிகாரிகளுக்குக் கொடுக்க வேண்டிய மாமூலை கொடுத்தால்தான், அந்தக் கருவூலத்திலே பென்சன்தாரர்கள் பென்சன் பெறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதையெல்லாம் கண்டிப்பாக மாற்றியமைக்க வேண்டும். காரணம் அந்தக் கருவூல அதிகாரிகளே ஓய்வு பெறுகின்றபோது அவர்களும் இந்த நிலையை எய்துவார்கள் என்ற எண்ணம் இல்லாமல், அந்த அதிகாரிகள் தங்கள் தேவைகளுக்கேற்ப மாமூலைப் பெற்றுக் கொண்டுதான் பென்சன் கொடுத்துக் கொண்டிருக்கக் கூடிய சூழ்நிலையை மாற்றி கருவூலத்திலே சுலபமாக விரைவாக பென்சன்தாரர்களுக்கு உதவி கிடைக்கக், கூடிய ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக 1980 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். காலத்திலே பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் கிராம அலுவலர்களில் சில பேருக்கு பல்வேறு முறையிலே, பல்வேறு மேல் முறையீட்டின் காரணமாக வேலை கிடைத்தது, பலபேர் வயதின் காரணமாக ஓய்வு பெற்று இருக்கின்றார்கள். அப்படி ஓய்வு பெற்றவர்களுக்கு மீண்டும் பரிசீலித்து, அரசு ஊழியர்களுக்கு என்ன நிர்ணயம் செய்து ஓய்வூதியம் வழங்குகின்றீர்களோ, அந்த ஓய்வூதியத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கவேண்டும் என்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.





பிற்பகல் 12-05

அதேபோன்று, தியாகிகளுடைய குழந்தைகளுக்கு பொறியியல் கல்லூரிகளிலே 10 இடங்கள் கொடுக்கப்படுவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இன்று பாலிடெக்னிக்குகளில் ஏராளமான இடங்கள் இருக்கின்றன. ஆகவே, ஓர் இடம் என்ற நிலையை மாற்றி பாலிடெக்னிக்குகளிலும், முழுமையாகப் பொறியியல் கல்லூரிகளிலே கொடுப்பதைப்போல இப்படிப்பட்ட ஓய்வூதியம் பெறக்கூடியவர்கள், சுதந்திரப் போராட்டத் தியாகிகள் ஆகியோருடைய பேரன், பேத்திகள் எல்லாம் எதிர்காலத்திலே, வரக்கூடிய காலத்திலே, பெறுவதற்கு ஏற்ப பாலிடெக்னிக்குகளிலும் குறைந்தது 10 இடங்கள் கிடைப்பதற்குண்டான வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, அந்தத் தியாகிகள் எல்லாம், எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல், நாடு சுதந்திரம் பெறுவதற்காகத் தியாகம் செய்தார்கள். அந்தக் குடும்பத் தலைவர்கள், அந்தத் தியாகிகள் இறக்கின்ற நேரத்திலே வட்டாட்சியர் அளவில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களது மாவட்டத்தில் தேர்தல் கமிஷன் மூலமாக அடையாள அட்டை வழங்குவதற்கு, புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. ஆனால், பல இடங்களில் ஊரினுடைய பெயரை மாற்றிப்போட்டு, பொதுமக்கள் அவற்றை வாங்கமாட்டோம் என்று திருப்பிக் கொடுத்து, பிரச்சினையாகி இருக்கிறது. உதாரணமாக, கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் தாலுகாவில், பேயன்குழி என்று சொல்லக்கூடிய ஊரில் 600க்கும் மேற்பட்ட அடையாள அட்டைகள் இருக்கின்றன. அதில் ஒருவருக்குக்கூட, அந்தப் பேயன்குழி என்று சொல்லக்கூடிய ஊரின் பெயர் போடப்படாமல், பக்கத்தில் இருக்கக்கூடிய ஊரின் பெயரைப்போட்டு, அவர்கள் அவற்றை வாங்கமாட்டோம் என்று மறுத்து, R.D.O. வந்து பேச்சுவார்த்தை நடத்தி முடித்து, உடனே ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லி, திரும்பவும் அடையாள அட்டை வழங்கும்போதுகூட அதே தவறு நடந்திருக்கிறது. அப்படி ஒரு பெரிய பிரச்சினை, ஏற்பட்டது. அதிகாரிகள் எவரேனும் வேண்டுமென்றே செய்திருக்கின்றார்களா என்று தெரியவில்லை. எனவே, தேர்தல் கமிஷன் இதைக் கணக்கில் எடுத்துக்கொள்ள

வேண்டும். இதுபோன்ற ஊர் பெயர் மாறியிருக்கக்கூடிய நிலையில், இது ஒரு பெரிய பிரச்சினையாக, பூதாகாரமாக மாறி, ஒரு கலவரமாகக்கூட மாறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. எனவே, பேயன்குழி என்று சொல்லக்கூடிய அந்த ஊருக்கு—அந்த ஊரினுடைய பெயர், revenue பெயர் R.D.O. ஆணையின்படி பேயன்குழி என்றுதான் வழங்கப்படவேண்டும்—Revenue record-டில் இருக்கக்கூடிய அதே பெயரைப் பயன்படுத்தி அடையாள அட்டை வழங்கப்படவேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பல ஊர்களில், அவர்களுடைய சொந்த ஊரில் அரசாங்கப் புள்ளிக்கூடங்கள் இருந்தும், இரண்டு கிலோ மீட்டர் தாண்டிச் சென்று இன்னோர் ஊருக்குச் சென்று வாக்களிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக, கன்னியாகுமரி மாவட்டம், ஆளுர் பஞ்சாயத்தில், மேலப்பெருவிளை என்று சொல்லக்கூடிய ஊரில் அரசாங்கக் கட்டடங்கள் இருந்தும், 3 கிலோ மீட்டர் தாண்டிச் சென்று சுங்காங்கடைக்கு வந்து வாக்களிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. எனவே, அவர்களுடைய ஊரிலேயே அவர்கள் வாக்களிக்கக்கூடிய அளவுக்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய C.M. Cell ஓரளவுக்கு நன்றாக திருப்தியாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எங்களுக்கு இன்னொரு குறை இருக்கிறது. தொகுதிக்குச் சென்றுவிட்டு, சட்டமன்றத்திற்கு வரும்போது பொதுமக்கள் பலதுறைப்பட்ட ஏராளமான மனுக்களைத் தருகிறார்கள். 50, 100 என்று மனுக்கள் குவிந்துவிடுகின்றன. சட்டமன்றத்திற்கு வந்து, அலுவலர்களை, செயலாளர்களைச் சந்திக்க அவர்களது அலுவலகங்களுக்குச் சென்று மனுக்களைக் கொடுப்பது என்பது பெரிய பிரச்சினையாக இருக்கிறது. எனவே, C.M. Cell பக்கத்திலோ அல்லது ஏதாவது ஓர் இடத்தில் ஓர் அலுவலரை அமர வைத்து—சட்டமன்றம் கூடுகின்ற நாட்களிலாவது—அந்த மனுக்கள் அனைத்தையும் அவரிடம் கொடுப்பதற்கும், அவர், சம்பந்தப்பட்ட துறைகளுக்குப் பரிந்துரை செய்து, தக்க நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்யக்கூடிய வகையில் ஓர் அலுவலரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, சமீபத்தில் முதலமைச்சர் அவர்கள் கன்னியாகுமரிக்கு வந்திருந்தபோது தியாகிகளுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான உறுதிமொழியை அளித்து, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் ஒப்புக்கொண்டு மொத்தமாக மனுக்களைக் கொடுத்திருந்தோம். அதில் 142 பேருக்கு மட்டும் அங்கீகரித்து, கொடுத்ததில் பாதியை மட்டும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, 142 பேருக்கு மட்டும் கொடுத்திருக்கிறது. விடுபட்டதில் ஏராளமான ஏழைகள் இருக்கிறார்கள். என்னைப் பொறுத்தமட்டில், என்னுடைய பக்கத்து ஊரில் மரியாசமஸ்தையன் என்று சொல்லக்கூடியவர், மாடத்தட்டுவிளையைச் சேர்ந்தவர், அவருக்கு 3 மகள்கள் இருக்கிறார்கள். 3 மகள்களுக்கும் திருமண வயது கடந்துவிட்ட நிலையில், அவர்களுக்குக் கல்யாணம் செய்துகொடுக்க முடியாத அளவுக்கு வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறார். இதுபோன்ற தியாகிகளுக்கு பென்ஷன் கொடுத்தால், அவர்களுடைய குடும்பங்கள் வாழ்ந்துகொள்ளும். அத்தகைய நிலை உள்ளவர்களுக்கு மட்டுமாவது பரிசீலித்து — அதாவது வசதி உள்ளவர்களும் இருக்கிறார்கள், அவர்களை விட்டுவிட்டால்கூட பரவாயில்லை. மிக ஏழைகளாக உள்ளவர்களுக்கு மட்டுமாவது பரிசீலித்து — அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

இதோடு, ஒரே ஒரு கருத்து, காவல் துறையில் மதுவிலக்குப் பிரிவு என்று இருக்கிறது. தீயணைப்புத் துறைக்கென்று எப்படித் தனியாக துறை இருக்கிறதோ, அதைப்போல, மதுவிலக்குப் பிரிவைத் தனியாக மதுவிலக்குத் துறை என்று அறிவித்தால் அந்தத் துறை சிறப்பாகச் செயல்படும். சாதாரணமாக காவல் துறையில் இருக்கக்கூடிய பல காவலர்கள் மதுவுக்கு அடிமையாகிவிடுகிறார்கள். அவர்கள் கள்ளச்சாராய வியாபாரிகளுக்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்ற பெயர் எல்லாம் மாறி காவல் துறையானது மீண்டும் கொஞ்சம் புனிதமாக ஆவதற்கு வாய்ப்பு ஏற்படும். எனவே, மதுவிலக்குத் துறையைத் தனியாக அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

*பிற்பகல் 12-10*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆண்டு முழுவதும் உழைக்கும், நிலத்தை உழுது மாடாகி இருக்கின்ற மாடுகள் ஒரு நாளைக்குப் போற்றப்படுகின்றன. தன்னைப் பற்றியே எண்ணிக் கொள்கின்றன பொங்கல் நாளன்று. அதைப்போல் இன்றைக்கு மாடாய் உழைக்கின்ற இந்த மக்கள் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், தங்களைப் பற்றியே எண்ணிக்கொண்டு, தங்களைப் பற்றிப் பேசுகின்ற ஒரு நாளாகும் இது. எனவே இன்றைக்கு, எல்லா உறுப்பினர்களும், அமைச்சர்கள் இல்லை; ஆனால் எல்லா அமைச்சர்களும் உறுப்பினர்கள் என்பதை மறந்துவிடாமல், இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றியே சிந்தித்துச் செயல்படுகிற நாள் என்பதை இந்த அவையில் இருக்கிற அமைச்சர்கள் மட்டுமல்ல, துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் உள்ளிட்டு, பேரவைத் தலைவர் உள்ளிட்டு சிந்திக்க வேண்டிய நாள் இன்றைய நாள்.

எனக்கு நினைவு இருக்கிறது. நாங்களெல்லாம் 150 ரூபாய், 250 ரூபாய் சம்பளம் வாங்கியவர்கள். 250 ரூபாய் சம்பளம் வாங்கியபோது எங்களுக்கு இருந்த நிம்மதி இன்றைக்கு இல்லை. காரணம், நீங்கள் பூஜ்ஜியங்களைக் கூட்டிவிட்டீர்கள். 10,000 ரூபாய் கொடுக்கிறோம் என்று சொல்கிறீர்கள். ஆனால், உண்மையில் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள், பாவம், அவர்களையெல்லாம் பாருங்கள், எவ்வளவு கவலையோடு உட்கார்ந்து இருக்கிறார்கள். (சிரிப்பு) இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் படும் பாடு, பெரும் பாடு. எனவே, நான் மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர்; அவை முன்னவர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன்; அவை முன்னவர் இல்லை; குறைந்தபட்சம் நம்முடைய நல்வாழ்வுத் துறை அமைச்சராவது இதிலே கவனம் செலுத்துவார் என்று நான் நினைக்கின்றேன். அவர்கள் மூலமாகச் செய்தி போகும் என்று நான் நம்புகிறேன். தயவு செய்து, எல்லா உறுப்பினர்களும் சொன்னார்கள். 60 இலட்சம் ரூபாய் போதாது, மக்களுடைய நன்மதிப்பைப் பெற வேண்டுமெனில், ஆற்காடு வீராசாமி உள்ளிட்டு, நான் சொல்கிறேன்; பேராசிரியர் அவர்கள் உள்ளிட்டு, நான் சொல்கிறேன்; தயவு செய்து இந்த 60 இலட்சம் என்பதை இலட்சியமாகக் கொள்ளாதீர்கள், கோடியிலே வாழ்கிற மக்களுடைய நன்மைக்காக ஒரு கோடி ரூபாய் என்று உயர்த்தித் தாருங்கள் என்று நான் மிகுந்த அன்போடு பேராசிரியர் அவர்களை,



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தயவு செய்து அதை உயர்த்தித் தாருங்கள்.

இந்தச் சம்பளம் என்பது — அது ஏனோ தெரியவில்லை— சில மாநிலங்களை ரொம்ப traditional மாநிலங்கள் என்று எடுத்துக்கொண்டால், அந்தக் காலத்து பம்பாய் மாநிலம், மேற்கு வங்காள மாநிலம், சென்னை மாநிலம் என்று சொல்லக்கூடிய இந்த மூன்று மாநிலங்கள்தான் மிகப் பழைமையான மாநிலங்கள். எனவே, ஓரிடத்தைவிட்டு இன்னோர் இடத்திற்கு நகருவது மிகக் கஷ்டம். கேரளாவிலேகூட இன்றைக்கு உறுப்பினர்களுடைய சம்பளத்தை உயர்த்தியிருக்கிறார்கள். அவர்களுடைய வசதிகளைப் பெருக்கியிருக்கிறார்கள். ஆனால், இங்கே நாம் இன்றைக்கும் நத்தை வேகத்தில் சென்று கொண்டிருக்கிறோம். தயவுசெய்து உறுப்பினர்களை நடமாடவிடுங்கள். அவர்களை நடக்க அனுமதியுங்கள். அவர்கள் நடக்க வேண்டுமென்று சொன்னால், அவர்களும் கொஞ்சம் நிம்மதியாக இருக்க வேண்டும். அவர்களும் கொஞ்சம் — போதிய— வருமானத்தைப் பெருக்க வேண்டும்.

நான் இங்கே வந்து, நாள் முழுவதும் உட்கார்ந்திருக்கிறேன். ஒரு மணி நேரத்திற்குப் போனால்கூட, நான் எவ்வளவு fees வாங்கிக் கொண்டிருந்தேன் என்று எண்ணிப் பார்க்கிறேன். அலமலந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். ஒரு தொகுதியிலேயிருந்து நான்கு பேர் வந்தார்கள் என்று சொன்னால், அந்த நான்கு பேர்களுக்கும் எல்லாவற்றையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு சட்டமன்ற உறுப்பினருக்கு வந்துவிடுகிறது. நாள் முழுவதும் நான்கு ஊரிலேயிருந்து நான்கு, நான்கு பேர் வந்து கொண்டே இருக்கிறார்கள். அவர்களுக்குரிய தங்கும் வசதி, உணவு கொடுக்கின்ற அந்த ஏற்பாட்டிலேயிருந்து எல்லா ஏற்பாட்டையும் சட்டமன்ற உறுப்பினர்தான் செய்ய வேண்டும். நீங்கள் போய் சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலே பாருங்கள்; எப்படி அலமலந்து நிற்கிறார்கள் என்று. 250 ரூபாய் கொடுக்கிறார்கள். 250 ரூபாய் கொடுத்தால், இங்கேயிருந்து எங்கேயாவது taxi-யிலே உட்கார்ந்து போனால், அதுவும் auto-விலே உட்கார்ந்து போனால்; — Auto-விலே உட்கார்ந்து போவதற்கு இந்தக் காலத்திலே மிகுந்த தைரியம் வேண்டும். அந்த நிலையிலே இன்றைக்கு நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் — அதிகச் செலவாகிறது. தயவு செய்து மற்ற மாநிலங்களிலே என்னென்ன வசதிகளைக் கொடுத்திருக்கிறார்களோ அந்த வசதிகளை நீங்கள் தாருங்கள். ஏன் அதிலே தயக்கம்

காட்டுகிறீர்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. அதிகாரிகளுக்கே எவ்வளவு செலவாகிறது? ஓர் அதிகாரி இங்கேயிருந்து டெல்லிக்குப் போனால், ஒரு Chief Secretary போனால், அல்லது ஒரு Secretary போனால், அல்லது Deputy Secretary போனால், அவர்களோடு எவ்வளவுபேர் போகிறார்கள், விமானத்திலே? இதற்கே அவ்வளவு செலவா? நான் போகக்கூடாது என்று சொல்லவில்லை. போகும்போது, இவ்வளவு செலவாகும்போது, தயவுசெய்து... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் நானும் சொல்கிறேன். நமக்குக் கேளுங்கள்; அவர்களுக்கு ஏன் கொடுக்கிறீர்கள் என்று கேட்காதீர்கள்.

பிற்பகல் 12.15

**திரு. ம. அப்துல் லத்தீப்:** இருக்கிற செலவுகளைப் பற்றி நான் சொல்கிறேன். அரசு செய்கிற செலவுகளை நான் சொல்கிறேன். அதை ஏன் மறந்து விடுகிறீர்கள்? இந்தச் சட்டசபைக்குச் செலவழிக்கிற தொகை மிக மிகக் குறைவு. ஏனென்றால், நாம்தான் கொடுக்கிறோம். அமைச்சர்கள் விஷயம் என்ன? அமைச்சர்கள் எல்லாம் பாவம். எங்களிடமே சொல்கிறார்கள். நாங்கள் எப்படியப்பா கேட்பது என்று ஓர் அமைச்சரே சொல்கிறார். (சிரிப்பு) எங்களுக்காக பேச வேண்டுமென்று சொன்னால், நீங்கள்தான் பேச வேண்டும் என்று எங்களிடத்திலே சொல்லும்போது மிகப் பரிதாபமாக இருக்கிறது. அவர்கள் மிகவும் ஆடம்பரமாக வருகிறார்கள் என்று நாம் நினைக்கிறோம். ஆனால், அவர்களுக்குரிய, அமைச்சர்களுக்குரிய பிரச்சினை என்ன என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதனால்தான் சொன்னேன். எல்லா அமைச்சர்களும், எம்.எல்.ஏ.க்களாகத்தான் இருக்க வேண்டும். ஆகையினால், அமைச்சர்களும் இதுபற்றி சிந்தித்துச் செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து, எங்களுக்குக் கொடுக்காவிட்டாலும், தொகுதிக்காக நாங்கள் செலவழிப்பது கொஞ்சம், நீங்கள் இதைக் கொடுத்ததினால்தான் கொஞ்சம் மரியாதையாக எல்லோரும் எங்களை வந்து பார்க்கிறார்கள். சார், எங்கள் ஊருக்கு அது, இது என்கிறான். இல்லாவிட்டால், வந்தே பார்க்க மாட்டான். கொஞ்சம் மரியாதை உயர்ந்திருக்கிறது. தயவு செய்து நான் பேராசிரியரைக் கேட்டுக்கொள்கிறேன், எங்களுக்கு எதை உயர்த்துகிறீர்களோ அதைப்பற்றி நாங்கள் வற்புறுத்துகிறோம்; இருந்தாலும் கவலைப்படவில்லை. தயவுசெய்து, இந்த ஒரு கோடி



ரூபாயையாவது உயர்த்தித் தாருங்கள் என்று மிகுந்த...என்ன, சரிதானே? (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஆகையினால், ஒரு கோடி ரூபாயாக உயர்த்தித் தாருங்கள். நீங்கள் எல்லாம் கை தட்டுகிறீர்கள். நம்முடைய துணை சபாநாயகர் அவர்கள் மகிழ்ச்சியோடு உட்கார்ந்திருக்கிறார்கள், கை தட்ட முடியவில்லை அவர்களால். (சிரிப்பு) ஆகையால், தயவு செய்து நான் திரும்பத் திரும்ப அதை வலியுறுத்துகிறேன்.

இன்னொன்று, இங்கே தேர்தலைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்தத் தேர்தல் முறையாக, ஜனநாயக நெறிமுறைப்படி நடக்க வேண்டுமானால், துரிதமாக புகைப்படத்தோடு சேர்ந்த Identity Card-ஐ நீங்கள் கொடுக்க வேண்டும். அது ஏன் இடையிலே நின்றுவிட்டது என்று எனக்குத் தெரியவில்லை. அது இடையிலே நின்றுவிட்ட காரணத்தினாலே, ஜனநாயகம் ஏற்றம் பெறுவதற்குத் தடை ஏற்பட்டிருக்கிறது. நான் இதுபற்றி நிறுத்திக்கொள்கிறேன். எனவே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடையிலே இரண்டு தேர்தல்கள் வந்த காரணத்தினால், தேர்தல் பணிகளிலே அவர்கள் ஈடுபடாவிட்டாலும், நேரடியாக ஈடுபடாவிட்டாலும்கூட, தேர்தல் நடைபெறுகிறபோது இந்தப் பணிகள் நடைபெற முடியாது. அப்படி சில இக்கட்டான நிலை ஏற்பட்டு, அதனால் தாமதம் ஏற்பட்டது. இரண்டாவது, புகைப்படம் எடுத்துத் தருவது, அதே இடத்திலே தந்துவிடுவதுதான் நல்லது. இல்லையானால் — படமெடுத்து அனுப்பி, எல்காட் நிறுவனம் அல்லது மின்னணு அடிப்படையிலே கணினிப் பொறியைப் பயன்படுத்துகின்ற நிறுவனம் — மறுபடியும் அதை ஒழுங்குபடுத்தி அனுப்புகிறபோது சில குறைபாடுகள் ஏற்படுகின்றன. அந்த் இடத்திலேயே வழங்குவதற்கு வழி செய்ய வேண்டுமென்ற இந்த இரண்டு காரணங்களால் தாமதப்பட்டு இருந்தாலும்கூட, வருகிற பொதுத்தேர்தலுக்கு முன்னால் அனைத்து வாக்காளர்களுக்கும் இந்தப் புகைப்பட அடையாள அட்டை வழங்குகிற பணியை நிறைவேற்றி விடுவதாக, அந்தத் துறை—தேர்தலுக்கான தனியான துறை சார்பாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளக்கத்திற்கு நன்றி. தடை ஏற்பட்டிருந்தாலும் தடைக்கான காரணத்தை மாண்புமிகு பேராசிரியர் இங்கே சொல்லி

இருக்கிறார்கள். தடை இவ்வளவு விரைவில் ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. அப்படியிருந்தால் பேராசிரியர்தான் அதற்குத் தெரிவிக்க வேண்டும். விரைவில் தேர்தல் வராது என்று திரும்பத் திரும்பச் சொல்லப்படுகிற இந்தக் காலகட்டத்தில் அருள்கூர்ந்து இந்தப் புகைப்படங்களை எடுத்து, அடையாள அட்டைகளைக் கொடுக்கின்ற பணியைத் துரிதப்படுத்த வேண்டும்; அப்போதுதான் ஜனநாயகம் செம்மைபெறும்; நிறைவுபெறும்; இல்லாவிட்டால் ஊனப்பட்டுக் கொண்டே இருக்கும். அதைத் தடுத்து நிறுத்துவதே இன்றைய இன்றியமையாத தேவை என்பதை நான் (மணியடிக்கப்பெற்றது) இங்கே தெரிவித்து, நான் வேறு எந்தக் கோரிக்கையும் வைக்கவில்லை; ஒரு கோடி ரூபாய், ஒரு கோடி ரூபாய், ஒரு கோடி ரூபாய் என்பதை தயவுசெய்து நீங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு தரம், இரண்டு தரம், மூன்று தரம்,...(சிரிப்பு)

**திரு. ம. அப்துல் லத்தீப்:** எங்களைப் பற்றி சிந்திப்பதாக இருந்தால் சிந்தியுங்கள், இல்லாவிட்டால் உங்களுடைய இஷ்டம் என்று சொல்லிவிட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் மு. தேவராஜன்.

**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்சுவை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த...(சிரிப்பு) பல்வகை...பல்வகை (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இங்கே கோடி, கோடி என்று பேசியதால், உறுப்பினர் ஒருமாதிரியாகிவிட்டார். (சிரிப்பு) பல்வகை மூலதனம்.

**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, தமிழகத்திலே விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு சலுகைகள் வழங்குவதிலே, இந்தியாவிலே, நம்முடைய முதலமைச்சர் அவர்களைப் போல, எந்த முதலமைச்சரும் இல்லை என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 5-லிருந்து 10 சதவிகிதமாக பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரிகளுக்கான இடங்களை உயர்த்தித் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாலிடெக்னிக் கல்லூரிகளிலேயும் அந்த 10 சதவிகிதத்தை உயர்த்தி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்



பிற்பகல் 12-20

இந்தியாவிலேயே, சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்று எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டிலே—குறிப்பாக தென் மாநிலங்கள், வரலாற்றிலே மறைக்கப்பட்டுள்ளன—எண்ணற்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் வரலாற்றில் மறைக்கப்பட்டுள்ளார்கள். இராணி வேலுநாச்சியார், வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள் போன்றவர்களின் எண்ணற்ற வரலாறுகளையும் இணைத்து, மலிவு பதிப்பு விலையில் அதை அரசு வெளியிட வேண்டி கோரிக்கை வைக்க விரும்புகிறேன்.

முதியோர், ஆதரவற்றோர், ஊனமுற்றோர், விதவைகள் இவர்களுக்கு வழங்கப்படுகின்ற பென்சனை ரூ. 200 லிருந்து 300 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, பொது மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி 4 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ள நிலையில், சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியை 1 கோடி ரூபாயாக உயர்த்தித் தருமாறு வேண்டுகோளை வைக்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கண்டிஷன் இல்லாமல், வேண்டப்படுகின்ற நியாயமான காரணங்களுக்குக் கொடுக்கலாம் என அறிவிக்க வேண்டுகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, அரசு பேருந்துகளில் இலவச பஸ் பாஸ் இருப்பதைப் போல, தனியார் பேருந்துகளிலும் அந்த இலவச பஸ் பாஸ் வழங்க வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பொது மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. 5 வருடங்களில், 4 வருடங்களுக்கு 3 கிராமங்களுக்குத்தான் வழங்கியிருக்கிறோம். இந்த வருடம் 2 கிராமங்களாக அதைத் கூட்டித் தருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சி மன்றத் தேர்தலில் உள்ள மூன்றடுக்கு முறையை மாற்றி, மீண்டும் இரண்டு அடுக்கு முறையில் அறிவித்து உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் ஊராட்சித் தலைவர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள் ஆகியவர்களை பொது மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்க, பரிசிலிக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சி மன்றத் தலைவர், ஒன்றியப் பெருந்தலைவர் அவர்களுக்கு உள்ளதுபோல், சட்டமன்ற உறுப்பினர்களும் நேரடியாக நிர்வாகத்தில் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கிட அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர்களுக்கும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் உண்டான தொகுப்பு வீடுகளை பயனாளிகளே கட்டிக்கொள்ள அரசு ஆணை பிறப்பித்ததை கட்டாயமாக்கினால், ஊராட்சிகளில் நடைபெறும் சில முறைகேடுகளைத் தவிர்த்து, தரமான வீடுகளைக் கட்டிக் கொடுக்கலாம் என்ற வேண்டுகோளை வைக்கிறேன். ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக தமிழ்நாடு முழுவதும் 54 ஆரம்ப சுகாதார நிலையங்கள் நடத்தப்படுகின்றன. அதை அரசே ஏற்று நடத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் ஓடுகின்ற வாகனங்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முறையாகக் கொடுக்கப்படுவதில்லை. சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி சுற்றுப் பயணத்தின்போது, அதிகாரிகள் ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி வர மறுக்கிறார்கள். எனவே, தொகுதி சுற்றுப் பயணத்தின்போது, அதிகாரிகள் உடன் வர வேண்டும் என்பதை அரசு வலியுறுத்த வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் விசுவகுடி நீர்த்தேக்கத் திட்டம் நீண்டகால கோரிக்கையாக வைக்கப்பட்டது. இந்த முறை விசுவகுடி நீர்த்தேக்கத் திட்டத்தை வழங்கிட வேண்டுமாறு கேட்டுக்கொண்டு, இந்த நல் வாய்ப்பினை வழங்கியதற்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓய்வூதியங்கள், பல்வகை, சட்டமன்றப் பேரவை ஆகிய மானியங்களிலே பேசுவதற்கு அனுமதித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்கிறேன். இந்த ஆண்டு குடியரசுப் பொன்விழா ஆண்டாக அரசு கொண்டாடுகின்ற இந்த நல்ல வேளையில், இந்த நாட்டிற்கு சுதந்திரத்தைப் பெறுவதற்காக போராடிய தியாகிகளைப் பற்றி நினைவு கூறுகின்ற நல்ல ஆண்டாகக் கருதுகிறேன். இன்றைக்கு அந்தத் தியாகிகள் எல்லாம், மத்திய அரசிடமிருந்து ஓய்வூதியம் பெறுகின்றவர்கள், மாநில அரசு தருகின்ற ஓய்வூதியமாக தமிழகத்திலே 500 ரூபாய் மட்டும் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களிலே எல்லாம், ஆந்திரா போன்ற மாநிலங்களிலே எல்லாம், மாநில அரசினுடைய ஓய்வூதியம் 1,500 ரூபாயாக வழங்கப்படுகிறது. எனவே அவர்களுக்கு இந்த 500 ரூபாயை 1,000 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு அவர்கள் இறந்தால், அரசு மரியாதையோடு அவர்களுடைய ஈமச் சடங்கிற்காக 1,000 ரூபாய்



வழங்குகின்ற நிலை இந்த அரசில் இருக்கிறது. ஆனால் அந்தத் தொகை ஏறக்குறைய ஓர் ஆண்டு காலமாக, எந்த ஓய்வூதியம் பெறுகின்ற தியாகிகளுக்கும் ஈமச்சடங்குத் தொகை வழங்கப்படவில்லை என்கின்ற நிலையைச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். அதை வழங்குவதற்கும், அந்த 1000 ரூபாயை, 1500 ரூபாயாக சேர்த்து வழங்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

அதோடு, முன்பு பணியிலிருந்து நீக்கப்பட்ட கிராம முன்சீப்புக்கு, கர்ணம் போன்றவர்களுக்கெல்லாம், இந்த அரசு சிறப்பு ஓய்வூதியமாக 793 ரூபாய் மட்டும் வழங்கிக் கொண்டிருக்கின்றது. ஆனால், 1993-ஆம் ஆண்டு அரசுத் தீர்ப்பாணையம் மூலமாக, அவர்களை அரசு ஊழியர்களாகக் கருத வேண்டுமென்று தீர்ப்பு கூறியிருக்கிறது. அவர்கள் எல்லாம் மிகுந்த நலிந்த நிலையில், மிகுந்த துயரத்தோடு, அவர்களுடைய குடும்பத்தை, மிகுந்த வறுமையிலே நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களை அரசு ஊழியர்களாகக் கருதி, அதற்குரிய ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் போன்றவற்றை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு, இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய மேம்பாட்டு நிதியைப் பற்றி குறிப்பிட்டுப் பேசினார்கள். அவர்கள் ஒரு கோடி ரூபாய் வேண்டுமென்று மட்டும் கேட்டுக்கொண்டார்களேதவிர, அதை ஏன் உயர்த்தித் தரவேண்டுமென்கின்ற நிலையை அவர்கள் எடுத்துச் சொல்லத் தவறி விட்டார்கள்.

என்னைப் பொறுத்தளவிலே, நமது அரசு 1996இலே பொறுப்பேற்று, அன்றைக்குச் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 12 அயிரம் கோடியிலே ஆரம்பித்து, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்த நேரத்திலே 21 ஆயிரம் கோடிக்கு நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்து இருக்கிறார்கள். அப்படி இருக்கின்றபோது, ஒவ்வோர் ஆண்டும், அந்த நிதி அதிகரித்துக் கொண்டே வந்திருக்கிறது என்ற காரணத்தினால்தான், ஒவ்வோர் ஆண்டும்கூட, இந்த மதிப்பீடுகள் தயார் செய்யும்போது, பொறியாளர்கள் சொல்வார்கள், Schedule of rates change ஆகிறது, மாறுபடுகிறது, என்று; இந்த ஆண்டு இந்த விலைக்குத் தருகின்றபோது, அடுத்த ஆண்டு வருகின்றபோது, விலைவாசிகளும் உயர்கிறது. கம்பி விலை உயர்கிறது, சிமெண்ட் விலை உயர்கிறது. இப்படி ஜல்லி போன்ற பொருட்களுடைய விலை உயர்கின்ற காரணத்தால்தான், அந்த விலை உயர்விற்குத் தகுந்த மாதிரி, இந்த Schedule of Rates-ஐ மாற்றி அமைக்கின்ற ஒரு நிலை இருக்கிறது.

அதை மனதிலே கொண்டுதான், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வோர் ஆண்டும், மிக நிதானமாக சிந்தித்து, செயலாற்றி 25 ஆயிரத்தை, 35 ஆயிரமாக்கி, 35 ஆயிரத்தை, 50 ஆயிரமாக்கி, இந்த ஆண்டுகூட, அந்த நிதானத்தோடுதான், அந்த நிதிநிலை அறிக்கை கூடியிருக்கின்ற அந்த நிதானத்தோடு, 50 ஆயிரத்தை 60 ஆயிரமாக்கி இருக்கின்றார்களேதவிர, இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று சலுகை செய்ய வேண்டுமென்று அவர்கள் கருதுவார்களேயானால், நிச்சயமாக அதை ஒரு கோடி ரூபாயாக உயர்த்தியே தர வேண்டுமென்று எல்லா உறுப்பினர்களின் சார்பிலும் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (மணியடிக்கப்பெற்றது)

மேலும், இந்த அரசுத் துறையிலே பணியாற்றி ஓய்வு பெறுகின்றவர்கள் எல்லாம் மிகுந்த சிரமத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. அவர்கள் ஓய்வு பெற்ற பின்பு, பல ஆண்டுகளுக்குக் கூட அவர்கள் அந்த ஓய்வூதியம் பெறுவதற்கு, பென்ஷன் பெனிபிட்-ஐ பெறுவதற்கு சிரமத்தை மேற்கொள்ள வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதில் அரசு துரிதமாக நடவடிக்கை எடுத்து, அந்த ஓய்வூதியம், ஓய்வு பெற்ற ஓர் ஆண்டுக்கு உள்ளாகவோ, அல்லது குறிப்பிட்ட மூன்று, நான்கு மாதங்களுக்கு உள்ளாகவோ, கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அதைப்போல, சட்டப் பேரவையிலே பணியாற்றுகின்ற, அந்த நிருபர்களுக்கு, நாடாளுமன்றத்திலே பணியாற்றுகின்ற நிருபர்களுக்கு வழங்கப்படுகின்ற ஊதியத்தை வழங்கவேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்.

அதைப்போல, இங்கே பணியாற்றுகின்ற சில தினக்கூலி அடிப்படையிலே பணியாற்றுகின்ற ஊழியர்களும் அவர்களுடைய கோரிக்கையை வைத்து, தங்களுடைய பணியை நிரந்தரப்படுத்த வேண்டுமென்கிற நிலையை வைத்திருக்கிறார்கள். அதையும் இந்த அரசின் கவனத்திற்கு கொண்டு வந்து, நல்ல வாய்ப்பு கொடுத்த உங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.



**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஓய்வூதியங்கள் சம்பந்தப்பட்ட இரண்டு பிரச்சினைகளிலே மட்டும், இந்த அவையினுடைய மேலான கவனத்தைக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஏற்கெனவே, கன்னியாகுமரி மாவட்டம், இந்தத் தாய் தமிழகத்தோடு இணைவதற்காக நடந்த போராட்டத்தில், அதற்கு ஓய்வூதியம் சம்பந்தமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றத்திலே அறிவிக்கப்பட்டு அந்தப் பகுதியிலுள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் வைத்து, தேர்வு செய்து, 160 பேர்களுடைய ஒரு பட்டியலைக் கொடுத்தோம். ஆனால், அந்தப் பட்டியலை இப்பொழுது பார்க்கின்றபோது, 142 பேர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், நாங்கள் கொடுத்த பட்டியலில் இல்லாத பாதிப் பேர் அதற்குள்ளேயிருக்கின்றார்கள். எப்படி வந்தது என்று எனக்குத் தெரியவில்லை. அந்தப் பட்டியலை எங்களுக்குத் தரவேண்டுமென்று நான் ஏற்கெனவே கடிதம் எழுதியிருந்தேன். அந்தக் கடிதத்திற்கு பதிலும் தரப்படவில்லை.

அதற்கு மேலே 1946-க்கு முன்னாலே, நடந்த நம்முடைய தேசிய விடுதலைப் போராட்டத்திலே, நான் கலந்து கொண்டு, அந்த 1946-லிருந்து 1947 ஆகஸ்ட் 15 ந்தேதி வரையிலும், தலைமறைவாக இருந்த காலகட்டத்திலே, எனக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தத் தலைமறைவு காலத்திலே ஓய்வூதியம் சம்பந்தமாக, இங்கே என்னுடைய, அந்த ஓய்வூதியத்தை வழங்கியதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே, நம்முடைய தேர்தல் போட்டோக்கள் சம்பந்தமாக, இங்கே ஒன்றைச் சொன்னார்கள். ஆனால், அது நிறுத்தப்பட்டிருக்கிறது. தந்த போட்டோக்கள் முறையாக இல்லை. அதை நல்ல முறையிலே செய்யக் கூடிய அளவிற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

பிற்பகல் 12-30

அதுபோன்று கண்ணுமாமூடு என்ற இடத்திலே ஒரு காவல் நிலையம் வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறேன். அதைப் பரிசீலனை செய்ய வேண்டும். இந்தச் சட்டமன்றம் என்று வருகின்றபோது, நாங்கள் அனுப்புகின்ற கடிதங்களுக்கு, குறிப்பாக மாண்புமிகு அமைச்சர்களுக்கு

எல்லாம் பல்வேறு கோரிக்கைகளை வைத்து கடிதங்களைத் தருகின்றோம். ஆனால், அந்தக் கடிதங்களுக்கு சரியான பதில்கள் குறிப்பிட்ட நேரத்திலே வரவில்லை. அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதுபோன்று தேர்தல் வாக்குச் சாவடிகள். சில பகுதியிலே 3 மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. எனவேதான் அந்த வாக்குச் சாவடிகளுடைய அந்த அளவை, அதிலும் குறிப்பாக கிராமப் பகுதியிலே வருகின்றபோது, அந்த வாக்குச்சாவடியினுடைய அளவு 2 மைல், 3 மைல் என்று இருப்பதை குறைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதுபோன்று நம்முடைய காவலர்கள் சம்பந்தமாக அடிமட்டத்தில் இருக்கின்ற காவலர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் 4,000 ரூபாய் கிடைக்கக் கூடிய அளவிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதுபோன்று, சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலே வருகின்றபோது (மணியடிக்கப் பெற்றது) ஒன்றே ஒன்றை பேசி முடித்துவிடுகிறேன். இங்கே பல்வேறு வகையில் அனைத்து உறுப்பினர்களும் ஒரு கோடியாக உயர்த்த கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். என்னைப் பொறுத்தமட்டில் அதிலே கிடைத்த பெரும் பகுதி பணத்தையும், மருத்துவமனை, பள்ளிக்கூடம், படிப்பகம் இதற்கு நான் செலவிட்டிருக்கின்றேன். அதுபோதாது என்பது பொதுவான எங்களுடைய கருத்து. அந்த அடிப்படையிலே, அந்த நிதியை 1 கோடியாக உயர்த்தித் தருவதற்கான உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி, முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நமது அரசிடம் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களும் போராடுகிறார்கள். அதேபோல அரசிலே பணிபுரிகின்ற பல்வேறு துறையைச் சேர்ந்த அரசு ஊழியர்கள் தங்களுடைய கோரிக்கையை முன்வைத்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த அரசிலே பல ஆண்டுக் காலம் உழைத்து, இன்று ஓய்வு பெற்று தங்களுடைய வாழ்க்கையில் இறுதி காலங்களிலே சொல்லொன்னா துயரங்களை அனுபவித்து வாழ்ந்து கொண்டிருக்கிற அந்த ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுடைய கோரிக்கையை இந்த அரசு பரிவுடன் பிரிசீலிக்க வேண்டும். ஏன் என்று சொன்னால், மற்றவர்கள் எல்லாம் போராடுவதற்கு சக்தி இருக்கிறது. அமைப்பு வலுவாக இருக்கிறது, போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால்,



இந்த ஓய்வு பெற்ற அலுவலர்கள், அவர்களுக்கு போராடுவதற்குக் கூட சக்தி இல்லாத நிலையிலே இருக்கிறார்கள் என்பதால் அவர்களை, போராடுகிறவர்களை கவனிப்பதை போல, போராட்டம் நடத்தாத அல்லது நடத்த முடியாத அளவிலே இருக்கின்ற ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களுடைய கோரிக்கையை நீங்கள் பரிவோடு கவனித்து அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், ஓய்வூதியம் பெற்ற அவர்களுக்கு பாக்கித் தொகை, கிடைக்க வேண்டிய பணப் பலன்கள் அனைத்தையும் தவணை முறையாகக் கொடுக்காமல், ஓரே தவணையில் கொடுத்தால், அதை வைத்துக்கொண்டு, அவர்கள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வசதியாக இருக்கும் என்ற காரணத்தால், நிலுவையிலுள்ள, அவர்களுக்கு வழங்க வேண்டிய பணத் தொகையை, பணப் பலன்கள் அனைத்தையும் அவர்களுக்கு வழங்கிட வேண்டும்; ஓரே தவணையில் வழங்கிட வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் 1-1-1996 முதல் 31-3-1998 முடிய உள்ள காலத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கு, இன்னும் முழுமையாக பணம் வழங்கப்படவில்லை என்று அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதையும் கவனத்துடன் அரசு பரிசிலனை செய்து, அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பண்டிகை முன் பணம் 500 ரூபாய் என்று இருப்பதை 750 ரூபாயாக ஆக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மருத்துவப் படியை 50 ரூபாயிலிருந்து 100 ரூபாயாக உயர்த்திட வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். அதேபோல, அவர்களுக்கு வங்கியில் எல்லாம் தற்காலிகக் கடன் வழங்குகிறார்கள். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், அதேபோல, கிராமப்புறங்களில் இருக்கின்ற இந்த ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு, குறிப்பாக ஆசிரியர்கள் மற்றும் பல்வேறு ஊழியர்களுக்கு கூட்டுறவு வங்கியின் மூலமாக அந்தக் கடனை வழங்குவதற்கு அங்கு மறுக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு அந்தந்தப் பகுதியிலே, அவர்கள் வாழ்கின்ற பகுதியிலே இருக்கின்ற கூட்டுறவு வங்கியின் மூலமாக கடன் வழங்கிட வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கு சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியை நீங்கள் கூட்டித் தரவேண்டுமென்று, 1 கோடி ரூபாயாக ஆக்க வேண்டுமென்று இங்கே பேசிய அனைத்து

உறுப்பினர்களும் கோரிக்கை வைத்தார்கள். நான் அதற்குச் சொல்லவில்லை. ஆனால், வழங்குகின்ற தொகை, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குகின்ற தொகையிலே சில 'நார்ம்ஸ்' என்று கட்டுப்பாடுகளை வைத்திருக்கிறீர்கள். அந்தக் கட்டுப்பாடுகள் வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால், இப்பொழுது நவீன காலத்தில் திட்டமிடுவது பொதுமக்கள் மத்தியிலேயிருந்து கீழிருந்து அரசாங்கத்திற்கு வரவேண்டும் என்று கொள்கை முடிவு எடுத்து, இப்போது பல்வேறு மத்திய, மாநில அரசுகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஆனால் இப்போது அரசாங்கமே சில முடிவுகளை எடுத்துக்கொண்டு, கீழே இப்படி இப்படித்தான் அதைச் செய்ய வேண்டுமென்று அந்த முடிவுகளை சட்டமன்ற உறுப்பினர்கள் மேல் திணிக்கிறார்கள். அதை மாற்றி அந்தந்த தொகுதியிலே மக்களுக்கு என்ன தேவை என்பது அந்தந்தச் சட்டமன்ற உறுப்பினருக்குத்தான் நன்றாகத் தெரியும்.

*பிற்பகல் 12-35*

ஆனால் கட்டுப்பாடு போடுங்கள். மூன்று பணிகளை ஒதுக்கலாம். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், கட்டடங்கள் கட்ட வேண்டும், குடிநீருக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும், சாலை வசதிகள் எற்படுத்த வேண்டுமென்று இப்படி பொதுப்படையான கட்டுப்பாடுகளை விதிக்கலாம். ஆனால் பள்ளிக்கூடங்கள், தண்ணீர் வசதிகள் என்று சொல்லும்போது சில இடங்களிலே நாங்கள் கிராமங்களுக்குச் செல்லும்போது மக்கள் சொல்கிறார்கள், எங்களுக்கு சமுதாய நலக்கூடம் வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு விதிகளிலே இடமில்லை. பல கிராமங்களிலே கலையரங்கங்கள் வேண்டுமென்று சொல்கிறார்கள். தடுப்புச் சுவர் வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட பணிகளைச் செய்வதில், நாங்கள் நிதி ஒதுக்கீடு செய்யும்போது அங்கேயிருக்கின்ற அதிகாரிகள் இது நார்ம்ஸில், விதிகளில் வரவில்லை, நீங்கள் கொடுத்திருக்கின்ற பணிகள் விதிமுறைகளுக்குப் புறம்பாக இருக்கிறது என்று சொல்லி, அதையெல்லாம் தடுத்துவிடுகிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட பணிகளுக்காக அந்த நிதி ஒதுக்கீடு செய்யும்போது, அதில் சில விதிகளை, கட்டுப்பாடுகளை விதித்தாலும்கூட, அதிலிருந்து விதிவிலக்குப் பெறுவதற்கு அந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிமை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல தேர்தல் பற்றிக் குறிப்பிடும்போது நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, சட்டமன்றத் தேர்தல் நடைபெறும்போது தற்போது இருக்கின்ற தேர்தல் வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கையைச் சற்றுக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று



சொன்னால், உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடக்கும்போது ஆங்காங்கே 500 வாக்காளர்களுக்கு ஒரு வாக்குச் சாவடி அமைக்கிறார்கள். ஆனால், சட்டமன்றத் தேர்தல் நடக்கும்போது 1000 வாக்காளர்களுக்கு ஒரு வாக்குச்சாவடி அமைக்கிறார்கள். உள்ளாட்சித் தேர்தலில் எத்தனை வாக்குச் சாவடிகள் அமைத்தார்களோ, அதே எண்ணிக்கையிலான வாக்குச் சாவடிகளுக்குக் குறையாமல் சட்டமன்றத் தேர்தலுக்கும் அந்த வாக்குச்சாவடிகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஆதிதிராவிடர்கள் அதிகமாக உள்ள பகுதிகளிலே, சில இடங்களிலே தேர்தல் நேரங்களிலே சில ஆதிக்க சக்திகள் அவர்களை வாக்களிக்க விடாமல் தடுக்கின்றார்கள். சென்ற நாடாளுமன்றத் தேர்தலிலேகூட சிதம்பரம் தொகுதியில் நடைபெற்ற பிரச்சினைகளை எல்லாம் நாம் கண்கூடாகப் பார்த்தோம். ஆகவே, அவர்கள் எல்லாம் முழுமையாக வாக்களிப்பதற்கு, தேர்தல் நேரத்திலே தகுந்த பாதுகாப்பினை அவர்களுக்கு வழங்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கள்ள ஓட்டு போடுவது என்பது இப்போது ஒரு கலையாகவே வளர்ந்து வருகிறது. ஆகவே, ஜனநாயகத்தைக் களங்கப்படுத்துகின்ற அந்தக் கள்ள ஓட்டு போடுவதைத் தடுக்க வேண்டுமென்று சொன்னால், குறிப்பாக அடையாள அட்டைகளை நாம் அமல்படுத்தியே ஆக வேண்டுமென்ற சூழ்நிலை இப்போது உருவாகியிருக்கிறது. ஆகவே, மாநில அரசு மத்திய அரசையும் வற்புறுத்தி, தேர்தல் கமிஷனிடமும் சொல்லி, இந்த அடையாள அட்டை இருந்தால் மட்டுமே வாக்களிக்க முடியும் என்ற சூழ்நிலையை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன்மூலமாகத்தான் கள்ள ஓட்டுகள் போடுவதைத் தடுக்க முடியும் என்று நாங்கள் கருதுகிறோம். இல்லையென்று சொன்னால், தேர்தல் முறையாக நடைபெறுவதற்கு வாய்ப்பே இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். அடுத்ததாகச் சாதிப் பிரச்சினை. குறிப்பாகத் தென் மாவட்டங்களில் ஏற்படுகின்ற சாதிப் பிரச்சினைகளில், அந்தப் பகுதிகளிலே தேர்தல் நடைபெறும்போது அங்கே கலவரம் ஏற்படாமல் இருக்க வேண்டுமென்று சொன்னால், அங்கே இருக்கின்ற வாக்குச் சாவடிகளை கலவரம் ஏற்படுத்தக் கூடிய பகுதிகள் என்று 'Red mark' என்ற வகையில், பாதிக்கப்பட்ட பகுதி என்ற சிவப்புப் பகுதி என்று காவல் துறையிலே குறிப்பார்கள். இருந்தாலும்கூட, அதிலே முறையாக, தென் மாவட்டங்களில் காவல் துறையினுடைய அதிகாரம் அங்கே செல்லுபடியாகவில்லை. ஆகவே காவல்துறை சிறப்பாகச்

செயல்பட்டு, தென் மாவட்டங்களைப் பொறுத்தவரையில் அதற்கென்று சிறப்புக் கவனம் எடுத்து, அந்தப் பகுதிகளிலே சாதிக் கலவரங்கள் ஏற்படக் கூடிய பகுதிகள் என்று முன்கூட்டியே கண்டறிந்து, இப்பொழுது முதலே கண்டறிந்து, அதற்கு என்று தனியாக வாக்குச் சாவடிகள் அமைத்து, அங்கு சுதந்திரமாகத் தேர்தல் நடைபெறுவதற்கு வேண்டிய சூழ்நிலையை உருவாக்கித்தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

பிற்பகல் 12-40

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு பல்வகை மானியத்தின்மீது பேச என்னை அழைத்த தங்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றி கலந்த வணக்கத்தை முதலிலே சொல்லிக்கொள்கிறேன்.

தமிழகத்தினுடைய கோடானுகோடி தமிழர்கள் இதயத்தில் வாழும் நமது முதல்வர் இதய சூரியனே, (மேசையைத் தட்டும் ஒலி) ரத்தத்தில் கொடியை நனைத்து, தியாகத்தில் வெற்றியைக் கொண்டு வந்த திருவாரூர் சோழனே, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டமன்றத்திலே பல நேரத்திலே குறிப்பாக இன்று எந்தவிதமான அறிவிப்பும் இல்லாதபோதுகூட இங்கே நெருப்பிலே நிறுத்தியதுபோல நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரும் மற்றவர்களும் சிலபல விளக்கங்களைச் கேட்டபோது நெருப்பிலே நிறுத்தினாலும் சீதை சிரித்ததுபோலச் சிரித்துக் கொண்டே திண்மையாகப் பதிலளித்த முத்தமிழ் காவலர் கலைஞர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய இந்தியாவின் உலகத் தமிழர்களை இணைக்கும் அரசியல் Internet-ஆக விளங்கும் நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் இன்றைய மானியக் கோரிக்கையின்போது ஏன் அவர் மேலே சென்றுவிட்டார் என்று எங்களுக்குப் புரியவில்லை. இருப்பினும் மேலே அவர் தயவு செய்து என்னுடைய உணர்வுகளைக் கேட்க வேண்டும். அவர் கேட்பதற்காக அவருடைய உதவியாளர் சண்முகநாதன் அவர்கள் தயவு செய்து சட்டமன்ற உறுப்பினர்களுடைய உணர்வுகளை மதிக்கக்கூடிய வகையிலே, சற்று மைக்கை முதல்வருக்கு அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று இங்கிருந்து... (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் குரலுக்கு மைக்கை அதிகப்படுத்த வேண்டிய அவசியமே இல்லை. (சிரிப்பு)



**திரு. ஐ. கணேசன்:** அவருக்கு என்னுடைய பணிவான வேண்டுகோளைச் சொல்வதற்கு முன்னால் இங்கே பணியாற்றக்கூடிய ஊழியர்கள் - நான் முன்னாள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது 1977-லே இருந்தபோது எத்தனை ஊழியர்களைப் பார்த்தேனோ அத்தனை ஊழியர்களும் இன்னும் Temporary-யாகவே இருக்கிறார்கள். 20, 22 ஆண்டுகாலமாக அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். தயவு செய்து இந்த அரசு, ஏழைகளுடைய அரசு, ஏழை....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கே பணி நிரந்தரம் இல்லை. (சிரிப்பு)

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் நிரந்தரம் இல்லை. ஆனால் சட்டமன்றத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் நிரந்தரமானவர்கள். தற்காலிகமாக இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும் என்று...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திற்காக முறைப்படி அரசு விதிமுறைகளின்படி நியமிக்கப்பட்டவர்கள் நிரந்தரமாகத்தான் இருக்கிறார்கள். அதற்கு வேறு விதிமுறைகள். இது 50 நாள் சட்டமன்றம் நடைபெறுகிற அந்த நாட்களுக்காக மட்டும் பணியில் அமர்த்தப்படுகிறவர்கள். அவர்கள் நிரந்தரமாக, இந்த நிரந்தரம் இல்லாத பணியைத்தான் விரும்புகிறார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, My submission—சட்டமன்ற உறுப்பினர் என்ற ஒருவர் எப்போதுமே இருந்துகொண்டிருக்கிறார். ஏ-யோ, பி-யோ, சி-யோ என்பதல்ல பிரச்சினை. சட்டமன்ற உறுப்பினர் என்ற ஒருவர் எந்த நேரத்திலேயும் இருக்கிறவர். அதேபோன்று சட்டமன்ற உறுப்பினருக்கு உதவி செய்யக்கூடியவர்களும் நிரந்தரமாகத்தான் இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் ஏ-யோ, பி-யோ, சி-யோ இருப்பதைப் போலத்தான் அந்தப் பணியாளர்களும் ஏ-யோ, பி-யோ, சி-யோ, டி-யோ இருக்கிறார்கள். (சிரிப்பு)

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்குள் வந்தார்)

[2000 மே 16

**திரு. ஐ. கணேசன்:** பெருமதிப்பிற்குறிய நம்முடைய சோழர் வந்துவிட்டார்.(சிரிப்பு) பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாஞ்சாலி குரல் கொடுக்கும்போது கண்ணன் ஓடி வந்ததுபோல... (சிரிப்பு)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு உறுப்பினர் உடையோடுதான் இருக்கிறார். (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** தொகுதியிலே மானத்தோடு சுற்றணும். தொகுதியிலே மானத்தோடு வலம் வர வேண்டுமானால் அங்கே சீர்கெட்டிருக்கக் கூடிய பாதைகளைச் சீர்செய்ய வேண்டுமானால் அங்கே இருக்கக்கூடிய பல குறைபாடுகளைச் சொல்லி இங்கே இருக்கக்கூடிய அமைச்சர்கள் அத்தனை பேரையும் நாங்கள் கேள்வி கேட்கிற நேரத்திலே தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கொடுங்கள் (சிரிப்பு) என்று அமைச்சர்கள் மட்டுமா? பரமசிவனே சொல்லிவிட்டார். நம்முடைய முதல்வர் கலியுகக் கண்ணனாக இருக்கக்கூடிய கலைஞர் அவர்களைக் கேட்கும்போது அவரே இந்த வார்த்தையைச் சொல்லிவிட்டார் (சிரிப்பு)

கலைஞரே சொன்ன பிறகு, எங்களுடைய தொகுதிக்குள் போக முடியுமா? பஞ்சாயத்துத் தேர்தல் வந்தபோது எவ்வளவு மோசமான நிலை இருந்ததோ, ஆண்டொன்றிற்கு 1000 கோடி ரூபாய் உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கியபோதும் கிராமச் சாலைகள் எவ்வளவு மேடு பள்ளமாக இருக்கின்றன என்று அந்தக் கிராமங்களுக்குள்ளே சென்று வரக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியும். ஆகவே, தயவு செய்து நம்முடைய துணை சபாநாயகர் அவர்கள் மூலமாக, இங்கே இருக்கக்கூடிய 234 சட்டமன்ற உறுப்பினர்கள், கலைஞர் உட்பட நான் கேட்கிறேன். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற இந்தக் கடைசி ஆண்டில் சிறப்பான முறையில் தொகுதி மக்களிடம் வலம் வர வேண்டுமானால், இதிலே நிதித் துறைச் செயலாளராக இருக்கட்டும் அல்லது மற்ற எந்த அரசு அதிகாரியாக இருக்கட்டும், யார் முட்டுக்கட்டை போட்டாலும் அதைத் தூள் தூளாக்கி (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு குறைந்தது ஒரு கோடி ரூபாய் அளிக்க வேண்டும். ( மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

பிற்பகல் 12-45

அதிலே மாற்றமிருந்தால் நிச்சயமாக நான் சொல்கிறேன், துணை சபாநாயகர் அவர்களே, ஆறே ஆறு கிலோமீட்டர் ரோடுதான் இப்போது ஒதுக்கக்கூடிய அந்த 60 இலட்சம் ரூபாயிலே, 6 கிலோமீட்டர்தான் போடக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. இன்னும், கல்வி அமைச்சர் அவர்கள், விளையாட்டுக் கூடத்திற்கு இத்தனை பணம் ஒதுக்குங்கள் என்கிறார்கள்



(குறுக்கீடு) 10 இலட்சம், 5 இலட்சம். அதேபோல், கணினி மயமாக்கப்பட்ட பள்ளிகளுக்கு ஏற்கெனவே ஒதுக்கியது போதவில்லை, இன்னும் கொடுக்கவேண்டுமென்று, 12 இலட்ச ரூபாய் கேட்கிறார்கள். இதுபோல் எவ்வளவு பிரச்சனைகள்? தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள்? நாங்கள் சட்டமன்ற உறுப்பினர் ஆவதற்கு முன்னால், தொகுதி மக்களிடத்திலே மானத்தோடு, மரியாதையோடு, சிறந்த அந்தஸ்த்தோடு உள்ளே வந்தோம். இது கடைசி வருஷமாக இருப்பதனால் அனைத்துக் கிராமங்களிலேயிருந்தும் ‘எங்கள் ஊருக்கு என்ன செய்தீர்கள், ஐயா, சொல்லுங்கள்’ என்று சொல்கிறார்கள். இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழ்நாட்டிலே மிகச் சிறப்பான முறையிலே உள்ளாட்சிகளுக்கு 1400 கோடி ரூபாயை வாரி வழங்கிய முதல்வர் அவர்களே, அதிலே இந்தத் தொகையையாவது ஒதுக்குங்கள். இல்லையென்ற வார்த்தை நம்முடைய சோழன் வாயிலே நிச்சயமாக வரக்கூடாது. ( மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

கேட்டதை அளிக்கக்கூடிய நம்முடைய இதய சூரியனாக (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கக்கூடிய (குறுக்கீடு) தமிழக முதல்வர் அவர்கள் (குறுக்கீடு) உதயசூரியன் நாடகத்தை எழுதிய இதயசூரியன் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தமிழ் மக்கள் உள்ளங்களிலே குடியிருக்கக்கூடிய முதல்வர் அவர்கள் நிச்சயமாக இதைச் செய்து கொடுக்க வேண்டும். அதேபோல்....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, எல்லோரும் சேர்ந்து உசுப்பி விடுகிறார்கள் (சிரிப்பு) அதற்கு நம்முடைய எடப்பாடி கணேசன் இரை ஆகலாமா? (பலத்த சிரிப்பு)

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவ்வளவு தூரம் உசுப்பிவிட்டு, அவ்வளவு உழைத்தவருக்கு நீங்கள் தயவு செய்து பரிசு வழங்க வேண்டுமா, இல்லையா என்று யோசித்துப் பாருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. ஐ. கணேசன்:** துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, என்னைப் பற்றி முதல்வர் அவர்களுக்கு முழுமையாகத் தெரியும். எந்தவிதமான உசுப்பலுக்கும், அசப்பலுக்கும் கணேசன் அஞ்சமாட்டான். (சிரிப்பு) நான் பணியமாட்டேன். இருந்தாலும், நகைச்சுவை கூட்டுவதற்காகச் சொல்கிறார்கள். அவருக்கு என்னுடைய நன்றி.

அடுத்து, சட்டமன்றத்திலே பணியாற்றக்கூடிய அரசு ஊழியர்கள் அத்தனை பேருக்கும் Overtime allowance வழங்கப்படவில்லை என்ற ஒரு குறைபாடு நீண்டநாட்களாக இருந்து வருகிறது. அதையும் முதல்வர் அவர்கள் கருணையோடு பரிசீலிக்க வேண்டும். சட்டசபை கூடக்கூடிய நாட்களில் அந்த ஊழியர்களுக்கு Bus Pass வழங்கப்பட வேண்டும்.

அடுத்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பென்ஷனோடு இந்த ஆண்டு அவர்களுக்கு அகவிலைப்படியும் வழங்கப்பட வேண்டுமென்று மிகப் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவிலே, தற்போது கார்கில் வீரர்கள் எப்படி அந்த இராணுவ வீரர்கள் இந்த நாட்டைக் காப்பாற்றினார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அதேபோல, முன்னாள் இராணுவ வீரர்கள் பலர் தாங்கள் உழுவதற்கு புறம்போக்கு நிலங்களைக் கேட்டிருக்கிறார்கள். அதை 10 ஆண்டு, 15 ஆண்டுகள் வரை இன்னும் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய R.D.O. அவர்கள் Consider பண்ணாமல் இருக்கிறார்கள்; அவர்களுக்கு வழங்காமல் இருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது). தயவுசெய்து அதை வழங்க வேண்டும். அதேபோல எம்.ஜி.ஆர். காலத்திலே பதவியிழந்த கிராம முன்சீப்களுக்கும், கர்ணங்களுக்கும் இப்போது 793 ரூபாய் சிறப்பு Pension வழங்கப்படுகிறது. இதை மாற்றி அரசு ஊழியர்களுக்கு இணையான ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும்.

பிற்பகல் 12-50

அதேபோல, தற்போது இரயில்வே படி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது, 15 ஆயிரம் ரூபாய். ஆனால் மற்ற மாநிலங்களிலே பீகாரிலே 50 ஆயிரம் ரூபாய், பக்கத்து மாநிலம் கேரளாவிலே 30 ஆயிரம் ரூபாய்; அதேபோல மேற்கு வங்காளம் நம்முடைய முதல்வர் அவர்கள் சொல்வதைப்போல, நம்முடைய நண்பர்கள் அந்த இயக்கத்திலே இருந்தவர்கள் இருப்பதனால் மேற்கு வங்காளத்திலே 35 ஆயிரம் ரூபாய்; மற்ற மாநிலங்களிலே குறைந்தது 50 ஆயிரம் கிலோ மீட்டருக்குக் கூப்பன், 80 ஆயிரம் கிலோ மீட்டரிலிருந்து 1 இலட்சம் வரை கூப்பன் வழங்கப்படுகிறது. அதுபோல நம்முடைய முதல்வர் அவர்கள் இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இரயில்வே படியை ஏற்றிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)



அருமை நண்பர் த.மா.கா. சட்டமன்ற உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் கேட்பதைப்போல நான், அதிகமாக நிச்சயமாகக் கேட்க மாட்டேன். 35,000 ரூபாய் என்பது மிகப் பெரிய தொகை. அதை நான் நிச்சயமாகக் கேட்க மாட்டேன். இருந்தாலும், எங்களுக்கு (குறுக்கீடு) ஒரு நிமிடம், எங்களுக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் சென்ற ஆண்டு அறிவித்ததுபோல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலகம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. பல இடங்களிலே கட்டியிருக்கிறார்கள். வெறும் கட்டடம் தான் அங்கே இருக்கிறது. ஓர் உதவியாளர் ஒரு Typist இந்த ஆண்டு நிச்சயமாகச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நியமிக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மற்ற மாநிலங்களிலே இருப்பதையும் ஒரே ஒரு நிமிடத்திலே சொல்லிவிடுகின்றேன், முதல்வர் இருப்பதனால். இமாச்சலப் பிரதேசத்திலே 26 ஆயிரம் ரூபாயும், பக்கத்து மாநிலம் ஆந்திராவிலே 22 ஆயிரம் ரூபாயும், அதேபோல, மிசோராமிலே 23 ஆயிரம் ரூபாயும் அதேபோல, மற்ற மாநிலங்களிலே 15 ஆயிரம் ரூபாய், 13 ஆயிரம் ரூபாய் என்று சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளம் இருக்கிறது. ஆனால், இது தேர்தல் ஆண்டாக இருப்பதனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்றிவிட்டோம் என்று பொதுமக்கள் எண்ணுவார்கள் என்று முதல்வர் அவர்கள் எண்ணினால் இந்த ஆண்டு தயவுசெய்து ஓர் உதவியாளர், ஒரு Typist-ஐஆவது நீங்கள் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பல மாநிலங்களிலே முதல்வர் அவர்களுக்கு இந்த List சென்றிருக்கும். இருந்தாலும் அவருடைய ஞாபகத்திற்குச் சொல்கிறேன். இராஜஸ்தான் மாநிலத்திலே 10 ஆயிரம் ரூபாய் Pension வழங்கப்படுகிறது. நாகாலாந்திலே 13 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது; இமாச்சலப் பிரதேசத்திலே 13 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இதுபோல, பல மாநிலங்களிலே Pension வழங்கப்படுகிறது. நான் கேட்பது தமிழ்நாட்டிலே 5 ஆயிரம் ரூபாய் ஓராண்டிற்கு மேலே இருக்கக்கூடிய எத்தனை ஆண்டுகள் இருந்தாலும் அக்காள் பொன்னம்மாளுக்குக்கூட 5 ஆயிரம் ரூபாய் தான் வழங்கப்படுகிறது, இருந்தால், போனால், ஆனால் நிச்சயமாக 10-வது முறை, (குறுக்கீடு) 8-வது முறை அக்காள் வர வேண்டும். இருந்தாலும்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அக்காள் இன்னும் ஓய்வூதியம் வாங்கவில்லை. சம்பளம்தான் வாங்குகிறார்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை, வாங்கினால், வாங்கினால் சொல்கிறேன். ஒரு வருடத்திற்கு மேலே இருப்பவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய். அதிலே Limit இல்லை. எத்தனை ஆண்டுகள் இருந்தாலும். ஆகையாலே அதற்கு அகவிலைப்படி இந்த ஆண்டு முதல்வர் அவர்கள் சேர்த்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் ஆரம்பத்திலிருந்து இந்தத் தேர்தல், உள்ளாட்சித் தேர்தல் அறிவித்ததிலிருந்தே நான் சொல்கிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பிரதிநிதிகள்தான் நம் தமிழகத்தில் ஒத்துவரக்கூடிய தேர்தல். ஒன்றியக் கவுன்சிலர்கள் என்பது தேவையற்றது. ஒன்றிய Chairman மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினை அளித்தவர்களுக்கு நன்றி, சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் Computer வழங்க நம்முடைய முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று சொல்லி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கணேசன் சொன்னதைப்போல நான் அதிகமாகக் கேட்க விரும்பவில்லை. நான் இங்கே இருக்கக்கூடிய அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சம்பளமே வேண்டாம். நிச்சயமாகச் சொல்கின்றேன் சம்பளமே வேண்டாம். மகாராஷ்ட்ராவிலே கொடுக்கக்கூடிய படிகளை மட்டும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கணக்கெடுத்து படிகளை வழங்குங்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பளமே வேண்டாம் என்பதை மீண்டும் வலியுறுத்தி, அந்தப் படிகளை.....

பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இறுதியாக, திரு. வி.கே. லட்சுமணன்.

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் எல்லோரும் இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாகவும், நம்மிலே சிலபேர் அமைச்சர்களாகவும் இருப்பதற்காக, தங்களுடைய வாழ்க்கையின் வசந்த காலத்தை எல்லாம் சிறையிலே கழித்த சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. மைய அரசு அவர்களுக்கு 3,000 ரூபாய் கொடுக்கிறது. மைய அரசின் ஓய்வூதியம் வாங்குகிற தியாகிகளுக்கு மாநில அரசு 500 ரூபாய் மட்டும் கொடுக்கிறது. அண்டை மாநிலமான கேரள மாநிலத்திலே மைய அரசினுடைய மானியம் பெறுகிற தியாகிகளுக்கு 2,000 ரூபாய் மாநில அரசு கொடுக்கிறது. ஆக, அண்டை மாநிலமான கேரளாவிலே கொடுக்கப்படுவது போல தமிழகத்திலேயும் மைய அரசு மானியம் பெறுகிற தியாகிகளுக்கு மாநில



அரசு 2,000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

வேலைவாய்ப்பிலே தியாகிகளுடைய வாரிசுகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், அதிலே வயது வரம்பை 35 என்று அந்த அரசாணையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த வயது வரம்பு 35-ஐ 45 ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

திருப்பத்தூர் வட்டத்திலே, பட்டமங்கலம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே திரு. சேதுராமபிள்ளை என்ற ஒரு தியாகி, அவருக்கு 23-3-1970 அன்றைக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது. 1-1-1972-அன்றோடு அந்த ஓய்வூதியம் நிறுத்தப்பட்டுவிட்டது. அதற்குப் பின்னால் அவர் இறந்து போய்விட்டார். அவருடைய மனைவி இப்போது கோவையிலே வசித்துக் கொண்டிருக்கிறார். கடந்த 29 ஆண்டு காலமாக அந்த ஓய்வூதியத்தைப் பெறுவதற்காக பலமுறை விண்ணப்பம் செய்தும்கூட அவருக்கு அந்த ஓய்வூதியம் கிடைக்கவில்லை. அந்த விவரத்தை நான் மாண்புமிகு முதலமைச்சருக்குக் கொடுத்திருக்கிறேன். கனிவோடு பரிசீலித்து அவர்கள் ஆவன செய்வார்கள் என்று உறுதியாக நான் நம்புகிறேன்.

அண்மையிலே கன்னியாகுமரியிலே திருவள்ளுவர் சிலையைத் திறந்தபோது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 142 தியாகிகளுக்கு ஓய்வூதியம் வழங்கினார்கள். கோவை மாவட்டத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 21 தியாகிகளுடைய பெயர்கள் அடங்கிய பட்டியலைப் பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறார்கள். எனவே, அந்த 21 தியாகிகளுக்கும் ஓய்வூதியத்தை வழங்க வேண்டும் என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது பதவிக் காலத்தில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் இறந்துவிட்டால், எஞ்சிய காலத்திற்கு அவருடைய குடும்பத்திற்கு மாதம் ஒன்றுக்கு வெறும் 500 ரூபாய் மட்டும்தான் கொடுக்கப்படுகிறது. ஆனால், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய விதவை மனைவிகளுக்கு 2,500 ரூபாய் கொடுக்கப்படுகிறது. நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், பதவிக் காலத்திலே இறந்துபோகிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நீங்கள் இந்த 2,500 ரூபாயினைக் கொடுக்க வேண்டும் என்பது தான். ஆனால், அண்மையிலே ஓர் அதிர்ச்சியான செய்தி என்னவென்று சொன்னால் 'தினமலர்' நாளிதழ், 10-5-2000 அன்று

செய்தியை வெளியிட்டிருக்கிறது. அது என்ன என்று சொன்னால், திரு. எல்.கே. அத்வானி அவர்கள் தியாகிகள் pension-ஐ நிறுத்த வேண்டும் என்ற ஒரு செய்தியைச் சொல்லியிருக்கிறார். அவர் 'சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியத்தினால் அரசுக்குக் கடந்த நிதியாண்டில் 186 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவானது. ஆகையினால், ஓய்வூதியத்தை நிறுத்த வேண்டும் என்று அரசு திட்டமிட்டிருப்பதாகச்' சொல்லியிருக்கிறார். இது நிகழாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நான் ஏற்கெனவே உங்களிடத்திலே கோரிக்கையை வைத்திருப்பதைப்போல, புதுடெல்லியிலே, 15, அசோகா சாலையிலே பெருந்தலைவர் காமராசர் அவர்கள் எம்.பி.-ஆக இருந்த காலத்திலேயிருந்து நீண்ட நாட்களாக அங்கே தங்கியிருந்தார்கள். அந்த வீட்டிலேதான் இரண்டு முறை பாரத நாட்டினுடைய பிரதம மந்திரியைத் தேர்ந்தெடுக்கிற வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. ஆகவே, வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்த இல்லத்தை ஒரு நினைவாலயமாக மாற்றுவதற்கு அரசு முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் தியாகிகளிலே சில பேர் விவசாயிகளாக இருக்கிறார்கள். மின் இணைப்புக்காக அவர்கள் விண்ணப்பம் போடும்போது அந்த மின் இணைப்புக் கொடுப்பதிலே அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-00

புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தமட்டிலே ஏறத்தாழ 68 சதவீதம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 32 சதவீதம் இன்னும் கொடுக்கப்படவில்லை. ஆகையினாலே அவர்களுக்கு விரைவாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

எல்லோரும் கேட்டுக்கொண்டதைப்போல இந்தத் தொகுதி மேம்பாட்டு நிதியை ரூபாய் ஒரு கோடியாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நானும் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும், ஆந்திர மாநிலத்திலே கொடுக்கப்பட்டிருப்பதைப்போல ஒரு கணினியை வழங்க வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



புதுடெல்லியிலே உள்ள தமிழ்நாடு இல்லத்திலே, இப்பொழுது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று தங்குவது என்று சொன்னால் அறை வாடகையாக 600 ரூபாய் வசூல் செய்கிறார்கள். அது மிக அதிகமான தொகை. ஒருவேளை சட்டமன்ற உறுப்பினர்களிடத்தில் வசூலிப்பதைப்போல இரண்டு மடங்கு வேண்டுமானால் வசூலிக்கலாம். ஆனால் 600 ரூபாய் என்பது மிக மிக அதிகமான தொகை. அதைக் குறைக்க வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக என்னுடைய தொகுதியிலே சில பிரச்சினைகள். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன். ஒரு நிமிஷம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றுமில்லை. நான் 1-28 க்கு அமைச்சர் பேச்சை நிறுத்திவிடுவேன். ஆகையினாலே நீங்கள் அறிவிப்புகளை ஏதும் எதிர்பார்த்தால், அதற்கு நேரம் கொடுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** என்னுடைய தொகுதியிலே ஒரேயொரு சின்னப் பிரச்சினை. 22-வது Division-லே ஒரு பெரிய மழை நீர்க் கால்வாய் இருக்கிறது. அந்த மழை நீர்க் கால்வாய் மூடப்படாமல் இருக்கிற காரணத்தினாலே, குழந்தைகள் அதிலே விழுந்து இறந்து விடுகிறார்கள். எனவே, அதை மூடுவதற்குத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தில், சட்டமன்றம் தொடர்பாகவும், சட்டமன்றம் உருவாவதற்குக் காரணமாக இருக்கிற தேர்தல்கள் பற்றியும், அரசு நிர்வாகத்தில் பல்வேறு துறைகளில் செய்கிற மூலதனங்களைப் பற்றியும், சிறு சேமிப்பு முதலான அரசுக்காக மக்களிடம் நிதி சேர்க்கிற முறை பற்றியும், அரசு அலுவலர்களுக்கும், தியாகிகளுக்கும், மொழிக் காவலர்களுக்கும் வழங்குகிற ஓய்வூதியங்கள் பற்றியும், அரசு வழங்கும் கடன்கள், முன்பணங்கள் பற்றியும், இப்படிப் பல்வேறு தலைப்புகளில் நிதி ஒதுக்கீட்டுக்கான மானியங்கள் கேட்கப்பட்டுள்ள நிலையில், சட்டமன்றத்திலே உள்ள பல உறுப்பினர்களும், பல்வேறு பிரச்சினைகளைக் குறித்தும் உரையாற்ற விரும்பினாலும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் உட்பட 13 உறுப்பினர்கள் உரையாற்றியிருக்கிறார்கள்.

இந்தத் தலைப்புகளில், பல்வேறு கருத்துகளைப் பேச வாய்ப்பு உண்டு என்றாலும்கூட, சட்டமன்றத்தில் நடைபெறுகிற வாதம் என்ற காரணத்தால் சட்டமன்ற உறுப்பினர்களையே மையமாக வைத்து, இந்த விவாதம் சட்டமன்ற உறுப்பினர்களை அடிப்படையாக வைத்தே நடைபெற்றிருக்கிறது. அது இயற்கைதான், அதுவும் நேரம் இல்லாத காரணத்தால்.

நமது சட்டமன்றத்தைக் குறித்து முதலில் நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு இந்த நான்காண்டு காலம் தமிழ்நாடு சட்டமன்றம் எந்த அளவு கருத்துகளை எடுத்து வைத்து வாதிட்டு, விளக்கங்கள் பெற்று, ஜனநாயகத்திற்கு அரணாக அமைந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிற எவரும் பெருமைப்படுவர். உரையாற்றுகிறபொழுது சில குறைகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருந்தாலும், அரசியல் கட்சிக் கண்ணோட்டங்கள் காரணமாகச் சில நேரங்களில் கடுஞ்சொல் பிறக்க நேரிட்டாலும், மொத்தத்தில் இந்தியாவிலேயே தமிழ்நாடு சட்டமன்றம்தான் தரம் உயர்ந்து செயல்படுவதாக, (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற நேரம் - மிகப் பெரும்பான்மையான நேரம்—நல்லமுறையிலே பயன்படுத்தப்படுவதாக, நாடு அறிந்து கொள்ளக்கூடிய அளவுக்கான கருத்து விளக்கம் இந்தச் சட்டமன்றத்தின் மூலமாக நிரம்ப நாட்டுக்குக் கிடைத்திருக்கிறது. அதேபோல, ஓர் ஆட்சியிலே உள்ளவர்கள், அரசாங்கம், அதனுடைய தலைவர் முதலமைச்சர் ஒரு நாட்டுக்குச் செய்யக்கூடிய கடமைகள், சமுதாயத்திற்கு ஆற்றக்கூடிய பணிகள், நாட்டினுடைய மொத்த முன்னேற்றத்திற்கு நிறைவேற்றக் கூடிய திட்டங்கள் இவற்றை மிக அதிக அளவிலே நிறைவேற்றிய ஒரு மாநில அரசு உண்டு என்றால் அது இந்த அரசே. பல்வேறு வகைகளில் மக்களைத் தொடக்கூடிய திட்டங்கள், மக்களுடைய தேவைகளை நிறைவு செய்யக்கூடிய பணிகள், அடிதட்டு மக்களைப் போய் எட்டக்கூடிய காரியங்கள், இவை இந்தத் தமிழக அரசால், கலைஞருடைய அரசால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன, நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-05

நான்காண்டுகால ஆட்சி என்பது, கடந்த காலத்திலே ஓர் ஐந்தாண்டு காலம், வறட்சிப் பாலைவனமாக மட்டுமல்ல, பாலைவனத்திலே பாம்பு, வேறு பல ஜந்துக்களும் உலவிய அந்த நிலை மாறி, பாலைவனம் முழுவதும் பூஞ்சோலையாகாவிட்டாலும்கூட, பாலைவனத்திலே இடையிலே இருக்கக்கூடிய சில புல் தரைகளைப் போல நிலைமை மாற்றப்பட்டு, இன்றையதினம் இந்த ஆட்சியினுடைய செயல்பாடுகள், தொடர்ந்து



நடைபெறக்கூடிய வாய்ப்புக் கிடைக்குமானால், வருங்காலத் தமிழகத்தினுடைய வாழ்வு மாற்றியமைக்கப்படும் - பெருமளவுக்கு மாற்றியமைக்கப்படும் என்பேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு, அகில இந்தியாவுக்கே, தொழில் வளர்ச்சியிலே பெருமளவுக்கும், கணிப்பொறி அறிவாற்றலைப் பயன்படுத்திச் செய்யக்கூடிய பல காரியங்களில் முதலிடத்திலும் இருக்கிறது என்ற தகுதியைப் பெற்று, தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கேகூட ஒரு வகையிலே பெருமை சேர்க்கக்கூடிய வாய்ப்பைத் தமிழ்நாடு பெறும் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

சட்டமன்றம் நடைபெறுகின்ற நாட்களைக் கருதிப் பார்த்தாலும் கூட, ஓர் ஐம்பது, ஐம்பத்தைந்து நாட்கள், ஆண்டுதோறும் சட்டமன்றம் பயனுள்ள வகையிலே நடைபெற்று வந்திருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிக்கு ஆற்றக்கூடிய பணிகளை மேம்படுத்துவதற்கு, மக்களோடு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்ற தொடர்பு நிறைவாக அமையவேண்டும், ஜனநாயகத்திலே அது ஓர் அடிப்படையான தேவை. சட்டமன்ற உறுப்பினர்கள் எதனாலும் செயலாற்ற முடியாதவர்களாக ஆகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் தொகுதி நிதி தொடக்கத்தில் 25 இலட்சம் ரூபாயாக வழங்கி, அதற்குப் பிறகு 35 இலட்சம் ரூபாயாக வழங்கி, ரூ.50 இலட்சமாக அறிவித்து, இன்றைக்கு ரூ. 60 இலட்சமாக வழங்கப்படுகிறது. ஆசை யாரையும் விடாது. அதிலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஆசை வந்தால் அது இடம் தெரியாமல் கூடப் போய்விடும். ஏனென்றால் நாமே சட்டம் செய்கிறவர்கள், நாம் நினைக்கிறபடி எங்களுக்கு நிதி கிடைக்கவேண்டுமென்று சொல்லக்கூடிய எண்ணங்கள் கூட ஏற்படுவதற்கு இயல்பாக வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடு) அமைச்சர்களாக இருந்தாலும் அப்படித்தான். (சிரிப்பு) சட்டமன்ற உறுப்பினர்களைத் தனித்து நான் பேசுவதாகச் சுப்பராயன் நினைக்கத் தேவையில்லை. நான் என்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.

ஆனால் ஒன்று. ஓர் அரசு பல்வேறு கடமைகளைச் செய்கிறபோது, ஒவ்வொரு துறையிலேயும் வளர்ச்சிக்கான பணிகள் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. இந்தியா முழுவதும் நீங்கள் எண்ணிப் பார்ப்பீர்களேயானால், அந்த வளர்ச்சி நிலைகளைத் தெரிந்துகொள்ள முடியாத நிலையிலே கூட இந்தியாவிலே பெரும்பாலான மாநிலங்களில் மக்கள் இருக்கிறார்கள். ஜனநாயக முறையிலே நம்பிக்கை வைக்க முடியாத நிலைக்கு ஒரு சாரார் ஆளாகிவிட்டார்கள். நக்சலைட் போன்றவர்கள் உருவாவதற்குக் காரணம், அவர்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை இழந்துள்ளனர். ஜனநாயகத்திலே அந்த மக்கள் நம்பிக்கை இழந்தது மட்டுமல்ல, மற்ற நாட்டு மக்களுக்கும் அதைப்பற்றிய ஓர் அலட்சியம்

ஏற்படக்கூடிய அளவுக்கு, இதிலே நமக்கு என்ன நன்மை என்று எண்ணக்கூடிய அளவுக்கு, ஒரு சூழ்நிலை ஓர் ஐந்தாண்டு காலம், கடந்த காலத்தில் ஏற்பட்டது. இதை எந்த உறுப்பினரும் மறுக்க முடியாது.

நல்லவேளையாக நாடு தப்பித்துக் கொண்டது. தப்பித்துக்கொண்ட நிலையைத் தொடர்ந்து காப்பாற்றிட வேண்டிய கடமை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கிறது. நாட்டு மக்களும் தாங்கள் நேரடியாக ஆட்சியில் பங்கு பெறுகிறோம் என்ற உணர்வைப் பெறுவதற்காகத்தான் இந்த ஆட்சி ஏற்பட்டவுடனேயே, உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நாடெல்லாம் நடைபெற்று, ஏறத்தாழ ஓர் இலட்சத்து 30 ஆயிரம் பேர் என்று என் நினைவிலிருந்து நான் கூறுகிறேன் - உள்ளாட்சி மன்றங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவற்றிற்கான உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த உறுப்பினர்கள் நாடெல்லாம் இருக்கின்ற உள்ளாட்சி மன்றங்கள் மூலமாக மக்கள் தேவைகளை நிறைவு செய்கின்ற அந்த இடத்திலே அமர்ந்திருக்கிறார்கள்.

அதைப்போல கூட்டுறவு இயக்கம் என்பதே, சமூகத்திற்காகத் தொடங்கப்பட்ட இயக்கம்தான். ஆனால், கூட்டுறவு அமைப்புகளில் பல அமைப்புகளுக்குப் பல ஆண்டுகள் தேர்தல்களே நடைபெறாமல் இருந்து, சில பேர் தேர்தலில் குறைகள் ஏற்பட்டிருக்கின்றன என்று சொன்னாலும் கூட, குறைகள் 10 விழுக்காடு என்று சொன்னால் நிறைவு 90 விழுக்காடு என்று சொல்லுமளவு நிறைவேறி இருக்கிறது.

பிற்பகல் 1-10

கூட்டுறவு அமைப்புகளுக்கு எல்லாம் தேர்தல் நடைபெற்று, மக்கள் தங்களுடைய குறைகளைச் சட்டமன்ற உறுப்பினரைத் தேடித்தான் சொல்ல வேண்டும், நாடாளுமன்ற உறுப்பினரை நாடித்தான் சொல்ல வேண்டும் என்ற நிலைமை இல்லாமல், பெரும் அளவுக்கு மக்களுடைய தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வாய்ப்பை, ஜனநாயக அமைப்புகளை நிறைவாக உருவாக்கி இருப்பதன் மூலமாக இன்றைய தமிழக அரசு மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையை நிறைவேற்றி வருகிறது. அப்படி நிறைவேற்றக்கூடிய சூழ்நிலையில் மேலும் மேலும் பலவற்றைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம்தான் இயல்பாக ஏற்படும். பள்ளிக்கூடமே இல்லாத ஊரில், உயர்நிலைப் பள்ளி யாரும் கேட்க மாட்டார்கள். தொடக்கப் பள்ளி இருந்தால்தான் நடுநிலைப் பள்ளி கேட்பார்கள், நடுநிலைப் பள்ளி வந்தால்தான் உயர்நிலைப் பள்ளி கேட்பார்கள். பெண்கள் ஓரளவுக்குப் படித்து விட்டால்தான் கல்லூரி தேவை என்ற எண்ணமே வரும். ஆகவே, அது உலகத்தின் இயற்கை. அப்படிச் தேவைகள் பலமடங்கு விரிவடைகிறபோது அந்தத் தேவைகளை ஈடு செய்கிறபோது சமூக நல



நோக்கத்தோடு ஒருவிதமான விகிதாச்சார இட ஒதுக்கீடு உணர்வோடு இன்னொரு வகையிலே சொல்லப்போனால் சமுதாயத்தினுடைய கிளைப் பிரிவுகளான, அனைத்துப் பிரிவுகளையும் போய் எட்டக்கூடிய முறையில் அரசாங்கத்தினுடைய திட்டங்கள், செயல்பாடுகள் அமைய வேண்டும் என்பதை நான் உள்ளபடியே விரும்புகிறவன் என்ற முறையில், அது இந்த அரசால், கலைஞருடைய அரசால் நிறைவேற்றப்படுகிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக, சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே உள்ள அலுவலர்களைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். தேர்தலைப் பற்றிக் குறிப்பிட்டு பல உறுப்பினர்கள் சொல்கிறபோது தேர்தலிலே எல்லோருக்கும் புகைப்பட அடையாளச் சீட்டு வழங்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திச் சொன்னார்கள். நான் இடையிலேயே விளக்கம் சொல்கிறபோது, விரைவிலே அந்தக் குறிக்கோள் நிறைவேற்றப்படும் என்று சொன்னேன். ஏப்ரல் திங்கள் அந்தப் பணி நடைபெறுவது தடைபட்டாலும்கூட இந்த அடையாள அட்டைகளுக்கு ஓர் எண் தரவேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்து, அந்தப் புகைப்பட அடையாள அட்டையோடு அந்த எண்களையும் தருவதைப் பற்றிச் சிக்கல் ஏற்பட்டதால், அதுபற்றித் தேர்தல் ஆணையம் விரைவிலே முடிவு எடுத்து, இன்னும் ஒரு வார காலத்தில் தெரிவிப்பதாகக் கூறியுள்ளது. Revised guidelines from the Election Commission are expected.

அந்தத் தேர்தல் ஆணையத்தினுடைய கருத்துப்படிதான் இங்கேயுள்ள அடையாள அட்டைகளில் எண்கள் வழங்க முடியும். எண்கள் வழங்க வேண்டுமென்று அவர்கள் தெரிவித்து விட்டார்கள். இன்னும் ஒருவார காலத்திற்குள் எண்கள் வழங்குகிற முறையும் தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்படும். 'in a week or ten days' time.

அதன் பின்னர் இந்தப் பணி தொடங்கப்பட்டு, வருகிற தேர்தலுக்கு முன்னர் இந்த அடையாள அட்டைகள் எல்லோருக்கும் வழங்கப்படும் என்று இங்கேயுள்ள மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி அந்தத் தகவலை நமக்குத் தெரிவித்திருக்கிறார். இந்த அடையாள அட்டை வழங்குகிற பணியை நிறைவேற்றுவதற்கு இடையிலே ஏற்பட்ட ஓர் இடைவெளி வாக்காளர்களுடைய பட்டியலை முழுவதும் புதுப்பிக்க வேண்டும் என்று வந்த ஓர் ஆணை காரணமாகவும், இந்தப் பணி தடைபட்டுவிட்டது. நடைபெற்ற தேர்தல் காரணமாக வாக்காளர் பட்டியலை முழுவதுமாகப் புதுப்பிக்கிற பணி ஏற்பட்டதன் காரணமாகவும் தடைபட்டுவிட்டது. இனி எதிர்காலத்தில், வருகிற ஜனவரி, பிப்ரவரி தொடங்கி 2, 3 திங்களில் மக்கள்தொகை கணக்கெடுப்பும் நடைபெற்ற பின்னர் மறுபடியும்

வாக்காளர் பட்டியல் புதுப்பிக்க வேண்டிய கடமையும் இருக்கிறது. இருந்தாலும் புகைப்பட அடையாள அட்டை வழங்குவதை ஒரு குறிக்கோளாக வைத்துச் செயற்பட்டு, அடுத்த பொதுத் தேர்தல் வருகிறபோது, அந்தப் பொதுத் தேர்தலில் இந்தப் புகைப்பட அடையாள அட்டைகளை அனைவரும் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பை உருவாக்கித் தருவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விவரமாக நான் சொல்வதற்கு நேரம் இல்லை. அவ்வளவு விவரங்கள் தேர்தல் ஆணையத்தின் மூலமாகக் கிடைத்திருக்கின்றன. இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர்களுடைய விருப்பம், அந்த எண்ணம் நிறைவேற்றப்படும்.

இன்னும் ஒன்று. சட்டமன்ற உறுப்பினர் எவரேனும் இறக்க நேரிடின், அப்படி மறைந்தவருடைய பதவிக் காலம் முடியும் வரையில் அவருடைய சட்டரீதியான வாரிசுதாரருக்கு, மனைவிக்கோ, மகனுக்கோ தற்போது வழங்கும்படியான குடும்ப Allowance ரூ. 5001 என்று இதுவரையில் இருந்து வந்தது. இனி மாற்றப்பட்டு இறந்த அடுத்த நாளிலிருந்து குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும். ஏற்கெனவே ஓய்வூதியம் பெறுகிறவர்களுடைய குடும்பத்திற்கு ஓய்வூதியம் பெறுகிறவர்கள் இறந்துவிட்டால் அவர்களுக்கு, அவர்கள் பெறுகிற அந்த ஓய்வூதியத்திலே பாதி அளவுக்குப் பெறுவதற்கு குடும்பத்தார்க்கு அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறபொழுது, இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு அதே விகிதம் அனுமதிக்கப்படாமல், 500 ரூபாய் என்று இருக்கிறது. அது இந்த நாளில் இருந்து மாற்றப்பட்டு, குடும்ப ஓய்வூதியம் 2,500 ரூபாயாக வழங்கப்படும். இந்த ஓய்வூதியம் 15-11-1996 முதல் அமல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே இறந்த உறுப்பினர் குடும்பங்களுக்கு வழங்கப்படாத இந்தத் தொகை வழங்கப்படும் ஏனென்றால் நம்முடைய சட்டமன்றத்திலே உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நம்முடைய மதிப்பிற்குரிய நண்பர்களாக இருந்து, இறுதியாக திருப்போரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி. சொக்கலிங்கம் வரையில் 8 பேர் மறைந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருடைய குடும்பங்களுக்கும் இந்த ஓய்வூதியம் வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-15

அடுத்து, சட்டமன்றத்திலே பணியாற்றுகிற அலுவலர்களுக்கு அவர்களுடைய பணி சட்டமன்ற நாட்களில் சிறப்பாகப் பணியாற்றவேண்டி இருப்பது காரணமாக, கீழ்க்கண்டவாறு, செலவீட்டுப்



படியாக ஏற்கெனவே 1996 முதல் வழங்கப்பட்டு வருகிறது, அவர்களுடைய பல பணி நிலைகளுக்கேற்ப வழங்கப்பட்டு வருவது. 30 ரூபாய், 25 ரூபாய், 20 ரூபாய் என்று வழங்கப்படுகிறது. அது நாள் படி இந்தச் சட்டமன்றம் நடைபெறுகிற நாட்களில், அளிப்பது இது ஒவ்வொருவருக்கும் இனி 10 ரூபாய் அதிகப்படுத்தி, 40 ரூபாய், 35 ரூபாய் என்றும், 30 ரூபாய் என்றும், 10 ரூபாய் அதிகப்படுத்தி வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுக்கு உதவியாளரை நியமித்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தித் தெரிவித்தார்கள். உதவியாளர் தேவைப்படுகிறது என்பதிலே ஒன்றும் கருத்து மாறுபாடில்லை. சில உதவியாளர் சில நேரங்களில் உபத்திரவமாக இருப்பார்கள். அது அவரவர்களைப் பொறுத்தது. ஆனால், அந்த உதவியாளர்களை அரசு அலுவலர்கள் நிலையில் தேர்வு செய்து, நியமிக்கிற முறையில், நியமிக்கிற வாய்ப்பில்லை. அப்படி நியமிக்க வேண்டுமானால், உறுப்பினர் நியமிக்க முடியாது. மேலும், நிரந்தரப் பணி என்றெல்லாம் சொல்ல முடியாது. நீங்கள் உறுப்பினராக இருக்கிற வரையில், அதாவது ஒருவர் உறுப்பினராக இருக்கிற வரையில் ஒருவரை நியமித்துக்கொள்ளலாம். மறுபடியும் அடுத்த முறை யார் வருகிறாரோ அவர் விரும்புகிறவரை நியமித்துக் கொள்ளலாம். ஆகவே, இது ஒரு நிரந்தரப் பணி ஆக முடியாத ஒன்று. ஆகவே, அதன் காரணமாக, தொகுதி அடிப்படையில் நியமித்தால், ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு அந்த உதவியாளர் பயனுள்ளவராக இருப்பார். அடுத்து இன்னொருவர் சட்டமன்ற உறுப்பினராக வருகிறபோது, அவர் அவருக்கு அந்த அளவு உதவியாக இருக்கமாட்டார். அப்புறம், கட்சிப் பிரச்சினை வேறு இருக்கிறது. ஆகவே இவற்றிலே எல்லாம் அரசு தலையிடாமல் இருப்பதற்கு, அப்படித் தங்கள் தங்களுடைய வசதிக்கேற்ப தாங்களே நியமித்துக் கொள்கிறவர்களுக்கு 2,000 ரூபாய் தொகுப்பு ஊதியத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) நியமித்துக், கொள்ளலாம். மாதம் 2,000 ரூபாய் ஆண்டுக்கு என்று நினைத்து திரு. சுப்பராயன் சொல்கிறார். தொகுப்பு ஊதியம் இந்தத் தேதியிலிருந்து அல்லது இல்லையானால், ஆணை பிறப்பிக்க ஒருவேளை இடையிலே நான்கு நாட்கள் ஆகலாம். தொகுப்பு ஊதியமாக 2,000 ரூபாயில், ஒரு நல்ல உதவியாளரை முதலில் பார்த்து, கவனித்து நியமித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இதிலே தெரிவிக்கப்பட்ட மற்ற கருத்துகளைவிட, தியாகிகளுக்குப், பென்ஷன் வழங்குவதில் கன்னியாகுமரி மாவட்டத்தில் போராடிய தியாகிகளுக்குப் Pension தருவதிலே 160 பேருடைய பட்டியலை

திரு. மணி அவர்கள் கொடுத்ததாகவும், அதிலே 142 பேர் பட்டியல் ஏற்கப்பட்டதாகவும் ஆனால் அதிலேகூட, அதிலுள்ள பெயர்கள் சில விடுபட்டு, அதற்கு மாறாக வேறு பெயர் இடம்பெற்றுள்ளதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அப்படி அந்த ஒரு பட்டியலில் ஏதேனும் தவறு ஏற்பட்டிருந்தால் அதை அரசு நிச்சயமாக ஆய்வு செய்து பார்க்கும். ஆனால், வேலாயுதன் அவர்களும் மற்றவர்களும் பேசுகிறபோது, ஏழையாக இருக்கிற தியாகிகள் குடும்பங்கள் குறித்து அவர்களுக்கு 3 பெண்கள் இருக்கிறார்கள், என்றும் அந்தக் குடும்பங்களின் கஷ்டங்களையெல்லாம் சொன்னார்கள். தியாகிகள் என்று, அதுவும் சுதந்திரப் போராட்டத் தியாகிகள் என்று இப்பொழுது சொல்கிற போது, நீண்ட இடைவெளி ஏற்பட்டுவிட்ட நிலையிலும் ஒரு நண்பர் சுதந்திரப் போராட்டத் தியாகிகள் பெருகிக் கொண்டு வருகிறார்கள் என்றார். இப்பொழுது நடைபெறுகிற போராட்டங்களாலேயெல்லாம் சுதந்திரப் போராட்டத் தியாகிகள் இனிமேல் பெருக முடியாது. அவர்கள் குடும்பம் வேண்டுமானால் ஒருவேளை பெருகிக் கொண்டிருக்கலாம். ஆகவே, அப்படிப்பட்டவர்களைப் பற்றிய விவரங்கள் சரியான முறையில் சான்றோடு அரசுக்குச் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் இல்லாமல் இருக்குமானால், தியாகிகளுக்குச் சான்று தருவதற்கு மாவட்டத்திற்கு இரண்டு தியாகிகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர். அவர்களிலே ஒருவரிடத்திலேயாவது சான்று வாங்கி, அதற்குப் பிறகு அந்தச் சான்றை மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தச் சான்று முழுவதும் சரியாக இருக்கிறதா என்று ஒப்பீடு செய்துபார்த்து, அதற்குப் பின்னர், அது அரசுக்கு அனுப்பப்படுமானால், அரசும் அதற்கான முறைகளின்படி அதை ஆய்வு செய்து, யாராக இருந்தாலும் அவர்களுக்கு நிச்சயமாக Pension கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யும்; உரிய ஆணை வழங்கும்.

பிற்பகல் 1-20

அதேபோல, மொழிப் போர்த்தியாகி அல்லது மொழிக் காவலர்களாக இருந்தாலும் சரி அல்லது வேறுவிதமாக இந்த Pension பெற வேண்டிய நிலையிலே உள்ளவர்களாக இருந்தாலும் அந்த விண்ணப்பங்கள் முறைப்படி அனுப்பப்படுமானால் அவை ஆய்வு செய்யப்படும். இங்கே திரு. மணி அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். நான் சுதந்திரப் போராட்ட காலத்தில் மறைந்திருந்தபோது, அந்தக் காலத்தில் மறைந்திருந்த காரணத்தால், நேரடியாக அரசாங்கத்திலே சிக்காத காரணத்தில், நான் தியாகியினுடைய Pension பெற முடியாத நிலைமை இருந்தது. அந்த விவரங்களைத் தெரிவித்து நான் Pension பெற்றேன் என்று சொன்னார்கள். அப்படியுள்ள நிலையிலே இருந்தாலும்கூட அவையும் நிச்சயமாகக் கவனிக்கப்படும்.



இங்கே வெட்டுத் தீர்மானத்திலே பூசாரிகளுக்கெல்லாம் ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்று ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். பூசாரிகள் அவர்களுடைய தொழில் நிலை எதுவாக இருந்தாலும் சமுதாயத்திலே அவர்கள் ஒரு கூறு. அவர்கள் அதிக வசதியுள்ள கோவில்களிலே பணியாற்றாமல், வறுமை நிலையிலே இருக்கிற கோவில்களிலே அவர்களிலே 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஏழ்மை நிலையில் இருப்பார்களேயானால், அவர்களுடைய பட்டியலைத் தயாரித்து 500 ரூபாய் அவர்களுக்கு Pension வழங்கலாம் என்று, அறிவிக்கப்பட்டு, ஏறத்தாழ ஒரு 400, 500 பேருக்கு இப்போது Pension வழங்கப்பட்டிருக்கிறது. அது இந்து அறநிலையத் துறையால் வழங்கப்பட்டிருக்கிறது.

இங்கே பேசிய திரு. செல்லக்குமார் அவர்கள் மணல் குவாரி ஏலம் எடுப்பதிலே ஏற்பட்ட பிரச்சினைகளையெல்லாம் சொன்னார். அது பற்றி எனக்கு நேரடியாக முன்கூட்டித் தெரிந்து பதில் சொல்லக்கூடிய வாய்ப்பு இல்லையென்று சொன்னாலும், அந்தத் துறையினர் தெரிவிக்கிற கருத்தை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. வேதகிரி விதி 31-ன்கீழ் திரு. சுனில் குமாருக்கு வழங்கிய குத்தகையை ரத்து செய்யும்படிக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனு எண் 9338/97 தொடர்ந்தார். இதில் உயர் நீதிமன்றம் 31-8-1999ஆம் நாளிட்ட ஆணையில் திரு. சுனில் குமாருக்கு வழங்கப்பட்ட மேற்படி குத்தகையை ரத்து செய்து ஆணையிட்டது. இதனை எதிர்த்து திரு. சுனில் குமார் என்பவர் உயர் நீதிமன்றத்தில் நீதி பேராணை மேல்முறையீடு மனு Writ Appeal எண் 2103/99-அல்லது 4103-எழுத்து சரியாக இல்லை—தொடர்ந்தார். இது தொடர்பாக உயர் நீதிமன்றம் சுனில் குமாருக்கு குத்தகை வழங்கிய அரசு ஆணையின் மூல நகலை 29-11-1999 தேதியிட்ட கடிதத்தில், தான் பார்வையிடுவதற்குக் கோரியுள்ளது. அந்த மூல ஆணையைக் கோரியுள்ளது. மேற்கண்ட மூல ஆணை விழிப்புப் பணி ஆணையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதால் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க திரும்ப அனுப்பும்படி அந்த விழிப்புப் பணி ஆணையம் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதுகுறித்து, உயர் நீதிமன்றத்திற்கும் ஓர். இடைக்கால பதில் அனுப்பப்பட்டுள்ளது என்ற ஒரு செய்தி, இது செய்திதானே தவிர நான் வாதம் பண்ணவில்லை. அதற்கு மேலே ஏதேனும் விவரம் இருக்குமானால் மேலும் விவரங்களைத் தருவதற்கு நான் தயாராக இருக்கிறேன். அதேபோல, மாண்புமிகு உறுப்பினரும் தான் விரும்பக்கூடிய விவரங்களை அரசிடத்திலே கேட்டு, அப்போதும் அவருக்கு மனநிறைவு இல்லாவிட்டால் குறை சொல்வதை நான் மறுக்கவில்லை.

*பிற்பகல் 1-25*

இன்னொன்று, அரசு ஊழியர்களுக்கு Pension தருவதிலே ஏற்கெனவே தரப்பட்ட Pension தொகை திடீரென்று உயர வேண்டிய நிலைமை ஏற்பட்டது. 1996 ஆம் ஆண்டு மத்திய அரசு புதிய விகிதத்திலே Pension வழங்குவதற்குத் தீர்மானித்த காரணத்தினால், அதையே மாநில அரசு ஏற்றபோது அப்படி ஏற்றுக்கொண்ட காரணத்தினால், 1996-லே அந்தக் குறிப்பிட்ட தேதியிலேயிருந்து அவர்களுக்கு Pension வழங்கும் தொகை jumping என்று சொல்வார்கள், அதைப்போல அந்தத் தொகை அதிகமாயிற்று. அதை வேறு பல மாநில அரசுகள் உடனே நடைமுறைப்படுத்தவில்லை. தமிழக அரசுதான் அதை நடைமுறைப்படுத்தியது. அரசு ஊழியர்களுக்குக் கூட மத்திய அரசு தருகின்ற அதே ஊதியத்தைத் தருவதற்கு தமிழக அரசு முன்வந்ததைப் போல இன்னும்கூடப் பல மாநில அரசுகள் முன்வரவில்லை. அந்த மாநில ஆசிரியர்களுக்கெல்லாம் அந்த ஊதியமே கிடையாது. பழைய ஊதியம்தான். ஆனால், இன்றைக்குப் பணியாற்றுகிறவர்களுடைய ஊதிய உயர்வினாலேயே சில ஆயிரம் கோடி புதிய செலவு அதேநேரத்தில் ஏற்கெனவே பணியாற்றி, 10 ஆண்டு, 5 ஆண்டு, 7 ஆண்டுக்கு முன்னாலே ஓய்வு பெற்றவர்களுக்கும், இந்தக் காலத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கும் ஓய்வூதியத்தை அதிகப்படுத்தி வழங்க நேரிட்டுள்ளது. அதாவது புரிந்துகொள்ள வேண்டுமானால், ஏற்கெனவே ஓய்வு பெற்றவர் எந்தப் பதவியிலேயிருந்து ஓய்வுபெற்றாரோ, அந்தப் பதவிக்கு 1996-வது ஆண்டில் என்ன ஊதியம் இப்போது வழங்கப்பட்டிருக்கிறதோ, அதே ஊதிய அடிப்படையில் அவர்களுக்கும் Pension வழங்க வேண்டும்; அன்றைக்கு அவர் ஓய்வு பெற்றபோது மூவாயிரம் சம்பளம், இன்றைக்கு அதே பதவிக்கு ஏழாயிரம் ரூபாய் சம்பளம்; மூவாயிரம் ரூபாய் சம்பளத்திலே அவர் பெற்ற Pension குறைவு. இன்றைக்கு மறுபடியும் ஏழாயிரம் ரூபாய் சம்பளத்திலே, இந்தத் தேதியிலே அதே பணியிலே உள்ளவர்கள் பெறக்கூடிய பென்ஷனை ஏழாயிரத்திற்குள்ள Pension-ஐ கடந்த காலத்தில் ஓய்வுபெற்றவர்கட்கும் வழங்க வேண்டுமென்று சொன்ன காரணத்தால், மொத்த நிதியும் உடனடியாக வழங்குவது இயலாது என்று கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த மொத்த நிதியில் 60 விழுக்காடு நிதி நிலுவையில் வைக்கப்பட்டிருக்கிறதே தவிர, பென்ஷன்தாரர்களுக்கு, ஓய்வூதியம் பெறுகிறவர்களுக்கு மாத ஊதியம் உடனுக்குடன் கிடைப்பதற்கான எல்லா ஏற்பாடும் இந்த அரசால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஓய்வு பெறுவதற்கு ஓராண்டுக்கு முன்னாலேயே



அரசு அவரைப் பற்றிய எல்லாக் குறிப்புகளையும் அந்தத் துறை பெற்று, அதற்குப் பின்னர் பென்ஷன் வழங்குவதற்குரிய துறைக்கு அனுப்பப்பட்டு, அவர்களுக்கு ஐயம் இருக்குமானால், ஆறு மாதம் முன்னாலே அதுபற்றி அனைத்தையும் விசாரித்து அறிந்து, என்றைக்கு ஓய்வு பெறுகிறாரோ, அன்றைக்கே உரிய தொகை முழுவதும் வழங்குவதற்கான ஏற்பாடு நடைபெற்றிருக்கிறது. நேரம் இருந்தால், விவரமாக நான் சொல்ல முடியும். ஆகவே பென்ஷன்தாரர்கள் அவர்கள் ஒன்றும் குறைப்பட நியாயமில்லை. இந்த நிறுத்தி வைத்த பென்ஷன் தொகைக்குத்தான் அவர்களின் சங்கத்தார் அந்தத் தொகையைத் தரவேண்டுமென்று கேட்கிறார்களே தவிர, அந்தத் தொகையும் விரைவிலே தருவதற்கு அரசு தகுந்த நடவடிக்கை எடுத்தாலும் தவணைகளிலே வழங்கக்கூடிய நிலைமைதான் இருக்கும். அரசு அதை நிச்சயமாகக் கனிவுடன் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, சட்டமன்ற உறுப்பினர்கள். நம்முடைய கணேசன் அவர்கள், அதற்கு முன்னாலே பேசிய ஒரு நண்பர்- (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் கை தட்டுவதைப் பார்த்தால் நான் ஒன்றுமே சொல்லத் தேவையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய ஞானசேகரன் அவர்கள் ஒரு கோடி, ஒரு கோடி என்றால், அவர் எப்போதும் ஒரு கோடியிலேதான் இருப்பார். நடுநிலையாக இருப்பவர்களுக்குத்தான் நிலைமை தெரியும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் இவ்வளவு பேரும் கேட்ட காரணத்தினால், தொகுதி நிதியை, 60 இலட்சத்தை 70 இலட்சமாகத் தரலாம் என்று (மேசையைத் தட்டும் ஒலி) கருதினார். நீங்கள் வரவேற்றிருக்கிறீர்கள். இருந்தாலும்கூட, உள்ளூர ஏதாவது குறை இருக்கும். அதனாலே, கலைஞருடைய 77ஆவது வயது இப்போது பிறக்கப் போகிற காரணத்தினால், 77 இலட்சமாக (மேசையைத் தட்டும் ஒலி) வழங்குவது என்று அறிவிக்க இசைந்துள்ளார்., (மேசையைத் தட்டும் ஒலி) நான் நீண்டகாலமாகச் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினர்களை இந்த 77 இலட்சமும் தொகுதியில் கொடுக்கப்பட்டுவிட்டது என்று சொன்னால் போதாது; இந்த 77 இலட்சமும் குடிமக்களுக்குப் பயன்படக்கூடிய முறையில், அதிகப் பயன்பாடுள்ள முறையில், இந்த 77 இலட்சமும் நாட்டை உயர்த்துவதற்கு தொகுதி தோறும் பயன்படுத்துவதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் வழிகாண வேண்டும்; நிதியை ஆழ்ந்து சிந்தித்துச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதற்குமேல் விடை சொல்ல இன்னொரு நாள் தேவையென்று கூறி என் உரையை நிறைவு செய்கிறேன். (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா இப்போது? (குறுக்கீடுகள்) விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்,

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி. கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 2592,97,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ஆ) கோரிக்கை எண் 42—பல்வகை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 42-பல்வகை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பல்வகை பற்றிய 42ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.394,41,09,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.





பிற்பகல் 1-30

## இ. கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர். ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

“பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 831,74,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்” என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



### (ஈ) கோரிக்கை எண் 61—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 61—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர் சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.393,31,17,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



## (உ). கோரிக்கை எண் 7—மாநில சட்டமன்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 7—மாநில சட்டமன்றம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு.எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி.:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ. தெய்வநாயகம்.

**திரு. ஏ. தெய்வநாயகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.



**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர். ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாநில சட்டமன்றம் பற்றிய 7ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.11,26,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஊ). கோரிக்கை எண் 8—தேர்தல்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு.ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ. எஸ். எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

**திரு. ந. கருப்பபண்ண உடையார் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 31,71,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

**(ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2000 (ஆ.இ.)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2000ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) —தொடர்ச்சி

**(ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2000**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள்—அறிமுகம் செய்தல். 2000ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் காலைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

வெள்ளை அறிக்கை மீதான விவாதத்திற்காக, பேரவை மீண்டும் இன்று மாலை 4-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4-00

பின்னர் பிற்பகல் 4-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 10. அரசினர் தீர்மானம்

**அரசுப் பணியிடங்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் இட ஒதுக்கீடு சம்பந்தமான வெள்ளை அறிக்கை.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். அரசுப் பணியிடங்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் இட ஒதுக்கீடு சம்பந்தமான வெள்ளை அறிக்கை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"11-05-2000 அன்று சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்ட 'அரசுப் பணியிடங்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் இட ஒதுக்கீடு சம்பந்தமான அரசின் வெள்ளை அறிக்கை@ விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தின் மீது கூறுகின்ற கருத்துகளின் அடிப்படையில், இறுதியாக என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதாகக் கூறி, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதத்தினைத் தொடங்கி வைப்பவர் திரு. சி. ஞானசேகரன்.

---

@337 முதல் 349 வரையிலான பக்கங்களில் இணைப்பு-VIஆக அச்சிடப்பெற்றுள்ளது.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கிற இந்த வெள்ளை அறிக்கை மீதான விவாதத்தில் பேச அனுமதி அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1921ஆம் ஆண்டு முதல் நம்முடைய தமிழகத்திலே வகுப்புவாரித் திட்டத்தினைக் கொண்டு வந்து, அந்த முறையிலே இட ஒதுக்கீட்டை தமிழகத்தில் அமல்படுத்துவதற்கான முயற்சி எடுக்கப்பட்டு, படிப்படியாக இன்று இட ஒதுக்கீடு என்பது ஒரு முக்கிய இடத்திலே, தமிழகத்திலே இருந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் மறுக்க முடியாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வைத்திருக்கக்கூடிய வெள்ளை அறிக்கையைக் பார்க்கிறபோது, இது ஒரு நல்ல முயற்சி. வெள்ளை அறிக்கை என்று சொன்னாலே அதில் எந்தவிதமான ஒளிவு மறைவுக்கும் இடம் இல்லாமல், இருப்பதை இருப்பது போல, அப்படியே எடுத்துக்காட்டி, உடனடியாக இந்தக் காலி இடங்கள், பிற்படுத்தப்பட்டோருக்கும், மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும், பழங்குடியினருக்கும் கொடுப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சியில் நாம் வெற்றி கண்டிருக்கிறோமா என்று சொன்னால், ஓரளவிற்குத்தான் வெற்றி பெற்றிருக்கிறோமே தவிர, முழுமையாக வெற்றி பெற முடியவில்லையே என்கிற எங்களுடைய ஏக்கத்தை நாங்கள் வெளிப்படையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த வெள்ளை அறிக்கையிலாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த Backlog பின்னடைவு இடங்களை இவ்வளவு காலகட்டத்திற்குள் நாங்கள் நிரப்பி விடுவோம் என்கிற உறுதிமொழியை இந்த அவைக்கு அளிக்காதது எங்களுக்கு மாபெரும் ஏமாற்றத்தை அளிக்கிறது. வெள்ளை அறிக்கை என்று சொல்கிறபோது—1997ஆம் ஆண்டே மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு குழுவை—நம்முடைய மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையில் 9 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை—அமைத்தார்கள். அந்தக் குழு பல காலகட்டங்களிலே அமர்ந்து, எந்தெந்தத் துறைகளிலே எப்படி இட ஒதுக்கீடு முறை கடைப்பிடிக்கப்படுகிறது, எங்கெல்லாம் கடைப்பிடிக்கப்படாமல் விதிமுறைகள் மாறியிருக்கின்றன என்பதைப்பற்றியெல்லாம் ஆய்வு செய்தது. அந்தக் குழுவினுடைய அறிக்கையின் அடிப்படையிலே, முழுமையாக இந்த B.C., M.B.C., S.C., S.T., களுக்கான இடங்களை இவ்வளவு காலத்திற்குள் பூர்த்தி செய்வோம் என்று சொல்லி அவர்களுடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்து, திருப்தி அடைய வைத்திருப்பார்களேயானால் நாம் இந்த அரசைப் பாராட்டியிருக்கலாம்.

பிற்பகல் 4-05

வெள்ளை அறிக்கையிலே சொல்கிறபோதுகூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் படிப்படியாக அதாவது, இதிலே சொல்கிறபோது, 'இது பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத் துறை ஆகிய துறைகளில் கண்காணிக்கப்பட்டு வருகிறது; நுழைவு நிலைப் பதவிகள் படிப்படியாக நிரப்பப்படும் என்பதற்கு அரசு உறுதி அளிக்கிறது' என்று மட்டும் இருக்கிறது. படிப்படியாக என்று சொன்னால் எப்போது நிரப்பப்படும்? ஏற்கனவே நீங்கள் இதற்கான ஆணையை 1999ஆம் ஆண்டிலே வெளியிட்டீர்கள். இந்தத் துறையிலே எந்தெந்த அதிகாரிகள் இந்த இட ஒதுக்கீட்டு முறையைச் சரியாகப் பின்பற்றாமல் தவறு செய்திருக்கிறார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த அரசு 1999 ஆம் ஆண்டிலே ஓர் ஆணையை வெளியிட்டது. ஆனால் வெளியிட்டு இருந்தும்கூட, இன்று வரை அந்த அரசாணையை மதிக்காத அதிகாரிகள் யார்; எந்த எந்தத் துறையிலே யார் யார் எல்லாம் அந்த இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றாமல் அவர்கள் விதிமுறைகளை மீறியிருக்கிறார்கள் என்கிற பட்டியல் ஏனோ இந்த வெள்ளை அறிக்கையில் சொல்லப்படவில்லை. யாரெல்லாம் அப்படிப்பட்ட அதிகாரிகள் விதிமுறைகளை மீறி நடந்திருக்கிறார்களோ அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பது பற்றியும் இந்த வெள்ளை அறிக்கையில் சொல்லப்படவில்லை. இந்த வெள்ளை அறிக்கையிலே atleast இந்த அரசு இத்தனை தேதிக்குள் என்று deadline fix செய்திருக்க வேண்டும். ஏனென்றால் 1999 ஆம் ஆண்டு ஆணையிட்டுவிட்ட பிறகு இன்னும் அதை முடிவு செய்யாமல் தள்ளிக்கொண்டே போகும் என்று சொன்னால்—நீங்கள் இந்த Backlog arrears என்று சொல்லி 1989லிருந்து இப்போது கணக்கிட்டு இருக்கிறீர்கள். 1989-க்கு முன்னே இருக்கக்கூடிய Backlog arrears என்ன என்று நமக்குத் தெரியவில்லை. நீங்கள் கணக்கிட்டிருப்பதே ஏனோ 1989-ஐத்தான் நீங்கள் ஆரம்பமாகக் கொண்டிருக்கிறீர்கள். இப்படி ஆரம்பித்து இன்று வரை—1989லிருந்து இன்று வரை இருக்கக்கூடிய அந்த Backlog-ஐ நீங்கள் எப்போது fill-up செய்ய இருக்கிறீர்கள் என்கிற உறுதியை வெள்ளை அறிக்கையில் இல்லாவிட்டால் போகிறது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை அளிக்கிறபோதாவது இந்தக் காலகட்டத்தில் இந்த Backlog arrears நிச்சயமாக பூர்த்தி செய்யப்படும், அவர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என்கிற உறுதியை இந்த அவைக்கும் நாட்டு மக்களுக்கும் அவர் அளிக்க



வேண்டுமென்று நான் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல ஒரு Empowering Committee-ஐ,

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1989-ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழகம் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகுதான் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு இட ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டது. அதற்கு முன்னாலே மிகவும் பின்தங்கிய சமுதாயத்திற்கு இட ஒதுக்கீடு இல்லை. ஆகவேதான் 1989-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தவுடனே அந்த ஆண்டிலிருந்து எது எது Backlog இருக்கிறதோ அதைக் கணக்கிட்டு இதுவரையிலே எவ்வளவு இடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றனவோ அவைபற்றிய புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1989-க்கு முன்னாலே அவை குறித்த புள்ளிவிவரங்கள் நமக்குக் கிடைக்காததற்குக் காரணம் Most Backward என்ற ஓர் இனமே அதிலே கிடையாது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இந்த அறிக்கையை முழுமையாகப் படித்திருப்பார் என்றே நம்புகிறேன். சரியாகவும் படித்திருப்பார் என்றும் நம்புகிறேன். அவர் காலை முதல் வேறு விஷயத்திலே ஆவலாக இருந்த காரணத்தால் ஒருவேளை ஒன்றிரண்டு வாசகங்களைப் படிக்காமல் விட்டிருக்கக்கூடும். இதிலே பக்கம் 9 நிறைவுற்று 10 ஆம் பக்கம் ஆரம்பிக்கின்ற இடத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் ஆகியோர்களுக்கு உரிய பின்னடைவுப் பணியிடங்களை ஒவ்வொரு பதவியிலும் கணக்கில் கொண்டு அதனை ஈடு செய்து நிரப்பும் வகையில் அந்தத் துறையிலுள்ள நுழைவுப் பதவியில் —Entry level post—படிப்படியாக ஐந்தாண்டு காலத்திற்குள் நியமனம் செய்யலாம் என்று இருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலிலே நான் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்கு ஒரு விளக்கத்தை அறிய விரும்புகிறேன். "Backward, Most Backward என்ற முறையை 1989-லே மூன்றாவது முறையாக திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பின்னால்தான் நாங்கள் கொண்டு வந்தோம். பிறகு அந்த Backlog arrears கொண்டு வந்தோம் என்று சொன்னார்கள். ஆதிதிராவிடர், பழங்குடியினர் என்பதை—1967 ஆம் ஆண்டே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்துவிட்டது

தமிழகத்திலே. நீங்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கான backlog arrears இல்லாவிட்டாலும்கூட S.C., S.Ts Arrears-ஐ—நீங்கள் ஏன் அதற்கு முன்னாலே, 1989க்கு முன்னாலே கணக்கிடவில்லை?

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** 1967க்கு முன்னாலே நாங்கள் ஆட்சிக்கே வரவில்லையே. (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** 1989லிருந்து கணக்கிடும்போது இந்தத் துறை ஏன் 1967 ஆம் ஆண்டிலிருந்து Backlog arrears-ஐ கணக்கிட்டு இருக்கக்கூடாது?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிலே உள்ள சங்கடம்; முதலில் ஆதிதிராவிடர்களுக்கு 16 என்று இருந்தது. பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் அது 18 என்று உயர்த்தப்பட்டது. 16 என்பது 18 ஆகியது. பிறகு 18 ஆதிதிராவிடர்களுக்கு, 1 பழங்குடியினருக்கு என்று பிரிக்கப்பட்டு 19 என்று ஆகியது. இப்படிப்பட்ட மாறுதல்கள் இருந்த காரணத்தால் அப்போதிருந்து இதைச் செய்ய முடியவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாறுதல்கள் இருந்தாலும்கூட atleast 19, 18 என்று வைக்காவிட்டாலும்கூட குறைந்தபட்சம் இந்த 16 என்று கணக்கிட்டு வைத்திருந்தாலும்கூட உங்களுக்கு இன்னும் அதிகமாக arrears வந்திருக்கும்.

பிற்பகல் 4-10

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மன்னிக்கவும்; தலைவர் அவர்களே, ஏன் இதைச் செய்யவில்லை என்று கேட்பதைவிட இப்போது செய்திருப்பதை எப்படிச் செய்யலாம் என்று யோசனை கூறுவது நல்லது.

**திரு. சி.ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே 9, 10 பக்கங்களிலே 5 ஆண்டுகளுக்குள் படிப்படியாக நிரப்பப்படும் என்று இருக்கிறது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். அது இருந்தாலும்கூட 9, 10 பக்கத்திற்குப் பின்னாலே நாம் 16 ஆம் பக்கத்திற்கு வருகிறபோது தான், முடிவுரையைச் சொல்கிறபோது படிப்படியாக நிரப்பப்படும் என்று அரசு உறுதியளிக்கிறது



என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் அதைக் கூறினேன். அப்படிச் சொல்கிறபோது 5 ஆண்டு காலம் என்பது மிகவும் நெடும் தொலைவாகிவிடுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அறிக்கையை முழுவதுமாகப் படித்துவிட்டுப் பேசவேண்டும். முதலிலும், கடைசியிலும் படித்துவிட்டுப் பேசுவது என்ன நியாயம்?

**திரு. சி. ஞானசேகரன்:** கடைசியைப் பார்த்துப் பேசுகிறபோது கடைசியில் முதலில் சொன்னது dilute ஆகிவிடுகிற காரணத்தினாலேதான் இங்கே சொல்லப்படவில்லை என்பதைத்தான் நான் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் முதலமைச்சர் கேட்டார். ஏன் என்ற கேள்விக்கு பதில் உங்களிடம் இருக்கிறது என்று.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, படிப்படியாக 5 ஆண்டு காலத்திற்குள் நிறைவேற்றப்படும் என்பதுதான் அதற்குப் பொருள்.

**திரு. சி. ஞானசேகரன்:** 5 ஆண்டு காலத்திற்குள் நிச்சயமாக நிறைவேற்றப்பட்டால் நன்றி சொல்ல நாங்கள் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆனால் அதிலே ஏற்கெனவே ஒரு முயற்சியை எடுக்கிறபோது, முயற்சியை நாங்கள் வரவேற்கிறோம். இருந்தாலும்கூட இதிலே, இதுவரை எந்தெந்தத் துறையிலே - இதை நாங்கள் வெள்ளையறிக்கையிலே சொல்லுகிறபோது எந்தெந்தத் துறையில் அந்த A-category, B-category, C-category என்று இருக்கக்கூடிய அந்தப் பிரிவுகளிலே எது எதிலே எவ்வளவு நீங்கள் இன்னும் backlog arrears வைத்திருக்கிறீர்கள் என்பதை விளக்கமாகச் சொல்லியிருந்தால் நன்றாக இருக்கும். ஏனென்றால் சில துறைகளிலே உங்களுக்கு SC/ST போன்றவர்களுக்கெல்லாம் backlog என்பதை fill up பண்ணவில்லை என்று சொல்கிறார்கள். ஏனென்றால், வெள்ளை அறிக்கை தயாரிக்கும்போது அதிலே நீங்கள் தனித்தனியாக இந்த இந்தத் துறையிலே இவ்வளவு, இவ்வளவு என்று குறிப்பிட்டுச் சொல்லி இருப்பீர்கள் என்று சொன்னால், அதை எளிதாகப் புரிந்து கொண்டிருக்க முடியும். ஆனால் இதிலே நீங்கள் A class, B Class, C Class என்று நீங்கள் ஒட்டுமொத்தமாகப் போட்டிருக்கிறீர்கள்.

[2000 மே 16

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, ஏதோ ஆதி திராவிடர்களுக்கும், மிகவும் பின்தங்கிய சமூகத்தினருக்கும் A group லே ஏதோ இடமே கொடுக்காததுபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்வது சரியல்ல. பக்கம் 11-லே பார்த்தால் ``A" groupல் மொத்தம் 4,588 இடங்கள், அதிலே ஆதிதிராவிடர்களுக்கு 475 இடங்கள் ஏற்கெனவே இருக்கின்றன. அவர்கள் ஏற்கெனவே அந்தப் பதவிகளிலே 475 பேர் இருக்கிறார்கள். அதைப்போல பழங்குடியினர் 17 பேர் இருக்கிறார்கள். மிகவும் பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் 384 பேர் இருக்கிறார்கள். இல்லையென்று அர்த்தம் அல்ல. ஏதோ இப்போது backlog போடுகின்ற காரணத்தினாலே 'A`` group ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் அந்தப் பதவியிலே இல்லை என்று அர்த்தம் இல்லை. இருக்கிறார்கள் இன்னும் எவ்வளவு எடுக்கவேண்டும் என்பதுதான் அடுத்த கட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஆதிதிராவிடர் துறையை எடுத்துக் கொண்டாலும் கூட 'A' group-லேயே இன்னும் 351 பேர் குறைவாக இருக்கிறது. அதைப்போல பொதுத் துறை நிறுவனங்களை எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்னால், அதிலே 543 பேர் குறைவாக இருக்கிறது. 'B' category பிரிவினை நீங்கள் எடுத்துக்கொள்கிறீர்கள் என்று சொன்னால் குறைவு ஆதிதிராவிடரிலே 7721. அதைப்போல பொதுத் துறை நிறுவனங்களை எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்னால் குறைவு 2285. இப்படி இருக்கிறது. இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் குறைவை நிறைவு செய்வதற்கு நாம் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சி வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் கூட, நீங்கள் இதைக் கொஞ்சம் வேகமாக—ஏனென்றால் எந்தத் துறையிலே என்று எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. பொதுவாக இந்தக் குறிப்பிட்ட துறையிலே, அதாவது ஒரு கல்வித் துறை இல்லாவிட்டால் ஒரு பொதுத் துறையைச் சொல்லுகிறபோது அல்லது இந்தப் போக்குவரத்துக் கழகம் என்றெல்லாம் நீங்கள் சொல்லுவீர்கள் என்று சொன்னால் அந்தத் துறையை நாங்கள் காண்பதற்கோ அல்லது கண்காணிப்பதற்கோ கூடவசதியாக இருக்கும். இதிலே துறையையே சொல்லாமல் ஒட்டுமொத்தமாகச் சொல்கிறபோது எந்தத் துறை உண்மையிலே இதைக் கடைபிடிக்காமல் இருக்கிறது என்பதையும் நீங்கள் இந்த நாட்டு மக்களுக்கு 'அடையாளம் காட்ட வேண்டும். அப்படிப்பட்ட அதிகாரிகள் யார் என்பதையும் நீங்கள் கண்டறிந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இதுவரை யார் மீதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா, எந்தெந்த அதிகாரிகள் இதுவரை



2000 மே 16] [திரு. சி. ஞானசேகரன்]

அப்படித் தவறு செய்திருக்கிறார்கள் என்பதை கூட நீங்கள் சுட்டிக்காட்டியிருந்தால் அடுத்த வெள்ளை அறிக்கை என்று சொன்னால் அதிகாரிகள் பயப்படுவார்கள். ஒன்றுமே இல்லாமல் வெள்ளை அறிக்கை என்று வைத்துவிட்டால் இது ஒன்றும் இல்லை இது as usual நம்மை ஒன்றும் பண்ணிவிடாது என்ற முறையில் அதிகாரிகள் நினைத்துவிடக் கூடாது. இந்த அரசும்கூட கொஞ்சம் கண்டிப்போடு இதிலே நடந்துகொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதிலே ஒரு Empowering Committee என்று, வல்லமை பெற்ற கமிட்டி என்று அறிவுறுத்தி வைத்திருந்தாலும்கூட ஏற்கெனவே 9 பேர் கொண்ட ஆதிதிராவிடர் அமைச்சர் மூலம் கண்டுபிடிக்க வைக்கப்பட்ட குழு என்ன பணியை ஆற்றியது (மணியடிக்கப்பெற்றது) இனி என்ன ஆற்ற இருக்கிறது என்பதைப் பற்றியும் கொஞ்சம் விளக்கமாகப் பதிலுரையில் சொன்னால் சரியாக இருக்கும். அடுத்தபடியாக இந்தக் கூட்டுறவுத் துறையிலேகூட ஒரு G.O. போட்டீர்கள். அதிலே, அதாவது பணி மூப்பு அடிப்படையில் Seniority basis-லே Appointment செய்யப்படுவார்கள் என்று சொன்னீர்கள். இதிலே ஏற்கெனவே 210 பேருக்கு இந்த backlog arrears இருக்கிற காரணத்தினாலே சில பேர், ஆதிதிராவிடர் மாணவர்கள் 210 பேரை கூட்டுறவு பட்டயப் பயிற்சிக்கு அரசு ஏற்கெனவே அனுப்பி அவர்கள் பயிற்சியெல்லாம்கூட முடித்து இருக்கிறார்கள். ஒரு மாணவனுக்குக் கிட்டத்தட்ட 6 ஆயிரம் ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள்—பயிற்சியை முடித்தும்கூட, backlog-fill up செய்யக்கூடிய நோக்கத்தோடு, தனியாக, Special- ஆக அவர்களை நீங்கள் செலக்ட் செய்து, பயிற்சிக்கு அனுப்பியும்கூட, அவர்கள் பயிற்சியை முடித்தும்கூட, இன்னும் வேலை அளிக்கப்படவில்லை. அதிலே கூட்டுறவுத் துறையிலே பார்த்தீர்கள் என்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். ஆனால் கூட்டுறவுத் துறையினுடைய அந்தத் தலைவர்கள் யாருமே இதுவரையில் அந்த ஆணையை மதிக்கவே இல்லை. அவர்கள் இஷ்டத்திற்குப் போட்டுக்கொண்டு விட்டார்கள்.

பிற்பகல் 4-15

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் இப்போதுதான், சில தினங்களுக்கு முன்னாலே அந்தத் துறைக்கு ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள். அந்த ஆணை அனைத்து வங்கிகளுக்கும் சென்றதற்குப் பிறகுதான் தலைவர்கள் நியமனம் செய்வார்கள். எனவே, ஏதோ ஆணை

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2000 மே 16

10 ஆண்டுகளுக்கு முன்னாலே பிறப்பிக்கப்பட்டதைப் போலவும், தலைவர்கள் நிரப்பாமல் இருப்பது போலவும் சொல்வது சரியல்ல.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் ஆணையைப் பிறப்பித்து ஓராண்டு காலம் ஆகிவிட்டது.

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓராண்டு காலத்திற்கு முன்பு பதவி மூப்பு அடிப்படையிலே பணிகள் எடுக்கப்பட வேண்டுமென்று தலைவர் அவர்கள் சொல்லியிருந்தாலும், இடையிலே மொத்தமாக எந்தெந்தப் பகுதிகளிலே எவ்வளவு வேலைக்கு ஆட்கள் எடுக்கப்பட வேண்டுமென்று கணக்கு எடுக்கப்பட்டபோது அது நிறுத்தி வைக்கப்பட்டது. தேர்தல் வந்தபோது அந்த ஆணையை மீண்டும் நீட்டிக்க வேண்டி வந்தது. தேர்தல் நேரத்திலே எடுக்கக்கூடாது என்று சொன்னார்கள். இப்போதுதான் சட்டமன்றத்திலே அறிவித்திருக்கிறோம். இன்றைக்குத்தான், எந்த வகையிலே ஆட்களைத் தேர்வு செய்ய வேண்டுமென்ற வழிமுறைகளினுடைய அட்டவணை எல்லா இணைப் பதிவாளருக்கும் சென்றிருக்கிறது. இனிமேல்தான் அப்படி அது கடைப்பிடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுப் பணி நியமனங்களில், பல அரசுப் பணிகளில் இந்த இட ஒதுக்கீட்டின்படி சுழற்சி முறையிலே appointment செய்ய வேண்டுமென்று இருக்கிறது. இந்த வெள்ளை அறிக்கை வருவதற்கு முன்பு, கூட்டுறவுத் துறை, பல்கலைக்கழகங்கள், கூட்டுறவு வங்கிகள், இதுபோன்ற நிறுவனங்களிலே இனச் சுழற்சி முறை இல்லை. இப்போதுதான், புதிதாக நம்முடைய இந்த வெள்ளை அறிக்கையின் மூலம், அதிலும் இந்த இட ஒதுக்கீட்டு முறை அவசியம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அதுபோன்ற ஆணையே போடப்படவில்லை என்கிறார். இப்போது கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் போடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அவையிலே அறிவித்ததாகச் சொன்னார்கள். ஆணையை நான் சொல்கிறேன். ஆணை எண். 2 ப எண். 6, நாள் 21-3-1998 லேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், seniority அடிப்படையிலே



2000 மே 16] [திரு. சி. ஞானசேகரன்]

கூட்டுறவுத் துறையிலே பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று உத்தரவு போட்டார்கள். அரசு ஆணையும் வந்தது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை இல்லை என்று மறுக்கவில்லையே? ஏன் காலதாமதம் ஆனது என்பதற்குக் காரணம் சொன்னார்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வகுப்புவாரி அடிப்படையில், சுழற்சி முறையில், இட ஒதுக்கீடு செய்து கட்டாயம் வேலை கொடுக்க வேண்டும் என்பது வேறு. ஆனால் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலேயிருந்து பட்டியலைப் பெற்று அந்த பணிமூப்பு அடிப்படையிலே, பணி கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போட்ட உத்தரவு.

***மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆணை போடப்பட்டபோது அதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. அந்த வழக்குகளெல்லாம் முடிவுக்கு வந்த பிறகுதான் அது நடைமுறைப்படுத்தப்படுகிறது. தடையாணை பெற்றிருக்கிறார்கள். இப்படிப் போட்ட பிறகு, எந்த இடத்திலும் வேலைக்கு எடுக்கக்கூடாது என்று பல்வேறு தொழிற் சங்கங்கள் தடையாணை பெற்றிருந்த காரணத்தினால்தான் அதை அமல்படுத்த முடியவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற விளக்கம் என்பது வேறு; நான் approach செய்கின்ற விதமே வேறு. நீங்கள் ஆணையைப் பிறப்பித்தீர்கள். யாரையும் நீங்கள் போடவில்லையென்று சொல்லுகிறீர்கள். ஆனால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் இருக்கக்கூடிய தலைவர்கள் அவர்கள் இஷ்டத்திற்கு, ஆங்காங்கு இருக்கக்கூடிய தலைவர்கள் அவர்கள் இஷ்டத்திற்கு, Registrar அவர்கள் யாரை நியமிக்கக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்து இருந்தாலும்கூட, பல இடங்களில் ஏற்கெனவே fill up செய்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி என்பது வேறு, மத்திய கூட்டுறவு வங்கிகள் என்பவை வேறு. மாண்புமிகு உறுப்பினர் அதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் ஒருவர்தான் அங்கே இருப்பார். வேலை செய்வதே ஒரே ஒரு Secretary-தான். எனவே அப்படிப்பட்ட இடங்களில் அந்தத்

தலைவர்கள் நியமித்துக் கொள்கிறார்கள். அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. கூட்டுறவு வங்கிகளிலேதான் எப்படி நியமனம் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பித்து இருக்கிறார்கள். அதை இப்போது பின்பற்றுகிறோம்.

***மாண்புமிகு திரு. கா. நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கித் தலைவர்களோ, நிலவள வங்கித் தலைவர்களோ, நகர வங்கித் தலைவர்களோ, மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைவர்களோ, யாராக இருந்தாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவை மீறி யார் ஆட்களை நியமித்து இருந்தாலும், அது தவறு, 1983ஆம் வருட தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 81-வது பிரிவின்படி enquiry நடத்தப்பட்டு, பதவி இழப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு இடங்களில் தலைவர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். அரசின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 4-20

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே இருக்கக்கூடிய காலியிடங்கள், ஆதிதிராவிடருக்கான A,B,C, ஆகிய பணியிடைத் தொகுதி முறையே, 351, 7221, 13,657 ஆக மொத்தம் 21,229 பின்னடைவு இடங்கள் Backlog vacancies. அதேபோல, பொதுத் துறை நிறுவனங்களிலே A,B ஆகிய பணியிடைத் தொகுதிகளிலே முறையே 543, 2,245 ஆகமொத்தம் 2,728 பின்னடைவு இடங்கள் உள்ளன. இரண்டும் சேர்த்து 23,957 பின்னடைவு இடங்கள் உள்ளதைக் கூடிய விரைவிலே நீங்கள் நிரப்ப வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், இதிலே நீங்கள் படிப்படியாக ஐந்து ஆண்டுகளுக்குள் இதை fill up செய்ய இருக்கிறோம் என்று சொன்னாலும்கூட, இதைக் கண்காணிப்பதற்காக சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமித்து, அந்தக் குழுக் கூட்டம்கூட மாதம் ஒருமுறை கண்டிப்பாகக் கூடி, எல்லாத் துறைகளையும்,—ஏனென்றால் 96 துறைகள். இன்னும் 8 துறைகளை இன்னும் நீங்கள் ஆய்வே செய்யவில்லை. 96 துறைகளை மட்டும்தான் நீங்கள் ஆய்வு செய்திருக்கிறீர்கள். அதிலே ஒவ்வொரு மாதமும் அந்தக் குழு கூடி,—எந்தெந்தத் துறைகள் இதுவரை அதைக் கடைப்பிடிக்கவில்லை, ஏன் என்பதைப் பற்றியெல்லாம் அவர்கள் முதல்வர் அவர்களுக்கு



அறிக்கை கொடுத்து, அறிக்கை மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களாலே தாக்கல் செய்யப்பட்ட வெள்ளை அறிக்கையின்மீது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துகளை நான் பெருமையோடு இங்கே கூறிக்கொள்வதிலே மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த இந்தியத் திருநாட்டிலே சமூக நீதி எங்கே இருக்கிறது; எப்படியெல்லாம் இருக்கிறது என்று சொல்லி, வடநாட்டு மக்களெல்லாம் தூங்கிக் கொண்டிருக்கிற நேரத்திலே, தந்தை பெரியார் பிறந்த மண்ணிலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தியத் திருநாட்டிற்கே எடுத்துக்காட்டாக, சமூக நீதிக் காவலராக, சமூக நீதி நாயகராக நிலை நின்று, இட ஒதுக்கீட்டை, சமூக நீதியை நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடு நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மனுநீதிச் சோழன் பிறந்த மண்ணிலே பிறந்த தாங்கள், சமூக நீதி இந்தியாவிலேயே நிலைபெற்று இருக்க வேண்டும்; அது எந்தவகையில் இருக்க வேண்டும் என்பதையெல்லாம் கருத்திலே கொண்டு, இந்த நாட்டிலே பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், சீர்மரபினர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், சிறுபான்மையின மக்களெல்லாம் சமூக நீதிபெற்று நிலைபெற்று வாழ வேண்டும், அதிலும் குறிப்பாகக் கல்வியிலே, வேலைவாய்ப்பிலே பொருளாதார ரீதியாக சமூக அந்தஸ்திலே, சரியான உண்மை நிலையைப் பெற வேண்டும் என்று இருக்கக்கூடிய முயற்சி எடுத்திருக்கக்கூடிய தங்களை இந்த நேரத்திலே நான் மீண்டும் ஒருமுறை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும், அய்யன் வள்ளுவர் அவர்கள்,

*"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்*
*உள்ளத் தனையது உயர்வு"*

என்று சொல்வார்கள். அதைப்போலவே, குளத்தினுடைய நீர் உயர உயர தாமரை உயர்ந்து கொண்டே போவதைப் போல, இன்று தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்துப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கை உயருவதற்குத் தாங்கள்

முழுமுதற் காரணம் என்பதை மீண்டும் இங்கே நான் வலியுறுத்திப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்த வகையிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் குறிப்பிட்டுப் பாராட்டிச் சொல்வது,

*"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது"*

என்று அய்யன் வள்ளுவர் அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் இடஒதுக்கீடு பெறாத நிலையிலே, ஆரம்ப காலத்திலே பிற்படுத்தப்பட்டவர்கள் என்று ஒரே பட்டியலாக, ஒரே தொகுப்பிலே 50 சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்கியிருந்த நேரத்திலே, எல்லோரும் சமூக நீதி பெறவேண்டும் என்ற அந்த உயர்ந்த இலட்சியத்தோடு, இரண்டு தொகுப்பாகப் பிரித்து, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற ஒரு சீரிய நிலையை உருவாக்கியதற்கு பாட்டாளி மக்கள் கட்சியின் இந்த 108 சமுதாய மக்களின் சார்பிலே மீண்டும் ஒருமுறை நன்றியை இந்த நேரத்திலே நான் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், எங்களுடைய நிறுவனத் தலைவர் மரியாதைக்குரிய டாக்டர் ஐயா அவர்கள், இந்தச் சமூக நீதியை வழங்கிய மாண்புமிகு கலைஞர் .அவர்களுக்குப் பாராட்டுச் சொல்ல வேண்டுமென்று சொல்லி, மாநாடுகளை நடத்தி, அந்த மாநாட்டின் வாயிலாகப் பெருமைகளையெல்லாம் நன்றியின் வாயிலாக எடுத்துச் சொன்னார்கள்.

பிற்பகல் 4-25

அப்படிச் சொல்வதற்குக் காரணமாக இருந்தவர்கள் தாங்கள். எங்கள் இயக்கத்திலே மிகப் பெரிய போராட்டத்தைச் செய்து, 21 உயிர்களைப் பலி கொடுத்த பிறகு, ஆட்சிக் கட்டிலிலே, 1989-லே அமர்ந்தவுடனே, தாங்கள் டாக்டர் ஐயா அவர்களை அழைத்து, ஒரு வாசகத்தைச் சொன்னீர்கள். "டாக்டர் அவர்களே, ஒரு மாங்கனியைத் தருகிறேன்; அந்த மாங்கனியைச் சுவைத்துப் பார்த்துச் சொல்லுங்கள்; நிறை இருக்குமென்று சொன்னால், பின்பற்றுவோம்; குறை இருக்குமென்று சொன்னால், நிவர்த்தி செய்வோம்" என்று சொல்லி, ஓர் அற்புதமான வாசகத்தைச் சொன்னீர்கள். 1989-லே வழங்கிய மாங்கனியை, 107 சாதிகளாக இருந்து, 108 சாதிகளாக உயர்த்தப்பட்டு, அந்த 108 சாதி மக்களும் மாங்கனியைச் சுவைத்துக் கொண்டிருக்கிறார்கள். தித்திப்பாக இருக்கிறது. வரவேற்கிறோம்; மகிழ்கிறோம். இருப்பினும்கூட, இன்னும் சுவை மிகுந்த மாங்கனியாக இருக்கக்கூடிய வகையிலே, இன்னும் சில



திருத்தங்களைக் கொண்டு வரவேண்டுமென்று நாங்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அப்படி வற்புறுத்தியதற்கேற்ப, மீண்டும் அந்தச் சுவையைக் கூட்டக்கூடிய வகையிலே இன்னும் திருத்தங்களை வழங்கியிருக்கிறீர்கள் என்பதை மீண்டும் மீண்டும் இங்கே நான் பாராட்டிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அப்படிச் சொல்கிற நேரத்திலே நான் குறைக்காகச் சொல்லவில்லை. இன்னும் அனைத்துத் தரப்பினருக்கும் பரவலாகச் சென்றடைவதற்குத்தான் சொல்கிறேன். இந்த இரண்டு தொகுப்புகள், பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று வழங்கி இருக்கக்கூடிய அதே நேரத்திலே இந்த மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களிலே இருக்கக்கூடிய 108 சாதிகளை இன்னும் சில குழுக்களாக, தொகுப்புகளாகப் பிரித்து வழங்குவீர்கள் என்று சொன்னால், அது எல்லோருக்கும் சமமான வகையிலே சென்றடைய வாய்ப்பாக இருக்கும். உதாரணத்திற்கு, அதிக பெரும்பான்மை கொண்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு சில இடங்களிலே சில நேரங்களிலே வாய்ப்புக் கூடுதலாகக் கிடைக்கிறது. சில நேரங்களிலே பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே, அப்படிப்பட்ட நிலை இருக்கக்கூடாது. மக்கள் தொகை குறைவாக இருக்கக்கூடியவர்களுக்கு உரிய பங்கு சென்றடைய வேண்டும்; மக்கள் தொகை கூடுதலாக இருக்கக்கூடியவர்களுக்கும் அவர்களுடைய பங்கு, அவர்களுக்குச் சென்றடைய வேண்டுமென்ற அந்தக் கணக்கைக் கொண்டு, இந்த 20 சதவிகிதம் என்பது பற்றாக்குறையாக இருக்கிற காரணத்தினாலே, அதை மேலும் 30 ஆக உயர்த்த வேண்டும்; அதை 30 ஆக உயர்த்தி—கர்நாடக மாநிலத்திலே 4 தொகுப்புகளாக இருக்கிறது; ஆந்திர மாநிலத்திலே 4 தொகுப்புகளாக இருக்கிறது; கேரள மாநிலத்திலே 6 தொகுப்புகளாக இருக்கிறது. அதற்கான ஆதாரங்களைக்கூட, அரசாணைகள் கூட நான் வைத்திருக்கிறேன். அதேபோல—நீங்கள் பிரித்து வழங்குவீர்கள் என்று சொன்னால், எல்லாச் சமுதாய மக்களுக்கும் சரியான நீதி கிடைக்கும் என்ற தாழ்மையான கருத்தை இங்கே பணிவோடு சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட சமூக நீதி எல்லா மக்களுக்கும் சென்றடைய வேண்டும். அந்த வகையிலேகூட, ஆதிதிராவிட மக்களுக்கு இப்போது நீங்கள் கனிவான பார்வையோடு நல்ல காரியங்களை எல்லாம் செய்து கொண்டிருக்கிறீர்கள். இப்போது ஆதிதிராவிட மக்களுக்கு 18 சதவிகிதமாக இருந்து கொண்டிருக்கிறது. அதைப் போலவே, பழங்குடியினருக்கு ஒரு சதவிகிதம். 19 ஆக இருப்பதை மக்கள் தொகை அடிப்படையிலே பார்க்கின்றபோது, குறைவாக இருப்பதாகச் சொல்லிக் கொள்ளப்படுகிறது. தொடர்ந்து

சொல்லிக் கொண்டிருக்கிற காரணத்தினாலே, ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கப்பட்டு இருக்கக்கூடிய அந்த 18 சதவிகித இட ஒதுக்கீட்டை, 22-ஆக உயர்த்த வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவ்ர்களே, அந்த 22-ஐ, எதிலே இருந்து எடுத்துக் கொடுக்கலாம் என்று சொன்னால் நலமாக இருக்கும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த 22-ஐ உயர்த்துவதற்கு உச்சநீதிமன்றத்திலே ஆணை, 69-க்கு மிகுதியாகக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 50. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. மொத்தத்திலே உச்சநீதிமன்றம் 50-க்கு (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மொத்தத்திலே...

**திரு. ஜி.கே. மணி:** கூடுதலாகப் போகக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சிறப்பு நிகழ்வின் காரணமாக நீங்கள் 69-ஐ வழங்கியிருக்கிறீர்கள். ஆகவேதான், மாநில அரசு, நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருந்தாலும்கூட, அந்தத் திருத்தத்தை மத்திய அரசிலேயிருந்து நாம் பெறவேண்டும். ஆகவே, பொதுப் போட்டியிலே 31 சதவிகிதம், இருக்கிறது. அதைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும். அதைப் பகிர்ந்து கொடுப்பதற்கு நமக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னாலும்கூட, பாராளுமன்றத்திலே சட்டத் திருத்தத்தின் வாயிலாகக் கொண்டு வருவதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பட்டியலில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல 31 சதவிகிதம் இருந்தாலும்கூட, இப்போதும் அந்தப் பொதுப் பட்டியலில், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர், சீர்மரபினர், ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. "ஏற்கெனவே பல அளவுக்கு நாங்கள் இழந்திருக்கிறோம்; இப்போது மீண்டும் எங்களை இழக்கச் சொல்கிறீர்களா?"



என்று முன்னேறிய சமுதாயத்தினர் என்று சொல்லப்படுகிறவர்களும் கேட்பார்களே, அவர்களுக்கும் நாம் பதில் சொல்ல வேண்டாமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் போட்டியிலே இருந்து எடுக்கின்ற நேரத்திலே, முன்னேறியவர்களுக்குக்கூட, இட ஒதுக்கீட்டை வழங்குவதிலே தவறு இல்லை. மக்கள் தொகை அடிப்படையிலே வழங்குகிறபோது, முன்னேறிய சமுதாய மக்கள், எத்தனை சதவிகிதம் பேர் இந்த நாட்டிலே இருக்கிறார்களோ அந்த மக்கள் தொகைக்கு ஏற்ப, அவர்களுக்கும் வழங்குவதிலே தவறு இல்லை என்பதை இந்த நேரத்திலே பணிவோடு சுட்டிக்காட்டுகிறேன்.

*பிற்பகல் 4.30*

உதாரணத்திற்கு, இப்போது பொதுப் போட்டியிலே 31, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 30, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20, ஆதிதிராவிடர்களுக்கு 18, பழங்குடியினருக்கு 1 என்று சொல்லுகின்ற நேரத்திலே, இதில் சமூக நீதி என்று பார்க்கின்ற நேரத்திலே, சரியான சமூக நீதியாக இருக்க வேண்டுமென்று சொன்னால், அதை எந்த அளவுகோலை வைத்து நாம் நிர்ணயிப்பது, அந்த அளவுகோலை நிர்ணயிப்பதற்கு மக்கள் தொகை அடிப்படையிலே இருக்க வேண்டுமென்று சொல்லுகிறோம். அந்த மக்கள் தொகை அடிப்படையிலே நிர்ணயிப்பதற்குச் சாதி வாரிக் கணக்கெடுப்பு அவசியம் தேவை. இப்போது வெள்ளை அறிக்கையிலேகூடச் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய ஆதிதிராவிட மக்கள் தொகையினுடைய எண்ணிக்கை இவ்வளவு இருக்கிறது, அதற்கேற்ப வழங்கப்படுகிறது என்று சொல்கிற நேரத்திலே, இப்போது சரியான நேரம், 2001-லே இந்திய அரசாங்கம் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு செய்ய இருக்கிறது. இந்த நேரத்திலே இந்துக்கள், முஸ்லீம்கள், கிருத்துவர்கள் என்ற மத வாரியாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு வருகிறபோது, தாழ்த்தப்பட்ட மக்களுடைய அளவை நிர்ணயிக்கின்ற நேரத்திலே O.B.C. என்று சொல்லக்கூடிய இதர பிற்படுத்தப்பட்ட மக்கள் தொகையை எடுக்கின்ற நேரத்திலேதான், சாதி வாரியாகக் கணக்கெடுப்பைச் செய்கின்ற நேரத்திலேதான் அவர்களுக்குரிய அந்த சமூக நீதி கட்டாயம் சென்று அடையும் என்கின்ற காரணத்தாலே முதலமைச்சர் அவர்கள் பெரிதும் மனது வைத்து அதை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். எங்களுடைய டாக்டர் ஐயா அவர்கள் கூடத் தங்களிடத்திலே பேசுகின்ற நேரத்திலே கொள்கை அளவிலே ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னீர்கள். மிகவும் பாராட்டுகிறோம், பெருமைப்படுகிறோம். இப்படிக் கொள்கை

அளவிலே ஏற்றுக்கொள்ளக்கூடிய தாங்கள், சாதி வாரியாகக் கணக்கெடுப்பு செய்வதற்கு ஆக்கபூர்வமான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிறைய subjects இருக்கின்றன. கொஞ்சம் நேரம் கொடுங்கள்

மண்டல் கமிஷனில் மண்டல் பரிந்துரை செய்துவிட்டு, அப்போது உள் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு ஜெயில்சிங் அவர்களுக்குக் கடிதம் எழுதுகிறார். மண்டல் கமிஷன் பரிந்துரையை நிறைவேற்றுவதற்கு சாதி வாரிக் கணக்கெடுப்புத் தேவை என்று வலியுறுத்தியிருக்கிறார். தமிழகத்தில் இதற்காக நியமனம் செய்யப்பட்ட சட்டநாதன் கமிஷன், அம்பாசங்கர் கமிஷன், அதற்குப் பிறகு கவர்னர் அலெக்சாண்டர் காலத்தில்கூட வெங்கடகிருஷ்ணன் கமிஷன் போடப்பட்டது. அந்த வெங்கடகிருஷ்ணன் அவர்கள் கூட சாதிவாரிக் கணக்கெடுப்புத் தேவை என்று வலியுறுத்தியிருக்கிறார். அதேபோல கர்நாடக மாநிலத்திலேகூட, அங்கே ஹவானூர் கமிஷன், வெங்கடசாமி கமிஷன், சின்னப்ப ரெட்டி கமிஷன் என்ற கமிஷன்களை நியமித்தார்கள். அந்த கமிஷன்கள் எல்லாம் சாதிவாரிக் கணக்கெடுப்புத் தேவை என்பதை வலியுறுத்திச் சொல்லியிருக்கின்றன. ஆகவே, இந்த இட ஒதுக்கீடு...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, இந்த சாதிவாரிக் கணக்கெடுப்பை ஓரளவுக்குத்தான் தெரிந்துகொள்ள வேண்டும். யூகித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, நாமக்கல் கவிஞர் மாளிகையிலே ஒரு கூட்டத்தைக் கூட்டினார். அன்றைக்கு எல்லா சாதிகளுடைய பிரதிநிதிகளும் வரவேண்டுமென்று எம்.ஜி.ஆர். அவர்கள் அழைப்பு விடுத்தார்கள். குருவிக்காரர்கள் உட்பட எல்லோரும் வந்தார்கள்; தங்களுடைய சாதிகளினுடைய எண்ணிக்கையைச் சொன்னார்கள். கூட்டிப் பார்த்தால் 16 கோடி. 6 கோடி மக்கள் இப்போது, அப்போது 6 கோடிகூட இல்லை. 4 கோடி மக்கள், இந்தத் தமிழகத்தில் 16 கோடி மக்கள் என்று கணக்கிலே வந்தார்கள். ஆகவே, சாதிவாரியாகக் கணக்கெடுத்தால், இந்தத் தொல்லை எல்லாம் வரும் என்பதை மறந்துவிடக் கூடாது. அதனால்தான் கொள்கை அளவிலே ஒத்துக்கொள்கிறேன், நடைமுறையில் ஒவ்வாது என்று நான் சொன்னேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதிக் கணக்கெடுப்பை யாரை வைத்து எடுப்பது? ஏனென்றால் எல்லோரும் அந்தந்தச் சாதியைக் கூட்டிக்கொண்டே போய்விடுவீர்கள். ஆந்திராவிலிருந்து, கர்நாடகாவிலிருந்து ஆட்களைக் கொண்டு வரலாமா? அங்கேயும்கூடச் சாதிகள் இருக்கின்றன. எனவே,





அது சாத்தியமான ஒரு சூழ்நிலையாகத் தெரியவில்லை. எனவே நம்முடைய உறுப்பினர் ஒரு கட்சியின் தலைவர் என்கின்ற முறையில் விளக்கமாக இந்த அவைக்கு, இன்னும் கொஞ்சம் தெளிவாகப் பேசினால் நமக்கு உதவியாக இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சொன்னார்கள். இந்த நாட்டிலே அமரர் எம்.ஜி.ஆர். கூட்டிய கூட்டத்திலே எல்லா சாதி சங்கத் தலைவர்களும் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, இரண்டு மடங்கு கூடுதலாகச் சொன்னார்கள். ஆகவே, இந்த நாட்டில் இருக்கக்கூடிய எல்லா சமுதாயச் சங்கங்களும் வலியுறுத்தக்கூடிய நேரத்திலே, இரண்டு மடங்கு கூடுதலாகச் சொல்லக்கூடிய நேரத்திலே உண்மையான கணக்கெடுப்பைச் செய்வதிலே தவறு இல்லை. எந்தச் சமுதாயமும் வேண்டாம் என்று சொல்லவில்லை. எல்லா சமுதாயச் சங்கங்களும் சாதிவாரி கணக்கெடுப்புத் தேவை என்று சொல்லுகின்ற நேரத்திலே உண்மையான கணக்கெடுப்புச் செய்வதிலே தவறு இல்லை என்ற காரணத்தாலே இப்போது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு செய்ய இருக்கிறோம். இந்த நேரத்திலே அதில் ஒன்றும் இல்லை. 'Caste' என்ற ஒன்றை மட்டும் சேர்த்துக்கொள்வோம் என்று சொன்னால், இந்த நாட்டிலே இருக்கக்கூடிய எல்லாச் சமுதாய மக்களுடைய கணக்கும் சரியாக வந்துவிடும். அதையே அளவுகோளாகக் கொண்டு இந்த இட ஒதுக்கீட்டைச் செய்வதற்கு வாய்ப்பும் இருக்கும் என்ற காரணத்தால் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 4-35

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்பது மத்திய சர்க்காருடைய அதிகார வரம்புக்கு உட்பட்டது. அந்தப் பணியை மாநில அரசு செய்கிறது. செலவு செய்கிறது. செலவை மத்திய அரசிடமிருந்து பெற்றுக் கொள்கிறது. அதை எப்படி எடுக்க வேண்டுமென்கிற முறைகளை எல்லாம், மத்திய அரசுதான் வகுத்திருக்கிறது. மத்திய அரசு இதில் மாற்றம் செய்தாலொழிய மாநில அரசுகள் ஒன்றும் செய்ய முடியாது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியினுடைய சார்பிலேகூட, பிரதம அமைச்சரை நேரிலே சந்தித்து வலியுறுத்தியிருக்கிறோம். நம்முடைய மாமன்றத்திலே ஒரு தீர்மானத்தைக்கூட நிறைவேற்றி அனுப்பலாம். ஆகவே, இப்படி இந்த

ஜாதிவாரிக் கணக்கெடுப்புத் தேவை என்பதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, மிகப் பெரிய பிரச்சினை இது. இட ஒதுக்கீடே Class என்ற அளவிலேதான் வகுக்கப்பட வேண்டுமே அல்லாமல், ஜாதி என்ற அடிப்படையிலே வகுக்கப்படக்கூடாது. பல ஜாதிகளுடைய தொகுப்பு; classiffication; அந்தத் தொகுப்பைத்தான், இந்த இட ஒதுக்கீட்டுக்குப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும், Class என்கின்ற அளவிலேதான், அந்த அடிப்படையிலேதான் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மீண்டும் ஒழிக்கப்பட வேண்டும் என்று எண்ணுகின்ற ஜாதியை, நாம் தலைவிரித்து ஆடச் செய்து விடக் கூடாது என்ற அந்த நிலையை நாம் மறந்து விடக் கூடாது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டிலே ஜாதியே இல்லை என்று சொல்லிவிட்டால் நான் அதைப்பற்றிப் பேசவே தேவையில்லை. ஜாதியை வைத்து வேலைவாய்ப்புகளிலே, பள்ளிகளிலே சேருகின்ற நேரத்திலே ஜாதியைக் கேட்கின்ற காரணத்தினால்தான் இந்த நிலைமை வருகிறது. ஆகவே, இப்படி அடித்தட்டிலே இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் எல்லாம் உயர்ந்த நிலைக்கு வந்து விட்டால் ஜாதி மறைந்து விடும். உயர்விலே இருக்கக்கூடியவர்கள், கீழே இருக்கக்கூடியவர்களுக்கு கையைக் கொடுத்துத் தூக்கி விடுவதுதான் சரியான சமூக நீதியாக இருக்கும் என்கின்ற காரணத்தாலே....

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய கண்ணுக்கு முன்னாலே ஜாதி என்று தெரிவதும், பேசுவதும் பழக்கத்திலே இருக்கிறது. ஆனால், பல்வேறு ஜாதிகள், ஆயிரக்கணக்கான பிரிவுகள் கொண்ட ஜாதிகள் நாட்டிலே இருக்கின்றன. அவற்றிற்கு இடையிலே நீதி வழங்க வேண்டுமானால்—Socially and educationally backward—சமூக அடிப்படையிலேயும், கல்வி அடிப்படையிலேயும், பின்தங்கியவர்களுக்காக என்று ஓர் இலக்கணம் வகுத்து, அந்த இலக்கணத்திலே எந்தெந்தச் சமூகம் வருகிறதோ, அந்தந்தச் சமூகம், ஜாதிகளின் பெயர்களில் உள்ளவர்களுக்கெல்லாம் அரசின் சலுகை வழங்கப்படுகிறது. அடிப்படைக் காரணம், கல்வியிலேயும், சமூக நிலையிலேயும் பின்தங்கியவர்கள். அதிலே மிக, மிகப் பின்தங்கியவர்களை, Most-backward என்கிறோம் ஆகவே, அப்படி ஓர் ஏணிப்படி வைத்துப் பார்த்தால்தான், சமுதாயத்திலே எதிர்காலத்திலே முன்னேற வேண்டியவர்கள், முன்னேறிச் சம நிலையை அடைவதற்கு ஒரு



வழிவகுப்பதாக இருக்க முடியும். அரசியல் சட்டமும், அந்த அடிப்படையிலேதான் ஏற்கும். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், அந்த அடிப்படையிலேதான் முதல் திருத்தம் கொண்டு வருவதற்கு ஒப்புக்கொண்டார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், சொன்னது போல், அந்தச் சமூக நீதியிலே அடித்தட்டு மக்கள், உழைக்கக் கூடியவர்கள், சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாக, கல்வி ரீதியாகப் பின்தங்கி இருக்கக்கூடியவர்களைக் கணக்கிலே கொண்டு, உதாரணத்திற்கு ஒரு நாட்டிலே 2 கோடி மக்கள் பொருளாதார ரீதியாகப் பின்தங்கியிருப்பதாக வைத்துக் கொண்டால், அந்த 2 கோடி மக்களிலே ஆறு தொகுப்பாக, நான்கு தொகுப்பாகப் பிரித்து, அவர்களுக்கு ஒரு தொகுப்பிற்கு 50 இலட்சம் என்று சொன்னால், அந்த 50 இலட்சம் மக்கள் தொகை கொண்ட ஜாதிகளுக்கு இத்தனை சதவிகிதம் இட ஒதுக்கீடு என அப்படி பிரித்துக் கொடுப்பதினாலே சரியான சமூக நீதி கிடைக்கும் என்கிற காரணத்தினாலேதான் நான் இதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). இன்னொன்றைக்கூட....இருங்கள். ஆகவே, அதைப்போலவே, இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியின் காரணத்தாலே அரசுத் துறைகளிலே ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போலவே, கூட்டுறவு நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், இன்னும் அரசினுடைய சார்பு நிறுவனங்களாகிய வாரியங்களில் எல்லாம் இட ஒதுக்கீடு பின்பற்றப்படாமல் இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்வோம் என்று சொன்னால், இப்போது அறிவித்திருக்கிறீர்கள். இருந்தாலும்கூட, பல்கலைக் கழகங்களிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 2½ சதவிகிதம் இருக்கிறது. மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 1½ சதவிகிதம் இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிகழ்வுகளையெல்லாம் மாற்றியமைப்பதற்குத் தாங்கள் முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள், வரவேற்கிறேன். அதே நேரத்திலே, பதவி உயர்விலே இட ஒதுக்கீடு இல்லை. இப்போது பதவி உயர்விலே இட ஒதுக்கீடு தமிழ்நாட்டிலே 4 துறைகளிலே இருக்கிறது. நெடுஞ்சாலைத் துறை, வருவாய்த் துறை, பதிவுத் துறை, வணிக வரித் துறை என்ற 4 துறைகளிலே மாத்திரம் இந்த இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்படுகிறது. இதை எல்லாத் துறைகளிலும் கொண்டு வர வேண்டு மென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, இப்போது மாநில அரசாங்கத்திலே வேலைவாய்ப்பு 1 சதவிகிதம், மத்திய அரசாங்கத்தினுடைய வேலைவாய்ப்பு 3 சதவிகிதம் ஆக 4 சதவிகிதம் போக, 96 சதவிகிதம் வேலைவாய்ப்பு எங்கு இருக்கிறது

[திரு. ஜி.கே. மணி] [2000 மே 16

என்று சொன்னால், தனியார் துறைகளிலே இருக்கிறது. தனியார்த் துறைக்கு infrastructure உதவியிலேயிருந்து, மின்சாரம் கொடுப்பது, லைசென்ஸ் கொடுப்பது, நிலம் கொடுப்பது, எல்லாமே அரசு கொடுக்கிறது. இப்படி அரசு உதவிகளோடு செயல்படக்கூடிய அந்தத் தனியார் நிறுவனம், இந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கும் வகையில் எல்லா நிலைகளிலேயும் இருக்கக்கூடிய தனியார்த் துறையினர், இட ஒதுக்கீட்டை நாட்டிலே அமலாக்க வேண்டுமென்று சொல்லி இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-40

அதைப் போலவே, இப்போது Creamy layer. Creamy layer என்று சொன்னால், இது எல்லோருக்கும் பாதிப்பு. ஏதோ, தாழ்த்தப்பட்டவர்களுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு மாத்திரமல்ல, எல்லோருக்கும் பாதிப்பு இருக்கின்ற காரணத்தாலே, இந்தக் Creamy layer-ஐ கட்டாயம் ஒழிக்க வேண்டும். கேரள அரசாங்கம்கூட, ஓய்வுபெற்ற நீதியரசர் நரேந்திரன் என்பவருடைய தலைமையிலே, ஒரு கமிஷன்அமைத்து, Creamy layer ஒழிக்கப்பட வேண்டும் என்று சொன்ன நேரத்திலே, அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்குப் போன காரணத்தினாலே, அங்கு நிலுவையில் இருந்தது. அதை இப்போது ஏறக்குறைய 2 இலட்சம் ரூபாய் வருமான வரம்பு என்ற அந்த நிலையைக் கொண்டு வந்து எல்லோருக்கும் ஒரு பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுத்து இருக்கிறார்கள். அதைப் போலவே, தமிழ்நாட்டிலே Creamy layer முறையைக் கட்டாயம் ஒழிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு, நீதித் துறையிலே இட ஒதுக்கீடு இல்லாமல் இருக்கிறது. உதாரணத்திற்குச் சொன்னால், உச்ச நீதிமன்றத்திலே, தாழ்த்தப்பட்டவர்கள் ஒருவர்கூட நீதிபதியாக இல்லை. அவர்களில், எல்லாச் சமுதாயத்திலும் திறமையானவர்கள் இருக்கின்ற காரணத்தி னாலேதான், அங்கே இந்த நீதித் துறையிலேயும் இட ஒதுக்கீடு வேண்டு மென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, தனியார் கல்வி நிறுவனங்களிலே, இடஒதுக்கீடு வேண்டுமென்ற, அந்த நிலையைச் சொல்லி, இப்படி, இடஒதுக்கீட்டைப் பொறுத்தவரையிலே சொல்ல வேண்டுமென்று சொன்னால், நிறையச் சொல்லிக் கொண்டு இருக்கலாம். ஆகவே, நம்முடைய வெள்ளை



2000 மே 16] [திரு. ஜி.கே. மணி]

அறிக்கையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த பணியை மீண்டும் பாராட்டி, இப்பொழுது 5 ஆண்டு காலத்திலே...

***திரு. விகே. லட்சுமணன்:** Point of order. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் கல்வி நிறுவனம் என்று சொல்கின்றபோது, உதவி பெறாத, உதவி பெறும் என்று இரண்டு வகை இருக்கிறது. உதவி பெறும் கல்வி நிறுவனங்களிலே, இன்றைக்கும் இட ஒதுக்கீடு இல்லை. அதை உறுப்பினர் வலியுறுத்திப் பேசினால் நல்லது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. ஜி.கே. மணி:** எனக்கு வாய்ப்புக் கொடுங்கள். பேச வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன. ஏராளமான subject நிறைய இருக்கின்றன. சொல்ல வேண்டியதற்கே வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏராளமான subject எல்லோருக்கும் இருக்கின்றன. திரு. குழந்தை தமிழரசன். *(குறுக்கீடு)*

**திரு. ஜி.கே. மணி:** துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி நிறுவனங்களைப் பற்றிச் சொன்னால், தனியார் துறையிலேயும் வேண்டும். அதிலும் குறிப்பாக, இப்போது தனியார் கல்வி நிறுவனங்களிலே, பொறியியல், மருத்துவம், வேளாண்மை, B.V.SC.. என்று பல்வேறு படிப்புகளிலே சொல்கின்ற நேரத்திலே, அரசாங்கம் Free Seat ஒதுக்குகிறது. அதிலே குறைந்த கட்டணத்திலும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது. Payment Seat 50 சதவிகிதம்; அதற்கு மிகுதியான கட்டணம். ஆகவே, மிகுதியான கட்டணம் செலுத்திப் படிக்கக்கூடிய அந்த நிலையிலே இடஒதுக்கீடு இல்லை. ஆகவே, அப்படி, சுயநிதி கல்லூரிகளிலே இருக்கக்கூடிய 50 சதவிகித Payment seat-லேயும் இடஒதுக்கீடு கொண்டு வரமுடியும் என்று சொன்னால்...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விதிமுறையில், இந்த இடஒதுக்கீடு அடிப்படையில் தகுதியின்படி இடம் பெறக்கூடியவர்கள் எல்லாம் பெற்றுவிடலாம்; இடஒதுக்கீடு தீர்ந்து போனதற்குப் பின்னர்தான், நினைத்தவர்கள் நினைத்த இடத்திலே போய்ச் சேரலாம். ஆகவே, Payment seatஆக இருந்தாலும்கூட, Single window என்பதில் வருமானால், அதிலே, அந்த சமூக அடிப்படையிலேயுள்ள, அந்தப் பிரிவினை அடிப்படையில், யாருக்கு முன்னுரிமை வழங்குவது என்பதற்கு வழி இருக்கிறது. அந்த முறையிலே S.C. ஆக இருந்தாலும், M.B.C. ஆக இருந்தாலும் அவர்கட்கு இடம் உண்டு.

[2000 மே 16

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே அந்த payment seat-லே எல்லோருக்கும் கிடைக்கும். 50 சதவிகிதம் இருக்கிறது. அவர்கள்....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** அதற்கு உங்களிடம் ஆளே இல்லையே. அதனால் நாங்கள் என்ன செய்வது? விண்ணப்பம் போட்டுச் சேர முடியாமல் இருந்தால்தான், நீங்கள் சொல்கிற கேள்வி எழும். விண்ணப்பதாரர் இல்லையென்றால், யாரும் வருத்தப்படலாமே தவிர, வேறு என்ன செய்வது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. ஜி.கே. மணி:** நான் சொல்லிவிடுகிறேன். ஒரே ஒரு நிமிஷத்தில் சொல்லிவிடுகிறேன்........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்படிச் சொல்லிச் சொல்லியே 20 நிமிடம் பேசிவிட்டீர்கள்.

**திரு.ஜி.கே. மணி:** சொல்ல வேண்டியதை இன்னும் சொல்லவில்லை. வெள்ளை அறிக்கை பற்றி ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். இதுவரை பொதுவாகத்தான் சொல்லிக்கொண்டிருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வெள்ளை அறிக்கையிலே, குறிப்பிடப்பட்டிருப்பது எல்லாம் சரி; நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சரியான புள்ளி விவரத்தைக் கொடுத்திருக்கின்றார்கள். இருந்தாலும்கூட, ஒட்டுமொத்தமாக, A.B.C.D. என்று category wise கொடுத்திருப்பதைக் காட்டிலும், துறை வாரியாகக் கொடுத்திருப்பீர்கள் என்று சொன்னால், அது இன்னும் பொருத்தமாக இருக்கும். எல்லோருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பு இருக்கும். ஆகவே, துறை வாரியாகக் கொடுப்பதற்கு முயற்சிகளை எடுக்கவேண்டும் என்று மீண்டும் ஒரு முறை கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் Backlog vacancy-ஐ 5 ஆண்டுகளில் நிரப்புவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே, இப்படி, 5 ஆண்டுகாலக் குறியீட்டைக் குறைக்கவேண்டும் என்று சொல்லிக் கொள்ளக்கூடிய அதே நேரத்திலே, இங்கே 1980-க்குப் பிறகு இருக்கக்கூடிய பணியிடங்களுக்கு மாத்திரம் Backlog vacancy சொல்லி இருக்கிறீர்கள். இருந்தாலும்கூட, ஒட்டுமொத்தமாகக் கணக்கிலே கொண்டு, அதை நிரப்ப வேண்டும். அப்படிப் பார்க்கின்ற நேரத்திலே, புள்ளி விவரத்தோடு இங்கே சொல்லிக் கொள்கிறேன்.



2000 மே 16]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்கான விளக்கத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொல்லிவிட்டார்கள். திரு. குழந்தை தமிழரசன்.

பிற்பகல் 4-45

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுப் பணியிடங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர், சீர்மரபினர் இவர்களின் இட ஒதுக்கீடு சம்பந்தமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாக்கல் செய்துள்ள வெள்ளை அறிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். 'செய்வதைச் சொல்வோம், சொல்வதைச் செய்வோம்' என்ற அடிப்படையில் உறுதியாக இருந்து கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 24-3-2000 அன்று தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையின்போது, இந்த இடஒதுக்கீட்டுப் பிரச்சினை குறித்து வெள்ளை அறிக்கையை இந்த மாமன்றத்தில், தமிழக மக்களுக்கு தெரியப்படுத்துகின்ற விதத்திலே தாக்கல் செய்வேன் என்று அறிவித்தார்கள். அந்த அடிப்படையிலே வெள்ளை அறிக்கையைத் தாக்கல் செய்த மாண்புமிகு தமிழக முதல்வருக்கு நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இடஒதுக்கீட்டுப் பிரச்சினையில் தமிழகம்தான் இந்தியாவிற்கே வழிகாட்டியாக, அடித்தளமாக இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. குறிப்பாக திராவிட இயக்கத் தந்தை பெரியார், மற்றும் அறிஞர் அண்ணா, அவர்களுக்குப் பிறகு இன்றளவும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களை இடஒதுக்கீட்டுப் பிரச்சினையில் கட்டிக்காத்து, இந்த மக்களைக் காப்பாற்றி வருகின்றார்கள். இன்றளவும், இந்தப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு பிரச்சினையிலே சோதனைகள் வருகின்றபோதெல்லாம் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தப் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கு, ஆதிதிராவிட சமுதாய மக்களுக்கு ஒரு கேடயமாக இருந்து, இந்த மக்களைக் காப்பாற்றி வருகிறார்கள் என்பதை இந்த மன்றத்திலே நான் தெரியப்படுத்த விரும்புகின்றேன்.

இடஒதுக்கீட்டினுடைய தாயகம் தமிழகம் என்றால் அது மிகையாகாது. மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் இந்த மன்றத்திலே பேசுகின்றபோது, 'சாதி இருக்கின்ற காரணத்தினால் நான் பேசுகின்றேன். சாதி இல்லை என்றால் நான் பேசமாட்டேன்' என்ற ஒரு கருத்தைச்

சொன்னார்கள். அந்த சாதி இல்லை, இருக்கக்கூடாது என்கின்ற நிலையை நோக்கித்தான் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த உலகம் அறிந்து கொண்டிருக்கிறது. சமத்துவபுரம் என்ற ஓர் அற்புதமான திட்டத்தை இந்தத் தமிழகத்திலே உருவாக்கிக் கொடுத்து, சாதியே இருக்கக் கூடாது என்கின்ற நிலையை உருவாக்குவதற்குத்தான் அந்த சமத்துவபுர திட்டத்தைக் கண்டிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைந்து 4 ஆண்டுகள் முடிவுற்று, 5 ஆம் ஆண்டு தொடங்குகின்ற நேரத்திலே கடந்த 12ஆம் தேதி, தமிழகத்தினுடைய, சென்னை நகரத்தினுடைய நிருபர்கள் தமிழகத்தினுடைய முதல்வரை, கலைஞர் அவர்களை பேட்டி கண்டார்கள். அந்த நேரத்திலே அவர்கள் நீங்கள் உங்களுடைய வாழ்க்கையிலே மிகப் பெரிய சாதனையாக எதைக் கருதுகிறீர்கள்' என்று கேட்டார்கள். அப்போது "நான் மிகப் பெரிய சாதனையாகக் கருதுவது சமத்துவபுரம் திட்டம் தான்" என்று சொல்லிவிட்டுச் சொன்னார்; "முதலிலே இந்த சமத்துவபுரம் மூலமாக தமிழகம் சாதி இல்லாத மாநிலமாக மாற வேண்டும். பிறகு, இந்தியா சாதி அற்ற இந்தியாவாக மாற வேண்டும். உலகம் முழுவதும் சாதியற்ற உலகமாக மாற வேண்டும். அந்தக் கனவு ஒரு நாள் நனவாகும்" என்று சொன்னார். நான் இந்த மன்றத்திலே பெருமையாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்; என்றாவது ஒரு நாள் இந்த உலகம் சாதி இல்லை என்கிற ஒரு நிலையை உருவாக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிலைக்கு அடித்தளமாக இருந்தவர் நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் என்பதை நான் பெருமையாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களைப் பல நேரங்களிலே மேடையிலே, இந்த மாமன்றதித்திலும் கூட அரசியல் விமர்சனம் செய்திருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் பேசுகின்றபோது குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஒரு சாதாரண, சாமானிய, மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்து வந்தவருக்கு என்று குறிப்பிட்டெல்லாம் பல விஷயங்களைப் பேசியிருக்கிறார்கள். அந்த நேரத்திலே எல்லாம் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் மிகப் பெருமையாகச் சொல்லி இருக்கின்றார். "ஆமாம், நான் மிகவும் சாமானியன் ஆனவன்தான், மிகவும் சாதாரணமானவன்தான், மிகவும் பிற்படுத்தப்பட்டவன்தான், என்னுடைய பெயருக்குப் பின்னால், எத்தனை மிக, மிக, மிக வேண்டுமானாலும் நீங்கள் போட்டுக்கொள்ளுங்கள். அதனை நான் பெருமையாகக் கருதக்கூடியவன்தான்" என்று குறிப்பிட்டிருக்கிறார். எனவே, இந்த மிகப்





பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தை, இந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைக் கைதூக்கிவிடுவதும், அவர்களை இந்தச் சமுதாயத்திலே மனிதர்களாக மாற்றுவதும், உயர்ந்த நிலையிலே கொண்டு வருகின்ற அந்த உணர்வும் தமிழக முதல்வர் கலைஞர் அவருடைய ஊனோடும், உதிரத்தோடும் கலந்தது என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையாகத் தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நீங்கள்தான் இந்தப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்து மக்களைக் கைதூக்கி விடுவதற்காக சட்டநாதன் கமிஷனைக் கொண்டுவந்தீர்கள். அதேபோன்று, இந்த மாமன்றத்திலே பெருமையாகக் கருதக்கூடிய பல விஷயங்களை நீங்கள் கொண்டுவந்து இந்தப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைக் காப்பாற்றினீர்கள். சட்டநாதன் கமிஷனை 1969-லே அமைத்தீர்கள். 1982-லே அம்பாசங்கர் கமிஷனை அமைத்தீர்கள். 1969-லே பிற்படுத்தப்பட்டவருக்கான தனி இயக்ககத்தைக் கொண்டுவந்தீர்கள். அதேபோன்று 1989-லே மிகவும் பிற்படுத்தப்பட்டவருக்கான தனி இயக்ககத்தை கண்டீர்கள். பழங்குடியினருக்குத் தனி இயக்ககத்தையும் நீங்கள்தான் கொண்டுவந்தீர்கள். பிற்படுத்தப்பட்டவருக்கு என்று தனி அமைச்சர் பதவியும் நீங்கள்தான் உருவாக்கிக் கொடுத்தீர்கள். அதேபோன்று மண்டல் கமிஷன் அறிக்கையை இந்தியாவில் அமல்படுத்த வேண்டுமென்று வி.பி. சிங் அவர்களை வற்புறுத்தி, அந்த மண்டல கமிஷன் அறிக்கையை இந்தியாவிலே அமல்படுத்துவதற்கு நீங்கள் வழி கண்ட நேரத்தில், வி.பி. சிங் அவர்கள் ஆட்சி இழந்தார்கள். ஆனாலும்கூட, பிற்படுத்தப்பட்ட சமுதாயம் இந்தியாவிலே உயர வேண்டும் என்று வி.பி. சிங் அவர்களை வலியுறுத்தி, அதை அமல்படுத்துவதற்கு மூல காரணமாக இருந்தவர் நீங்கள்தான் என்பதை இந்த நேரத்திலே நான் கவனப்படுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 4-50

அதேபோல் 1979 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் ரூ. 9,000 வருமானம் இருந்தால்தான் பிற்படுத்தப்பட்டோருக்கான அந்தச் சலுகைகளைப் பெற முடியும் என்ற ஒரு உச்சவரம்பைக் கொண்டுவந்தார்கள். நீங்கள் உடனடியாக எங்களுக்கெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கட்சிக்கு ஆணையிட்டீர்கள். உடனடியாக அந்த நகலை, அவர்களுடைய ஆணையைத் தீயிட்டுக் கொளுத்தி அதைக் கோட்டைக்கு அனுப்புங்கள் என்று சொன்னீர்கள். நாங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் ஏறத்தாழ 30,000 பேர் தமிழகத்திலே அதைத் தீயிட்டுக் கொளுத்தி, சிறை புகுந்தோம். எனவே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைக்

[திரு. குழந்தை தமிழரசன்] [2000 மே 16

காப்பதிலே நீங்கள் முன்னணியாக இருந்துகொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட பிரச்சினைகள், சூழ்நிலைகள் இருக்கின்ற நேரத்தில், இந்த இடஒதுக்கீடு பிரச்சினையில் அரசுப் பணிகளில் இருக்கின்ற இடஒதுக்கீடு பிரச்சினையைக் களைய வேண்டுமென்ற நோக்கத்தில் நீங்கள் இரண்டு குழுக்களை அறிவித்தீர்கள். மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையில் ஒரு குழு, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு குழு. இந்த இரண்டு குழுக்களும் ஏறத்தாழ 90 அரசுத் துறை நிறுவனங்கள், அரசுத் துறை பொது நிறுவனங்கள், இவற்றில் ஆய்வு செய்து அறிக்கை கொடுத்தன. அவை கொடுத்த பரிந்துரைகளிலே, அமைச்சரவையினுடைய Sub-Committee ஒன்றை ஏற்படுத்தி, அந்தப் பரிந்துரைகளை எல்லாம் நீங்கள் அமல்படுத்தத் தொடங்கியிருக்கிறீர்கள். அதன்படி நேரடி நியமனங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் நிரப்பப்படுகின்றபோது அதிலே இடஒதுக்கீடு முறையை இப்போது அமல்படுத்தலாம். இப்போது ஆதிதிராவிடர் நலத் துறையில் அது இருந்துகொண்டிருக்கிறது. அதைப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கும் விரிவுபடுத்தலாம் என்று ஒரு பரிந்துரை செய்திருக்கின்றீர்கள். அப்படி அமல்படுத்துகின்றபோது இனச் சுழற்சி முறை அடிப்படையில் பின்பற்றலாம் என்றும் தெரிவித்திருக்கின்றீர்கள்.

அதேபோல `direct recruitment' - நேரடி நியமனத்தில் `carry forward' கொண்டு வருகின்றபோது, அது இந்த ஆதிதிராவிடர் நலத் துறையிலே இருந்துகொண்டிருக்கின்றது. அந்த `carry forward' முறையில் நிரப்பப்படுகின்ற அந்தப் பணிகளைப் பொறுத்தவரை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கும் அதைச் சேர்க்கலாம் என்றும், விரிவுபடுத்தலாம் என்றும் சொல்லியிருக்கின்றீர்கள்.

அதேபோல இடஒதுக்கீடு முறையைப் பல்கலைக்கழகங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், வங்கிகள், மாவட்ட மத்தியக் கூட்டுறவு நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றுக்கும் விரிவுபடுத்தலாம் என்று குறிப்பிட்டிருக்கின்றீர்கள். அதேபோன்று இடஒதுக்கீடு உள்ள இடங்களில் இனச் சுழற்சி முறையைச் சரியாகக் கடைப்பிடிக்காத அதிகாரிகள்மீது கடும் தண்டனை மேற்கொள்ளலாம் என்றும் தெரிவித்திருக்கின்றீர்கள்.

அதேபோல - backlog vacancies - பின்னடைவுப் பணியிடங்களின் ஆய்வுகளை, முன் கொணர்ந்து, அதன் எண்ணிக்கையை மதிப்பீடு செய்து முடிக்க வேண்டும்; அதனுடைய எண்ணிக்கையைப் பின்பற்றி மதிப்பீடு



2000 மே 16] [திரு. குழந்தை தமிழரசன்]

செய்ததற்குப் பின்னால், அதைக் கணக்கில்கொண்டு அத்துறையின் நுழைவுப் பணியிடங்கள் (Entry Level Posts) ஆகியவற்றை உருவாக்கி, அந்தப் பணியிடங்களை நிரப்பலாம் என்றும் அறிவுறுத்தியிருக்கின்றீர்கள். எனவே பிற்படுத்தப்பட்ட சமுதாயம், தாழ்த்தப்பட்ட சமுதாயம் மாண்புமிகு முதல்வர் அவர்களை நம்பியிருக்கிறது. அவர்கள் முதல்வருடைய நடவடிக்கையை எந்த விதத்திலும் சந்தேகப்படவில்லை. எனவே, அந்தப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கும், ஆதிதிராவிட மக்களுக்கும் ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகளில், இன்னும் பல சலுகைகளை உங்கள் காலத்திலேயே நீங்கள் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று முஸ்லீம் பெருமக்களுக்கும், இடஒதுக்கீடு நான் தருகிறேன் என்று நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வந்ததற்குப் பின்னால், நிச்சயமாகத் தருகிறேன் என்று சொல்லியிருக்கின்றீர்கள். உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வந்ததற்குப் பின்னால், முஸ்லீம் மக்களுக்கும் இடஒதுக்கீட்டை நீங்கள் தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான விகிதாச்சார அடிப்படையில், வேலைவாய்ப்புகளில் பின்னடைவு இருப்பதைப் பூர்த்தி செய்வதிலே ஏற்பட்டிருக்கக்கூடிய தேக்க நிலையை நிவர்த்தி செய்வதற்கான வெள்ளை அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே வைத்திருக்கிறார்கள். அதிலே இருக்கக்கூடிய 105 துறைகளில் சுமார் 96 துறைகளில், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையும், ஆதிதிராவிடர் நலத் துறையும் ஆய்வுகளை மேற்கொண்டன. அதை ஆய்வு செய்கிறபோது ஒவ்வொரு துறையின் சார்பாக அதில் இருக்கக்கூடிய அதிகாரிகள் எவ்வளவு ஆர்வத்தோடு அந்தத் துறையிலே இருக்கின்ற விகிதாச்சாரத்தைப் பின்பற்றி பூர்த்தி செய்தார்கள் என்பது அந்தக் கமிட்டியிலே இருப்பவர்களுக்கு நன்றாகத் தெரியும். முதலமைச்சரே அதில் தலையிட்டு ஒவ்வொரு துறைக்கும் உத்தரவிட்டு, அதற்குப் பின்னால்தான் அதனுடைய விகிதாச்சாரப் பட்டியலை அந்தக் கமிட்டியிலே கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்படி என்று சொன்னால், அரசுத் துறையிலே விகிதாச்சார அடிப்படையிலே பதவி உயர்வுகளும், வேலைவாய்ப்பிலே இருக்கிற விகிதாச்சாரத்தினுடைய அடிப்படையில், அதனுடைய நேர்முகத்

[திரு. ஜி. பழனிசாமி] [2000 மே 16

தேர்விலே எப்படி நடந்திருக்கிறது என்பதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணர்ந்த காரணத்தால், அந்த இரண்டு கமிட்டிகளில் சரியாக சுமார் 2 ஆண்டுகாலம் அதைப் பரிசீலனையில் நாங்கள் எடுத்துக் கொண்டோம். அந்தக் கமிட்டியில் இருந்த காரணத்தினால் நான் சொல்கிறேன்.

பிற்பகல் 4-55

பல்வேறு துறைகளிலிருந்து சரியான பட்டியலைக்கூட அந்தக் குழுவிலே சமர்ப்பிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் வந்து நேரடியாக அதிலே கலந்துகொண்டு பேசுவதற்குக் கூச்சப்பட்டார்கள். இது தமிழகத்தில் நடந்தது. நம்முடைய கமிட்டியிலே நடந்தது. இன்றைக்கு இருக்கக்கூடிய சமூக நீதியைப் பாதுகாப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று பல நூறு ஆண்டுகாலமாக பல்வேறு போராட்டங்களுக்கு இடையில் படிப்படியாக - அநேகமாக இது ஒரு பரிணாம வளர்ச்சியிலே பெற்றிருக்கிற-விகிதாச்சார அடிப்படையிலே பெற்றிருக்கிற உரிமைகள். இன்றைக்கு நடக்கின்ற விவாதம்கூட பெருமளவிலே ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கைகள் நடைமுறையிலே நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறதா, ஏற்றுக்கொண்டிருக்கிறோமா என்பதுபற்றியது. இதிலே ஏற்பட்டிருக்கக்கூடிய பின்னடைவுக்கு என்ன காரணம், யார் செய்யவில்லை, செய்யாததற்கான காரணங்களை யார் பின்பற்றுகிறார்கள் என்பதை இந்த நேரத்திலாவது பரிசீலிப்பதுதான் சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

குறிப்பாகத் தாழ்த்தப்பட்டோர், சீர்மரபினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இவர்களுக்கு இருக்கிற பதவி உயர்வுகளில் அதிகாரியிடத்திலே, நேரடியாக நேர்முகத் தேர்விலே ஏற்பட்டிருக்கிற பின்னடைவு என்ன காரணத்தினால் வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையிலே கொடுத்து இருக்கிறார்கள். கடந்த காலங்களில் 1929-லேயிருந்து வந்திருக்கிற பட்டியலை எப்படிப் படிப்படியாகக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதெல்லாம் சுதந்திரத்திற்கு முன்பாகவே தொடங்கியிருக்கிறது. நாடு விடுதலை பெற்ற பின்னாலும்கூட, அரசியல் சட்டத் திருத்தத்திலேகூட இந்த விகிதாச்சார இடஒதுக்கீட்டிற்கான ஒரு வழிகாட்டியினை பாபாஜி அம்பேத்கர் தந்திருக்கிறார். அதற்குப் பின்னால்தான் ஒவ்வொரு சாதியும் தன்னுடைய இனத்தில் பழிவாங்கப்பட்டிருக்கிற சமூகமாகக் கருதக்கூடியவர்கள் எல்லாம் பல்வேறு போராட்டங்களை, இயக்கங்களை நடத்தி, அதிலே தமிழகத்தினுடைய முதலமைச்சரைப் போன்று இருக்கிற



2000 மே 16] [திரு. ஜி. பழனிசாமி]

முனைப்பான சிந்தனை உள்ளவர்கள் இதற்கான அடிகோல்களை எப்படி இதிலே காண வேண்டும் என்று, இந்த முதலமைச்சருடைய பொறுப்பு வாய்ந்த பொறுப்புகளுக்கு வந்த பின்னால் தமிழகத்திலே இதை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் இல்லை என்று சொல்லவில்லை. பார்த்தோம் என்றால் தெரியும். ஏற்கெனவே இருந்ததற்கு எப்படி எல்லாம் சிறிது சிறிதாகக் கழித்து எந்த அளவுக்கு இதிலே கொண்டு வந்திருக்கிறோம் என்பது இதிலே சொல்லப்பட்டிருக்கிறது.

ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு சமூக நீதிக்கு மிகப் பெரிய பேரபாயம் வந்திருக்கிறது. அந்தப் பேரபாயத்தை எப்படி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிலே பாதுகாக்கப் போகிறார்கள் என்பது ஒரு பிரச்சினையாக அடங்கியிருக்கிறது. இன்றைக்குத் தனியார்மயக் கொள்கை; எல்லா துறைகளிலும் மத்திய அரசு கொண்டு வந்திருக்கின்ற புதிய பொருளாதாரக் கொள்கை; தாராளமயமான பொருளாதாரக் கொள்கையில், தனியார் மயமாக்குகின்ற கொள்கையில் அரசு இன்றைக்கு உறுதியாக இருக்கிறது. மத்திய அரசு உறுதியாக இருக்கிறது. அப்படித் தனியார் மயமாக்குகின்றபோது இந்த விகிதாச்சாரக் கொள்கையை எப்படி நாம் நடைமுறைப்படுத்தப்போகிறோம் என்கிற அந்த பேரபாயத்தை நாம் பார்க்க வேண்டும். அதிலே என்ன உறுதியான நடவடிக்கையை நாம் எடுக்கப்போகிறோம் என்பதையும் இங்கே சொல்லியாக வேண்டும். நாடாளுமன்றத்திலேகூட அனைத்துக் கட்சிகளும் இன்றையதினத்தில் இருக்கிற விகிதாச்சார அடிப்படையை ஏற்றுக்கொண்டு ஒரு முடிவுக்கு வந்திருந்தபோதிலும்கூட, நாம் எடுக்க வேண்டிய முயற்சிகளிலே இதிலே வந்திருக்கிற அபாயத்தையும் உணர வேண்டிய அவசியம் வந்திருக்கிறது. இன்றைக்குத் தமிழகத்திலேகூட இந்தியாவிலேயே முதலிடத்தில் தொழில்களில் முன்னணியில் இருக்கக்கூடிய மாவட்டங்களில் வேலைவாய்ப்புகளிலே விகிதாச்சார அடிப்படையிலே எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கப்பட ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று சொன்னால், இன்றைக்குத் தனியார் தொழிற்சாலைகளிலும் இந்த விகிதாச்சார முறையைக் கட்டாயமாக அமல்படுத்த வேண்டும்.

எப்படி கல்வியிலே 50% கொண்டு வந்திருக்கிறோமோ, அதேபோன்று இன்றைக்கு இருக்கக்கூடிய தனியார் தொழிற்சாலைகளிலேயும் இதைக் கொண்டுவர வேண்டிய அவசியம் இன்றையதினத்தில் ஏற்பட்டு இருக்கிறது. அப்படிக் கொண்டுவந்தால் இந்த விகிதாச்சார முறையைச் சரியாகப் பின்பற்ற முடியும். இல்லையென்று சொன்னால் பிற்படுத்தப்பட்ட மக்களாக

இருந்தாலும் சரி, ஆதிதிராவிடர் மக்களாக இருந்தாலும் சரி, சீர்மரபினராக இருந்தாலும் சரி, மலைவாழ் மக்களாக இருந்தாலும் சரி, அந்த மக்கள் இன்னும் 100 ஆண்டுகாலம் புறக்கணிக்கப்படக்கூடிய, வஞ்சிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலைதான் நாடு முழுவதும் இருக்கும். தமிழகத்திலே பின்னடைவு ஏற்படும். இதிலேகூட ஒரு விவரம் வந்திருக்கிறது. அதைப் பார்த்தோம் என்றால் தெரியும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த பின்னடைவு இருக்கிறது. 5 ஆண்டுகாலத்திலே அதைப் பூர்த்தி செய்கிறேன் என்று பொறுப்புணர்வோடு சொல்லியிருந்தாலும்கூட இன்றைக்கு ஆதிதிராவிடர் நலத் துறை என்று ஒரு துறையை எடுத்துக்கொண்டு பார்த்தோம் என்றால் இதிலே வந்திருக்கிறது. குறிப்பாக 4,458 பேரிலே 18 சதவீதம் என்று சொன்னால் இதிலே அநேகமாக 10 சதவீதம் தான் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கிறது. இது `A' பிரிவு 8 சதவீதம் பூர்த்தி செய்யப்படவில்லை. இது நீங்கள் கொடுத்திருக்கிற குறிப்பிலேயே வந்திருக்கிறது. அதேபோன்று, B group-ஐ எடுத்துக்கொண்டாலும் சரி 1,69,682 பேர், இதிலே எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால் 13 சதவீதம்தான் இன்றைக்குப் பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. 5 சதவீதம் பூர்த்தி செய்யப்படவில்லை அதேபோன்று `C' gruop-ல் 4,24,131 பேரில் பார்த்தோம் என்று சொன்னால் 14 சதவீதம் (குறுக்கீடு) என்ன, 4 இலட்சமா? 4,24,131 இதிலே பார்த்தோம் என்று சொன்னால்கூட 14 சதவீதம்தான் வந்திருக்கிறது. இன்னும் 5 சதவீதம் இதிலே வரவேயில்லை. 19 சதவீதத்திற்கு வரவில்லை. இதிலே கடைசியாகப் பார்த்தோம் என்று சொன்னால் இது 27 சதவீதம். இந்த 27 சதவீதம் எப்படி வந்திருக்கிறது என்று சொன்னால் அது இந்த ஆதிதிராவிடர் நலத் துறையிலே வந்திருக்கிறது. டிரைவர் வேலை பார்க்கிறவர்கள், கூட்டுகிறவர்கள், எடுபிடி வேலை செய்கிறவர்கள், செக்யூரிட்டியாக இருக்கிறவர்கள் ஆகிய பிரிவுகளிலேதான் இந்த 27 சதவீதம் வந்திருக்கிறது.

பிற்பகல் 5-00

நான்கூட இந்தத் துறையிலே கேட்டபோது தெரிந்துகொண்டேன், இதிலேமட்டும் அனுமதித்தது எப்படி? எப்படி 27 சதவீதத்தைக் கொண்டு வந்தீர்கள்? முன்னாடி இருக்கிறவற்றிலே A,B,C ஆகிய பிரிவுகளிலே 18 சதவீதம்தான் கொண்டுவர முடிகிறது. ஆனால் இந்த 'D' பிரிவிலே மட்டும் இதைக் கொண்டு வந்திருக்கிறீர்களே, இதை எப்படிக் கொண்டுவர முடிந்தது? அவ்வளவு பேரையும் பார்த்தோம் என்று சொன்னால் டிரைவர் வேலை பார்க்கிறவர்கள், செக்யூரிட்டி வேலை பார்க்கிற ஆட்கள், கூட்டுகிற





ஆட்கள், துடைக்கிற ஆட்கள்தான். எந்த அளவிற்கு வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு வேறு உதாரணத்தைக் காண்பிக்க முடியாது. அந்த அளவிற்கு இந்தத் துறையினுடைய நடைமுறை இருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டிய அவசியம் இந்த நேரத்திலே வந்திருக்கிறது.

அதே நேரத்தில் இன்னொன்றையும் நான் குறிப்பிடுவதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். இன்றைக்கு ஆந்திராவிலேயும், கர்நாடகாவிலேயும் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். விகிதாச்சார அடிப்படையில் அந்தத் துறையிலே இருக்கக்கூடிய பொறுப்பு வாய்ந்த Secretary-யாக இருக்கக்கூடிய அதிகாரிகள், அதேபோன்று, நேர்முகத் தேர்வுகள் நடக்கிறபோது அந்த Selection committe-யிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் அந்த முறையைச் சரியாகப் பின்பற்றவில்லை என்று சொன்னால் அவர்களுடைய பதவி உயர்வுகள் இறக்கப்படும் என்கிற சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அதேபோன்ற சட்டங்களைத் தமிழகத்திலேயும் கொண்டுவருவது மிகவும் அவசியம். அப்படிக் கொண்டுவந்தால்தான் இந்த விகிதாச்சார அடிப்படையை முறையாக நீங்கள் எதிர்பார்க்கக்கூடிய அளவிற்கு நிறைவேற்ற முடியுமே தவிர, (மணியடிக்கப்பெற்றது) இல்லையென்றால், எத்தனை வெள்ளை அறிக்கைகள் வைத்தாலும் சரி, நிச்சயமாக முடியாது. அதிகாரிகளுடைய ஒத்துழைப்பு நிச்சயமாக கிடைக்காதது வேண்டுமானால் முதலமைச்சர் அவர்களுடைய நோக்கம் முழுமையாக நூற்றுக்கு நூறு நிறைவேற்றப்படும் என்கிற நல்ல நோக்கமாக இருக்கலாம். ஆனால், இதை நிறைவேற்றக்கூடிய அதிகாரிகள், இந்தச் சாதாரண மக்களை வஞ்சிக்கக்கூடிய ஒரு நிலையிலேயிருந்து மாறவேண்டுமென்று சொன்னால், இந்த முறையைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லப் போனால், நம்முடைய தமிழகத்திலே இருக்கிற பல்வேறு துறைகளில் நாங்கள் இந்தக் கமிட்டியிலே விசாரிக்கிறபோது இது நேரடி ரெக்ரூட்மெண்டிலேயிருந்து வரவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆக, அந்தத் துறையிலே பார்த்தோம் என்று சொன்னால், ஏன் பதவி உயர்வு பெறவில்லை என்று சொன்னால், ஆதிதிராவிடர்கள் பதவி உயர்வு பெறவில்லை, ஒரு பிற்படுத்தப்பட்டவர் பதவி உயர்வு பெறவில்லை, அல்லது ஒரு சீர்மரபினர் பதவி உயர்வு பெறவில்லை, என்ன காரணம் என்று கேட்டால் அவர் நேரடி ரெக்ரூட்மெண்ட் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள், இதைச் சரிவரக் கடைப்பிடிக்காத அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இந்த அறிக்கையிலேயே 10-வது பக்கத்திலே, கடைசிப் பகுதியிலே இருக்கின்ற பகுதியை மாத்திரம் படித்துக்காட்ட விரும்புகின்றேன்.

"எங்கெல்லாம் இட ஒதுக்கீட்டு முறைக்கு வகை செய்யப்பட்டிருக்கிறதோ, அங்கெல்லாம் இனச் சுழற்சி முறையைச் சரியாகக் கடைப்பிடிக்காத நியமன அதிகாரிகள்மீது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17(பி)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து கடுந்தண்டனை வழங்கலாம்." அரசாணை (நிலை) எண் 162, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 21-9-1999-லேயே இப்படி ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை திரு. பழனிசாமி அவர்களுடைய நல்லெண்ணக் கோரிக்கைக்கு விளக்கமாக அளிக்கின்றேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல நோக்கத்தோடு ஒரு ஆணையை வழங்கியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட அதிகாரிகள், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சொன்னது மாதிரி தொடர்ந்து தவறு செய்கிறார்கள் என்பதை ஒரு உதாரணத்தின் மூலமாக இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

Tamil Nadu Public Service Commission-லே Municipal Commissioner-ஆகத் தேர்வு செய்யப்படுவதற்கு (மணியடிக்கப்பெற்றது) துணைத் தலைவர் அவர்களே, ஆதாரத்தோடுதான் பேசுகிறேன்—விளம்பரம் செய்யப்படுகிறது. Vacancy position as per Notification - OC - 1, BC - 1, MBC - 1, SC - 1 இப்படி 4 போஸ்டுகளுக்கு விளம்பரம் செய்யப்படுகிறது. Selection as per the above என்று கீழே வந்து, தேர்வு செய்கின்ற நேரத்திலே ஓ.சி.2, பி.சி.1, எஸ்.சி.1, எம்.பி.சி.க்கு ஒரு இடம்கூட வழங்கப்படவில்லை. இப்படி அதிகாரிகள் தொடர்ந்து தவறு செய்கிறார்கள். இந்தக் குறைகள் நிவர்த்தி செய்யப்படுவதற்காக, கண்காணிக்கப்படுவதற்காக ஒரு குழு அமைக்க வேண்டும். அதில் சரியான முறையைப் பின்பற்றாத அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு எல்லாவகையிலும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, அமைகின்றேன்.

பிற்பகல் 5-05

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் இப்போது இந்த வெள்ளை அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. வெள்ளை அறிக்கை வைக்கப்பட்டதற்குக் காரணமே



சிகப்பு நடவடிக்கை எடுப்பதற்காகத்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்காகத்தான் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த வெள்ளை அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதைப் போல கடும் தண்டனை விதிக்கப்படும் என்பது வெறும் வார்த்தை ஜாலம் அல்ல. ஏதோ ஒப்புக்காகச் சப்பாணி என்பார்களே, அதைப்போலச் சொல்லப்பட்ட சொற்றொடர் அல்ல. உண்மையிலேயே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். இன்னொன்று திரு. ஞானசேகரன் அவர்களும் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்களும் குறிப்பிட்டார்கள், நம்முடைய பழனிசாமி அவர்களும் கோடிட்டுக் காட்டினார்கள், இதை எல்லாம் கண்காணிப்பதற்கு ஒரு குழு அமைக்க வேண்டும் என்று. நிச்சயமாக ஒரு குழு அமைக்கப்படும். அவ்வப்போது அதைக் கண்காணிப்பதற்கு அந்தக் குழு பாடுபடும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் காலத்தைக் கருதி முடிக்கின்றேன். அதேபோல இந்த வெள்ளை அறிக்கையிலே, இப்போது ஒரு Sub-committee மாதிரி இன்னும் ஒரு குழு இதில் அமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் மூலம் ஒரு கமிட்டி (குறுக்கீடு) இப்போது வந்தது இது. அது ஏற்கெனவே வந்தது. ரிப்போர்ட் அளித்தாகிவிட்டது. ஏற்கெனவே இந்த ஆய்வு செய்யப்பட்டிருக்கின்ற அறிக்கையைத் திரும்பவும் ஒரு ஆய்வு செய்து, அதில் துறைவாரியான அந்த விகிதாச்சார அடிப்படையில் பூர்த்தி செய்ய முடியாத துறையை முழுமையாக விவரமாக இந்த அறிக்கையிலே மீண்டும் அளிக்க வேண்டும் என்று நான் கேட்டு, அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலக வரலாற்றில் இங்கிலாந்து என்றால் தொழில் புரட்சிக்கும், பிரெஞ்ச் என்று சொன்னால் எழுத்து, பேச்சுச் சுதந்திரத்திற்கும், ஜெர்மனி என்று சொன்னால் தத்துவப் புரட்சிக்கும், ரஷ்யா என்று சொன்னால் மார்க்சிய புரட்சிக்கும், அதாவது பொதுவுடைமைத் தத்துவத்திற்கும் பெயர் பெற்றது என்பதை நாம் எல்லாம் அறிவோம். அதேபோல, இந்திய மண்ணில் ஏறக்குறைய 2000 ஆண்டுகாலத்திற்கு மேலாக இந்த மண்ணிலே வேரோடிப் போயிருந்த, புரையோடிப் போயிருந்த சனாதன ஆதிக்கத்திற்கு

எதிராக முதன் முறையாகக் குரல் கொடுத்த மண் தமிழ் மண். அதனுடைய தொடக்க கர்த்தாக்களாக விளங்கியது திராவிட இயக்கம் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) முதலில் தந்தை பெரியார் அவர்களாலும் அதற்குப் பின் பேரறிஞர் அண்ணா அவர்களாலும், இன்று கலைஞர் அவர்களாலும் காக்கப்பட்டு வரும் அந்த இயக்கம் துவண்டுபோய்விடாமல் இருக்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். அந்த இயக்கம் ஒரு ஏணிப்படியிலே ஒருசில படிகளை ஏறினால் மட்டும் போதாது, இமயமலையினுடைய சிகரத்தை எட்டிப் பிடித்ததாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இன்றைக்கு இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கக்கூடிய வெள்ளை அறிக்கையின்மீது புதிய தமிழகம் கட்சியினுடைய சார்பாக என்னுடைய கருத்துகளை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். கடந்த 4 ஆண்டுகாலமாக இந்த வெள்ளை அறிக்கை இந்த அவையிலே வைக்கப்பட வேண்டும் என்பதற்கு அவையிலே யார் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்தார்கள் என்பதை நாடறியும். இங்கே அவையிலே மட்டுமல்ல, வெளியிலேயும் மக்களை எல்லாம் திரட்டி நான் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கின்றேன். அதனுடைய அடிப்படையிலே இன்று, சொல்லப்போனால் தமிழகத்தினுடைய இடஒதுக்கீடு வரலாற்றிலே ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தக்கூடியவகையிலே வெள்ளை அறிக்கையை வைத்திருக்கிறீர்கள். அதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களை புதிய தமிழகத்தினுடைய சார்பாக மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இந்த வெள்ளை அறிக்கையை நாம் பாராட்டவும் செய்யலாம், விமர்சிக்கவும் செய்யலாம். பாராட்டுகின்றபொழுதும், விமர்சிக்கின்றபொழுதும் நோக்கம் ஒன்றாகத்தான் இருக்கமுடியும். எப்படி ஒரு தாய்ப் பசுவிடத்திலே கன்றுக்குட்டி பால் அதிகமாக இருக்கின்றபொழுது மெல்லக் குடிக்குமோ, பால் குறைகின்றபோது முட்டி முட்டிக் குடிக்க ஆரம்பிக்குமோ அதைப்போல நான் உங்களோடு முட்டுகிறேன் என்றாலும், முட்டியிருக்கின்றேன் என்றாலும் அதிகமாகப் பாலைக் கறப்பதற்காக என்ற நோக்கமே தவிர, முட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் அல்ல என்பதை இந்த நேரத்திலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 5-10

அந்த அடிப்படையிலே இன்று 2 கோடிக்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுடைய, 2 கோடிக்கும் மேற்பட்ட மிக மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கையிலே ஒளியேற்றக்கூடிய வகையிலே, ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தக்கூடிய வகையிலே, ஒரு சுயவிமர்சனத்தை



ஏற்படுத்தக்கூடிய வகையிலே இந்த வெள்ளை அறிக்கையை நான் கண்கொண்டு பார்க்கிறேன். இந்த வெள்ளை அறிக்கையைத் தயாரிப்பதற்காக ஏற்கெனவே 11 பேர் கொண்ட உறுப்பினர்கள் குழு—நாங்கள் எல்லாம் அதிலே உறுப்பினர்களாக இருந்து—சகோதரர் பழனிசாமி அவர்களும், ஏறக்குறைய 9 சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் அடங்கிய அந்தக் குழு—ஏறக்குறைய ஒரு வருட காலத்திற்கு மேலாக நாங்கள் எல்லாம் ஆய்வு செய்தோம். இந்த அறிக்கையைக் முழுமையான வடிவத்திலே வைத்திருந்தால் சந்தோஷமாக இருந்திருக்கும். ஏனென்றால், நான் அந்த அறிக்கையைக் கேட்டதனுடைய நோக்கம், ஏதோ வேலைவாய்ப்பு உருவாக்கித் தரப்படுவதற்காக அல்ல. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டு காலத்திற்கு மேலாக இந்த நாட்டிலே பிறப்பினுடைய அடிப்படையிலே உள்ள உயர்வு, தாழ்வை அகற்றிவிட்டு, பிறப்பினுடைய அடிப்படையிலே கல்விவாய்ப்பு, வேலைவாய்ப்பு மற்றும் சமூகத்திலே முன்னேறுவதற்கு முட்டுக்கட்டைகள் உருவாக்கப்பட்ட நிலைமையை மாற்றுவதற்கான அடிப்படையிலேதான் இந்த நாட்டிலே நாம் சமூக நீதியைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். எனவே, அப்படிப்பட்ட இந்த மண்ணில்—வேலைவாய்ப்புகள் என்பதற்காக அல்ல—சமூக நீதியை அடிப்படையாக வைத்து ஆட்சி செய்யக்கூடிய இந்த நாட்டில், அதுவும் தமிழ் மண்ணில் 50 ஆண்டுகாலமாக, குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு முறையாக அமல்படுத்தப்படாததன் காரணம் என்ன என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதற்காகவும், அந்தக் காரணத்தை நிரந்தரமாகக் களைந்து, இன்றும் இருக்கக்கூடிய வேறுபாடுகளைக் களைவதற்காகவும்தான் நான் இந்த அறிக்கை வெளியிடப்பட வேண்டும் என்று வலியுறுத்தினேன்.

இந்த அறிக்கையில் முழுமையாக, எந்தெந்தத் துறைகளிலே, எந்தெந்தப் பதவிகளிலே எத்தனை இடங்கள் தாழ்த்தப்பட்டோருக்குக் கொடுக்கப்படவில்லை, எத்தனை இடங்கள் மிக மிகப் பிற்படுத்தப்பட்டோருக்குக் கொடுக்கப்படவில்லை, அந்த இடங்களை யார் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மைகளைச் சொல்லியிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும். ஏனென்றால் இந்த நாட்டிலே இன்னும் புரியாத ஒரு காழ்ப்புணர்வு, அதாவது Anti-dalit psyche அதாவது, தாழ்த்தப்பட்டவர்கள் மீது ஒரு இனம்புரியாத வெறுப்பு இழையோடிப் போயிருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள்தான் இடஒதுக்கீட்டினுடைய பெரும் பங்கை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற எண்ணம் ஒட்டுமொத்தமாக முற்படுத்தப்பட்டவர்களுக்கு, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, மிக மிகப்

பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இப்படி எல்லோர் மத்தியிலுமே இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அது உண்மை அல்ல என்பது நாட்டுக்கு எடுத்துக்காட்டப்பட வேண்டும். அப்போதுதான் உண்மை இந்த நாட்டுக்கு, மக்களுக்குத் தெரியும் என்ற அடிப்படையிலேதான் நான் வலியுறுத்தினேன். எனவே, இன்று இல்லாவிட்டாலும்கூட, எதிர்காலத்திலாவது ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 110-க்கும் மேற்பட்ட துறைகளிலே, இனவாரியாக A,B,C,D. என்று அழைக்கப்படக்கூடிய பிரிவுகளில் அனைத்துத் துறைகளிலேயும்-ஒவ்வொரு துறையிலேயும்-தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர், மிக மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள் எத்தனை பேர், அதேபோல், பிற்படுத்தப்பட்ட மக்கள் எத்தனை பேர், முற்படுத்தப்பட்டவர்கள் எத்தனை பேர் என்பதைப்பற்றி ஒரு மிகப் பெரிய அறிக்கையாக வைக்க வேண்டும். ஒரு அறிக்கையாக வைக்க வேண்டுமென்பது மற்றவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல, தாழ்த்தப்பட்டவர்கள் மத்தியிலேகூட, மிக மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள் மத்தியிலேகூட அதனால் ஒரு தெளிவு பிறக்கும். இந்தந்த இடங்கள் காலியாக இருக்கின்றன; இந்தந்த இடங்களுக்கு இன்னின்ன தகுதிகள் தேவைப்படுகின்றன. இந்தத் தகுதிகளைப் பெறுவதற்கு நாம் முயற்சி செய்யலாம் என்ற எண்ணம்கூட அவர்களுக்குத் தோன்றும். ஆனால், இப்போது ஒரே இருளாக இருக்கிறது. எந்தெந்த இடங்கள் காலியாக இருக்கின்றன, அதற்கு என்ன தகுதி தேவைப்படுகிறது என்றுகூட அவர்களுக்குத் தற்போது விளக்கம் இல்லாமல் இருக்கிறது.

கடந்த 50 ஆண்டுகாலமாக சில பதவிகளுக்கு இன்னும் ஆள் இல்லையென்று சொன்னால், அதை நாம் குறையாக எடுத்துக்கொள்ள முடியுமா? அப்போது எங்கேயோ தெளிவு இல்லாமல் இருந்திருக்கிறது என்பதுதான் பொருள். எனவே, இந்த அறிக்கையை, சொல்லப்போனால் இப்போது வைக்கப்பட்டுள்ள உயர்நிலைக் குழு கொடுத்துள்ள அந்த அறிக்கையையும் முழுமையாக்கி, இன்னும்கூட, துறைகளிலே கொடுக்கப்படாத, அவற்றையும் சேர்த்து முழுமைப்படுத்தி, மீண்டும் இந்த அறிக்கையை வைக்க வேண்டும் என்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பல உறுப்பினர்கள் பல விஷயங்களை எல்லாம் பேசியிருக்கிறார்கள். இதிலே 10 இலட்சம் உறுப்பினர்களுடைய கணக்கு மட்டும்தான், அதாவது இதுவரையிலும் இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டதில் 10 இலட்சத்து 70 ஆயிரத்து 314 அரசு ஊழியர்கள் கணக்கை வைத்துக்கொண்டு, ஏறக்குறைய 6,001 பேர் தாழ்த்தப்பட்டவர்கள் பணியிடம் நிரப்பப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், நான் கேள்விப்பட்டவரையிலும், நான்



அறிந்தவரையிலும் ஒட்டுமொத்தமாகத் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அரசு ஊழியர்களுடைய எண்ணிக்கை 15 இலட்சத்திற்கும் குறையாமல் இருக்கும் என்று கருதுகிறேன். எனவே, பல துறைகள் இன்னும் முறையாகக் கணக்கிடப்படவில்லை என்று தெளிவாகத் தெரியவருகிறது. எனவே, அனைத்துத் துறைகளிலேயும் இன்னும் முறையாக ஆய்வு செய்யப்பட வேண்டும். இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளிவிவரங்களைக்கூட எல்லா அதிகாரிகளும் முறையாகக் கொடுத்திருப்பார்கள் என்று சொல்ல முடியாது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கிற கணக்கு எனக்குத் தெரியும். அதனாலே, 16 இலட்சம் பேர் அல்ல; 11 இலட்சத்திற்கு உட்பட்டு - 10 இலட்சம் பேர்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். இப்படிச் சொல்லி 16 இலட்சம் பேர் என்னிடத்திலே பணம் கேட்டு வந்துவிட்டால் நான் திவால் ஆக வேண்டியதுதான். *(சிரிப்பு)*

பிற்பகல் 5-15

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தலைவரவர்களே, இந்தக் கூற்றை ஏற்றுக்கொள்கிறேன். எனவே, இந்தக் கணக்கு சரியாக இருந்தாலும்கூட இப்பொழுது 1989 ஆம் ஆண்டிலேயிருந்து Cut-off செய்திருக்கிறீர்கள். ஆனால் நான் ஒன்றைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 1929-க்கு முன்பாகவே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அப்படி ஏறக்குறைய 50, 60 ஆண்டுக் காலத்திற்கு முன்பாகவே இடஒதுக்கீடு கொடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 1989-ஐ மட்டுமே Cut-off ஆண்டாக எடுத்துக்கொள்வது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. ஒருவேளை 1947-லேயிருந்து 1967 வரையிலும் 16 சதவீத இடஒதுக்கீடாக இருந்தால், அந்த 16 சதவீதத்திற்குக் கணக்கிட்டு அதுவும் கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். இருந்தாலும்கூட இந்த நேரத்திலே நான் வலியுறுத்துவது, ஒட்டுமொத்தமாக எல்லாவற்றையும் போராடிப் பெற முடியாது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களுடைய உரிமையைக் கேட்பதிலே யாருக்கும் ஆட்சேபணை இல்லை. ஆனால், நாம் ஒரு உத்தரவு பிறப்பிக்க வேண்டும். அது எப்பொழுது பிறப்பிக்கப்பட்டது என்றால், 1989-இல்தான்.

Ban on de-reservation என்ற அந்த உத்தரவு பிறப்பித்ததே நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களால்தான். 1989 ஆம் ஆண்டு பிறப்பித்தார்கள். அப்பொழுதிலிருந்துதான் ஒரு பிரிவினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களை மற்ற பிரிவினரைக் கொண்டு நிரப்பக்கூடாது என்று நாம் அந்த ஆணையைப் பிறப்பித்திருக்கின்றோம். எனவே, அந்த நாளிலேயிருந்துதான் நாம் கணக்கிட முடியுமேதவிர, நாம் சுதந்திரம் பெறுவதற்கு முன்னாலே, வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்தெல்லாம் இப்பொழுது கணக்கெடுப்பதற்கு முயற்சி செய்தால் மற்றவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்வார்கள். பிறகு எல்லாமே கெட்டுப்போய்விடும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** என்னுடைய கோரிக்கை அது. அரசு முடிந்த அளவுக்கு முயற்சி செய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இடஒதுக்கீட்டைக் கண்காணிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பக்கம் 5-ல் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகளைப் பட்டியலிட்டுள்ளனர். இதிலே கண்காணிப்பதற்கான பணிகள் இல்லை என்று நான் கருதுகிறேன். கண்காணிப்புக்குப் பதிலாக அரசு அதிகாரிகள் எந்தவிதமான முறையான நடவடிக்கையும் எடுக்காமல், அவர்கள் தட்டிக் கழித்துக்கொண்டிருந்தார்கள் என்பதுதான் யதார்த்தமானது. இப்பொழுது நம்முடைய கண் முன்னாலே இருக்கக்கூடிய பிரச்சினை என்னவென்றால், நாம் வெறும் தத்துவம் மட்டும் பேசிக்கொண்டிருப்பதாலே பயன் கிடையாது. இப்பொழுது 6000 இடங்களை நீங்கள் சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். இந்த 6000 இடங்களையாவது ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் பூர்த்தியாக்க வேண்டும். நாமெல்லாம் தந்தை பெரியாருடைய தத்துவத்தைப் பேசுகிறோம். சமூக நீதி தத்துவத்தைப் பேசுகிறோம். ஆனால் எந்தத் தத்துவமுமே இல்லாமல், சமீபத்திலே டெல்லியிலே, பாராளுமன்றத்திலே ஒரு சட்டம் நிறைவேறியிருக்கிறது. வாஜ்பாய் அவர்கள் இந்து வர்ணாஸ்ரம தத்துவத்தைக்கொண்டவர். அவர்கள் ஆட்சிக்கு வந்தால் இடஒதுக்கீட்டுக்குக் குந்தகம் வரும் என்று நாம் எல்லாம் நினைத்தோம். நான்கூட அப்படித்தான் கருதிக்கொண்டுதான் இருந்தேன், ஆதங்கப்பட்டுக் கொண்டுதான் இருந்தேன். ஆனால் அவர் ஒரு டீ சாப்பிடுவதைப்போல, காப்பி சாப்பிடுவதைப்போல, இப்பொழுது இடஒதுக்கீடு Backlog Vacancy இடங்களை 50 சதவீத இடஒதுக்கீட்டுக்கு அப்பாற்பட்டு, அந்த இடத்தை நிரப்புவதற்குக்கூட பாராளுமன்றத்திலே ஒரு சட்டத்தை நிறைவேற்றி, அதையும் கொண்டுவந்திருக்கிறார்கள் என்றால் நிச்சயமாக அதைப்





பாராட்டத்தான் வேண்டும். அதே அடிப்படையிலேதான் தமிழ்நாடு முதலமைச்சரவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுதுகூட நீங்கள் 1989-லேயிருந்து கணக்கிட்டு இந்த 6000 இடங்களையும் 5 ஆண்டுகளில் நிரப்புவதாகச் சொல்லுகிறீர்கள். அதிலேதான் சிக்கல் இருக்கிறது. ஏனென்றால் ஐந்தாண்டுகள் என்பது, அது 50 ஆண்டுகள் ஆகிவிடலாம், 100 ஆண்டுகள் ஆகிவிடலாம். ஏற்கனவே 1997 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31-க்குள் நிரப்பப்படும் என்று அறிவித்தீர்கள். நான் வேண்டிக்கொள்வது, இப்பொழுது 1997-ஐ விட்டுவிடுவோம், குறைந்தபட்சம் 2000 ஜூலை 31-க்குள்ளாகவாவது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மிக, மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு பாதி இடங்களையாவது நிரப்புவதற்கு இப்பொழுது உத்தரவு போடுங்கள். 2000 செப்டம்பர் அல்லது 2001-ல் மீதி இடங்களையாவது நிரப்புவதற்கு உத்தரவு போடலாம். அப்படிப் போடுவதை விட்டுவிட்டு, 5 ஆண்டுகள் என்று சொல்வது, நாம் எந்த நோக்கத்தோடு வெள்ளை அறிக்கையைத் தயாரித்தோமோ, எந்த நோக்கத்தோடு இந்த மாமன்றத்திலே நாம் எல்லாம் விவாதிக்கிறோமோ, அந்த நோக்கம் நிறைவேறாமல் போய்விடும் என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே, இதில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதில் குறிப்பாகக் கவனிக்கப்படவேண்டிய விஷயம், அரசு என்ன நினைத்தாலும் இதையெல்லாம் இறுதியாக அமலாக்கக்கூடியவர்கள் அதிகாரிகள்தான். அந்த அதிகாரிகள் எப்படி நடந்துகொள்கிறார்கள்? அந்த அதிகாரிகள் அரசினுடைய எந்தவிதமான உத்தரவையும் சில நேரங்களில் மதிப்பது கிடையாது. ஏனென்றால், இதற்கு முன்பு எத்தனையோ உத்தரவுகள் போடப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் நான் பட்டியலிட்டுக்காட்ட விரும்புகின்றேன். அரசு ஆணைகள் அநாதைப் பெண் குழந்தைகளைப்போல ஆகியிருக்கின்றன.

பிற்பகல் 5-20

G.O. (Ms.) No. 578, Social Welfare Department, 5-8-1981. இதன்படி மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் அரசு அலுவலகங்களின் இனவாரி சுழற்சிப் பதிவேட்டை ஆய்வு செய்வார். ஆதிதிராவிட நல இயக்குநர், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் பணிகளைக் கண்காணிப்பார். அத்தோடு ஆட்சியர் அலுவலகங்களிலும், பிற துறைகளிலும் உயர்மட்டக் குழுவின் செயலாளர் என்னும் நிலையில், பட்டியல் சாதிகள்/பழங்குடிகள் பிரதிநிதித்துவம் தொடர்பாக ஆய்வு செய்வார். ஆனால் 1981-லே ஆணை

பிறப்பிக்கப்பட்டும், ஏறத்தாழ 19 ஆண்டுகள் ஆகியும் இன்னும் ஆய்வு செய்யப்படவே இல்லை.

அதேபோல அரசு ஆணை எண் 1565, சமூக நலத் துறை, நாள் 30-7-1985. இதன்படி பட்டியல் சாதிகள் (18 சதவீதம்), பிற்படுத்தப்பட்டோர் (50 சதவீதம்) ஆகியோரின் கல்விக்கான ஒதுக்கீட்டுக்கு வகை செய்யப்பட்டுள்ளது. கல்வி நிறுவனங்கள் நிதி உதவி பெற முன்கட்டாயம் ஆக்கியுள்ளது. தொழில் கல்விகளில் நிறைவாக அரசு செயல்படுத்த முடிந்தது. அரசு நிதி உதவி பெறும் தனியார் தொழில் கல்வி மற்றும் கலைக் கல்வி நிறுவனங்கள், பட்டியல் சாதி மக்களைத் திட்டமிட்டு ஏமாற்றி வருகிறார்கள். எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. *(மணியடிக்கப்பெற்றது)*

மூன்றாவதாக, அரசாணை எண் 1352, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 27-7-1989. இதன்படி ஒதுக்கீட்டை நீக்கி, பிற பிரிவினருக்குக் கொண்டுசெல்வது தடை செய்யப்படுகிறது. (Ban on de-reservation) இந்த அரசாணையின் உயிர்த் துடிப்பான பகுதி—

``Special recruitment shall be made for all categories in the next three months upto 15th October 1989 to fill up the vacancies earmarked for Scheduled Castes, Scheduled Tribes to bring it to the 18% Quota....."

இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது 1989-ல். ஆனால் இதற்குப் பிறகு எத்தனையோ மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. இன்னும் நிரப்பவில்லை. அதைப்போல, அரசாணை எண் 1090, நாள் 22-6-1990-ன்படி அரசு நிதி பெறும் அரசுக் கல்லூரிகள், தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களிலும், பட்டியல் சாதிகளுக்கு 18 சதவீதமும், பழங்குடிகளுக்கு ஒரு சதவீதமும் இடஒதுக்கீடு செய்ய வகை செய்கிறது. தனியார் கல்வி நிறுவனங்களில் தொடர்ந்து ஏமாற்று வேலை நடைபெறுகிறது. காலையில்கூட தனியார் கல்லூரிகளில் எப்படி இடஒதுக்கீடு செய்ய மறுக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. தொடர்ந்து ஆள் இல்லை, ஆள் இல்லையென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்களே தவிர, தமிழ்நாடு முழுவதும் தேடுவதற்குண்டான எந்த நடவடிக்கையையும் அவர்கள் எடுக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இன்னொரு கடிதம். Letter from Thiru V. Sankarasubbaiyan, Secretary to Government, Education Department (Letter No. 68027/III/91-15, dated 14-12-1992). இக்கடிதம், பல்கலைக்கழக



துணைவேந்தர்களுக்கு எழுதி, ஆசிரியர் அல்லாத பணிகளுக்கும் இனவாரி சுழற்சி முறையைப் பின்பற்ற வேண்டினார் அரசுச் செயலாளர். இனவாரி சுழற்சி முறை இல்லை. ஆனால் பிற்படுத்தப்பட்டவர்கள், முற்பட்டவர்கள் வாய்ப்புகள் குறையவில்லை. குறிப்பாகத் தாழ்த்தப்பட்டவர்களும் மிகப் பிற்படுத்தப்பட்டவர்களும் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். பல்கலைக்கழக துணைவேந்தர்கள் கடவுள்களைப்போலச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கேட்க ஆள் இல்லை.

அரசு ஆணை 167, நாள் 20-7-1993-ன்படி, பட்டியல் சாதிகள்/பழங்குடியினர் ஆகியோருக்குப் பின்னடைவுப் பணியிடங்களை நிரப்ப 'சிறப்பு முயற்சி மேற்கொள்ள ஆணை பிறப்பிக்கப்படுகிறது. 'சிறப்பு ஆள் சேர்ப்பு' எனக் குறிப்பிட வேண்டும் எனவும் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. அதேபோல, 20-5-1998-ல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, அரசு ஆணை எண் 44-ன்படி, நேரடி நியமனங்கள் மூலம் தாழ்த்தப்பட்டவர்கள் இடஒதுக்கீட்டை நிரப்புவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. இன்று வரையிலும் பலன் இல்லை. குறிப்பாக, Personnel and Administrative Reforms Department-லே அது கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டால்மட்டும் போதாது, அந்த ஆணைகள் அமல்படுத்தப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு பல்வேறு ஆதாரங்களைக் கொண்டுவந்திருக்கிறார். இந்த ஆதாரங்கள் எல்லாம் தெரிந்த காரணத்தால்தான், வெள்ளை அறிக்கையே வைக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில்தான் வெள்ளை அறிக்கையே இங்கே விவாதத்திற்கு வந்துள்ளது. அதாவது, இப்படி ஏற்பட்டுப்போன பல்வேறுவிதமான குறைபாடுகளை நிவர்த்தி செய்ய, அதனால் பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு, தனிச் சிறப்பு உரிமை வழங்கி, இடம் ஒதுக்குவதற்கு என்ன செய்யலாம் என்ற அந்த அடிப்படையிலேதான், இந்த வெள்ளை அறிக்கை வந்திருக்கிறது. இனி என்ன செய்ய வேண்டுமென்பதை, அவருக்கு மேலும் அளிக்கப்பட்டிருக்கிற இந்த 2 நிமிடங்களில் பேசவேண்டும் இல்லையென்றால் நேரம் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-25

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மிக முக்கியமான ஒன்று; இதிலே மொத்தமாக இடஒதுக்கீடு அமலாக்காததற்கு மூன்று காரணங்கள்;

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2000 மே 16

ஒன்று, இனவாரி சுழற்சி முறை பின்பற்றப்படாமை. அடுத்தது, முறையற்ற ஆள் சேர்ப்பு. அதாவது ஆள் சேர்க்கின்றபோது பகுதி நேரம் என்றும் தற்காலிகம் என்றும் எடுத்துக்கொண்டு பின் நிரந்தரப்படுத்துவது. அடுத்தது, பின்னடைவுப் பணியிடங்களை நிரப்பாமை. இவைதான் மிக முக்கியமான காரணங்கள். எதிர்காலத்திலே இந்தப் பிரச்சினை ஏற்படாவண்ணமும், இன்று கொடுத்திருக்கக்கூடிய இந்த வெள்ளை அறிக்கை வெற்றிகரமாக நடைபெறவும் சில ஆலோசனைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன்.

ஒன்று, இடஒதுக்கீடு அளவை 1-4-1989 முதல், வெள்ளை அறிக்கையில் சொன்னதுபோல, முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும்கூட, இப்போது அமலாக்க வேண்டும், நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையிலே இதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இரண்டு, இடஒதுக்கீடு தொடர்பான அரசு ஆணைகள் செயல்படுத்தப்பட வேண்டும், இதற்கு அனைத்துக் கட்சி உறுப்பினர்கள்கொண்ட கண்காணிப்புக் குழு போடலாம். மூன்று, சமுதாய நீதி செயல்பாட்டைக் கண்காணிக்க 5 உறுப்பினர்கள் கொண்ட அரசியல் மற்றும் அரசு சாராத அறிவாளர்கள் குழுவை அமைக்கலாம். நான்கு, வெள்ளை அறிக்கையில் 3.6 பத்தியின்கீழ் சொல்லப்பட்ட 4 முடிவுகளை ஏற்க இயலும். ஆனால் படிப்படியாக ஐந்தாண்டு கால அளவு என்பது விரும்பத்தக்கதல்ல. ஓராண்டில் முடிப்போம் என்று சொல்லி, ஏறக்குறைய நான்கு ஆண்டு காலத்தில் முடியவில்லை. படிப்படியாக ஐந்தாண்டு என்பதை ஏற்றுக்கொண்டால் இட ஒதுக்கீடு நிறைவுபெற பல ஆண்டுகாலம் ஆகிவிடலாம். எனவே, 6 மாத காலத்திலே 50%, மீண்டும் ஒரு வருடத்திற்குள் 50% என்று இருக்க வேண்டும்.

பின்னடைவுப் பணியிடங்களை 1997 ஜூலை 31-க்குள் நிரப்ப ஆணையிடப்பட்டது. 2000 ஜூலை 31-க்கு முன்னர் பட்டியல் சாதிகள்/பழங்குடிகள் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மொத்த பின்னடைவுப் பணியிடங்களில் 50% அளவு நிரப்ப வேண்டும்; எஞ்சிய 50% பணியிடங்களை 2000 செப்டம்பர் 30-க்குள் இரு பிரிவினரைக் கொண்டும் நிரப்ப வேண்டும்.

அடுத்தது, பட்டியல் சாதிகள்/பழங்குடிகள் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் பின்னடைவுப் பணியிடங்கள் முழு நிறைவுபெறும்வரை பொதுப் போட்டிகள் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கான நியமனத் தேர்வுகள் தற்காலிகமாயினும், நிரந்தரமாயினும் நிறுத்தி வைக்கப்பட வேண்டும்.



2000 மே 16] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

அடுத்தது, தற்காலிகப் பணியாளர்களையும், ஒப்பந்தத் தொழிலாளர்களையும் பணி நிரந்தரம் செய்யும்போது இனவாரி சுழற்சி முறை பின்பற்றப்பட வேண்டும், மற்ற பிரிவுகளின் பங்கு உறுதி செய்யப்பட வேண்டும். இனவாரி சுழற்சி முறையைச் சரியாகக் கடைப்பிடிக்காத நியமன அதிகாரிகள் என்பதோடு பல்கலைக்கழக துணைவேந்தர்கள் என்பதையும் தெளிவாகச் சேர்க்க வேண்டும். 'கடுந்தண்டனை வழங்கலாம்' என்பதற்குப் பதிலாக 'கடும் தண்டனை வழங்க வேண்டும்' என்றும் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும், துறையிலும் பின்னடைவுப் பணியிடங்களை நிரப்ப போதிய நிதி வசதியை அரசு உடனே வழங்க வேண்டும், தேவைப்பட்டால் உலக வங்கியில் கடன் பெறலாம். (மணியடிக்கப்பெற்றது) கடைசியாக ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

சமுதாய நீதி, அதன் வரலாறு தொடர்பாக பல்கலைக்கழகங்களிலும், தொலைக்காட்சிகளிலும் கருத்தரங்குகளை அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் இந்திய விடுதலை நாள், குடியரசு நாள் செய்திகளில் இடஒதுக்கீட்டை முறியடிக்க முயலும் எதிர்ப் புரட்சியாளர்கள் அதாவது சமுதாய நீதியால் பயன்பெற்றவர்களே சமுதாய நீதியை எளிய மக்களுக்குக் கிடைக்காமல் செய்வதாகக் குறிப்பிட்டார். இவர்களையும் நாம் எதிர்கொள்ள வேண்டும். சமுதாய நீதி எல்லா பிரிவினருக்கும் சமமான நீதியாக அமைய வேண்டும்.

கடைசியாக ஒன்று, நாம் தத்துவங்களை மட்டும் பேசிக் கொண்டிருக்காமல், உதாரணத்திற்கு, இந்தத் தத்துவம் நல்லதா அந்தத் தத்துவம் நல்லதா என்று நாம் பார்க்க வேண்டிய அவசியமில்லை. என்னைப் பொறுத்தமட்டில் ஓர் உதாரணத்தைச் சொல்லிமுடிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது சாம்பல் நிறப் பூனை அல்லது வெள்ளை நிறப் பூனை அல்லது கருப்பு நிறப் பூனை எலியைப் பிடிக்க வேண்டும் என்பதல்ல. எந்தப் பூனை எலியைப் பிடித்தாலும் அதைப் பாராட்ட வேண்டும். அந்த அடிப்படையிலே இப்போது நமக்கு தேவைப்படுவது எதுவென்றால், இடஒதுக்கீட்டை அமலாக்கக்கூடியவர்களை நாங்கள் பாராட்டத் தயாராக இருக்கிறோம்; நிச்சயமாகப் பாராட்டுவோம். நான் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கிற இரண்டு கோடி தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும், ஏழையெளிய மக்களும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். எனவே, இடஒதுக்கீட்டை முழுமையாக அமலாக்குங்கள், அதற்கு உத்தரவாதம் கொடுங்கள் என்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி.டி. தண்டபாணி.

***திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மிகவும் உணர்வு பூர்வமான இந்தப் பிரச்சினையில் இங்கே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உரிமைகள் வழங்க வேண்டும் என்று கேட்டு, அதற்குப் பின்னாலே வழங்க வேண்டும் என்கிற முதலமைச்சர் இப்போது இல்லை. கேட்காமலேயே அனைவருக்கும் உரிமைகளையும், சலுகைகளையும் வழங்கக்கூடிய முதலமைச்சரைத்தான் நாம் இப்பொழுது பெற்று இருக்கிறோம். திராவிட இயக்கங்கள் 1921-லேயிருந்து இன்று வரை தாழ்த்தப்பட்டோருக்கும், பிற்படுத்தப்பட்டோருக்கும் உழைக்கின்ற ஓர் இயக்கமாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டது மட்டுமல்லாமல், தன்னுடைய வாழ்க்கையே அதுதான் என்று இன்றைக்கும் அதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிற இயக்கம்தான் திராவிட இயக்கம். அதிலும் குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகம் அந்த வகையிலேதான் இப்படிப்பட்ட பிரச்சினைகளில் தம்முடைய கருத்துகள் என்னவென்று பல சந்தர்ப்பங்களில் இங்கே எடுத்துச் சொல்லி அந்தச் சமுதாயத்திற்கு உதவி செய்திருக்கிறது.

பிற்பகல் 5-30

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், இங்கே நண்பர்களெல்லாம் குறிப்பிட்டதைப்போல நம்முடைய கிருஷ்ணசாமி போன்றவர்களெல்லாம் வெள்ளை அறிக்கை கேட்டு, அது வந்ததற்குப் பின்னாலேதான், தாழ்த்தப்பட்டவர்களுக்கோ, பிற்படுத்தப் பட்டவர்களுக்கோ உதவி செய்ய வேண்டுமென்கிற அளவில் நிச்சயமாக நம்முடைய தலைவர் முதலமைச்சர் அவர்கள் இல்லை, எந்தச் சந்தர்ப்பத்திலும் தாழ்த்தப்பட்டவர்களோ, பிற்படுத்தப்பட்டவர்களோ, வேலைவாய்ப்புகளில் அல்லது உத்தியோக உயர்வில் பாதிக்கப்படுகின்ற நேரத்தில் முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறபோது, உடனடியாக அவர்களுக்கு நியாயம் வழங்கப்படுகிறது. நியாயம் வழங்கியிருக்கிறோம். உதாரணத்திற்குக்கூட நான் சொல்ல வேண்டுமென்றால், 1989-ல் விற்பனை வரித் துறையில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த சில அதிகாரிகளுக்கு உத்தியோக உயர்வு இல்லை என்று சொன்னவுடனேயே, நம்முடைய முதலமைச்சரிடத்திலே அதை எடுத்துச் சொன்னபோது, உடனடியாக 19 பேருக்கு உத்தியோக உயர்வை அவர்கள் வழங்கினார்கள். இப்படிப் பல்வேறு துறைகளில் அவர்களுடைய





கவனத்திற்கு வருகிறபோது, அவர்களுக்கு நியாயம் வழங்கியிருக்கிறார்கள் என்பதை நாம் இன்றைக்கும் காண முடிகிறது.

இந்த வெள்ளை அறிக்கையைப்பொறுத்தவரையில், மிகவும் முக்கியமாகத் தரப்படுகின்ற விவரங்கள் Ban on De-reservation. ஏற்கெனவே இடஒதுக்கீடு இருந்து ஆட்கள் கிடைக்காமல், இரத்து செய்யப்படுவது தடை செய்யப்பட்டிருக்கிறது. அது முக்கியமானது. இரண்டாவது, பின்னடைவு இருப்பதை உடனடியாகப் பூர்த்தி செய்ய வேண்டுமென்பது. மூன்றாவது, இப்படிப்பட்ட காரியங்களில் அதிகாரிகள் முறையாக நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், அப்படி நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அளவுக்கு ஒரு பரிந்துரையை உத்தரவை இங்கே வழங்கியிருப்பது. இவை உள்ளபடியே இந்த வெள்ளை அறிக்கையின் முக்கியமான அம்சங்கள் என்று என்னாலே சொல்ல முடியும். ஆக, அப்படி எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பின்னடைவை நிச்சயமாக நிரப்ப முடியும் என்கிற எண்ணத்திலேதான் ஐந்தாண்டுகளில் நிரப்புவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கே எடுத்துச்சொல்லியிருக்கின்றார்கள். இங்கே நம்முடைய நண்பர்களெல்லாம் குறிப்பிட்டார்கள். நம்முடைய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த மரியாதைக்குரிய பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். தனியார் துறையில் இன்றைக்கு வரக்கூடிய புதிய பொருளாதாரம், அதிலே வரக்கூடிய தொழிற்சாலைகள், தனியார் துறையில் இனிமேல் இடஒதுக்கீடே இருக்காதா என்றெல்லாம் கேட்டார்கள். ஒரு விவரத்திற்காக, தகவலுக்காக நான் சொல்ல விரும்புகிறேன். 1972 ஆம் ஆண்டு தனியார் துறையிலேயும் தாழ்த்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு வேண்டுமென்று நாடாளுமன்றத்திலே மசோதா கொண்டுவந்து ஏழு மாதங்கள் அந்த விவாதம் நடந்தது. திராவிட முன்னேற்றக் கழகம்தான் அந்த மசோதாவைக் கொண்டுபோனது. நானே கொண்டுபோனேன். ஏழு மாதங்கள் நடந்தது. இதிலே இருக்கக்கூடிய வேடிக்கை என்னவென்று கேட்டால், ஓட்டெடுப்பு நடக்கிற நேரத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓட்டெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. இது ஒன்று. ஆனாலும்கூட, அப்படிப்பட்ட ஒரு நிலைமையிலே நாங்கள் மசோதாவைக் கொண்டுவந்து அந்த மசோதா காங்கிரஸ் கட்சியினால் தோற்கடிக்கப்பட்டது. அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அங்கே பத்திரிகை நண்பர்களையெல்லாம் கூப்பிட்டு, அதற்குப் பின்னாலே Public Undertakings - பொது நிறுவனங்களில் உடனடியாக 4-வது வகுப்பு, 3-வது வகுப்பில் இருக்கக்கூடிய வேலைகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு

வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், இன்றைக்கும் தனியார் துறையில் இடஒதுக்கீடு வேண்டுமென்று அனைத்துத் தோழர்களும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த அந்த இயக்கத்திலே இருக்கக்கூடிய தலைவர்களும் சொல்லிக்கொண்டிருப்பதை, திராவிட முன்னேற்றக் கழகம் 30 ஆண்டுகளுக்கு முன்னாலேயே செய்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-35

அதேபோல, நம்முடைய மாண்புமிகு அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே இருக்கின்றார்கள். அவர்களும் இஸ்லாமியர்களுக்காக இடஒதுக்கீடு தேவையென்று கூறிக்கொண்டிருக்கின்றார்கள். இஸ்லாமியர்களுக்காக இடஒதுக்கீடு வேண்டுமென்று முதன்முதலில் நாடாளுமன்றத்தில் சொன்னது திராவிட முன்னேற்றக் கழகம். நம்முடைய பனத்வாலா பாய், அப்துல் சமத் பாய், அதேபோல, சுலைமான் சேட் அவர்கள் அத்தனைபேரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத்தான் பேசச் சொல்லி, நாங்கள்தான் முதன்முதலிலே 1935ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தில் அப்படியொரு guarantee - இடஒதுக்கீடு இஸ்லாமியர்களுக்கு இருக்கின்றது; அதேபோல, கிருஸ்தவர்களுக்கு இருக்கின்றது; அதன்படி கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்திச் சொன்னது திராவிட முன்னேற்றக் கழகம். இன்றைக்கு நம்முடைய தலைவர் அதை ஏற்றுக்கொண்டிருக்கின்றார். அதேபோல, பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்களேகூட அதைப் பரிசீலனை செய்வதாக இன்றைக்கு கூறிக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, எதிர்காலத்தில் எப்படிப்பட்ட பிரச்சினைகள் வந்தாலும் அது திராவிட முன்னேற்றக் கழகத்தால் சொல்லப்பட்ட பிரச்சினையாகத்தான் இருக்குமே தவிர, புதியதாக இன்றைக்கு யாரும் சொல்லிவிட முடியாது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, இப்போது இராணுவத்திலேகூட இடஒதுக்கீடு தேவையென்று சொல்லப்பட்டிருக்கின்றது. நம்முடைய டாக்டர் அம்பேத்கர் ஒரு கருத்தைச் சொன்னார். அந்த நாளில் மகாராஜாக்கள் வாழ்ந்த காலத்தில் இராணுவத்திலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு தந்திருந்தால், நிச்சயமாக வெள்ளைக்காரனேகூட இங்கே வந்திருக்க முடியாது; முகமதியர்களேகூட படையெடுத்து இருக்க முடியாது என்று டாக்டர் அம்பேத்கர் அப்போது குறிப்பிட்டார். அந்த அளவிற்கு



இன்றைக்கு இராணுவத்திலே இடஒதுக்கீடு தரப்பட வேண்டுமென்கிற ஒரு கோரிக்கையும் வலியுறுத்தப்பட்டு வருகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில், நம்முடைய நண்பர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, இங்கே இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த நம்முடைய பெரியவர்களுக்கு எல்லாம் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்; இந்த மண்டல் சிபாரிசை நாடாளுமன்றத்திலே வைக்க வேண்டும் என்பதற்காகப் போராடி 11 முறை நாங்கள் ஜெயிலுக்குப்போய் இருக்கிறோம். இன்றைக்கு மத்தியிலே அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு முரசொலி மாறன் அவர்கள் உட்பட, அவருடைய தலைமையில் 11 முறை டெல்லி நகரத்தில் அந்தப் போராட்டத்திலே கலந்துகொண்டு சிறைச்சாலைக்குச் சென்றிருக்கின்றோம். (மணியடிக்கப்பெற்றது)

ஆக, அப்படிப் பல்வேறு காரியங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் பங்கேற்று செய்திருக்கிறது. அதேபோல, அந்த மண்டல் குழு சிபாரிசை எத்தனை பேர் ஏற்றுக்கொண்டார்கள் என்றால், பலர் ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்தாலும்கூட, நம்முடைய தலைவருடைய முயற்சியின் காரணமாக மண்டல் குழு சிபாரிசு ஏற்றுக்கொள்ளப்பட்டு, இன்றைக்கு மத்தியிலே அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது.

நான் கடைசியாக ஒன்றைச் சொல்லி முடிக்க ஆசைப்படுகின்றேன். தமிழ்நாட்டில் இன்றைக்கு குறிப்பாகத், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த நண்பர்களில் நிறைய தலைவர்கள் உதயமாகி இருக்கின்றார்கள். நான் அவர்களுக்கெல்லாம் சொல்லிக்கொள்ள விரும்புவது ஒன்றே ஒன்று. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமை, நம்முடைய தலைவர் கலைஞரைத் தவிர தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாதுகாவலராக இருக்கக்கூடிய ஒரு தலைவரை தமிழ்நாட்டிலே, தயவுசெய்து நீங்கள் சொல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு எதிர்காலத்திலே எது பாதுகாப்பு என்றால் ஒட்டுமொத்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் - கிருஷ்ணசாமி 2 கோடி என்கிறார். 2 கோடியாகவே இருந்தாலும்கூட, அந்த 2 கோடி மக்களும் தலைவருடைய தலைமையிலே இயங்கினாலொழிய எதிர்காலத்திலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்குக் கிடைக்கக்கூடிய உரிமைகளும், அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வசதிகளும் நிச்சயமாகக் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. ஆகவே, நான் இந்தச் சபை மூலமாக, அவர்களை எல்லாம் கேட்டுக்கொள்வது தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்குத் தலைவர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கக்கூடிய அத்தனை பேரையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, இனி எதிர்காலத்தில் நிச்சயமாக

உங்களுக்குப் பாதுகாப்பாக இருக்கக்கூடிய ஒரு தலைமை, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பாக இருக்கக்கூடிய ஒரு தலைமை, நம்முடைய தலைவர் கலைஞர் என்பதை இந்த நேரத்திலே உணர்ந்து அத்தனை சமுதாயமும் அவருடைய கரத்தை வலுப்படுத்துகின்ற வகையிலே ஆதரவு தர வேண்டுமென்று கேட்டு உரையை முடித்துக்கொள்கின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர், பழங்குடியின மக்கள், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோருக்கான இந்த இடஒதுக்கீடு தொடர்பான வெள்ளை அறிக்கையின்மீது தமிழ் பாட்டாளி மக்கள் கழகத்தினுடைய சார்பிலே என்னுடைய கருத்துகளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்

மடிதற்றுத் தான்முந் துறும்"

என்று வள்ளுவர் பெருந்தகை அவர்கள் குறிப்பிடுவார்கள். யார் ஒருவர், தான் பிறந்த குடியை முன்னேற்றுவேன் என்பதிலே உறுதியாக நிற்கிறார்களோ, முயலுகிறார்களோ அவர்களுக்கு தெய்வமே முன்வந்து உறுதுணையாக, பக்க பலமாக இருக்குமென்று வள்ளுவர் பெருந்தகையார் அவர்கள் அந்தக் குறளிலே குறிப்பிட்டுச் சொல்லி இருக்கின்றார்கள்.

பிற்பகல் 5-40

இன்றைக்கு தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இருக்கக்கூடிய இந்த ஒட்டுமொத்த தமிழகத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்டுக்கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு மகேசன் மட்டுமல்ல, மக்களும் நிச்சயமாக உறுதுணையாக இருப்பார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். அந்த அளவிற்கு இன்றைக்கு இந்த வெள்ளை அறிக்கையை அவர்கள் தந்திருக்கிறார்கள் என்று சொன்னால், என்னைப் பொறுத்த அளவிலே ஐந்து பரிந்துரைகளை, இங்கே இந்த வெள்ளை அறிக்கையிலே ஐந்து முடிவுகளாக அரசு அறிவித்திருக்கிறது. பஞ்சசீலக் கொள்கை நம்முடைய நாட்டிற்கு நிம்மதியைத் தந்ததோ இல்லையோ, ஆனால், இந்த அரசு



அறிவித்திருக்கிற இந்த ஐந்து முடிவுகளும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், சீர்மரபினர் ஆகவும், மிகப் பிற்படுத்தப்பட்டோராக உள்ள இந்த மக்களுக்கு இந்த ஐந்து கொள்கைகளும் நிச்சயமாக இவர்களைப் பாதுகாக்கின்ற, முன்னேற்றுகின்ற மிகச் சிறந்த பஞ்சசீலக் கொள்கைகளாக இருப்பதை நான் இந்த நேரத்திலே பாராட்டிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏறத்தாழ இதற்கு முன்னாலே 10 இடங்களோ, அதற்கு மேற்பட்ட இடங்களுக்கு மட்டுமோ இருந்த இடஒதுக்கீட்டு முறை இன்றைக்கு தமிழக அரசினுடைய முடிவினாலே ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில்கூட, இந்த சுழற்சி முறையிலே இடஒதுக்கீடு செய்யப்படும் என்று எடுக்கப்பட்டிருக்கின்ற முடிவு, இதுவரையிலே மிகவும் பாதிக்கப்பட்டுக் கிடந்த இந்த மக்களுக்கு ஒரு பெரிய நிவாரணத்தை அளிக்கக்கூடிய ஒரு பாதுகாப்பான நடவடிக்கை என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதுபோல, நேரடி நியமன முறையிலே முன்கொணர்ந்து நிரப்புகின்ற முறையை மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு விரிவுபடுத்தப்படும் என்று அறிவித்திருப்பதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, பல்கலைக்கழகங்களிலேயும், கூட்டுறவு நிறுவனங்களிலேயும் ஏனைய பொதுத் துறை நிறுவனங்களில் எல்லாம்கூட முறையாக இனிமேல் விழிப்போடு இடஒதுக்கீட்டு முறைப்படி இடங்கள் நிரப்பப்படும் என்று அறிவித்திருப்பதையும் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இந்த அரசு மின்னல் வேகத்திலே, செயல்பட்டுக்கொண்டிருக்கிற அரசு என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் போதும். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இப்போது இங்கே பேசிக்கொண்டிருக்கிறபொழுது, குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறபொழுது, இந்த ஆதிதிராவிடர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கான இந்த இடஒதுக்கீட்டு முறையின்படி நிரப்பப்படுவதைக் கண்காணிப்பதற்கு ஒரு நிரந்தரக் கண்காணிப்புக் குழு போட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்; நானும் அதை வலியுறுத்துகிறேன். ஆனால், அதற்கு முன்னாலேயே மின்னல் வேகத்திலே அத்தகைய நிரந்தரக் குழுக்கள், கண்காணிப்புக் குழுக்கள் போடப்படும் என்று தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருப்பதிலே இருந்து இந்த அரசு, ஆதிதிராவிடர், மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மின்னல் வேகத்தில் செயல் திட்டங்களைச் செயல்படுத்திக்கொண்டிருக்கிற அரசு என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [2000 மே 16

இந்த வெள்ளை அறிக்கையிலே நான் ஒன்றிரண்டை மட்டும் இதிலே தரப்பட்டிருக்கிற புள்ளிவிவரங்களை வைத்து நான் கணக்கிட்டிருப்பதை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசெல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு, இந்த வெள்ளை அறிக்கையிலே 15 ஆம் பக்கத்திலே தரப்பட்டிருக்கின்ற அட்டவணையில் பின்னடைவுக் காலியிடங்கள், மொத்த பணியாளர்களுடைய எண்ணிக்கையைக் குறிப்பிடாமலேயே தரப்பட்டிருக்கிறது. அது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. ஆனால், பக்கம் 11-லும், பக்கம் 12-லேயும் கொடுக்கப்பட்டிருக்கிற அட்டவணையை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது, ஏறத்தாழ 11 இலட்சம் இடங்களிலே மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 5,263 இடங்கள் காலியிடங்களாக வைக்கப்பட்டுள்ளதாகக் கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளிவிவரம் என்னைப் பொறுத்த அளவிலே சரியில்லை என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏறத்தாழ காலியாக இருப்பது 51,346 இடங்கள் என்பதுதான் உண்மையான புள்ளிவிவரம். இன்றைக்கு 1-1-1999 அன்றைய நிலவரப்படி, ஏறத்தாழ அரசுத் துறைகளிலே 96 துறைகளை இங்கே பட்டியலிட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளிவிவரத்தை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே பணியிடத் தொகுதி 'A' பிரிவிலே மொத்த பணியாளர் 4,588. இதிலே மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது 384. அதிலே அவர்களுக்கு வழங்கப்பட வேண்டியது 917. அப்படிப் பார்த்தால், இந்தப் பின்னடைவுப் பணியிடங்கள் ஏறத்தாழ 533 இருக்கின்றன. அதேபோல, 'D' பிரிவிலே பார்த்தால், 1,69,682 மொத்த பணியிடங்கள். இதிலே மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டிருப்பது 27,973 இடங்கள். ஆனால், வழங்கப்பட வேண்டியது 33,936 இடங்கள். ஆக இதிலேயும் பார்த்தால், 5,963 இடங்கள், பின்னடைவுப் பணியிடங்கள் அங்கே காலியாக இருக்கின்றன.

பிற்பகல் 5-45

அதேபோல பணியிடத் தொகுதி 'C' பிரிவிலே பார்த்தால், 4,24,131 இடங்கள்; இதிலே 64,302 இடங்கள் மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது; அவர்களுக்கு 84,824 . . . *(மணியடிக்கப்பெற்றது)*



2000 மே 16]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசாங்கத்திலே மொத்த பணியாளர்கள் எவ்வளவு பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களிலே மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20 சதவீதம்; தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதம் என்று கணக்கிடுகிறார்கள். நாம் அந்தக் கணக்கை இப்போது எடுத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால், 1989-க்குப் பிறகுதான் dereservation நாம் செய்து இருக்கின்றோம். அதிலே இருந்துதான் நாம் கணக்கெடுக்க முடியும். அதிலே இருந்து கணக்கெடுத்ததைப் பார்த்துத்தான், இந்த அரசாங்கத்தினுடைய புள்ளிவிவரங்கள் பற்றி வெள்ளை அறிக்கையில் 15-வது பக்கத்திலே கொடுத்து இருக்கின்றோம்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கெடு 1-4-1989 முதல் கணக்கு எடுக்கப்பட்டு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், என்னைப் பொறுத்த அளவிலே இந்தக் கணக்கு எடுப்பு என்பது முழுமையாக மொத்த பணியிடங்களையும் கணக்கிட்டுப் பார்க்கிறபோதுதான், மொத்த பணி இடங்களில், மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எந்த அளவில் பின்னடைவு ஏற்பட்டு இருக்கிறது என்பது தெரியவரும் என்பதற்காக நான் இந்தப் புள்ளி விவரத்தை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இதை மறு ஆய்வு செய்ய வேண்டியது அரசினுடைய கடமை என்பதற்காக, அமைக்கப்படுகின்ற நிரந்தர கண்காணிப்புக் குழுக்களிலே இவை விவாதிக்கப்பட வேண்டும் என்பதற்காக நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசுத் துறையிலே மட்டும், நாங்கள் எடுத்து இருக்கிற கணக்கு எடுப்புப் பிரகாரம், இந்தப் புள்ளிவிவரப்படி 34,704 இடங்களும், அதேபோல 96 பொதுத் துறை நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், மாநகராட்சி ஆகியவற்றிலே கணக்கு எடுக்கப்பட்டு இருக்கிற முறைப்படி, ஏறத்தாழ மொத்த பணி இடங்கள் 3,18,755 என்று பார்த்தால், அந்த 4 பிரிவுகளிலே வழங்கப்பட்டுள்ளது 47,498; அதிலே 64,105 இடங்கள் வழங்கப்பட வேண்டும். ஆக மொத்தத்தையும் சேர்த்துக் கணக்கிட்டால், இந்தப் பொதுத் துறை நிறுவனங்கள், அரசுத் துறை நிறுவனங்களிலே ஏறத்தாழ...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே அடிப்படையில் அந்த 1989-க்கு முன்னால்

மிகப் பிற்படுத்தப்பட்டோர் என்று ஓர் ஒதுக்கீடு கிடையாது; மக்கள் இருந்தார்கள்; அரசாங்கத்தின் புள்ளிவிவரத்தில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் என்று அடையாளம் காட்டி வேலையில் எடுக்கிற நிலைமை கிடையாது. அந்நிலையில் எடுக்கப்பட்டிருந்தால், பிற்படுத்தப்பட்டோர் என்ற பட்டியலிலே அவர்கள் எடுக்கப்பட்டு இருப்பார்கள். பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே அவர்கள் எடுக்கப்பட்டிருந்தாலும், அது அப்போது identify ஆகாது. எடுக்கப்பட்டவர்களை அவர்கள் மிகப் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் என்று பாகுபாடு செய்து நாம் பார்க்க முடியுமே தவிர, அந்தப் பாகுபாடு இல்லாதபோது, எடுக்கப்பட்டவர்களைக் கணக்கில் கொள்ள முடியாது. இன்னும் ஒன்று. இப்போது எடுக்கப்படுகிறவர்களிலேகூட O.C.-யிலே மிகப் பிற்படுத்தப்பட்ட ஒரு சில பேர் இடம் பெறுவார்கள். பிற்படுத்தப்பட்டோர் அந்த O.C. பகுதியில் 30, 40 விழுக்காடு இடம் பெறுவார்கள். அவர்களை மிகப் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் என்ற கணக்கிலே எடுக்க முடியாது. ஆகவே, இயற்கையாக நம்முடைய நிர்வாகத்தில் அல்லது ஆட்சி முறையினால் ஏற்பட்ட நிலையை உணர்ந்து, அந்த அடிப்படையிலே கணக்கு எடுத்தால்தான், நாளைய தினம் யாரும் நீதிமன்றத்திலே போய் வாதாட முடியாது; வாதாடி நம்மை வீழ்த்த முடியாது.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு உள்ள இதே பிரச்சினையை நாங்கள் குழுவிலே இடம் பெற்றிருந்தபோது, பல்வேறு துறைகளை ஆய்வு செய்தபோது (மணியடிக்கப்பெற்றது) நாங்கள் இதே பிரச்சினையைச் சொன்னோம். அப்போதுகூட ஒரு கருத்து பரிமாறப்பட்டது. ஒவ்வொரு பணியாளருடைய Service Register—லே அவர்கள் என்ன சாதி என்று குறிப்பிடப்பட்டு இருக்கும். உண்மையிலேயே அந்தத் துறை அதிகாரிகள் விரும்பியிருந்தால் 1989-லிருந்துகூடச் செய்து இருக்கலாம், தரப்பட்டு இருக்கின்ற இந்த மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கான அந்த காலியிடப் பணியிடங்களை மிக மிகக் குறைத்துத்தான் மதிப்பிட்டு இருக்கிறார்கள். இதை நாங்கள் அந்தக் குழுவிலே சொன்னபோது, அப்படிக்கூடச் செய்யலாம் என்று சொன்னார்கள். ஆனால், செய்தார்களா, அந்த அடிப்படையிலே இந்தப் புள்ளிவிவரங்களை தந்து இருக்கிறார்களா என்பது தெரியவில்லை. ஆக இதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, அடுத்து இன்றைக்கு அந்த பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவின் மூலமாக நாங்கள் பல துறைகளை ஆய்வு செய்தோம்; அதில் ஒரு துறையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய





கவனத்திற்கும் நாங்கள் ஏற்கெனவே கொண்டு சென்று இருக்கிறோம்; அதற்கு இதுவரையிலே எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. மின்வாரிய துறையிலே 1995-லே தேர்வு செய்யப்பட்டவர்கள், கணக்கீட்டாளர் பிரிவிலே 95 பேர்கள், இளநிலை உதவியாளர் பிரிவில், கணக்கியல் பிரிவிலே 95 பேர்கள், கணக்கீட்டாளர் பிரிவிலே 150 பேர்கள் என்று அவர்களுக்குப் பணி நியமனம் வழங்கப்பட்டது. ஆனால், அந்த இளநிலை உதவியாளர் நிர்வாகப் பிரிவிலே இருக்கக்கூடிய ஏறத்தாழ 119 பேர்களுக்கு அந்த நிர்வாகப் பிரிவிலே பணி வழங்கப்படாமல் இருக்கிறது. இது குறித்து நாங்கள் பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவிலே அந்தத் துறையினரை அழைத்து அவர்களிடம் கலந்து பேசினோம். அப்போது அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால் இந்த 119 பேர்களும் மிகப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சமுதாயத்தினுடைய தரப்பிலேதான் அதிகமான பேர் இருக்கிறார்கள் என்று. எனவே, கடந்த ஆட்சியிலே காவல் துறையிலே எடுத்த 98 சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும் அரசு விதிகளில் இடம் இல்லாவிட்டாலும் எப்படி ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி Special drive-ஆகக் கருதி அவர்களுக்குப் பணிகள் வழங்கப்பட்டனவோ அதைப்போல இந்த மின்வாரியத்திலே, நிருவாகப் பிரிவிலே இருக்கக்கூடிய 119 இளநிலை உதவியாளர்களுக்கும் கருணை அடிப்படையிலே சிறப்பு நேர்வாகக் கருதி பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டுமென்று பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு பரிந்துரை செய்தது. ஆனாலும்கூட இதுவரையில் அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து ஆவன செய்ய வேண்டுகிறேன். அடுத்து ஒன்றிரண்டு கருத்துகளைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. விசுவநாதன். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இன்றைக்கு பணி மாற்றம் அடிப்படையிலே பதவி உயர்வு அதாவது, Recruitment by transfer என்று வழங்கப்படுவது, வருவாய்த் துறை, நெடுஞ்சாலைத் துறை, வணிக வரித் துறை, பதிவுத் துறை ஆகிய துறைகளில் வழங்கப்படுவதைப் போல அனைத்துத் துறைகளிலும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு நியமனக் குழுக்களிலும் அதாவது Appointment Committee என்று போடுகிறபோது, மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவரைக் கட்டாயம் அதிலே உறுப்பினராகப் போட்டால்தான், அதைச்

சரிவர நிறைவேற்ற ஒரு வாய்ப்பாக இருக்குமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு வேண்டுகோள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. விசுவநாதன். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இன்னும் சிறிது நேரம் கொடுங்கள். இன்றைக்குப் பள்ளிகளிலே மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்களிடத்திலேயிருந்து special fees அதாவது கட்டணம் வசூலிக்கக் கூடாது என்று அரசு அறிவித்திருக்கிறது. ஆனால், பல பள்ளிக்கூடங்களில் இன்றைக்குத் தலைமையாசிரியர்கள் மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கிறார்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், "அரசிடமிருந்து எங்களுக்கு அந்தப் பணம் Sanction ஆகி வந்ததும் நாங்கள் திருப்பிக் கொடுத்துவிடுவோம்" என்று. ஆனால் ஆண்டுக் கடைசியிலே அந்த மாணவர்கள் தலைமையாசிரியர்களிடம் போய்க் கேட்பதற்குப் பயந்து விட்டுவிடுகிறார்கள். நான் இந்த நேரத்திலே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது என்னவென்று சொன்னால் ஆதிதிராவிட மாணவர்களுக்கும், பழங்குடியின மாணவர்களுக்கும் முதலிலேயே எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை, அதைப்போல மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் முதலிலேயே எவ்விதக் கட்டணமும் பள்ளிகளில் வசூலிக்கக் கூடாது என்று அரசு அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கங்களினுடைய அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாக விளங்குவது சமூக நீதிக் கொள்கையாகும். அதனுடைய அரணாக விளங்குகின்ற இடஒதுக்கீடு பற்றிய வரலாற்றை, 1921 முதல் 1990 முடிய, 69 சதவீத இட ஒதுக்கீடு பெற்றிருக்கின்ற வரலாற்றை இந்த வெள்ளை அறிக்கையிலே நீங்கள் கொடுத்திருக்கின்றீர்கள். அதிலேகூட 69 சதவீத இடஒதுக்கீட்டை இன்றைக்கு நாம் தமிழகத்தில் அமல்படுத்திக்கொண்டிருக்கிறோம். இதில் எந்த மாறுபட்ட கருத்தும் இல்லை. ஆனால் இந்த 69 சதவீத இடஒதுக்கீடு கொள்கைக்கு இன்று பேராபத்து சூழ்ந்து இருப்பதை இந்த அரசு உணரத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டைச் சுமத்த விரும்புகிறேன். ஏனென்று சொன்னால் இன்றைக்கு உச்ச நீதிமன்றம் 50 சதவீதத்திற்கு மேல் இடஒதுக்கீடு தரக் கூடாது என்ற



ஆணையினை வழங்கியிருப்பதன் காரணமாக, இந்த 69 சதவீத இடஒதுக்கீட்டிற்கு அரசியல் சட்டப் பாதுகாப்பற்ற நிலை இருக்கிறது என்பதை உணர்ந்து, இதற்கும் ஓர் அரசியல் பாதுகாப்பை, சட்டப் பாதுகாப்பை ஏற்படுத்திட நமது தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் முழு முயற்சி எடுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-55

புரட்சித் தலைவி அவர்கள்கூட மத்தியிலே பாரதிய ஜனதா ஆட்சி பொறுப்புக்கு வந்தபோது, அவர்களை ஆதரிக்கும்போது, நாங்கள் ஒரு நிபந்தனையை விதித்தோம். அதிலே மிக முக்கியமான நிபந்தனை தமிழ்நாட்டில் தலையாய பிரச்சினையாக விளங்குகின்ற இந்த 69 சதவீத இடஒதுக்கீட்டுப் பிரச்சினைக்குச் சட்டப் பாதுகாப்பினை வழங்கிட வேண்டும். அதை அமல்படுத்துவதற்கு ஒரு பாதுகாப்பினை மத்திய அரசு வழங்கிட வேண்டுமென்ற நிபந்தனையை நாங்கள் அன்று விதித்துதான், அன்று மத்தியில் இருந்த பாரதிய ஜனதா அரசை ஆதரித்தோம். ஆனால் அந்த அளவிற்கு இப்போது தமிழகத்தினுடைய தலையாய பிரச்சினையான அந்த 69% இடஒதுக்கீடு பிரச்சினையில் அதற்கு ஒரு பாதுகாப்பினை ஏற்படுத்திட நீங்கள் குரல் கொடுக்கிறீர்கள்; இல்லையென்று சொல்லவில்லை, மத்திய அரசிடம் வற்புறுத்துகிறோம் என்றுதான் சொல்கிறீர்கள். கவர்னர் உரையிலே கூட நீங்கள் சொல்கிறபோது 69% இடஒதுக்கீடு பிரச்சினையில் அதற்குச் சட்டப் பாதுகாப்பு வழங்கும்படி நாங்கள் வலியுறுத்துகிறோம் என்றுதான் மென்மையாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், எங்களுடைய புரட்சித் தலைவி சொன்னதுபோல, இன்று ஒரு நிபந்தனையாக நீங்கள் விதிக்கவில்லை. நீங்கள், மத்திய அரசை உங்களுக்கு இருக்கிற செல்வாக்கைப் பயன்படுத்தி, உங்களுக்கு இருக்கிற செல்வாக்கை அங்கே கடுமையாகப் பயன்படுத்தி அந்தக் கொள்கையினை நிறைவேற்றிட, மத்திய அரசு தகுந்த சட்டத் திருத்தம் கொண்டுவந்திட, நீங்கள் முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்பதைத்தான் இந்த நேரத்திலே எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதைக் கொள்கை ரீதியாக ஏற்றுக்கொள்கிறீர்கள், இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் அதை அமல்படுத்தும்போது உங்களுடைய உறவின் காரணமாக, மத்திய அரசை வன்மையாக எதிர்ப்பதற்குத் தயக்கம் காட்டுகிறீர்கள் என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு.

அதற்கு அடுத்தபடியாக இப்போதுகூட, இந்த வெள்ளை அறிக்கையில் சொல்லி இருக்கிறீர்கள். 1951 ஆம் ஆண்டு இடஒதுக்கீடு கொள்கைக்கு எதிராக உச்சநீதிமன்றத்தின் மூலமாகத் தீர்ப்பு அளித்துவிட்டதன் காரணமாகத் தமிழ்நாட்டிலே மிகப்பெரிய போராட்டம் எல்லாம் நடைபெற்றதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதிலே அதிர்ஷ்டவசமாக அனைத்துக் கட்சிகளும், காங்கிரஸ் உட்பட, தமிழகத்தில் இருந்த அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்து குரல் கொடுத்ததன் காரணமாக மத்திய அரசிலே அரசமைப்புச் சட்டத்திலே பிரிவு 15(4) சட்டத் திருத்தம் கொண்டுவந்து அந்த இடஒதுக்கீட்டிற்கு ஒரு பாதுகாப்பினை வழங்கியதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதையே நான் குறிப்பிட விரும்புவது, உச்ச நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு வழங்கி அதற்குப் பின்பு அந்த இடஒதுக்கீடு செல்லாது என்று தீர்ப்பு சொன்னதற்குப் பிறகு மத்திய அரசிலே தகுந்த சட்டத் திருத்தம் கொண்டுவந்து அதற்குப் பாதுகாப்பு வழங்கிய முன்னுதாரணம் இருக்கும்போது, 50% மேல் இடஒதுக்கீடு கூடாது என்ற சுப்ரீம் கோர்ட்டினுடைய தீர்ப்புக்குப் பின்பு தகுந்த சட்டத் திருத்தத்தை மத்திய அரசு ஏன் கொண்டுவரக் கூடாது என்பதைத்தான் இந்த நேரத்திலே நான் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல அதற்கு அடுத்தபடியாக, இங்கு நமது இடஒதுக்கீடு பிரச்சினை பொறுத்தவரையில் நீங்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு பற்றி மட்டும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நான் இன்னொன்றை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்று ஆதிதிராவிடர்களுக்கு, குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு நாடாளுமன்றத்திலே, உறுப்பினராக ஆவதற்கு நாம் இட ஒதுக்கீடு அளித்திருக்கிறோம்; சட்டமன்றத்திலே சட்டமன்ற உறுப்பினராக வருவதற்கு நாம் இடஒதுக்கீடு அளித்திருக்கிறோம். அதுபோல இன்று உள்ளாட்சி அமைப்புகளிலும் ஆதிதிராவிடர்கள், பெண்கள் மற்றவர்களுக்கு எல்லாம் நாம் இடஒதுக்கீட்டிற்கு ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறோம். மக்கள் பிரதிநிதியாக வரக்கூடிய வாய்ப்புள்ள அமைப்புகள் அத்தனையிலும் நாம் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் கூட்டுறவுச் சங்கங்கள்—அதுவும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் அமைப்புதான். அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் ஆதிதிராவிடர்களுக்கு, குறிப்பாக இந்த இடஒதுக்கீட்டை அமல்படுத்தி, தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிலே, நான் அறிந்த அளவிலே எந்த ஒரு கூட்டுறவுச் சங்கத்திலும் ஆதிதிராவிடர் தலைவராக வந்ததாக எனக்குத் தெரியவில்லை. ஓரிருவர் செல்வாக்கு மிகுதியால் வந்திருக்கலாம்.





**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, திரு. சி.டி. தண்டபாணி அவர்கள் எந்தக் கூட்டுறவு இயக்கத்தினுடைய தலைவராக இருக்கிறார் என்பதைக்கூடத் தெரிந்துகொள்ளாமல் இருப்பது வேதனைக்குரியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுமட்டுமல்லாமல், இந்த மாமன்றத்தின் உறுப்பினர் திரு. செங்கை சிவம் அவர்கள் அகில இந்திய வீட்டுவசதி வாரியத்தினுடைய துணைப் பெருந்தலைவர்.

**திரு. இரா. விசுவநாதன்:** ஒரே ஒரு நிமிஷம் நான் சொல்கிறேன். நான் அறியாமல் சொல்லவில்லை. நான் சொல்லும்போது முதலமைச்சர் அவர்கள் சரியாகக் கவனிக்கவில்லை என்பதுதான் என்னுடைய குறை. வந்திருக்கிறார்கள், போதுமான அளவுக்கு வரவில்லை என்பதுதான் என்னுடைய வாதம். யாருமே வரவில்லை என்று சொல்லவில்லை. அதைத்தான் சொல்கிறேன். இடஒதுக்கீடு கொடுத்திருந்தால் பிரதிநிதித்துவம் 18% என்பதை அமல்படுத்தியிருந்தால் அவர்களுக்கு உரிய வாய்ப்புக் கிடைத்திருக்கும். ஆகவே, அந்த அமைப்புகளிலே இட ஒதுக்கீடு முறையைக் கொண்டுவர வேண்டும் என்பதைத்தான் சொன்னேனே தவிர, வரவில்லை என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொடக்கக் கூட்டுறவு வங்கிகள், அதுபோல மத்திய கூட்டுறவு வங்கிகள், இவற்றில் எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களும், பெண்களும் இயக்குநர்களாக வருவதற்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டு அந்த முறையிலேதான் இப்போது தேர்தல் நடைபெற்று இருக்கிறது. மாநில அளவில் எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு மாநில கூட்டுறவு வங்கியின் தலைவராக, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.டி. தண்டபாணி அவர்கள், அதுபோல செங்கை சிவம் அவர்கள், வீட்டுவசதி வாரியத் தலைவராக, அகில இந்திய அளவிலே துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு இன்றைக்குப் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள்.

பிற்பகல் 6-00

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இந்த விசுவநாதனுக்கு அந்தக் கவலையே இல்லை. ஏனென்றால் அவர்கள் காலத்திலே கூட்டுறவுச் சங்கத் தேர்தலே நடக்கவில்லை.

**திரு. இரா. விசுவநாதன்:** நான் ஒரு சட்டப் பாதுகாப்பு வேண்டுமென்பதற்காகச் சொன்னேன். அதாவது திறமையின்

அடிப்படையில் அவரவர்கள் வந்து விடுகிறார்கள், அதைப்பற்றி நான் சொல்லவில்லை. இயக்குநர்களுக்குத் திறமை இருக்கிறது. இயக்குநர் அளவில் அங்கே ஆதிதிராவிடர் வரமுடிகிறது. ஆனால் தலைவராக வருவதற்கு சில சங்கங்களை ஒதுக்கீடு செய்து கொடுக்க வேண்டும். அவர்களுக்குப் வேண்டிய உரிமைகளைச் சட்டப்படி வழங்குங்கள். அதாவது திறமையின் பேரிலே ஒருவர் வருவதைப்பற்றி நான் சொல்லவில்லை. ஆங்காங்கு வந்திருக்கலாம். அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கு ஓர் ஒதுக்கீடு முறையை அங்கும் அமல்படுத்தவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற எந்த அமைப்பாக இருந்தாலும், அந்தக் அமைப்புகளில் ஆதிதிராவிடர்களுக்கும், அதேமாதிரி பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், உள்ளாட்சி அமைப்புகளிலே இருப்பதைப் போன்று, அந்தக் கூட்டுறவு அமைப்புகளிலும் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுமென்பதற்கு சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்பதைத் தான் இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே அடுத்தபடியாக இப்போது ஆதிதிராவிடர்களுக்கு கூட்டுறவுத் துறையிலே கூட அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பணியிடங்களில், பின்னடைவு ஏற்பட்டிருக்கின்ற பணியிடங்களில்—210 ஆதிதிராவிடர்கள் அங்கே. பட்டயப் பயிற்சி முடித்துவிட்டு வேலையின்றி இருக்கின்றார்கள். அவர்களுக்கு எல்லாம் கூட்டுறவு அமைப்புகளில் ஏற்பட்டு இருக்கின்ற பின்னடைவைச் சரிசெய்யும் வண்ணம் — அவர்களுக்கு முன்னுரிமை அளித்து இந்த இடங்களை நிரப்ப வேண்டும் என்று இந்த இடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

***திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வெள்ளை அறிக்கை மீதான விவாதத்திலே பங்கேற்க வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைக் கூறி, இந்த வெள்ளை அறிக்கையில் இங்கே நடந்திருக்கிற விவாதங்களையும் வரவேற்று எனது உரையைத் தொடங்குகின்றேன்.

இந்தியா சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகாலமாகியும் கொடுக்கப்பட்ட இட ஒதுக்கீடு முறையாக அந்த இனத்திற்குப் போய்ச் சேரவில்லை. அந்தக் குறைபாட்டை கண்டறிந்து அதைப் போக்குவதற்காக இந்த அரசு நல்ல முயற்சியை மேற்கொண்டு இருப்பதை நான் மனமார பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட இனங்களின் முன்னேற்றத்திற்காக இந்த அரசு இந்த முயற்சியை எடுத்து அதனைக் குறிப்பிட்ட 5 ஆண்டுகாலத்திற்குள் நிவர்த்தி செய்வோம் என்று வாக்குறுதியும்



அளித்திருப்பது மிகவும் பாராட்டத்தக்க ஒன்றாகும். ஆனால் அதேநேரத்தில் இந்த வெள்ளை அறிக்கையை இன்னும் சற்று விரிவாகத் தந்திருக்கலாம் என்று எண்ண வேண்டுமென்று தோன்றுகிறது. ஏனென்று சொன்னால், வழங்கப்பட்ட இட ஒதுக்கீடு ஏன் முழுமைப்படுத்தப்படவில்லை என்ற காரணத்தைக் கண்டறிந்து, அதையும் இதிலே குறிப்பிட்டிருந்தால் எதிர்காலத்தில் அதுபோன்ற குறைகளைத் தவிர்ப்பதற்கு வாய்ப்பாக இருந்திருக்கும். அந்தக் காரணங்களைக் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்காக மட்டும் அல்ல. எதனால் இந்த இட ஒதுக்கீடுகள் முறையாக முழுமைப்படுத்தப்படவில்லை என்று குறிப்பிட்டிருந்தால், எதிர்காலத்திலே வழங்கும்போது அந்தத் தவறுகளைத் தவிர்ப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருந்திருக்கும் என்ற. காரணத்தினால் இந்த வெள்ளை அறிக்கையிலே ஏன் வழங்கப்படவில்லை என்பதை விவரித்துக் கூறுவதற்கு ஒரு வாய்ப்பை அரசு ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல இனி வருங்காலங்களில் இந்த இட ஒதுக்கீட்டு முறையைக் கையாளும்போது ஒரு குடும்பத்திலே அரசு வேலை பெற்றவர்களுக்கே மீண்டும் மீண்டும் இட ஒதுக்கீட்டிலே வேலை கொடுப்பதை அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும். ஏன் என்று சொன்னால், எனக்குத் தெரிந்த ஒருவர் அரசாங்கத்திலே ஆசிரியர் உத்தியோகத்திலே இருக்கின்றார். அவருடைய மூன்று குழந்தைகளும் ஆசிரியர்களாக இருந்துகொண்டிருக்கின்றார்கள். இப்படி அரசுப் பணியிலே இருப்பவர்களே, இட ஒதுக்கீட்டு முறையிலே மூன்று பிள்ளைகளுக்கும், நான்கு பிள்ளைகளுக்கும் வேலை பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள், சலுகையை வைத்துக்கொண்டு. ஆனால் எதுவுமே கிடைக்காதவர் கடைப் பகுதியிலே எதுவுமே கிடைக்காமல் இருந்து கொண்டு இருக்கின்றார். ஆகவே பொருளாதாரத்தையும் அவர்கள் பெற்ற வாய்ப்பினையும் கருத்தில் கொள்ளவேண்டும். ஏனென்றால் இட ஒதுக்கீடு என்பது முன்னேறக்கூடிய மக்களுக்கு வாய்ப்பாக வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே இட ஒதுக்கீடு பெற்றவர்கள் பிள்ளைகளுக்குக் கொடுக்கக் கூடாது என்பதல்ல. அந்த ஊரில் உள்ள மற்ற ஏனைய போட்டிதாரர்கள், யார் அந்தக் குடும்பத்திலே அரசு வேலை பெறாமல் இருக்கின்றார்களோ அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும். ஏனென்று சொன்னால் எந்த வீட்டிலே எடுத்தாலும் ஒருவர், இருவர், மூவர் என்ற நிலையில் வேலையில் இருந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இதுகுறித்து அரசு, பொருளாதார நிலையையும் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இரவு 6-05

அதுபோல, இந்த வெள்ளை அறிக்கையிலே துறை வாரியாகவும், வகுப்பு வாரியாகவும் விளக்கங்கள் தரப்பட்டிருக்க வேண்டும். குறிப்பாக பிற்படுத்தப்பட்டோர் என்று இருக்கிறதே தவிர, எத்தனை சதவிகிதம் இஸ்லாமியர்கள் இருக்கிறார்கள்; எத்தனை சதவிகிதம் இருக்கிறார்கள் என்ற விவரம் இதிலே குறிப்பிடப்படவில்லை. இருத்தவர்கள் பேசியவர்களில் பலர் சில குறிப்புகளைக் குறிப்பிட்டார்கள். இங்கே எங்களைப்பொறுத்த வரையில் அந்த மாதிரிக் குறிப்புகள் இல்லை; ஆனால், குறிப்பிட முடியாத நிலையிலே இருந்து கொண்டிருக்கின்றேன். ஒவ்வோர் இனத்தையும், ஒவ்வொரு மனிதனையும் உற்று நோக்கும் முதல்வர் அவர்கள், எங்கள் மதத்தை உற்று நோக்கத் தவறி விட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. குறிப்பாக, நான் Correspondent-ஆக இருக்கக்கூடிய பள்ளியிலே 17 ஆசிரியர்கள் பணிபுரிகின்றார்கள். அதில் மூன்று பேர்தான் முஸ்லீம் ஆசிரியைகள். ஒரு male முஸ்லீம் ஆசிரியர்கூட இல்லை. நான் தமிழ்நாடு முழுவதும் ஆய்ந்து கொண்டிருக்கிறேன், யாராவது முஸ்லீம் ஆசிரியர் கிடைப்பாரா என்று. ஆனால் கிடைக்கவில்லை. காரணம் என்ன? அவர்களுக்கு இட ஒதுக்கீடு இல்லை. வாய்ப்பு அளிக்கப்படவில்லை. அதனால் படிக்க முடியவில்லை. ஆகையினால், ஒரு ஆசிரியர்கூடக் கிடைக்காத நிலை இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, நான் அதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி) தலைமை.]

அதைப்போல, சென்ற மத்திய ஆட்சியிலும், இந்த மத்திய ஆட்சியிலும் 40 பேர் தமிழ்நாட்டிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களாகச் சென்றிருக்கிறார்கள். அதிலே ஒருவர்கூட இஸ்லாமியர் இல்லை.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த இடஒதுக்கீடு என்பது, சமூகங்களுக்கு வழங்கப்படுகிற ஒரு சலுகை. அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய கல்வி, வேலை வாய்ப்பு எளிதாகக் கிடைக்கச் செய்வதற்காக ஒரு தனி gate-(வாயில்) அவ்வளவுதான். அந்த முறையிலே முஸ்லீம்கள், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே ஒதுக்கீடு பெற்றிருக்கிறார்கள். Backward Class என்ற அந்தப் பட்டியலிலே முஸ்லீம்கள் பெரும்பாலானவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் அந்த வழியாக இயல்பாக இடம்பெறுகிற வாய்ப்பினால் சலுகை பெறுகிறார்கள்.



**திரு. ஜி. நிஜாமுதீன்:** அந்த பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலிலே கிட்டத்தட்ட 280-க்கு மேற்பட்ட இனங்கள் இருந்து கொண்டிருக்கும்போது, அதிலே ஓர் ஓரத்திலேதான் முஸ்லீம்கள் வந்துகொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** அது, 280 அல்ல, 780 ஆக இருந்தாலும்கூட, அந்தக் கூட்டத்தில் முஸ்லீம்களும் வர முடியும்; வந்து கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** வர முடியும் என்று ஏட்டளவிலே இருந்தாலும்கூட, வரமுடியாத நிலை இருந்துகொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) ஆகவேதான் நான் குறிப்பிடுகிறேன்...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாற்றுத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம்தான் காவல் துறையிலே 6 சதவிகிதம் முஸ்லீம்கள் இருக்கிறார்கள் என்ற ஒரு செய்தியைச் சொன்னேன். இன்றைக்கு நம்முடைய நிஜாமுதீன் அவர்கள், அப்படியே மறந்துவிட்டுப் பேசிக்கொண்டிருக்கிறார்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மறக்கவில்லை. மற்ற பணிகளிலே அவ்வாறு இல்லையே என்பதுதான் என்னுடைய ஆதங்கம். ஏனென்று சொன்னால், இடஒதுக்கீட்டில் கர்நாடகாவிலே, கேரளாவிலே எல்லாம் வகுப்பு வாரியாக இடஒதுக்கீடு என்று, முஸ்லீம்களுக்கு என்று அறிவித்திருக்கின்றார்கள். (மணியடிக்கப்பெற்றது) முக்கியமான பிரச்சினை, முக்கியமான பிரச்சினை, ஆனால், தமிழ்நாட்டிலே அவ்வாறு இல்லை. ஏன் அவ்வாறு செய்ய முடியாது என்பதுதான் எங்களுடைய கருத்து. எங்களுக்குப் போராடத் தெரியாது. சாலை மறியல் செய்யத் தெரியாது. சாலைகளிலே தடைகளை ஏற்படுத்தத் தெரியாது அல்லது அரசு அலுவலகங்கள் முன்பு நிர்பந்திக்கத் தெரியாது. ஏனென்றால், நாங்கள் இவ்வளவு காலமாக உங்களோடு இருந்தவர்கள். நீங்கள், ஊர்ப் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தன் பிள்ளை தானாக வளரும் என்பதுபோல . . . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. லா. சந்தானம். (குறுக்கீடு)

**திரு. ஜி. நிஜாமுதீன்:** முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

[2000 மே 16

**திரு. ஜி. நிஜாமுதீன்:** முதல்வர் அவர்கள் எங்களை தன் பிள்ளை என்று கருதிய காரணத்தால், ஊர்ப் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானாக வளரும் என்ற நல்லெண்ணத்தில்தான் இருந்தார்கள். ஆனால், தன் பிள்ளைக்கு உணவு இல்லையென்றால் எவ்வாறு வளரும் அந்தக் குழந்தை என்பதை முதல்வர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். முதல்வர் அவர்கள் கடந்த 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் தேதி . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** அரசு கொறடா அவர்கள்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நிஜாமுதீன் அவர்கள் சொல்லும்போது, உங்களோடுதான் இருந்தோம் என்று சொன்னார். எப்பொழுதும், இப்பொழுதும் இந்தச் சமுதாயம் முதல்வரோடுதான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிஜாமுதீன் அவர்கள் வேண்டுமானால் இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** உங்களோடு இருக்கக்கூடிய உரிமையிலேயும், உங்களுடைய பிள்ளை என்ற உரிமையிலேயும்தான் நானும் கேட்டுக்கொண்டு இருக்கிறேனேயொழிய, நாங்கள் வேறு இடத்திலே சென்று கேட்க முடியாது. ஆகவேதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதை நான் இங்கே படித்துக்காட்ட விரும்புகிறேன், அந்த நடையிலே...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. லா. சந்தானம். (குறுக்கீடு) உங்களுக்குப் பேச ஒதுக்கிய நேரம் முடிந்துவிட்டது. உட்காருங்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** ஒரேயொரு நிமிடம், முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. சந்தானம். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மற்றவர்களுக்கு எவ்வளவு நேரம் கொடுத்திருக்கிறீர்கள், நீங்கள்?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** எல்லோருக்குமே 5 நிமிடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவருக்கு 6 நிமிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.



2000 மே 16]

**திரு. ம. அப்துல் லத்தீப்:** ஐந்து நிமிடம்கூடப் பேசவில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** கணக்கு வைத்திருக்கிறோம்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேச வேண்டாம் என்று சொல்லி விடுங்கள். நான் நேரத்தைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். என்ன பேசுகிறீர்கள் நீங்கள்?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** நானும் நேரத்தைப் பார்த்துத்தான் சொல்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** He must speak. He must continue.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, விசுவநாதன் அவர்கள் 5-52-க்குப் பேச ஆரம்பித்தார். அவர் 6-00-க்கு முடித்தார். அதைப்போல, இவர் இப்போது 6-00-க்கு ஆரம்பித்து, 6-09 வரையிலே பேசிக் கொண்டிருக்கிறார். இன்னும் 7, 8 பேர் பேச வேண்டும். (குறுக்கீடு) கொடுக்கக் கூடாது என்பதல்ல.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** விசுவநாதன் அவர்கள் எவ்வளவு நேரம் பேசினார்கள் என்பதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. யார், யார் எவ்வளவு நேரம் பேசினார்கள் என்று கணக்குக் கொடுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** இன்னும் ஏறக்குறைய 6 பேர் பேச வேண்டும். தயவுசெய்து அனைவரும் . . .

**திரு. ம. அப்துல் லத்தீப்:** அவரை complete பண்ணுவதற்குக்கூட விடமாட்டேன் என்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** இல்லையென்றால் கொண்டுவந்த subject-ஐக் complete பண்ண முடியாது. நிஜாமுதீன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** அதற்காகத்தான் நான் பேசவில்லை தெரியுமா? நான் பேசமாட்டேன் என்று சொன்னதற்குக் காரணமே அதுதான்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. ஜி. நிஜாமுதீன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

இரவு 6-10

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 22-12-1999 அன்று, விரைவிலே இந்தச் சமுதாயத்திற்கு இடஒதுக்கீடு வழங்கப்படும் என்ற நம்பிக்கையான செய்தியை அறிவித்தார்கள். அதை விரைவிலே அறிவிக்க வேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், இந்தச் சபையின் வாயிலாக ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். பாட்டாளி மக்கள் கட்சி, முஸ்லீம்களுக்கு....(குறுக்கீடு)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அந்த அறிவிப்பை 2 நாட்களுக்கு முன்பேகூட இங்கே பேசியிருக்கிறேன். எப்போது அது முடியும் என்றும் சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு நாளும் அதையே பேசிக் கொண்டிருந்தால், தினம் தினம் அதே பதிலைச் சொல்லிக்கொண்டிருக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் விரும்புகிறாரா என்று எனக்குத் தெரியவில்லை.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** அதை நினைவுபடுத்தத்தான் விரும்புகிறேனேயொழிய, நான் வேறொன்றும் குறிப்பிட விரும்பவில்லை. அதேபோல, பாட்டாளி மக்கள் கட்சியும் முஸ்லீம்களுக்கு இடஒதுக்கீடு கொடுக்க வேண்டுமென்றும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த, இப்போது மாற்றுத் தலைவராக உட்கார்ந்துகொண்டிருக்கும் திரு. சி.டி. தண்டபாணி அவர்களும், திரு. குழந்தை தமிழரசன் அவர்களும் முஸ்லீம்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கவேண்டுமென்றும் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், இந்த அவையின் வாயிலாக மற்ற கட்சிகளின் நிலையைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். த.மா.கா. முஸ்லீம்களுக்கும், கிருத்தவர்களுக்கும் இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து என்ன நினைத்துக் கொண்டிருக்கிறது? என்ன கருத்தை வைத்துக்கொண்டிருக்கிறது?...(குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) உட்காருங்கள். .(குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எங்களுடைய மக்கள் தலைவர், எங்களுடைய கட்சியினுடைய தலைவர் திரு. மூப்பனார் அவர்கள், முதலமைச்சரோடு ஒரு கூட்டத்திற்குச் சென்று, அங்கேயே, முஸ்லீம்களுக்கு இட ஒதுக்கீட்டை நாங்கள் ஆதரிக்கிறோம்



என்று நன்றாகவே சொல்லிவிட்டு வந்தார்கள். பத்திரிகை வாயிலாக இதைப் படிக்காமல் நம்முடைய நிஜாமுதீன் அவர்கள் இங்கே எங்களுடைய கருத்து என்னவென்று கேட்டுக்கொண்டிருப்பது விந்தையாக இருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி.டி. தண்டபாணி):** திரு. நிஜாமுதீன், நீங்கள் ஒவ்வொரு கட்சியாகக் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. உடனே பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த வெள்ளை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி, இன்றைக்கு இந்த வெள்ளை அறிக்கையிலே, பல்வேறு கட்டங்களிலே, சமூக நீதி காக்கின்ற அளவிலே, இந்த இடஒதுக்கீட்டு முறை அமல்படுத்தப்பட்ட நிலையினை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அதிலே மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்று, 1989-லே தனியாக இடஒதுக்கீடு வழங்கப்பட்டது என்பதனை நானும் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், இந்த வெள்ளை அறிக்கையிலே பொதுத் துறை நிறுவனங்களிலே, அரசுத் துறையிலே 7,51,559 பணியிடங்களிலே மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்கு என்று 1,15,556 இடங்கள் நிரப்பப்பட்டு இருப்பதாகவும், அதேபோல், பொதுத் துறை, கூட்டுறவுத் துறைகளிலே 3,18,755 இடங்களிலே 47,498 இடங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன என்றும் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பேராசிரியர் அவர்களும், நமது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் குறிப்பிடுகிறபோது, 1989-க்குப் பின்னாலேதான் இந்த இட ஒதுக்கீட்டு முறை குறிப்பிடப்பட முடியும்; அதற்கு முன்னால் அதைச் சரியாக அறிந்து கொள்வதற்கு இயலாது என்கின்ற நிலையினை தெளிவுபடுத்தினார்கள். அப்படி இருக்கிறபோது, இந்தப் புள்ளிவிவரம் எப்படி கொடுக்கப்பட்டது என்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளக்கம் அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, backlog என்று சொன்னாலே, ஒரு சட்டம்

போடப்பட்ட பிறகு, அந்தச் சட்டத்தில் கூறப்பட்ட சதவீத இடத்திற்கும், நடைமுறையில் நியமனம் செய்யப்பட்டுள்ளவர்கள் எண்ணிக்கைக்கும் இடையில் உள்ள வேறுபாடுதான் backlog என்பது, உதாரணமாக 16 சதவிகிதம் இருக்கிறபோது, அந்த 16 சதவிகிதத்திற்குக் குறைவாக 10 சதவிகிதம் இருந்தால் 6 சதவிகிதம் backlog. இங்கே கொடுத்திருக்கிற முதல் அட்டவணையில் இருப்பது மொத்த அரசுப் பணியாளர்களின் எண்ணிக்கை ஆகும். அதிலே ஒவ்வொரு பிரிவிலும் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கடைசி அட்டவணையில் கொடுக்கப்பட்டு இருப்பதுதான் உண்மையிலேயே backlog என்பது. இந்த வெள்ளை அறிக்கையே, backlog எவ்வளவு உள்ளது என்பதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிற வெள்ளை அறிக்கையே தவிர, மொத்தத்தில் அரசுப் பணிகளில் ஒவ்வொரு பிரிவினரும் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பதற்காக அல்ல. ஒவ்வொரு பிரிவினருக்கும் அந்த உரிமை இருக்கிறது. நாம் கேட்கிறோம்: சொல்கிறபோது எங்கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் குறைவாக இருக்கிறார்கள் வேண்டுமென்று கேட்பது வேறு. ஆனால் இந்த வெள்ளை அறிக்கையைப் பொறுத்தவரையில், ஓர் அரசாணை இட்டதற்குப் பிறகு, அந்த ஆணை மதிக்கப்படாமல் அதற்குக் குறைவாக எவ்வளவு இருக்கிறதோ, அதுதான் backlog என்ற அடிப்படையிலே இங்கே புள்ளிவிவரமாக கடைசிப் பக்கத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

இரவு 6-15

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனால், 1989-க்கு முந்தைய காலக்கட்டங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்கின்ற ஒரு பிரிவை ஏற்படுத்தாது, பிற்படுத்தப்பட்டோர் என்கின்ற ஒதுக்கீடு 50 சதவிகிதமாக இருந்தது. அப்படி இருக்கும்போது, இங்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற விவரமும் மொத்தமாக பிற்படுத்தப்பட்டோர் என்றுதான் கொடுக்கப்பட்டு இருக்க வேண்டுமே தவிர, இதிலே மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்று எப்படிப் பிரித்துக் காட்டினார்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி.

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்குத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரொம்ப தீவிரமாக ஆலோசித்த பிறகுதான், 1989-க்குப் பிறகு இந்த அறிக்கையைச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே சொல்லியிருக்கிற மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் இருக்கிற, backlog என்று சொல்லப்படுவது, 1989-லே 20 சதவிகிதம், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்டதற்குப் பிறகு, உருவாகி இருக்கிற குறைபாடு. அதைத்தான் சொல்லியிருக்கிறார்.



1989-க்குப் பிறகு, இப்போது இந்த 11 ஆண்டுகளிலே ஏற்பட்டு இருக்கிற backlog அதைத்தான் சொல்லியிருக்கிறார். அதற்கு முன்பு இருந்தது கிடையாது.

**திரு. லா. சந்தானம்:** அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். 1989-க்குப் பின்னால் வருவதுதான் backlog vacancies என்பதை நானும் ஏற்றுக்கொண்டு, அதிலே 5263 இடங்கள் காலியாக இருக்கின்றன என்பதை நானும் ஒத்துக்கொள்கின்றேன். ஆனால், அதற்கு முன்னாலேயே, இந்த மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அந்த இடஒதுக்கீட்டிலே மிகுந்த வஞ்சனை செய்யப்பட்டு இருக்கிறது என்பதைத்தான் நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே, இனியாவது இந்த அளவிற்கு இந்த வெள்ளை அறிக்கையைக் கொடுத்து, தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பல்வேறு துறைகளிலும் இந்த இடஒதுக்கீடு சரியாகச் செயல்படுத்தப்படவில்லை என்பதனைத் தெளிவுபடுத்திய இந்த அரசுக்கு என்னுடைய உளப்பூர்வமான பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன், இந்த விஷயத்திலே நான் நமது மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்களோடு ஒத்துப்போகின்றேன். பாதிக்கப்பட்ட நாங்கள் 5 ஆண்டுகளுக்கு என்பதனை, இந்தச் சந்தர்ப்பத்திலே ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்பதை எடுத்துச் சொல்லி, நீங்கள்தான் இந்தப் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் காவல் அரணாக இருக்கிறீர்கள் என்பதும் ஒரு வகையிலே உண்மை என்பதையும் ஏற்றுக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) அதை உங்களுடைய காலத்திலே, ஓர் ஆண்டு காலத்திற்குள்ளாக நீங்கள் இந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு, இன்றைக்கு ......

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்களுக்கு சந்தேகம் இருக்கத் தேவையில்லை. ஏதோ ஓராண்டு காலத்திற்குள்ளே முடித்துவிடுங்கள். பிறகு நீங்கள் வரமாட்டீர்கள் என்று சொல்வதைப்போல இருக்கிறது. கவலைப்படாதீர்கள். நானே இந்த அவையிலே அமர்ந்து, மறுபடியும் அந்தக் கணக்கைச் சொல்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஜனநாயகத்தை மிகவும் மதிக்கின்றவன். எங்களுடைய தலைவர்களெல்லாம் இந்த நாட்டுச் சுதந்திரத்திற்காக போராடிய தியாகிகள். எனவே, மக்களுடைய தீர்ப்பை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றவர்கள். அப்படி மக்கள் தீர்ப்பினை அளிப்பார்களேயானால், அதற்கு யாரும் மறுப்புச் சொல்ல முடியாது. நான் சொல்வது, அந்தக் கால அவகாசத்தை அதிகமாக எடுத்துக்கொள்ளாது, நீங்கள் தென் பகுதிகளிலே அந்த இனக் கலவரத்தை

[திரு. லா. சந்தானம்] [2000 மே 16

முறியடிக்க வேண்டும், போக்க வேண்டும் என்பதற்காகத்தான் நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையில் ஒரு கமிஷனைக்கூட அமைத்து, அவர்களுக்கு எப்படியெல்லாம் வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தர வேண்டுமென்கின்ற நோக்கத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே, இதையும் மனதிலே கொண்டு, ஓராண்டுக்குள் நீங்கள் முடிக்க முன்வரவேண்டுமென்றுதான் நான் கேட்டுக் கொண்டேனே, தவிர, வருகின்ற தேர்தலைப் பற்றியோ, தேர்தலில் வருகின்ற முடிவுகளைப் பற்றியோ நாம் இப்போது கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. எனவே, தயவுசெய்து நீங்கள் அதற்கு உரிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். என்னைப் பொறுத்த அளவிலே, பலமுறை சுட்டிக்காட்டியிருக்கிறேன். பல்கலைக்கழகங்கள், கல்வித் துறையிலேதான் மிகுந்த இடங்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்படாமல் இருக்கின்றன. எனவே, அதிலே ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலே பயின்றவர்கள் இல்லை என்கின்ற நிலை மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்திலே இருக்கிறது. ஆகவே, அந்தப் பயிற்சிப் பள்ளிகள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்காகத் தனியாகத் தொடங்கப்படுகின்ற ஒரு நிலையை, இந்த வெள்ளை அறிக்கையிலே நீங்கள் தெளிவுபடுத்தி இருப்பீர்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால், அது இடம் பெறவில்லை. எனவே, இந்த ஆண்டிலே ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை இந்த மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்காகத், தனியாக ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லி, இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன், நன்றி. வணக்கம்.

இரவு 6-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைவரும், அனைத்தும் பெற வேண்டும், எல்லோரும் இன்புற்று வாழவேண்டுமென்ற அடிப்படையில், தரைத்தட்டில் கீழே வாழக்கூடிய மக்களை மேல்தட்டில் வாழக்கூடிய மக்களுக்கு சரிசமமாகக்கொண்டு வர வேண்டும் என்ற முயற்சியில் மத்திய அரசு, குறிப்பாக அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள், இந்த இடஒதுக்கீட்டை சட்டப்பூர்வமாக ஆக்கியிருக்கின்றார். அதோடு தமிழகத்து மக்கள் அனைவரும் இன்புற்று வாழமேண்டுமென்ற நிலையான உறுதிப்பாட்டை அடிப்படையாகக் கொண்ட நம்முடைய முதலமைச்சர் அவர்களும், இந்தப் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அனைத்து வசதிகளும்கூடக் கட்டாயமாகக் கிடைத்தாகவேண்டும்....

**திரு. மு. அப்பாவு:** Point of order.



2000 மே 16]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது பேசுங்கள், இப்போது உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** 69 சதவிகிதம் என்பதை ஆக்கியிருக்கிறார்களா என்று கேட்கிறேன்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் கடைசியில் பேச இருக்கின்றீர்கள். அப்போது பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் கடைசியாகப் பேசும்போது சொல்லுங்கள். இப்போது நேரம் இல்லை.

**திரு. சி. வேலாயுதன்:** அந்த மக்களுக்கு அனைத்து வசதிகளும் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில், எப்படி இதை அமல்படுத்தி, யாருக்கும், எந்தச் சலுகையும் கிடைக்கவில்லை என்ற நிலை வரக்கூடாது என்ற உறுதிப்பாட்டில், இந்த வெள்ளை அறிக்கை வைத்து, அனைவருடைய கருத்தையும் கேட்டு, ஒரு சிறந்த முடிவு எடுத்து, இந்தத் தமிழகத்தில் வாழக்கூடிய அத்தனை மக்களையும் மேம்படுத்த வேண்டுமென்ற நிலையை எடுத்திருக்கக்கூடிய இந்த முயற்சியை நிச்சயமாகப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதேசமயத்தில் அனைத்து சமுதாயத்திலும், வருமான வரம்பு கோட்டிற்குக் கீழே வாழக்கூடிய மக்கள் இருக்கின்றார்கள். அனைத்து சமுதாயத்திலும் நல்ல நிலையில் வாழக்கூடிய மக்களும் இருக்கின்றார்கள். எனவே, ஒரு சமுதாயத்திற்கு என்று ஒதுக்கக்கூடிய அந்தச் சலுகையை, அதே சமுதாயத்தைச் சேர்ந்த வாய்ப்பும் வசதிகளும் பெற்றவர்கள் மட்டும்— எனக்கு முன்னால் நிஜாமுதீன்கூட, இதைக் கோடிட்டுக் காட்டினார்— பெற்றுக்கொண்டு, அந்தச் சமுதாயத்தைச் சார்ந்த ஏழைகளுக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்பைச் தட்டிப் பறிக்கக்கூடிய ஒரு நிலை இருக்கின்றது. உதாரணமாகச் சொல்லப்போனால், ஒரு குடும்பத்தில், தாய், தந்தை, அவர்களுடைய மூன்று குழந்தைகள், ஆக ஐந்து பேரும் அரசுப் பணியில் இருக்கின்றார்கள். பக்கத்து வீட்டில் பார்த்தால், அதே அளவு படித்த மக்கள் இரண்டு, மூன்று பேர் அதே வீட்டில் இருக்கின்றார்கள். வாய்ப்புக் கிடைக்கவில்லை. நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், அரசு அளிக்கக்கூடிய சலுகையை.... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேலாயுதன் அவர்கள் வாதாடுவது, creamy layer என்று சொல்லப்படுகிற அந்தத் தகுதியுடையவர்களை, இந்தச் சலுகை பெறாமல் ஒதுக்கவேண்டும் என்பது சமூக நீதி என்ற கொள்கை அடிப்படையிலே சமுதாயங்கள் தாழ்ந்துபோய்விட்டபோது, அந்தச் சமுதாயங்களில் சில பேருக்கு இடம் கொடுப்பதன் மூலமாக, சமூக சமத்துவம் ஏற்படுத்துவதற்கு கருதுகிறபோது, பொருளாதார

[பேராசிரியர் க. அன்பழகன்] [2000 மே 16

அடிப்படையிலேயோ, வாய்ப்பு வசதிகள் அடிப்படையிலேயோ அவர்களைப் பிரிக்க முடியாது. அப்படிப் பிரிக்கிறபோது, ஏற்படக்கூடிய விளைவு, அந்தப் பின்தங்கிய சமுதாயத்தில், முன்னேறி வருபவர்களை நிறுத்திவிட்டு, தடுத்துவிட்டு, மற்றவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்து, அவர்களால் மற்றவர்களுடன் போட்டி போட முடியாத ஒரு நிலைமை ஏற்படும். ஆக போட்டியும் இருக்கிறது. சமூக நீதியும் இருக்கிறது. இரண்டையும் இணைக்கின்றபோது, Creamy layer ஒதுக்கப்படுவது சரியான வழியல்ல. அந்த அடிப்படையிலேதான், அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள் 9000 ரூபாய் உச்சவரம்பு வைத்து, அவர்கள்மட்டுமே பிற்படுத்தப்பட்டவர்கள் என்று ஏற்கலாம் என்று சொன்னபோது, அதை எதிர்க்க வேண்டிய கடமை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஏற்பட்டது.

**திரு. சி. வேலாயுதன்:** இந்த விஷயத்தில், என்னுடைய கருத்து என்னவென்று சொன்னால், அதே சமுதாயத்தில் உள்ள இன்னொருவருக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்புப் போய் விடுமோ என்ற அச்சத்தில்தான் நான் இதைச் சொன்னேன். எனவே, இன்னொன்று, மற்ற சமுதாயத்திலும், இந்த அனைத்து வாய்ப்புகள் இல்லாத மக்கள் சதவிகிதம் மிகக் குறைவாக இருக்கும், அதையும் கணக்கில் கொண்டு இன்னொரு வகையில் ஓர் ஒதுக்கீடு என்று, அதாவது வருமான வரம்புக் கோட்டிற்குக் கீழே வாழக்கூடியவர்கள், எந்தச் சமுதாயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் என்று ஓர் ஒதுக்கீடு கூட கொண்டு வர முடியுமா என்று அரசு பரிசீலிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சமூக நீதி என்ற காரணத்தால் நான் விளக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். மிகவும் வாய்ப்புக் குறைந்தவர் என்ற அடிப்படையிலேதான், பொறியியல் கல்லூரி மருத்துவக் கல்லூரி முதலான தொழில் கல்லூரிகளில், தேர்வு செய்யப்படுகிற மாணவர்களில், கிராமப்புறப் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு 15 விழுக்காடு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேமுறையிலேதான், இயல்பாகவே, மிக, மிகப் பின்தங்கிய பிள்ளைகளுக்கு ஒரு வாய்ப்பு வேண்டும் என்பதற்காக, பட்டதாரி அல்லாத குடும்பத்துப் பிள்ளைகள், ஒரு மாவட்டத்தில் முதல் நிலையில் தேர்வு பெறுகிற 10 பேருக்குமேல் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. அது ஒரு தனிப்பட்ட வகையில் Consideration என்ற முறையில் அவர்களுக்கு உதவுவது என்பது இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை. ஆனால் சமூக நீதி என்பது ஒரு காலத்திலே ஆதிக்கம் பெற்ற சமூகத்தை எதிர்த்து, தாழ்த்தப்பட்ட, பாதிக்கப்பட்ட சமூகம் தலையெடுப்பதற்காக வகுக்கப்பட்ட நீதியாகும்.



2000 மே 16]

இரவு 6-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வேலாயுதன், சீக்கிரம் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** அதேபோன்று, இந்த ஒதுக்கீடு வந்ததே, சில சமுதாய மக்கள் முற்பட்ட சமுதாய மக்களோடு போட்டி போட்டு முன்னேற முடியாத நிலை இருப்பதைக் கருத்தில் கொண்டு, அந்த மக்கள் மேலே வர வேண்டும் என்ற நோக்கத்தில் கொண்டு வந்தது. ஆனால், எனக்கு ஒரு சந்தேகம். அந்த முற்பட்ட மக்களோடு போட்டி போடக்கூடிய வகையில், இந்த மக்களைக் கொண்டு வர வேண்டும். அதற்கு கல்வி மூலமாக, அவர்களுடைய தகுதியை வளர்ப்பதற்கு, அதாவது ஒதுக்கீட்டிற்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் அரசாங்கம் வழங்குகின்றதோ, அதே முக்கியத்துவத்தை அனைத்துத் தரப்பிலும் மற்ற மக்களோடு போட்டியிட்டு முன்னேறக் கூடிய வகையில் இந்த மக்களுக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ, அவற்றை அரசு நிச்சயம், முனைந்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, வேற்றுமையில் ஒற்றுமை என்பது நம்முடைய பண்பாடு. இந்த அடிப்படையில் அனைவருக்கும் பாதுகாப்பு என்ற நிலையில் அரசு எடுத்துக் கொண்டிருக்கக் கூடிய அனைத்து முயற்சிகளுக்கும் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்து, நன்றி சொல்லி, வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித் திருநாடு, வந்தே மாதரம், வந்தே மாதரம், பாரத் மாதா கி ஜெய்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. அன்பரசன்.

***திரு. சி. அன்பரசன்:** மாண்புமிகு சட்டப் பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வெள்ளை அறிக்கையின்மீது எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துகளைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த வெள்ளை அறிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இங்கே தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால், 'சட்டியில் உள்ளது தான் அகப்பையில் வரும்' என்ற பழமொழி உண்டு. அவர் உள்ளம் தூய்மையாக இருக்கின்ற காரணத்தினால், இந்த அரசு தூய்மையான நெறியில் செல்லுகின்றது என்ற நம்பிக்கையிலே இந்த வெள்ளை அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட இயக்கத்தைப் பொறுத்தவரையில், 'தொட்டால் தீட்டு, விரல் பட்டால் தோஷம்' என்று இருந்த கண்மூடிப் பழக்கங்களை மண்மூடிப் போகச் செய்த திராவிட இயக்கத்தின் வரலாறுதான் இந்த இடஒதுக்கீடு. இது வரலாற்றுச் சின்னமாக

[திரு. சி. அன்பரசன்] [2000 மே 16

இன்றைக்கு வளர்ந்து, வளர்ந்து எந்த நிலையில் இருக்கின்றது என்பதை இந்த வெள்ளை அறிக்கை வெளிப்படையாகச் சொல்கின்றது. இதனாலே back log ஆக எவ்வளவு பேர் இருக்கின்றார்கள் என்ற தகவலைச் சொல்லி இருக்கின்றது இந்த அறிக்கை.

5 ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்படும் என்பதைப் பாராட்டுகின்ற நான் இந்த ஓராண்டுக்குள்ளாக வருகின்ற புதிய அத்தனை காலியிடங்களுக்கும் இந்தப் பிரிவு கட்டாயமாக அமலாக்கப்பட வேண்டும்; பின்னடைவுப் பதவிகளை படிப்படியாக, விரைவாக அமலாக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சுருக்கமாக, எங்களுடைய தென் மாவட்டங்களிலே திட்டமிட்டு ஒரு வதந்தி பரப்பப்படுகிறது. இந்த அரசு பின்தங்கிய சமுதாயத்தை, முக்குலத்தோர் சமுதாயத்தை, ஏதோ ஓர் அடிப்படையில் புறக்கணிக்கிறது என்ற ஒரு தவறான வதந்தியை, எண்ணத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால், எங்களைப் பொறுத்தவரையில், நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் எல்லோரையும் எல்லா நேரத்திலும் இரு விழிகளாகக் கருதக் கூடிய ஒப்பற்ற மனித நேயம் படைத்தவர் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதிலே கருத்து வேறுபாடு இல்லை. ஆனாலும், நான் சுருக்கமாக ஒரு கோரிக்கையை விடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இரவு 6-30

முக்குலத்தோர் சமுதாயத்தை சென்ற ஆட்சி தேவர் என்று அறிவித்தது. அறிவித்த அந்த அரசு, எந்த ஒரு செயல் திட்டத்தையும் அறிவிக்கவில்லை ஏதோ, அறிவிக்க வேண்டும் என்ற பெயரிலே அறிவித்துவிட்டு, ஒரு முற்போக்கான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. பொதுவாக, கள்ளர் என்று எடுத்துக்கொண்டால், அதிலே சீர்மரபினர் என்ற ஒரு பிரிவும் எங்கள் பகுதியிலே கந்தர்வகோட்டை கள்ளர் என்றும், தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டப் பகுதியில் கூத்தப்பர் கள்ளர் என்றும், மதுரை பகுதியிலே பிறமலைக் கள்ளர் என்றும், அவர்கள் எல்லாம் சீர் மரபினராகப் பிரித்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். அதைப்போல மறவர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் சீர்மரபினராக இருக்கின்றார்கள். எங்களுடைய மாவட்டத்தில் திருமயத்திலே அந்தப் பிரிவு இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இதோ முடித்துவிடுகிறேன். கள்ளர் என்ற பிரிவில் வருகின்றவர்கள் அத்தனையையும் ஒன்றாகச் சேர்க்க வேண்டும். காலத்தின் அருமை கருதி சுருக்கமாகச் சொல்கின்றேன்.



2000 மே 16] [திரு. சி. அன்பரசன்]

கந்தர்வகோட்டையில் இருக்கின்ற கள்ளர்கள் ஆலங்குடியில் பெண் கொடுக்கின்றார்கள், பெண் எடுக்கின்றார்கள். ஆனால் ஆலங்குடியில் இருக்கின்ற கள்ளர் பின்தங்கிய கள்ளர். கந்தர்வகோட்டையில் இருக்கின்றவர் சீர்மரபினர். இப்படி பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் ஒரு குழு அமைத்தோ, அல்லது டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு பெருமுயற்சி எடுத்துக்கொண்டோ, மன மாற்றத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டதாரிகள் Creamy Layer என்று கருதப்படுகிறார்கள். பட்டதாரி என்பவர் ஏதோ ஒரு பட்டாதாரி அல்ல. நான் ஒரு பட்டதாரி. ஆனால், நான் அளவோடு குழந்தைகளைப் பெற்றவன். மேல் படிப்பு படிக்க வைக்கும்போழுது எவ்வளவு சிரமப்பட்டேன் என்பது எனக்குத்தான் தெரியும். அதை நான் உணர்வின் அடிப்படையிலே, அந்த பாதிப்பின் அடிப்படையில் சொல்கின்றேன். பட்டதாரி என்பது பிரச்சினை அல்ல. ஆனால், அந்தப் பட்டதாரிக்கு எவ்வளவு வருமானம் வருகிறது, அவனுக்கு எவ்வளவு செல்வம் இருக்கிறது, அவனுக்கு வேலைவாய்ப்பு இருக்கிறதா என்பதையெல்லாம் கருத்திலே கொண்டு, அந்த படிப்புச் சலுகைகளை வழங்குகின்றபோது அவற்றை பரிசீலிக்க வேண்டும்.

டாக்டர் கலைஞர் அவர்கள் ரூ.25,000-ஆக இருந்த அந்தத் தொகையை இன்றைக்கு உச்சவரம்பாக ரூ.50,000 என்று ஆக்கியிருக்கின்றார்கள். அதற்காக நான் பாராட்டுகின்றேன். நன்றி கூறுகின்றேன். அதோடு இந்தப் பட்டதாரிகளுடைய பிரச்சினையைத் தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும். பட்டதாரிகளே தவிர, நாங்கள் எல்லாம் பணக்காரர்கள் இல்லையே என்ற உணர்வோடு இந்த அரசு இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறி வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட அந்தச் சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்கு, எந்த அளவில் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு வேண்டுமென்ற பிரச்சினைக்குப் பின்னால் இப்படி ஓர் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு முன்னாலே, ஏற்கெனவே இருந்த சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு ஓர் ஆண்டுகாலம் என்று எண்ணுகின்றேன், அது அரசினுடைய துறையைச் சேர்ந்த பல்வேறு அதிகாரிகளையெல்லாம் வரவழைத்து, தங்களுடைய பிரச்சினைகளை விவாதித்து, ஒரு முடிவை அந்தக் குழு

எடுத்திருக்கும் என்று நான் கருதுகின்றேன். அந்தக் குழு எடுத்த முடிவை அல்லது அந்தப் பரிந்துரையை இந்த வெள்ளை அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தால்கூடக் கொஞ்சம் எளிதாக இருந்திருக்கும். பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு எந்த வகையிலே நாம் நடவடிக்கை எடுக்கலாம் என்பதை நாம் கண்டறிய முடியும். அது ஒன்று. இன்னும் ஒன்று; அந்தத் துறையைப் பொறுத்தமட்டில், இந்த ஐந்து ஆண்டு காலத்திற்குள்ளே அது பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று ஒரு கருத்து பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அந்தக் காலம் சற்று அதிகம் என்பது என்னுடைய உணர்வு. அதை எந்த அளவிற்குக் குறைந்த காலத்தில் ஓர் ஆண்டுகாலத்திலே அல்லது இரண்டு ஆண்டுகாலத்திலே நாம் சரிசெய்து கொள்ளமுடியுமா என்பதைப்பற்றி அரசு பரிசீலனை செய்ய வேண்டும்.

இன்னொன்று, துறைவாரியாக, இந்தத் துறையில் எவ்வளவு ஒதுக்கீடுகள் இருக்கின்றன என்று அதைச் சொன்னாலே, இந்த வெள்ளை அறிக்கையிலே விவரமாகச் சொல்லியிருந்தால், இன்னும் கொஞ்சம்கூடத் தெளிவாக அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கண்டுபிடிக்க முடியும். துறைவாரியாக விவரங்களைச் சொல்கின்றபோது நம்முடைய மாவட்டத்திலே தாசில்தார் அல்லது டெபுட்டி தாசில்தார் அவர்களுக்குக் கீழே வருகின்றவர்கள், அந்த மாவட்டத்திற்குள்ளே எவ்வளவு இடம் இருக்கிறது, எவ்வளவு ஒதுக்கீடுகள் வேண்டும், அதிலே யார் யார் இடம் பெற வேண்டும் என்ற விவரங்களைச் சொன்னாலே, இந்தப் பிரச்சினைக்கு சுமூகமாக ஒரு நல்ல தீர்வை நாம் ஏற்படுத்திக்கொள்ளமுடியும். அந்த வகையிலே துறைவாரியாக இந்தப் பிரச்சினைகளைச் சந்திக்கின்றபோது பிரச்சினைகளே ஏற்படாமல் அந்தத் துறையைச் சார்ந்த பிற்படுத்தப்பட்ட அல்லது ஆதிதிராவிடர் பழங்குடியினத்தைச் சார்ந்தவர்களுக்கு எந்த அளவிற்கு இடஒதுக்கீட்டைத் தரமுடியுமோ அந்த அளவிற்குத் தந்தால், அதில் எந்தவிதமான கேடும் இல்லாமல், எந்தவிதமான தொய்வும் இல்லாமல் விஷயங்களை முடித்துக்கொள்ள முடியும்.

குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பார்க்கின்றபோது, பழங்குடியினர் என்ற ஒரு வகுப்பினர் இருக்கின்றார்கள். அவர்கள் இருப்பது பூராவும் மலையிலே, அரசுக்குச் சொந்தமான வனத் துறையில் குடியிருக்கின்றவர்கள். ஆனால், அங்கேயிருக்கின்ற அரசுத் துறை என்று சொல்கின்ற, பொதுத் துறை என்று சொல்கின்ற அந்தத் தோட்டக் காடுகளிலே பணியிடங்கள் வருகின்றபோது, இந்த ஒரு சதமானம் என்று சொல்கின்ற அல்லது அதற்கு மேலே வந்தாலும்கூட, அவர்களுக்கு அப்படிப்பட்ட இடத்தைக் கண்டறிந்து கொடுப்பதற்கான சூழ்நிலை இல்லை. அவர்கள் அந்த வாய்ப்பைப் பெறாத ஒரு சூழ்நிலை இருக்கிறது.



அதனால்தான் நான் சொல்ல வேண்டியது, இந்தத் துறைவாரியான விவரங்களைத் தருகின்றபோதுதான் மாவட்ட ரீதியாக இந்தக் குறைபாடுகளை நாம் களைவதற்கும் தீர்த்துக்கொள்வதற்கும் ஒரு நல்ல வாய்ப்பினைப் பெற முடியும். அந்த அடிப்படையிலே இந்த வெள்ளை அறிக்கையிலே சில குறைபாடுகள் ஒரு பக்கத்திலே இருந்தாலும்கூட அவற்றைச் சீர் செய்வதற்கான உரிய நடவடிக்கைகளை அரசு விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விவரங்களைத் தருகின்றபோது இதிலே சிலவற்றைச் சொல்கின்றார்கள். அதாவது 1,2,3,4 என்று பல்வேறு வகுப்புகளை-கிளாஸ்களை எல்லாம் சொல்கின்றபோது அதற்குள்ளேயுள்ள அதனுடைய புள்ளிவிவரங்களை இங்கே பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். அதிலே இருக்கின்ற குறைபாடுகளைக் களைவதற்கு எந்த வகையிலே நாம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி அரசு ஆராய வேண்டும். அந்த அடிப்படையிலே பிற்படுத்தப்பட்டோர் துறையைச் சேர்ந்த மக்களுக்கு உரிய இடம் கிடைப்பதற்கான நல்ல வாய்ப்பினை அரசு உருவாக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி, முடிக்கின்றேன்.

இரவு 6-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** துணைத் தலைவர் அவர்களே, அரசு பணியிடங்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோரின் இட ஒதுக்கீடு சம்பந்தமான வெள்ளை அறிக்கைமீது தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பாக எனது கருத்துகளை எடுத்து வைக்க முன்வருகின்றேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த மாமன்றத்திலே வெள்ளை அறிக்கையை இங்கே எடுத்துவைத்து இந்த மாமன்றத்திலே உள்ள அனைத்து அரசியல் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்துகளைக் கேட்டறிந்து 5 ஆண்டு காலத்திலே இதனுடைய குறையை நிறைவு செய்வோம் என்று இங்கே எடுத்துக்கூறி அதற்கு ஒரு குழுவையும் அமைப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்றுப் பாராட்டுகிறேன். சமூக நீதிக்காக இன்றையதினம் இம்மான்றத்திலே இந்த வெள்ளை அறிக்கையைச் சமர்ப்பித்து கருத்துகளை இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்து வைத்ததற்காக எனது நன்றியைச் சொல்லிக் கொண்டு, இஸ்லாமிய சமுதாயத்தின் சார்பாக எனது கருத்துகளை எடுத்துச் சொல்வதிலே நான் பெருமைப்படுகிறேன். இஸ்லாமிய மக்களுக்காக உச்ச

[திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்] [2000 மே 16

நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வந்த பிறகு முடிவு அறிவிக்கப்படும் என்ற கருத்து, செய்திகள் மூலமாகப் பத்திரிகையிலே வந்ததற்குப் பிறகு, இஸ்லாமிய மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்தவர்கள், சற்று ஏக்கத்தோடும் தாக்கத்தோடும் காத்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்து வைக்க முன்வருகிறேன். திராவிட பாரம்பரியத்திலே வெண்தாடி வேந்தர், ஈரோட்டுச் சிங்கம், பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு, தமிழகத்தினுடைய தன்மானத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு தான் இங்கே இது போன்ற ஓர் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை நிலைப்படுத்தப்பட்டிருக்கிறது. 1990-லே இந்த வெள்ளை அறிக்கையிலே பக்கம் 5-லே குறிப்பிடப்பட்டபடி பொதுப் பட்டியலிலே 31 சதவிகிதமும், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே 30 சதவிகிதமும், சீர்மரபினரிலே 20 சதவிகிதமும், ஆதிதிராவிடர்களுக்கு 18 சதவிகிதமும் பழங்குடியினருக்கு 1 சதவிகிதமும் வழங்குகின்ற வகையில் ஒதுக்கீட்டுப் புள்ளிவிவரத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 11-5-1999-லே அமைச்சரவையைக் கூட்டி இந்த இடஒதுக்கீடு சம்பந்தமாக எப்படி செயலாற்ற வேண்டுமென்று ஒரு திட்டத்தையும் உருவாக்கிக் கொடுத்து இருக்கிறார்கள். அதற்குப் பின்னால் 2-12-1999-லே கலைவாணர் அரங்கிலே உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆறாவது மாநாட்டிலே நிச்சயமாக இட ஒதுக்கீட்டை இஸ்லாமிய சமுதாயத்திற்குச் செய்து கொடுப்பேன் என்ற ஒரு வாக்குறுதியை அளித்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, சட்டத்திலே இடம் இல்லாவிட்டாலும், என் இதயத்திலே இடம் இருக்கிறது என்று சொல்லித்தான் மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் இஸ்லாமிய சமுதாய மக்களுக்கு எண்ணற்ற நன்மைகளைச் செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு நன்றி சொல்லிப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உருது பேசும் தக்கிலி முஸ்லீம்களையும், லெப்பா ராவுத்தர் முஸ்லீம்களையும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திருக்கிறீர்கள். நபிகள் பிறந்த தின விழாவிற்கு விடுமுறை அளித்திருக்கிறீர்கள். கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுக்கு சிலை வைப்பதற்குப் பதிலாக கல்லூரி அமைத்துக் கொடுத்து இருக்கிறீர்கள். அதேபோன்று இன்றையதினம் உருது அகாடமியை அறிவித்திருக்கிறீர்கள். ஆகவே இப்படி நல்ல திட்டங்களை வகுத்துக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற தங்களிடம்தான் இஸ்லாமிய சமுதாய மக்கள் இந்த இடஒதுக்கீட்டை குறிப்பிட்டுக் கேட்க ஆசைப்பட்டு ஏக்கத்தோடும், தாக்கத்தோடும் இன்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். நாடாளுமன்றத் தேர்தலிலே நீங்கள் ஒரு கையேடு வெளியிட்டு 'நான் யார்' என்ற புத்தகத்தை வெளியிட்டு இஸ்லாமிய மக்களுக்கு அறிவிப்புச் செய்திருக்கிறீர்கள். அதற்குப் பின்பு 7-5-1999-ல் நடைபெற்ற சட்டசபையினுடைய அறிவிப்புக் கூட்டத்திலும் நீங்கள் அறிவிப்புச் செய்திருக்கிறீர்கள். அதற்குப் பின்னால் 22-12-1999ல் எழும்பூர் ஹோட்டல் இம்பீரியலில் நடந்த இஃப்தார் நிகழ்ச்சி ரம்ஜானுடைய நோன்பு நோற்கும் நிகழ்ச்சியிலே நீங்கள் அறிவிப்புச் செய்திருக்கிறீர்கள். அதற்குப் பின்னால் நடைபெற்ற இடைத் தேர்தல், திருச்சி, அறந்தாங்கியினுடைய தேர்தலிலேயும் நாங்கள் இஸ்லாமிய மக்களிடத்திலே ஓட்டு கேட்கச் செல்லுகின்றபோது நிச்சயமாக தமிழகத்தினுடைய முதல்வர் கலைஞர் அவர்கள் என்று உறுதியிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். உள்ளதைச் சொல்வோம்; சொன்னதைச் செய்வோம் என்ற சொல்லுக்குச் சொந்தக்காரராக இருக்கக்கூடிய முதல்வர் அவர்கள், இந்தச் சட்டமன்றப் பேரவையினுடைய கூட்டத்தொடரின் இறுதியிலேயே நிச்சயமாக அறிவிப்புச் செய்வார்கள் என்பதை ஆவலோடு இந்த நேரத்தில்...



2000 மே 16] [திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்]

இரவு 6-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு. (குறுக்கீடு)

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** தொகுதிப் பிரச்சினையைப் பேச வேண்டும். ஒரேயொரு நிமிஷம், பேசி முடித்துவிடுகிறேன். தயவு செய்து ஒரேயொரு நிமிஷம் கொடுங்கள் விரைந்து பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு:

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அல்லும் பகலும் உழைத்த அண்ணல் அம்பேத்கர் அவர்கள் வாழ்ந்த இந்தப் புண்ணிய பூமியில், அவர்கள் எண்ணிய எண்ணங்களையெல்லாம் தமிழகத்திலே ஈடேற்றிய பெருமை, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஆயிரக்கணக்கான பள்ளிகளை ஆரம்பித்து அவர்களை முன்னேற்றிய பெருமை, பெருந்தலைவர் காமராஜர் அவர்களையே சாரும்.

மகாத்மா காந்தியடிகள் இந்தியத் திருநாட்டை, தாழ்த்தப்பட்ட ஒருவர் ஆட்சி செய்ய வேண்டுமென்று ஒரு கனவு கண்டார். அந்தக் கனவை நனவாக்கிய பெருமை, பெருந்தலைவர் காமராஜருடைய வழியில் வந்த மக்கள் தலைவர் ஐயா ஜி.கே. மூப்பனார் அவர்களையே சாரும். சங்கர் தயாள் ஷர்மா அவர்கள் இந்த நாட்டினுடைய ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றபோது அடுத்த ஜனதாபதி யார் என்று கேட்டபோது, அனைத்து அரசியல் கட்சிகளும் மழுப்புகின்ற நிலையில், மக்கள் தலைவர் ஐயா ஜி.கே. மூப்பனார் ஒருவர்தான், அடுத்த ஜனாதிபதி திரு. கே.ஆர். நாராயணன்தான் என்று உறுதிபடக் கூறி இந்த நாட்டில் (குறுக்கீடுகள்) தாழ்த்தப்பட்ட—

[2000 மே 16

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, இதிலே பிரச்சினையே தேவையில்லை. நானும் அவரும் சேர்ந்துதான் சொன்னோம். இரண்டு பேரும்தான் சொன்னோம். நானும், திரு. மூப்பனார் அவர்களும் சேர்ந்துதான் சொன்னோம் அந்தக் கருத்தை. நீங்கள் தனியாகப் பிரித்து தேவையில்லாமல் பெரிதாக்க வேண்டாம்.

**திரு. கே. சுப்பராயன்:** துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு மிக முக்கியமான விஷயம். இந்தியாவினுடைய முதல் குடிமகனாக இருக்க பெருமதிப்பிற்குரிய திரு. கே.ஆர். நாராயணன் அவர்களைத் தேர்வு செய்ததில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு மிக முக்கிய பங்குண்டு என்கிற வரலாற்று உண்மையை மறந்துவிடக் கூடாது; மறைத்துவிடக் கூடாது.

**திரு. ஜி.கே. மணி:** துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** அப்படிப்பட்ட மக்கள் தலைவர் ஐயா அவர்களுடைய இயக்கத்தில் (குறுக்கீடுகள்) இந்த வெள்ளை அறிக்கையிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பைத் தந்தமைக்கு உங்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களும், நம்முடைய பிந்தேஸ்வரி பிரசாத் மண்டல் ஆகியோரும் சமூகத்தில் ஒரு சமுதாயம் கல்வி அறிவு பெறாமல் இருக்கலாம், பொருளாதாரத்திலே பின் தங்கியிருக்கிலாம்; ஆனால், சமூகத்திலே சமூக நீதியோடு, சமூகத்திலே அந்தஸ்தோடு வாழவேண்டும் என்பதை உறுதிபடக் கூறியவர்கள். அந்த அடிப்படையில்தான் 1954 ஆம் ஆண்டு மாநிலங்கள் ஒருங்கிணைப்பிற்குப் பின் முதன்முதலாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் இந்த இடஒதுக்கீட்டுக் கொள்கையை முறைப்படுத்திய பெருமை பெருந்தலைவர் காமராஜர் அவர்களையே சாரும் என்பதை நான் பெருமையோடு இந்த நேரத்திலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் வழியில் வந்த மக்கள் தலைவர் ஐயா ஜி.கே மூப்பனார் அவர்கள் நீதித் துறையிலும் இடஒதுக்கீடு வேண்டுமென்று குரல் கொடுத்தார் அப்படிக் குரல் கொடுத்ததும் நம்முடைய தமிழ் மாநில காங்கிரஸ் தான் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். ஆனால், இந்த இடஒதுக்கீட்டுக் கொள்கையைப் பொறுத்தமட்டில் 1967-க்குப் பின்பு இடஒதுக்கீட்டுக் கொள்கை இருந்ததே தவிர, அது முழுமையாக வெற்றி பெறவில்லை



2000 மே 16] [திரு. மு. அப்பாவு]

என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம், 1979 ஆம் ஆண்டு, 10 பணியிடங்களுக்கும் குறைவாகப் பணியிடங்கள் இருக்குமானால், அங்கே இடஒதுக்கீட்டுக் கொள்கையை அமல்படுத்த வேண்டியதில்லை என்று ஒரு சட்டம் இருந்தது. 11-5-1999 அன்று ஆதிதிராவிடர், தாழ்த்தப்பட்டோர் மானியக் கோரிக்கையின்போது அதை நான் சுட்டிக்காட்டியபோது, அடுத்த நாளே நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர், நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் அந்தச் சட்டத்தைத் திருத்தி, இப்போது ஒரு பணியிடத்திற்கு மேலேயிருந்தால்கூட (மணியடிக்கப்பெற்றது) இடஒதுக்கீட்டுக் கொள்கையை அமல்படுத்தலாம் என்ற சட்டத்தைத் தாழ்த்தப்பட்டவர்களுக்காக மாற்றிய நிலையில் அந்தப் பெருமையும் என்னுடைய இயக்கத்தையே சாரும் என்பதையும் இந்த நேரத்திலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமுதாயத்திலே, தலித் கிறிஸ்தவர்கள் ஆலயங்கள் இருக்கின்ற தெருக்கள் வழியாகக்கூடச் செல்ல முடியாத நிலையில்தான் (மணியடிக்கப்பெற்றது)

இரவு 6-45

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்பாவு அவர்கள் காங்கிரஸ் கட்சி இடஒதுக்கீட்டுக் கொள்கையின் சில குறிப்புகளைச் சொல்கிறார். அது அவருக்கு இருக்கின்ற உரிமை. அதைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் பின்தங்கிய மக்களுக்கெல்லாம் இடஒதுக்கீடு மத்திய சர்க்காரிலே கொடுக்க வேண்டும் என்று காக்கா கலேக்கர் கமிஷன் பரிந்துரைத்தபோது அந்த அறிக்கையைக் குப்பைத் தொட்டியிலே போட்டது மத்தியிலேயிருந்த காங்கிரஸ் அரசாங்கம் என்பதை மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடஒதுக்கீட்டை நாங்கள் தான் முழுமையாகச் செயல்படுத்தினோம் என்றால், இன்று அமைச்சரவையிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைச்சரவையிலே 19 சதவிகித இடஒதுக்கீட்டை நீங்கள் கொடுத்து இருக்கிறீர்களா? 19 சதவிகித இடஒதுக்கீடு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உங்கள் (மணியடிக்கப்பெற்றது) அமைச்சரவையிலே கொடுத்தால் 5 அமைச்சர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் வருவார்கள். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி. முதலிலே நீங்கள் அமைச்சரவையிலே அந்த இடஒதுக்கீட்டுக் கொள்கையை அமல்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன், தலித் கிறிஸ்தவர்களை நீங்கள்

எம்.பி.சி.—யிலாவது சேர்க்க வேண்டும். மிகவும் பின்தங்கிய வகுப்பிலே சேர்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன், அதேபோன்று பிற்படுத்தப்பட்ட பெண் குழந்தைகள் படிப்பதற்கு ஊக்கத் தொகையாக ரூபாய் ஆயிரத்தை நீங்கள் வழங்க வேண்டும். ஆடு, மாடுகளை மேய்க்கின்ற நம்முடைய யாதவர்கள் மிகவும் ஆதிவாசிகளாகத்தான் இன்னும் காட்டிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களில் முன்னேறியவர்கள் மிகவும் குறைவாக இருப்பதால் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை மிகவும் பின்தங்கிய பட்டியலிலே சேர்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, (மணியடிக்கப்பெற்றது) அதேபோன்று—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே.

**திரு. மு. அப்பாவு:** பேசி முடித்துவிடுகிறேன் குமரி மாவட்டத்திலும், செங்கோட்டைத் தாலுகாவிலும் இருக்கின்ற மீன் பிடிக்கச் செல்லும் மீனவ கிறித்தவ பரவர்கள் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்களையும் மற்றும் பிற மாவட்டங்களில், மீன்பிடிக்கச் செல்கிற பரவர்களையும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று முஸ்லீம்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) Honourable Chief Minister. (குறுக்கீடு).

**திரு. மு. அப்பாவு:** விரைவில் முடித்துவிடுகிறேன். முஸ்லீம் மக்களையும் மிகவும் பின்தங்கிய வகுப்பிலே சேர்க்க வேண்டும். இதுதான் எங்களுடைய தமிழ் மாநில காங்கிரஸினுடைய தலையாய கொள்கை என்பதை இந்த நேரத்திலே கூறி, நம்முடைய இடஒதுக்கீடு (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட பின்தங்கிய மக்களின் கையைப் பிடித்துத் தூக்க வேண்டும், அதற்காக முன்னேறிய சமுதாயத்தின் காலைப் பிடித்து இழுக்கக் கூடாது என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் பின்பற்றுகின்ற சமூக நீதிக் கொள்கையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கொள்கை இன்று நேற்று அல்ல, நீண்ட நெடுங் காலமாக நான் தலைமை ஏற்றிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எடுத்துச் சொல்லி வந்திருக்கின்றேன். 1928 ஆம் ஆண்டு தமிழகத்திலே ஓர் ஒளி



தோன்றியது. இருட்டைக் கிழித்துக்கொண்டு வெளி வந்த ஒளி அந்த ஒளி. அந்த ஒளிக்குப் பெயர்தான் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அல்லது Communal G.O. என்பதாகும்.

அந்த ஒளியைப் பிரகாசிக்கச் செய்தவர் முத்தையா முதலியார். அன்றையதினம் நீதிக் கட்சியினுடைய அமைச்சரவையில் சுப்பராயன் அவர்கள் இருந்தபோது இந்தச் சட்டத்தை இயற்றி, அப்படி இயற்றப்பட்ட காரணத்திற்காக தந்தை பெரியார் அவர்கள் எழுதிய தலையங்கத்தில் மந்திரி முத்தையா முதலியார் வாழ்க, வாழ்க, வாழ்க என்று மூன்று முறை எழுதி தலையங்கத்தைத் தீட்டினார்கள் அன்றைக்கு முன்னேறிய சமுதாயத்தைச் சேர்ந்தவர் முத்தையா முதலியார் அவர்கள். இருந்தாலும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட, அந்தக் காலத்திலே Non-Brahmins என்று அழைக்கப்பட்ட மக்களுடைய எழுச்சிக் குரல் ஒலித்தபோது அந்தக் குரலுக்கு மேலும் ஆக்கமும், ஊக்கமும் சேர்க்கின்ற வகையிலும் குறிப்பிட்ட சில சமுதாயங்கள்தான் முன்னேற வேண்டும், மற்ற சமுதாயங்கள் எல்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டே கிடக்க வேண்டும் என்ற அந்தக் கொள்கையிலிருந்து மக்களையும் விடுவித்து, தாழ்த்தப்பட்டவர்களையும், பிற்படுத்தப்பட்டவர்களையும், ஓரம்கட்டப்பட்டவர்களையும் விடுவித்த இயக்கம்தான் அன்றைக்கு நீதிக் கட்சியாக, சுயமரியாதை இயக்கமாக ஜஸ்டிஸ் கட்சி என்று ஆங்கிலப் பெயரால் அழைக்கப்பட்ட இயக்கமாக திராவிடர் கழகமாக, திராவிட முன்னேற்றக் கழகமாக, பொதுவில் திராவிட இயக்கமாக இன்றைக்கு பரிணமித்துக்கொண்டிருக்கிறது. திராவிட இயக்கம் என்றால் என்ன, அதனுடைய கொள்கை என்ன என்று கேட்கும்போது, திராவிட இயக்கம் என்றால் என்ன என்று அடையாளம் காட்ட வேண்டுமேயானால், இன்றைக்கு சட்டசபையில் நடைபெற்ற வாதம் இருக்கிறதே இந்த விவாதம்தான் திராவிட இயக்கம் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி)

இரவு 6-50

1928ஆம் ஆண்டு அரும்பிய இந்த மலர், இன்று மணம் வீசி ஒரு பெரிய வரலாற்றுப் புதுமையை தமிழ்நாட்டு சட்டப் பேரவையிலே தமிழக அரசிலே, தமிழ் நிலத்திலே உருவாக்கியிருக்கின்றது. இந்த இயக்கம்தான், இன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்று இருக்கின்ற இந்த இயக்கம்தான் 1951 ஆம் ஆண்டு கம்யூனல் ஜி.ஓ. செல்லுபடியாகாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்தபோது, இந்த இயக்கத்தினுடைய தலைவர் தந்தை பெரியார் அவர்களுடைய அன்புக்குப் பாத்திரமான தளபதியாக விளங்கிய திராவிட

[கலைஞர் மு. கருணாநிதி] [2000 மே 16

முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழிலே எழுதிய தலையங்கத்திலே இவ்வாறு குறிப்பிடுகின்றார். "ஏமாந்த காலத்திலே ஏற்றம் கொண்டவரால் சமூக நீதி சாக்கடையிலே தள்ளப்பட்டுவிட்டது. சட்டம் என்ற கோல் கொண்டு சுப்ரீம் கோர்ட் இந்திய அரசியல் சட்டத்தைக் காட்டி, வகுப்புரிமை செல்லுபடியாகாது என்ற தீர்ப்புத் தந்துவிட்டது. சட்டம் என்ற கூண்டு, உள்ளே சமூக நீதித் தேன் தேடி அலைவதை தேள் கொட்டியதைப்போல சம நீதி மூலம் தம் முடிந்துபோன வாழ்வைச் சீர்படுத்திக்கொள்ளத் தொடங்கிய மக்களின் முன்னேற்றப் பாதையிலே விழுந்த பேரிடியாகும் இந்தச் சம்பவம். திகைத்துத் திண்டாடும் திராவிடச் சமுதாயம், இரத்தம் கொதிக்க, எண்ணங்கள் கிளர்ச்சி முரசு கொட்ட, எங்கள் முதுகெலும்பு உடைக்கப்பட்டதா? இருதயத்தையோ எத்தர்கள் எடுத்துவிட்டனர், எங்களுக்கா இந்தப் பேரிடி, என்று தமது ஒளியிழந்த கண்களிலே நீர் ததும்ப, ஒலியிழந்த குரல்களிலே வேதனை தொனிக்க, தமது தலைவர்களைச் சோகத்தோடு பார்க்கிறது இந்தச் சமுதாயம். சமூக நீதி சென்னை நீதிமன்றத்திலே, சட்டப் பிரச்சினை மூலம் சாய்க்கப்பட்டது. நாம் எல்லாம் குமுறினோம்; நாடெங்கும் மக்கள் கண்டனத்தைத் திரட்டிக் காட்டினோம், சம நீதி வேண்டும், இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்து என்ற முழக்கங்களோடு" என்று அன்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த வழி வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 1969 ஆம் ஆண்டு முதன் முதலாக சட்டநாதன் தலைமையிலே பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு ஒன்றை அமைத்தோம்.

1954 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு 16 சதவிகிதம் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 25 சதவிகிதம் என்றும், பொதுப் போட்டியினருக்கு 59 சதவிகிதம் என்றும் இருந்ததை, 1971 ஆம் ஆண்டுவரை யாரும் மாற்றவில்லை; உயர்த்தவும் இல்லை.

1971-ல் கழக அரசுதான் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு 18 சதவிகிதம் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 31 சதவிகிதம் என்றும் பொதுப் போட்டியினருக்கு 51 சதவிகிதம் என்றும் உயர்த்தியது. மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு தனி ஒதுக்கீடு வேண்டும் என்று பல ஆண்டுகளாக இருந்த கோரிக்கையை ஏற்று, மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 சதவிகிதம் என்றும், பிற்படுத்தப்பட்டோருக்கு 30 சதவிகிதம் என்றும் இட ஒதுக்கீடு செய்தது 1989-ல் திராவிட முன்னேற்றக் கழக அரசிலேதான். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18 சதவிகிதம் என்று இருந்த ஒதுக்கீட்டை ஆதிதிராவிடருக்கு மாத்திரம் 18 சதவிகிதம் என்றும் பழங்குடியினருக்குத்



2000 மே 16] [கலைஞர் மு. கருணாநிதி]

தனியாக ஒரு சதவிகிதம் என்றும் ஆக்கியதும் 1990-ல் தி.மு.க. அரசிலேதான். பிற்படுத்தப்பட்டோருக்கு எனத் தனி இயக்ககம் ஒன்று உருவாக்கப்பட்டதும் 1969-ல் தி.மு.க. ஆட்சியிலேதான் பிற்படுத்தப்பட்டோர் நலனைக் கவனிக்க அதற்கென்று தனியாக தனி அமைச்சர் நியமிக்கப்பட்டதும் தி.மு.க ஆட்சியிலேதான். மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு எனத் தனி இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டதும் 1989-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான். பழங்குடியினர் நல இயக்ககம் அறிவிக்கப்பட்டதும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான். 31-3-2000 அன்றுதான் இதற்கான அரசாணை வெளியிடப்பட்டிருக்கின்றது. நேரடி நியமனத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டு, நிரப்பப்படாத காலியிடங்களை மற்ற வகுப்பினர்களைக் கொண்டு நிரப்பக்கூடாது என்ற தடை Ban on De-reservation அறிமுகப்படுத்தப்பட்டதும் 27-7-1989 இல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான்.

இரவு 6-55

நேரடி நியமனத்தில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு ஒதுக்கப்பட்டு, நிரப்பப்படாத காலி இடங்களை மற்ற வகுப்பினரைக் கொண்டு நிரப்பக் கூடாது என்று தடை அறிமுகப்படுத்தப்பட்டது 21-8-1989-ல் தி.மு.க. ஆட்சியிலேதான்

அரசுத் துறைகளிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிரப்பப்படாத பணி இடங்களை ஒரு கால வரையறைக்குள் நிரப்புவதற்குரிய வழிவகைகளைக் காண அந்தத் துறையின் அமைச்சர் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டது 13-9-1997-ல் இந்த ஆட்சியிலேதான்.

அதைப்போலவே பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிரப்பப்படாத பணி இடங்களை ஒரு கால வரையறைக்குள் நிரப்ப வழிமுறைகளைக் காண அந்தத் துறை அமைச்சர் தலைமையிலே குழு அமைக்கப்பட்டதும் 1-6-1998-ல் தி.மு.க. ஆட்சியிலேதான்.

இந்தக் குழுவின் அறிக்கைகள் அமைச்சரவை துணைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு, அவர்கள் தந்த அறிக்கைகள் 11-5-1999 அன்று அமைச்சரவைக் கூட்டத்திலே வைக்கப்பட்டு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

நேரடி நியமனங்களில் பத்தும் அதற்கு மேலும் எண்ணிக்கை உள்ள பணிநிலைப் பிரிவுகளுக்கு மட்டுமே இட ஒதுக்கீடு பின்பற்ற வேண்டும் என்று இருந்ததை மாற்றி ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கை உள்ள பணி நிலைப் பிரிவுகளுக்கும் இட ஒதுக்கீட்டு முறையை அமல்படுத்தலாம் என்று முடிவெடுக்கப்பட்டு 21-9-1999 இல் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோருக்கு உள்ள நிரப்பப்படாத பின்னடைவுப் பணி இடங்களை முன்கொணர்ந்து நிரப்பும் முறை விரிவுபடுத்தப்பட்டது 2-5-2000இல் இந்த ஆட்சியிலேதான்.

இதுவரை நடைமுறையில் இருந்த இனச்சுழற்சி முறையில் Roster, முதல் பத்து இடங்களில் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஓர் இடம் என்று இருந்ததைத் தற்போது ஆதிதிராவிடர்களுக்கு இருப்பதைப் போல, இரண்டு இடங்கள் என்று மாற்றி அமைத்துள்ளதும் இந்த ஆட்சியிலேதான் என்பதை நான் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் தமிழக சட்டமன்ற சரித்திரத்தில் அரசுப் பணியிடங்களில் இட ஒதுக்கீடு சம்பந்தமாக வைக்கப்பட்டுள்ள முதலாவது வெள்ளை அறிக்கை இதுதான் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணியிடங்கள் A,B,C,D. என்று நான், தொகுதிகளாக—Groups பிரிக்கப்பட்டுள்ளன. 'A' தொகுதி—Group என்பது அடிப்படைச் சம்பளமாக மாதம் ஒன்றுக்கு பத்தாயிரம் ரூபாயும் அதற்கு மேலும் பெறுகின்றவர்கள். உதாரணமாக D.R.O., கூடுதல் S.P. கண்காணிப்புப் பொறியாளர், Civil Surgeon பல்கலைக்கழக இணைப் பேராசிரியர், துணைச் செயலாளர் போன்ற பதவிகள் 'A' தொகுதியைச் சார்ந்தவை.

'B' தொகுதி என்பது அடிப்படைச் சம்பளமாக மாதம் ஒன்றுக்கு 5,500 ரூபாய்க்கு மேல் 10,000-க்குக் கீழ் பெறுபவர்கள். உதாரணமாக, Deputy Collector D.S.P. Assistant Civil Surgeon, Commercial Tax Officer போன்ற பதவிகள் 'B' தொகுதியைச் சார்ந்தவை.





'C' தொகுதி என்பது அடிப்படைச் சம்பளமாக மாதம் ஒன்றுக்கு 2,610 ரூபாய்க்கு மேல் 5,500-க்குக் கீழே பெறுபவர்கள் 'C' தொகுதியைச் சேர்ந்தவர்கள். உதாரணமாக Junior assistant, typist, record clerk, assistant commercial tax officer, sub-inspector போன்றவை 'C' தொகுதியைச் சார்ந்தவை.

'D' தொகுதி என்பது அடிப்படைச் சம்பளமாக மாதம் ஒன்றுக்கு 2,610 ரூபாய்க்குக் கீழ் பெறக்கூடியவர்கள். உதாரணமாக, அலுவலக உதவியாளர்கள், அதாவது ப்யூன்கள் Sanitory Workers, Watchman போன்றவை 'D' தொகுதியைச் சார்ந்தவை.

'A' தொகுதியிலே 1-1-1999 அன்றைய நிலவரப்படி 4,588 பேர் அரசுத் துறைகளிலும், 3,660 பேர் பொதுத் துறை நிறுவனங்கள் போன்றவற்றிலும் ஆக மொத்தம் 8,248 பேர் இருக்கிறார்கள்.

'A' தொகுதியிலே மொத்தம் உள்ள 8,248 பேரில், ஆதிதிராவிடர்கள் 591 பேர், பழங்குடியினர் 20 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 665 பேர், பிற்படுத்தப்பட்டோர் 4,744 பேர்.

'A' தொகுதியில் அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் 1-4-1989 முதல் நிரப்பப்படாமல் உள்ள பின்னடைவுக் காலிப் பணியிடங்கள்; ஆதிதிராவிடர்கள் 168 பேர், பழங்குடியினர் 5 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 97 பேர்.

இரவு 7-00

'B' தொகுதியில் 1-1-1999 அன்றைய நிலவரப்படி 1,69,682 பேர் அரசுத் துறைகளிலும், 24,297 பேர் பொதுத் துறை நிறுவனங்கள் போன்றவற்றிலும், ஆக மொத்தம் 1,93,979 பேர் இருக்கிறார்கள். 'B' தொகுதியில் மொத்தம் உள்ள 1,93,979 பேரில், ஆதி திராவிடர்கள், 24,910 பேர், பழங்குடியினர் 821 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 30,239 பேர், பிற்படுத்தப்பட்டோர் 1,07,686 பேர்.

'B' தொகுதியில் அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் 1-4-1989 முதல் நிரப்பப்படாமல் உள்ள பின்னடைவு காலிப்பணியிடங்கள்: ஆதிதிராவிடர்கள் 1545 பேர், பழங்குடியினர் 130 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 542 பேர்.

'C' தொகுதியில் 1-1-1999 நிலவரப்படி 4,24,131 பேர் அரசுத் துறைகளிலும், 2,14,302 பேர் பொதுத் துறை நிறுவனங்கள் போன்றவற்றிலும், ஆக மொத்தம் 6,38,433 பேர் இருக்கின்றார்கள். 'C' தொகுதியில், மொத்தம் உள்ள 6,38,433 பேரில், ஆதிதிராவிடர்கள் 1,04,368 பேர், பழங்குடியினர் 4992 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 99,129 பேர், பிற்படுத்தப்பட்டோர் 3,20,537 பேர். 'C' தொகுதியில் அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் 1-4-1989 முதல் நிரப்பப்படாமல் உள்ள பின்னடைவு காலிப் பணியிடங்கள்: ஆதிதிராவிடர்கள் 2537 பேர், பழங்குடியினர் 825 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 2300 பேர்.

'D' தொகுதியில் 1-1-1999 அன்றைய நிலவரப்படி 1,53,158 பேர் அரசுத் துறைகளிலும், 76,496 பேர் பொதுத் துறை நிறுவனங்கள் போன்றவற்றிலும், ஆக மொத்தம் 2,29,654 பேர் இருக்கின்றார்கள். 'D' தொகுதியில் மொத்தம் உள்ள 2,29,654 பேரில், ஆதிதிராவிடர்கள் 68,897 பேர், பழங்குடியினர் 3430 பேர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 33,021 பேர், பிற்படுத்தப்பட்டோர் 82,875 பேர்.

'D' தொகுதியில் அரசுத் துறை மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் 1-4-1989 முதல் நிரப்பப்படாமல் உள்ள பின்னடைவு காலிப் பணியிடங்கள்: ஆதிதிராவிடர்கள் 657 பேர், பழங்குடியினர் 134 பேர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 2324 பேர்.

இதுவரை அரசுத் துறைகளிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் பல்வேறு தொகுதிகளில் இடஒதுக்கீட்டுப் பிரிவினர் ஒவ்வொரு தொகுதியிலும் எவ்வளவு பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இந்த வெள்ளை அறிக்கையின் மூலமாகத்தான் இந்த விவரங்களை அறிய முடிந்துள்ளது.

உதாரணமாக மாதம் ஒன்றுக்கு 10,000 ரூபாய்க்கு மேல் அடிப்படைச் சம்பளமாக உள்ள 'A' தொகுதியில் 591 ஆதிதிராவிடர்களும், 20 பழங்குடியினரும், 665 மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரும், 4744 பிற்படுத்தப்பட்டோரும் இன்றைய நிலையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். 1-4-1989 முதல் இதுவரை அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில், A,B,C, ஆகிய நான்கு தொகுதிகளிலும் ஏற்பட்டுள்ள பின்னடைவு காலிப் பணியிடங்கள் - ஆதிதிராவிடர்கள் 4907, பழங்குடியினர் 1094, மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 5283 பேர். ஆக மொத்தம் 11,264 பின்னடைவு காலிப் பணியிடங்களையும் ஐந்தாண்டுகளுக்குள் நிரப்ப இந்த அரசு உறுதியளிக்கிறது என்பதை மீண்டும்





மீண்டும் அழுத்தந்திருத்தமாக நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஐந்தாண்டுகளுக்கு உள்ளே என்றால் இந்த ஆண்டிலேயே இந்த முயற்சி ஆரம்பம் ஆகிவிடும் என்பதையும் அந்த முயற்சிக்கு எந்த அதிகாரி முட்டுக்கட்டையாக இருந்தாலும் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்து, இந்த முயற்சியை நாம் முனைந்து மேற்கொள்கின்ற காரணத்தால் ஏற்கெனவே இருக்கின்ற இட ஒதுக்கீட்டிலே ஏதாவது ஊனம் ஏற்படும் என்று யாரும் கருதத் தேவையில்லை. அந்த இட ஒதுக்கீடு அப்படியே தொடரும். முன்னேறிய சமுதாயத்திற்குள்ள இடங்கள், பிற்படுத்தப்பட்டோருக்குள்ள இடங்கள், இவையெல்லாம் அப்படியே தொடரும். அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இது போய் அதைப் பாதிக்காது என்பதை, முன்னேறிய சமுதாயத்தினருக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆக மொத்தம் 11,264 பின்னடைவு காலிப் பணியிடங்களையும்— மீண்டும் சொல்கிறேன்—ஐந்தாண்டுகளுக்குள் நிரப்ப இந்த அரசு உறுதியளித்திருக்கிறது. ஓராண்டுக்குள் நிரப்பிவிட்டால் என்ன என்றெல்லாம் கேட்கப்பட்டது. இவையெல்லாம் ஆர்வத்தின் காரணமாகக் கேட்கப்படுகின்ற கேள்வியே அல்லாமல் வேறல்ல. ஓராண்டுக்குள் முடிந்தால் எங்களுக்கும் திருப்திதான். அந்த முயற்சியிலே நாங்கள் முனைந்து ஈடுபடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 5 ஆண்டுகள் என்பது 4 ஆண்டுகளில்கூட ஆகலாம். ஏன் 5 ஆண்டுகள் என்று சொல்லிவிட்டு, 4 ஆண்டுகளுக்குள் நிரப்பிவிட்டாய் என்று யாரும் கேட்கக்கூடாது. அதற்குள் நிரப்பினாலும் நிரப்பிவிடுவோம். கழக அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகுதான் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டுள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு என்று சிறப்பு நியமன நடவடிக்கை Special Recruitment Drive மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இரவு 7-05

உதாரணமாக, 1997 ஆம் ஆண்டில் கல்லூரி ஆசிரியர்களுக்கான 100 பணியிடங்களை சிறப்பு நியமனத்தின் மூலம் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், போதுமான தகுதி வாய்ந்தவர்கள் கிடைக்காததால், 100 பணியிடங்களில் 72 பணியிடங்களை மாத்திரம்தான் நிரப்ப முடிந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தகவலாகத்

[கலைஞர் மு. கருணாநிதி] [2000 மே 16

தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். போதுமான தகுதிவாய்ந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கிடைக்காத காரணத்தால் இடைநிலை ஆசிரியர் 450 பணியிடங்களும், சுருக்கெழுத்துத் தட்டச்சர் 450 பணியிடங்களும் நிரப்பப்படாமல் இன்னமும் காலியாகவே இருந்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குத் தகுதி உள்ளவர்கள் கிடைக்கவில்லை. ஆட்கள் இருக்கிறார்கள். அதற்கான தகுதி உள்ளவர்களாக அவர்கள் இல்லை என்ற அந்தக் காரணத்தை நான் இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் காலிப் பணியிடங்களையும் நிரப்புவதற்கு, இங்கு ஓர் உறுப்பினர் பேசும்போது குறிப்பிட்டதைப்போல, நிஜாமுதீன் என்று நான் கருதுகிறேன், அவர் குறிப்பிட்டதைப்போல, அவர்களுக்குத் தேவையான பயிற்சி அளிக்கப்படும். அந்த இடங்களை நிரப்ப முடியாமல் இருப்பதற்குக் காரணம், தகுதி இல்லை. அந்தத் தகுதியை உருவாக்குகிற அளவுக்கு தனிப் பயிற்சி (Special coaching) அவர்களுக்கு நிச்சயமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதே பழங்குடியின மக்களுக்கும், ஆதிதிராவிடர்களுக்கும் (Special coaching) கழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அதைப்போல இப்போது கணக்கிட்டு, வெள்ளை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள 11,264 பின்னடைவு காலிப் பணியிடங்களை நிரப்ப எந்தெந்த தொகுதிகளில், (Groups), போதுமான தகுதி வாய்ந்த நபர்கள் கிடைக்கவில்லையோ அந்தப் பிரிவினருக்குத் தேவையான பயிற்சியை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே எல்லா உறுப்பினர்களும் இதைப் பாராட்டி வரவேற்று, சில அரிய யோசனைகளை எல்லாம் கூறியிருக்கிறார்கள். எல்லோரும் நல்ல யோசனைகளைச் சொன்னார்கள். நம்முடைய அப்பாவு மாத்திரம், அமைச்சரவையிலே இடஒதுக்கீடு வேண்டும் என்று கேட்டார். அதை அடுத்த ஆண்டு பார்க்கலாம் என்று நான் அவருக்குச் சொல்லிக்கொள்கிறேன். அடுத்த முறை அப்பாவு ஆசை தீருகின்ற அளவுக்கு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அந்த இடஒதுக்கீடு நிரப்பப்படும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் ஏதோ நாங்கள் எல்லாம் பெரியார், அண்ணாவைத்தான் சொன்னோம், காமராஜருடைய பெயரைச் சொல்லவில்லை என்பதைப்போலக் கருதிக்கொண்டு எடுத்த எடுப்பிலேயே காமராஜர்தான் கொண்டுவந்தார் என்று சொன்னார். நாங்களும் அவரை மறக்க விரும்பவில்லை. 1954ஆம் ஆண்டு நடைபெற்ற சமூக நீதிப் போராட்டத்திலே தந்தை பெரியார் தலைமையில், பேரறிஞர் அண்ணா தலைமையில் முறையே திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் போர்க்களத்திலே நின்ற அந்தக் காலக்கட்டத்தில்,



2000 மே 16] [கலைஞர் மு. கருணாநிதி]

பெருந்தலைவர் காமராஜர் களத்திலே இறங்கி போரிடாவிட்டாலும்கூட, அந்தத் திராவிட இயக்கத்தினுடைய அந்தக் குரலுக்கு ஆதரவாக பண்டித நேருவிடத்திலே பரிந்துரை செய்தவர் பெருந்தலைவர் காமராஜர் என்பதை நன்றியுள்ள நாங்கள் மறந்துவிட மாட்டோம். என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னமும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. இதே மாமன்றத்திலே கே.டி. கோசல்ராம், அதைப்போல நம்முடைய ஆர்.வி. சாமிநாதன் இருவரும் முழங்கிய முழக்கங்கள் எல்லாம் எங்களுடைய காதுகளிலே ஒலித்துக்கொண்டிருக்கின்றன. சுப்ரீம் கோர்ட்டில்—நீதிமன்றத்திலே—இடஒதுக்கீடு, சமூக நீதிக்கு ஆபத்து ஏற்பட்டதும் அப்போது இருந்த காங்கிரஸ் அமைச்சர்களைப் பார்த்து ஓங்காரக் குரல் கொடுத்து, ஓங்கிக் குரல் கொடுத்தவர்கள் ஆர்.வி. சாமிநாதன், கே.டி. கோசல்ராம் என்பதை நாங்கள் மறந்துவிடவில்லை. அப்படிப்பட்டவர்கள் எல்லாம் காங்கிரஸ் இயக்கத்திலே இருந்தாலும்கூட, திராவிட இயக்கத்தினுடைய அந்தப் போராட்டங்களுக்கு ஆதரவு தந்தார்கள். அதேபோல என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் பொருளாதார ரீதியிலே, 9000 ரூபாய் வரையிலே இருந்தால்தான் அவன் பிற்போக்கு, பிற்படுத்தப்பட்டவன், 9000 ரூபாய்க்கு மேல் ஒரு ரூபாய் சம்பாதித்தாலும் அவர்கள் முன்னேறிய சமுதாயம் என்ற ஒரு பொருளாதாரக் கொள்கையை, பொருந்தாத கொள்கையை அறிமுகப்படுத்தியபோது நாங்கள் எடுத்துச் சொன்னோம், அவர் கேட்கவில்லை. அப்போதும் ஒரு போராட்டம் தேவைப்பட்டது. ஊருக்கு ஒரு பொதுக் கூட்டம் நடத்தினோம். அந்தப் பொதுக் கூட்டத்திலே நான், பேராசிரியர், நம்முடைய நண்பர் வீரமணி மற்றும் ரமணிபாய், திண்டிவனம் ராமமூர்த்தி போன்ற பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சியின் முன்னணித் தலைவர்கள் எல்லாம் அதிலே கலந்து கொண்டு பேசியிருக்கிறார்கள். அதுமாத்திரமல்ல. அந்தப் போராட்டங்களுக்கு கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தோழர் தா. பாண்டியன் அவர்களும் எங்களோடு ஒரே மேடையிலே வந்து பேசினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, கட்சி ரீதியாக கலந்துகொள்ளாவிட்டாலும், அதிலேயுள்ள பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் அதில் கலந்துகொண்டு ஆதரித்திருக்கிறார்கள். எனவே, தமிழ்நாட்டில், எந்தக் கட்சியில் இருந்தாலும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கிற நேரத்தில் எல்லாம் அவர்கள் திராவிட இயக்கத்தை நினைக்காமல் இருக்கமாட்டார்கள். யார் குரல் கொடுத்தாலும், இன்றைக்கு எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின்

தலைவர் டாக்டர் இராமதாஸ் குரல் கொடுத்தாலும் எல்லாவற்றுக்கும் அடிபீடம் திராவிட இயக்கம்தான், தந்தை பெரியார்தான், (மேசையைத் தட்டும் ஒலி) நீதிக் கட்சிதான், முத்தையா முதலியார்தான் என்பதை யாரும் மறந்துவிட முடியாது என்பதை எடுத்துக் கூறி, இந்த நல்ல வெள்ளை அறிக்கையைப் பாராட்டி, நல்ல யோசனைகளைச் சொல்லி, இந்த வெள்ளை அறிக்கை செயல்படுவதற்கு ஆக்கபூர்வமான யோசனைகளைச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், பல்வேறு கட்சிகளின் தலைவர்களுக்கும் என்னுடைய அன்பான நன்றியையும், வணக்கத்தையும் கூறி இந்த அளவிற்கு என் உரையை நிறைவு செய்கின்றேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 7-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் நாளை (17-5-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை, இரவு 7-10 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

169. வேலூர் மாவட்டம், அரியூர், வடஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை நிறுவனம், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரித்தொகையை, 1-4-1998 ஆம் நாளிலிருந்து மூன்றாண்டு காலத்திற்கு சில வரம்பு நிபந்தனைகளுக்குட்பட்டு ஒத்தி வைப்பது குறித்து வணிகவரிகள் துறையின் 5-1-2000 ஆம் நாளிட்ட 1 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].



170. மதுரை மாவட்டம், மேலூர், மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை நிறுவனம், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தத்தக்க வரித்தொகையை, 1-4-1998 ஆம் நாளிலிருந்து மூன்றாண்டு காலத்திற்கு சில வரம்பு நிபந்தனைகளுக்குட்பட்டு ஒத்தி வைப்பது குறித்து வணிகவரிகள் துறையின் 5-1-2000 ஆம் நாளிட்ட 2 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

171. 1998-99 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

291. மானியக் கோரிக்கை எண் 41-ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001 (தமிழ், ஆங்கிலம்)

292. மானியக் கோரிக்கை எண். 41—விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் வழங்கப்படும் ஓய்வூதியங்களும் மற்றும் ஏனைய சலுகைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001 (தமிழ், ஆங்கிலம்)

293. மானியக் கோரிக்கை எண் 42-பல்வகை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001 (தமிழ், ஆங்கிலம்)

294. மானியக் கோரிக்கை எண் 60-பல்வகை மூலதனச் செலவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001 (தமிழ், ஆங்கிலம்)

295. மானியக் கோரிக்கை எண் 61-மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001 (தமிழ், ஆங்கிலம்)

[2000 மே 16

296. மானியக் கோரிக்கை எண் 8-பொதுத் தேர்தல்கள் குறித்த வரைவு உரை மற்றும் கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001 (தமிழ், ஆங்கிலம்)

297. மானியக் கோரிக்கை எண் 8-உள்ளாட்சித் தேர்தல்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001 (தமிழ், ஆங்கிலம்)

298. 11-05-2000ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்ட அரசுப் பணியிடங்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோரின் இட ஒதுக்கீடு சம்பந்தமான வெள்ளை அறிக்கைக்குத் திருத்தம் (தமிழ், ஆங்கிலம்)

299. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து ஒன்றாவது அறிக்கை. (1999-2000)

300. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து இரண்டாவது அறிக்கை. (1999-2000)

301. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து மூன்றாவது அறிக்கை. (1999-2000)

302. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து நான்காவது அறிக்கை. (1999-2000)

303. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து ஐந்தாவது அறிக்கை. (1999-2000)

304. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து ஆறாவது அறிக்கை. (1999-2000)

305. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து ஏழாவது அறிக்கை. (1999-2000)

306. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து எட்டாவது அறிக்கை. (1999-2000).



2000 மே 16]

# இணைப்பு-1

(106ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 41

## ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001

இக்கோரிக்கையில் அரசுப் பணியாளர்கள், மானிய உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் ஆகியோரின் ஓய்வூதியங்கள், குடும்ப ஓய்வூதியம், பணிக்கொடை, ஓய்வூதியத்தின், ஒரு பகுதியை மொத்தத் தொகையாக்கி வழங்குதல், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியின் கீழ் அரசு அளிக்கும் பங்குத் தொகைகள் முதலானவற்றிற்கான செலவினங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த மாநிலத்தில் 31-12-1999 ஆம் நாள் நிலவரப்படி 4,13,080 பேர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுகின்றனர். அதன் விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| 1. மாநில அரசு ஓய்வூதியம் பெறும் பணியாளர்கள் | 1,90,531 |
| 2. ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள் | 56,632 |
| 3. அரசுப் பணியாளர்கள் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் | 93,909 |
| 4. ஆசிரியர் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் | 27,519 |
| 5. ஏனைய வகையில் ஓய்வூதியம் பெறுபவர்கள் | 44,489 |
| மொத்தம் | **4,13,080** |

2. ஓய்வுகால நன்மைகளைப் பொறுத்தமட்டில் மத்திய அரசு, அதன் பணியாளர்களுக்குப் பின்பற்றும் அதே நடைமுறைகளையே மாநில அரசும் பின்பற்றுகிறது. ஓய்வூதியம், ஆற்றிய பணிக்கான பணிக் கொடை, இறப்பு பணிக்கொடை ஆகியவற்றின் கணக்கிடும் நடைமுறை மற்றும் பணிக்கொடைக்கான உச்ச வரம்பை உயர்த்துதல் போன்ற பல்வேறு ஓய்வுகால நன்மைகளை மாநில அரசு மத்திய அரசைப் பின்பற்றி திருத்தியமைத்துள்ளது.

[2000 மே 16

3. இக்கோரிக்கையில் பின்வரும் இரு பெருந் தலைப்புகள் அடங்கியுள்ளன:-

| | | |
|---|---|---|
| | | (ரூபாய்) |
| 2071. | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 25,78,59,54,000 |
| 2235. | சமூக பாதுகாப்பும் நலனும்- | |
| 60. | ஏனைய சமூகப் பாதுகாப்பு, நலத் திட்டங்கள் | 14,37,46,000 |
| | மொத்தம் | **25,92,97,00,000** |

**4. ஓய்வூதியம்:**

அரசுப் பணியாளர் ஒருவர், குறைந்தது 10 ஆண்டுகள் தகுதிப் பணிபுரிந்திருந்தால், அவர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடைவர். ஓய்வு பெறும் பொழுது கடைசியாக பெற்ற மாத ஊதியத்தில் 50 விழுக்காடு அல்லது ஓய்வு பெற்ற நாளுக்கு முன்னர் கடைசி 10 மாத கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 விழுக்காடு இதில் எது அதிகமோ அத்தொகையே ஓய்வூதியமாக நிர்ணயிக்கப்படுகிறது. உயரளவாக 30 ஆண்டுகள் தகுதிப்பணிபுரிந்தவர்களுக்கு முழு ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. 30 ஆண்டுகளுக்குக் குறைவான தகுதிப்பணி உள்ளவர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் ஓய்வூதியம் குறைக்கப்படும். மத்திய அரசு ஓய்வூதியர்களுக்கு/குடும்ப ஓய்வூதியர்களுக்கு வழங்கியதற்கு இணையாக மாநில அரசு 1-1-1996 முதல் ஓய்வூதியத்தை/குடும்ப ஓய்வூதியத்தை மாற்றி ஆணையிட்டுள்ளது. குறைந்த அளவு ஓய்வூதியத்தை மாதமொன்றுக்கு ரூபாய் 375-லிருந்து ரூபாய் 1,275ஆக 1-1-1996 முதல் உயர்த்தி இவ்வரசு ஆணையிட்டுள்ளது.

**(i) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை:**

பத்து ஆண்டுகளுக்குக் குறைவாக தகுதிப் பணிபுரிந்தவர்களுக்கு, ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. முடிவு பெற்ற ஒவ்வொரு ஆறுமாத பணிக்கும் ½ மாத ஊதியம் என்ற ஒரே சீரான வீதத்தில் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. இது ஆற்றிய பணிக்கான ஒரே நேரத்தில் வழங்குகிற ஒட்டு மொத்த தொகையாகும். அனுமதிக்கத்தக்க ஓய்வுகாலப் பணிக்கொடையுடன் கூடுதலாக இத்தொகை ஆற்றிய பணிக்காக வழங்கப்படுகிறது.



2000 மே 16]

**(ii) இறப்புப் பணிக்கொடை:**

பணியில் இருக்கும்போது மரணமடைவோர் நேர்வில் பின்வரும் வீதங்களில் இறப்புப் பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:—

| பணிக்காலம் | பணிக்கொடையின் அளவு |
|---|---|
| 1. ஓராண்டுக்குக் குறைவாக | இருமடங்கு மாத ஊதியம் |
| 2. ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக | ஆறு மடங்கு மாத ஊதியம் |
| 3. ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபதாண்டுகளுக்குக் குறைவாக | பன்னிரண்டு மடங்கு மாத ஊதியம் |
| 4. இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக | அதிகபட்சம் 33 மடங்கு மாத ஊதியம் என்பதற்கு உட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாதத் தகுதிப் பணிக்கும் அரைமாதச் சம்பளம். அவ்வாறு வழங்குகிற இறப்புப் பணிக்கொடை எந்த இனத்திலும் ரூ.3.50 இலட்சத்திற்கு மேற்படக் கூடாது. |

**(iii) ஓய்வுகாலப் பணிக்கொடை:**

ஒருவர், ஐந்தாண்டும் அதற்கு மேலும் ஓய்வு ஊதியத் தகுதி பெறும் பணியை முடித்திருந்தால் அவர் ஓய்வு பெறும்போது அதிகபட்சம் 16 ½ மடங்கு மாத ஊதியம் என்ற அளவிற்கு உட்பட்டு, அவர் பணியாற்றி முடித்துள்ள ஒவ்வொரு ஆறு மாத தகுதிப் பணிக்கும் மாத ஊதியத்தில் நான்கில் ஒரு பங்குத் தொகை ஓய்வுகாலப் பணிக்கொடையாக வழங்கப்படுகிறது. ஓய்வுகாலப் பணிக்கொடையின் உச்சவரம்பை ரூபாய் 2.50 இலட்சத்திலிருந்து ரூபாய் 3.50 இலட்சமாக 1-1-1996 முதல் உயர்த்தி இவ்வரசு ஆணையிட்டுள்ளது. மேலும் 1-4-1998 அன்று அல்லது

[2000 மே 16

அதற்குப்பிறகு ஓய்வு பெறும் அரசு ஊழியர்களுக்கு பணிக்கொடையைக் கணக்கிடும் பொழுது அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப்படியைச் சேர்த்து கணக்கிடப்பட வேண்டும் என்றும் இவ்வரசு ஆணையிட்டுள்ளது.

## 5. குடும்ப ஓய்வூதியம்:

அரசுப் பணியாளர் ஒருவர் பணியாற்றும்போதோ, ஓய்வு பெற்ற பின்னரோ இறந்து விட்டால் அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஒருவர் பணியிலிருக்கும் போது இறந்தால் அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கு தகுதிபெற அவருடைய பணிக்காலத்தில் ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய பதவியில் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றி இருக்க வேண்டும். மேலும், அரசுப் பணியாளர் ஒருவர் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றுவதற்கு முன்பே பணியிலிருக்கும் போது இறந்து விடுவாரேயானால், அவருடைய குடும்பத்திற்கும் குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பணி அல்லது பதவியில் நியமனம் செய்யப்படுவதற்குமுன் அவரை மருத்துவ அதிகாரி மருத்துவப் பரிசோதனை செய்து அரசுப் பணிக்கு அவர் தகுதியானவர் என்று அறிவித்திருக்க வேண்டும். ஓய்வு பெற்ற பின்னர் இறந்துவிட்டால் அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதிபெற, அவர் இறக்கும் போது ஓய்வூதியம் பெறுபவராக இருந்திருக்க வேண்டும். இருப்பினும், 10 ஆண்டிற்குக் குறைவாகப் பணியாற்றியிருந்து ஓய்வூதியம் பெறத் தகுதியற்றவர்களாக இருப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் ஓய்வு பெற்ற பின்னர் இறந்து விட்டால், அவர்கள் குடும்பங்களுக்கு ஒரே வீதத்தில் அதாவது அவ்வப்போது அனுமதிக்கப்படும் குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியத்தை மாதமொன்றுக்கு ரூபாய் 375-லிருந்து ரூபாய் 1,275 ஆக 1-1-1996 முதல் உயர்த்தி, இவ்வரசு ஆணையிட்டுள்ளது. உயர்ந்த பட்ச குடும்ப ஓய்வூதியம் உயர்ந்த பட்ச சம்பள விகிதத்தின் உயரளவில் 30 விழுக்காடாக இருக்கும்.

குடும்ப ஓய்வூதியம் விதவைக்கு/மனைவியை இழந்த கணவனுக்கு, அவர்கள் மறுமணம் செய்து கொள்ளும் வரை அல்லது இறக்கும்வரை இதில் எது முந்தியதோ அதுவரை வழங்கப்படுகிறது. அவருடைய இறப்பிற்குப் பிறகு இந்த குடும்ப ஓய்வூதியம் அவர்களுடைய



2000 மே 16]

குழந்தைகளுக்கு 25 வயது வரை அளிக்கப்படுகிறது. ஆனால் அத்தகைய மகன் அல்லது திருமணமாகாத மகள் 25 வயதை அடைந்த பிறகும்கூட பொருள் ஈட்ட அல்லது வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மன நலக்குறைவு அல்லது மனநலமின்மையுடையவராக இருந்தாலோ, உடல் ஊனமுற்றவராக அல்லது ஏலாமையுற்றவராக இருந்தாலோ அவருக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படும்.

## 6. கருணைத் தொகை வழங்குதல்:

1-1-1986-க்கு முன் பணியிலிருந்து ஓய்வு பெற்று/பணியிலிருக்கும்போது இறந்துவிட்ட, உதவித் தொகை பெறும் வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்திய/ஓய்வூதியம் இல்லாத பணியாளரமைப்பைச் சேர்ந்த மாநில அரசுப் பணியாளர்கள் மற்றும் முன்னாள் மாவட்ட கழகப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு (இவர்கள் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் அல்லர்) வழங்கப்படும் கருணைத் தொகையை மாதம் ரூபாய் 150 லிருந்து ரூபாய் 605 எனவும் அகவிலைப்படி ரூபாய் 31 எனவும் 1-11-1997 முதல் உயர்த்தி இவ்வரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவர்கள் 1-1-1998 அன்றும் மற்றும் அதன்பிறகும் வழங்கப்படும் அகவிலைப்படி உயர்வையும் பெறத் தகுதியுடையவர்கள்.

## 7. ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தத் தொகையாக அளித்தல்:

ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை ஒட்டு மொத்தமாகப் பெற ஓய்வூதியம் பெறுபவர்கள் தகுதியுடையவர் ஆவர். ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள் விண்ணப்பிக்கப்படுமாயின், மருத்துவ பரிசோதனை இல்லாமல் ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற மாநிலக் கணக்குத் துறைத் தலைவரால் அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை, விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற நாளும், ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றுக் கொண்ட நாளும் ஒரே நாளாக இருக்குமாயின் அவ்வாறு ஓய்வு பெற்றவர் அவர் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகும் அல்லது ஓய்வு பெற்ற பிறகு இரண்டாவது மாதத்திலோ அல்லது அதன் பின்னரோ ஓய்வூதியத்தில் ஒரு முழுப்பகுதியை மொத்தமாக்கிப் பெற்றிருந்தால் அவ்வாறு ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகும் ஓய்வூதியத்தில் குறைக்கப்பட்ட பகுதியை மீண்டும் சேர்த்தளித்து

முழுமையாக ஓய்வூதியம் வழங்கிட அரசு அனுமதியளித்துள்ளது. 1-4-1998 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வுபெறும் அரசு ஊழியர்கள் ஓய்வூதியத்தில் மூன்றில் ஒரு பகுதி என்பதற்குப் பதிலாக 40 விழுக்காடுவரை மொத்தமாக்கிப் பெறுவதற்கு அனுமதி அளித்து இவ்வரசு ஆணையிட்டுள்ளது.

## 8. ஏனைய ஓய்வுகால நன்மைகள்:

(i) மத்திய அரசு பின்பற்றும் நடைமுறைக்கேற்ப ஆண்டிற்கு இருமுறை (அதாவது சனவரி 1, சூலை 1 ஆகிய நாட்களிலிருந்து) அகவிலைப்படி வழங்கப்படுகிறது. பணிபுரியும் பணியாளர்கள் பெறுவது போலவே, ஓய்வூதியம் பெறுபவர்களும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் அகவிலைப்படி தவணைத் தொகை பெறுகிறார்கள்.

(ii) ஓய்வூதியம் பெறுவோருக்கு/குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு திங்களொன்றுக்கு ரூ.50/- மருத்துவப்படி வழங்கப்படுகிறது.

(iii) ஓய்வு பெறும்போது கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பிற்குப் பதிலாக அதிகபட்சமாக 240 நாட்கள் ஈட்டிய விடுப்பை ஒப்படைப்பு செய்து விடுப்புக் காலச் சம்பளம் அனுமதிக்கப்படுகிறது. மேலும் அரைச் சம்பளத்துடன் கூடிய விடுப்பில் (Half Pay Leave on Private Affairs) 90 நாட்களுக்கு மிகைப்படாமல், 50 விழுக்காடு விடுப்பினை ஒப்படைப்பு செய்து விடுப்பு கால சம்பளம் பெறவும் அனுமதிக்கப்படுகிறது. ஈட்டிய விடுப்பின் முழு அளவிற்கும் அரைச் சம்பளத்துடன் கூடிய 90 நாட்கள் விடுப்பிற்கும் முழு விடுப்புக் காலச் சம்பளம் வழங்கப்படுகிறது.

(iv) ஓய்வு பெறும் பணியாளருக்கு ஓய்வு பெற்ற பின்னர் தங்களுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் சென்று வசிக்க விழையும் ஊருக்கு செல்வதற்கான பணிமாற்ற பயணப்படி வழங்கப்படுகிறது.

(v) அனைத்து ஓய்வூதியம் பெறுபவர்களும் ஒரு திங்களுக்கான ஓய்வூதியத் தொகை அல்லது ரூ.500/- இவற்றுள் எது குறைவானதோ அத்தொகையை பண்டிகை முன்பணமாகப் பெறத் தகுதியுடையவராவர்.

(vi) மாநில அரசின் ஓய்வூதியம் பெறும் இராணுவ ஓய்வூதியதாரர்கள், மத்திய அரசின் ஓய்வூதியத் தொகை மீதான அகவிலைப்படியுடன் மாநில அரசின் அகவிலைப்படியையும் சேர்த்துப் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.





(vii) அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள், ஏனைய ஓய்வூதியம் பெறுபவர்கள்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் அனைவருக்கும் பொங்கல் பண்டிகைக்கு பொங்கல் பரிசாக ரூ.150 வழங்கப்பட்டுள்ளது.

(viii) தற்காலிக ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் அகவிலைப்படி மற்றும் மருத்துவப்படி பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

(ix) 1-1-1996-க்கு முன்பு ஓய்வுபெற்ற ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியத்தை மாற்றி அமைத்து மத்திய அரசு ஆணையிட்டுள்ளது. எந்த நேர்விலும், முழு ஓய்வூதியம், ஊழியர் ஓய்வு பெற்றபோது வகித்த பதவிக்கான 1-1-1996 முதல் அமல்படுத்தப்பட்டுள்ள திருத்தப்பட்ட சம்பள விகிதத்தில் குறைந்தபட்ச சம்பளத்தில் 50 விழுக்காட்டிற்கு குறையாமல் இருக்க வேண்டும் என்றும், அதேபோல, திருத்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம், ஓய்வூதியர்/இறந்த அரசு ஊழியர் வகித்த பதவிக்கான 1-1-1996 முதல் அமல்படுத்தப்பட்டுள்ள திருத்தப்பட்ட சம்பள விகிதத்தில் குறைபட்ச சம்பளத்தில் 30 விழுக்காட்டிற்கு குறையாமல் இருக்க வேண்டும் என்றும் மத்திய அரசு ஆணையிட்டுள்ளது. மாநில அரசும், மேற்கண்ட மத்திய அரசின் ஆணையினை மாநில அரசு ஓய்வூதியர்கள்/குடும்ப ஓய்வூதியர்களுக்கும் 1-4-1999 முதல் நீட்டித்து ஆணையிட்டுள்ளது. மத்திய அரசின் ஆணைகளைப் பின்பற்றி, 1-1-1996 முதல் 30-6-1996 வரை ஓய்வு பெற்றவர்களுக்கு, ஓய்வூதியம் கணக்கிட பழைய ஊதியவிகிதம் கணக்கிடப்படும் காலங்களில் எடுத்துக் கொள்ளப்படவேண்டிய ஊதியத்துடன் அகவிலைப்படி, இரண்டு இடைக்கால நிவாரண தவணைகள் மற்றும் ஊதியத்தில் 40 விழுக்காடு சேர்த்து கணக்கிடலாம் என்று மாநில அரசு ஆணையிட்டுள்ளது.

## 9. உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள் உட்பட அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்:

அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கும் மாநில அரசுப் பணியாளர்களுக்குக் கிடைப்பது போன்ற ஓய்வு காலப் பயன்கள் அனுமதிக்கப்படுகின்றன.

[2000 மே 16

**10. ஓய்வூதியம் பெறுவோரின் குறை தீர்ப்புப் பிரிவு:**

ஓய்வூதியம் பெறுவோரின் குறை தீர்ப்புப் பிரிவு ஒன்று நிதித் துறையில் செயல்பட்டு வருகிறது.

**11. ஓய்வூதிய இயக்ககம்:**

ஓய்வூதியம் பெறுவோரின் நலனைக் கவனிக்க, ஓய்வூதிய இயக்ககம் என்னும் துறை 1-9-1994 முதல் செயல்பட்டு வருகிறது. இந்த இயக்ககம் செயல்படுத்தும் தமிழ்நாடு தொழிலாளர்கள் பங்குத் தொகை பெறு வருங்கால வைப்புநிதித் திட்டத்தின் கீழ் வரும் நேர்வுகளை விரைவாகத் தீர்வு செய்வதற்கு மேற்கண்ட திட்டத்தை, 1999-2000 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ் கணினிமயமாக்க அரசு ஆணையிட்டுள்ளது.

**12. தமிழ்நாடு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதி:**

தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதி என்ற ஒரு நிதியை ஏற்படுத்தி அதன் மூலம், சிறப்பு மருத்துவச் சிகிச்சை/அறுவை சிகிச்சை மேற்கொள்வதற்காக ஓய்வூதியம் பெறுவோருக்கு நிதியுதவி அளிக்கும்பொருட்டு, 1-7-1995 முதல் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

**13. தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்:**

இவ்வரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தை 1-1-1997 முதல் தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி, ஓய்வூதியம் பெறுவோர் இறக்கும் காலம் வரை அவர் தம் ஓய்வூதியத்திலிருந்து மாதந்தோறும் ஒரே சீராக ரூ.40 வீதம் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதிக்குப் பிடித்தம் செய்யப்படும். இந்த நிதி 1-1-1998-லிருந்து செயல்படுத்தப்படுகிறது. இந்த நிதிக்கு ஓர் ஆண்டு தொகை செலுத்திய பிறகு இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் குடும்பத்திற்கு ரூ.25,000/- வழங்கப்படும்.

**14. ஓய்வுகாலப் பயன் குறித்த செலவு:**

கடந்த மூன்றாண்டுகளில் இக்கோரிக்கையின் கீழ் ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை, ஓய்வு காலப் பயன் குறித்த செலவு



2000 மே 16]

ஆகியவை பற்றிய விவரங்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:-

| ஆண்டு | ஓய்வூதியம் பெறுவோரின் மொத்த எண்ணிக்கை | ஓய்வூதியம் பெறுவோர் குறித்த மொத்தச் செலவு (ரூ. கோடியில்) | செலவினம் அதிகரிப்பு விழுக்காடு |
|---|---|---|---|
| 1998-1999 | 3,82,642 | 1706.20 | 31.43 |
| 1999-2000 | 3,89,873 | 2592.72<br>திருத்த மதிப்பீடு | 51.96 |
| 2000-2001 | 4,13,080 | 2592.97<br>வரவு-செலவு திட்ட மதிப்பீடு | 0.01 |

## பொதுத் (அரசியல் ஓய்வூதியம்) துறை

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் உரிய ஓய்வூதியங்களும் ஏனைய சலுகைகளும்.

## மானியக் கோரிக்கை எண் 41—2000-2001

### கொள்கை விளக்கக் குறிப்பு

நமது நாடு விடுதலை பெறுவதற்காக விடுதலைப் போராட்டத்தில் எண்ணற்ற இன்னல்களை அனுபவித்த சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு, நன்றிக்கடன் செலுத்தும் வகையில் அவர்களுக்கு தமிழக அரசு பல திட்டங்களை அமல்படுத்தி முன்னோடியாகத் திகழ்கின்றது. அந்தவகையில் அவர்களுக்கு இவ்வரசு அரசியல் ஓய்வூதியம், மருத்துவ வசதிகள், இலவச பேருந்து வசதி, அவர்களின் வாரிசுகளுக்கு கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு, வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை அளித்தல் மற்றும் பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டத்தில் வீடுகள் ஒதுக்கீடு செய்தல் ஆகிய பல திட்டங்களைத் தீட்டி, அவற்றைச்

செயல்படுத்தி வருகின்றது.

(2) பொது (பொது. இ) துறையின் 28-9-1966-ம் நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண் 2064-ல் தமிழ் நாடு அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டம் 01-10-1966 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(3) தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதற்காக மூன்று மாத காலத்திற்குக் குறையாமல் சிறையில் அடைக்கப்பட்டவர்களும் அல்லது காவல் கைதியாக இருந்தவர்களும், தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டபோது மரணமடைந்தவர்களும், துப்பாக்கிச் சூட்டிலும், காவலர் தடியடியிலும் கை, கால் இழந்து நிரந்தரமாக இயலாமை உற்றவர்களும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாக இருந்தனர். பிறகு இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களும், 1946-ஆம் ஆண்டு கடற்படை கலகத்தில் பங்கு கொண்டவர்களும், மதுரை சதித்திட்ட வழக்கில் சிறைத் தண்டனை பெற்றவர்களும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர் என அறிவிக்கப்பட்டது. மேலும், சுதந்திரப் போராட்டத்தின் காரணமாக தலைமறைவாக சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களும், சொத்து பறிமுதல் செய்யப்பட்டவர்களும், பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டவர்களும், அதற்கு ஆதாரமாக நீதிமன்ற அரசு ஆவண ஆதாரங்களைச் சமர்ப்பித்தால் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் எனவும் அறிவிக்கப்பட்டது. ஓய்வூதியம் பெற நிர்ணயிக்கப்பட்ட சிறைத் தண்டனைக் கால அளவான மூன்று மாதம் என்பது 01-04-1980 முதல் மூன்று வார காலம் எனக் குறைக்கப்பட்டது. இவ்வோய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட வருமான வரம்பு 11-03-1983 முதல் நீக்கப்பட்டது.

(4) விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் தாங்கள் சிறைத் துன்பம் அடைந்ததற்கு ஆதாராமாக நீதிமன்ற ஆணையின் அல்லது சிறைத் துறை ஆவணத்தின் பகுதி நகல் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். இவை இல்லாத நிலையில் முன்னாள் அல்லது தற்போதைய நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினர் வழங்கும் சக கைதி சான்றிதழ்கள் சிறை தண்டனை பெற்றதற்கான ஆதாரமாக 1-4-1980 முதல் ஏற்றுக் கொள்ளப்பட்டன.



ஆனால் இம்முறையில் சில குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதால் சக கைதி சான்று வழங்கும் முறை திருத்தியமைக்கப்பட்டது. இதன்படி பொது (அரசியல் ஓய்வூதியம்)த் துறையின் 16-11-1988 நாளிட்ட அரசு (நிலை) ஆணை எண் 2015-ன்படி விண்ணப்பதாரர் சிறைச் சான்று/நீதி மன்ற ஆணை நகல்கள் இல்லாத நிலையில் மாநிலம் முழுவதற்கும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட 15 சான்றாளர்களுள் எவரேனும் இருவரிடமிருந்து சக கைதி சான்று பெற்று விண்ணப்பிக்கலாம். பின்பு மேற்குறிப்பிட்ட 15 சான்றாளர்களில் பலர் சென்னையில் வசித்தாலும், கைது செய்யப்பட்ட அனைவரும் ஒரே சிறையில் வைக்கப்படாததாலும் இரண்டு சக கைதி சான்றிதழ்கள் பெறுவதில் சிரமங்கள் உள்ளன என அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. எனவே, 7-2-1996ஆம் நாளிட்ட பொது (அரசியல் ஓய்வூதியம்) துறையின் அரசு ஆணை எண் 30ல் இம்முறை மாற்றியமைக்கப்பட்டது. மாற்றியமைக்கப்பட்ட முறையின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், மாவட்ட வருவாய் அதிகாரியை துணைத் தலைவராகவும், மூன்று பிரபல தியாகிகளை உறுப்பினர்களாகவும், இரண்டு பிரபல தியாகிகளை சான்றளிப்பவராகவும் கொண்டு மாவட்ட அளவிலான சீராய்வுக் குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர்களும், சான்றளிப்பவர்களும் மாநில விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் சக கைதி சான்றிதழின் அடிப்படையில் இல்லாமல் மூல அரசு ஆவணங்களின் அடிப்படையில் பெற்றவராக இருத்தல் வேண்டும். மேற்படி குழு செயல்படுவது குறித்து வழிகாட்டி நெறிமுறைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி விடுதலைப் போராட்ட வீரர் தன்னுடன் சிறைத் தண்டனை அனுபவித்த சக கைதி சிறையில் அடைபட்டிருந்த கால அளவைக் குறிப்பிட்டு, அந்த மாவட்டத்திலுள்ள சான்றளிக்க அதிகாரம் பெற்ற இருவரில் ஒருவரிடமிருந்து சக கைதி சான்றிதழ் பெற வேண்டும். விடுதலைப் போராட்ட வீரர் சிறைத் தண்டனை அடைந்த காலத்தில் 18 • வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். வரையறுக்கப்பட்ட படிவத்தில் அமைந்த விண்ணப்பம் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட வேண்டும். அரசால் வகுக்கப்பட்ட நெறிமுறையின்படி மாவட்ட சீராய்வுக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு பரிந்துரை செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்க பரிசீலிக்கப்படும்.

[2000 மே 16

(5) அரசியல் ஓய்வூதியதாரர், தமது மரணத்திற்குப் பின் தனது மனைவியை/கணவனை தொடர்ந்து ஓய்வூதியம் பெற வாரிசாக நியமனம் செய்யலாம்.

(6) விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு திங்கள்தோறும் வழங்கப்படும் ஓய்வூதியம் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம் இணைப்பு ஒன்றில் கொடுக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர, மத்திய அரசு ஓய்வூதியம் பெறுவோருக்கு மாநில அரசு ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது. இதன் விவரம் இணைப்பு இரண்டில் கொடுக்கப்பட்டுள்ளது.

(7) மாநில அரசின் ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் இறந்தால் இந்த ஓய்வூதியத் தொகையானது அவரது மனைவிக்கு/கணவருக்கு/உரிய வயதடையாத குழந்தைகளுக்குத் தொடர்ந்து வழங்கப்படுகிறது. இவ்வோய்வூதியம் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம் இணைப்பு மூன்றில் கொடுக்கப்பட்டுள்ளது.

(8) நாட்டில் விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றிய மேலோரின் பணியைப் பாராட்டி, அவர்களுக்கு அல்லது அவர்களது வாரிசுகளுக்குச் சிறப்பு ஒட்டுமொத்த மானியங்களும், ஓய்வூதியங்களும், அரசினால் வழங்கப்படுகின்றன. 29-08-1996 வரை சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.150/- வீதம் மற்றும் வீரபாண்டிய கட்டபொம்மன் வாரிசுதாரர்களுக்கு மாதம் ரூ.300/- வீதம் மேற்படி ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. இந்த ஓய்வூதியம் 30-08-1996 முதல் சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுதாரர்களுக்கும், வீரபாண்டிய கட்டபொம்மன் வாரிசுதாரர்களுக்கும் மாதம் ஒன்றிற்கு ரூ.500/- ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. 31-03-2000 அன்று நிலவரப்படி சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுதாரர்கள் 173 பேரும், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான மற்றும் முதுநிலை வாரிசுதாரர்கள் 7 பேரும் மேற்படி ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

(9) விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் வழங்கப்படும் ஏனைய சலுகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:

**(அ) மருத்துவ வசதிகள்:**

மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது இவ்விரு அரசின் ஓய்வூதியங்களையும் பெற்று வருகின்ற அனைத்து விடுதலைப் போராட்ட



2000 மே 16]

வீரர்களுக்கும்/விதவைகளுக்கும்/உரிய வயதடையாத குழந்தைகளுக்கும் 01-08-1990ஆம் நாளிலிருந்து மாதம் ஒன்றிற்கு ரூ.15/- வீதம் மருத்துவப்படி வழங்கப்படுகிறது.

மத்திய/மாநில அரசு ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லது அவரது வாரிசுதாரர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் "பி" வகுப்பு வார்டு வசதிகளுடன் இலவச மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது.

விடுதலைப் போராட்ட வீரர்களின் மகனோ அல்லது மகளோ மனவளர்ச்சி குன்றியவராகவோ அல்லது நிரந்தர உடல் ஊனமுற்றவராகவோ இருக்கும் நேர்வில் அவர்களது வாழ்நாள் முழுமைக்கும் தொடர்ந்து ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழக்கமாக அனுமதிக்கப்படுகின்ற இலவச மருத்துவ சிகிச்சை வசதியும் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

**(ஆ) கல்விச் சலுகைகள்:**

பள்ளிகள், கல்லூரிகள், தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் பயின்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு/பேரன், பேத்திகளுக்கு கல்விக் கட்டணச் சலுகையும் படிப்பு உதவித் தொகைகளும் வழங்கப்படுகின்றன.

மேலும், விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு/பேரன், பேத்திகளுக்கு தொழில்/தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு:-

1. 1980-81ஆம் ஆண்டிலிருந்து பொறியியல் பட்டப் படிப்பில், விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கு (மகன்கள்/மகள்கள்) ஓரிடம் என இருந்து வந்ததை 1999-2000 ஆம் ஆண்டு முதல் ஐந்து இடங்கள் என உயர்த்தியது. 2000-2001ஆம் ஆண்டிலிருந்து ஐந்து இடங்கள் என்று இருந்து வந்ததை 10 இடங்களாக மேலும் உயர்த்தி அரசு ஆணை நிலை எண் 70, உயர்கல்வி, 7-3-2000-இல் ஆணை வெளியிட்டுள்ளது.

2. பின்வருமாறு முன்னுரிமை அடிப்படையில் மருத்துவக் கல்லூரிகளில் மூன்று இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன:

   (அ) விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகள்

   (ஆ) விடுதலைப் போரட்ட வீரர்களின் பேரன்/பேத்திகள்

[2000 மே 16

3. விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு, பேரன், பேத்திகளுக்கு சித்த மருத்துவ இளங்கலைப் பட்டப் படிப்பில் ஓரிடமும், ஓமியோபதி மருத்துவ இளங்கலைப் பட்டப்படிப்பில் ஓரிடமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

4. விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு, பேரன், பேத்திகளுக்கு பல்தொழில்நுட்பப் பயிலகத்திலும் (பாலிடெக்னிக்) சிறப்புக் கல்வி நிறுவனங்களிலும் ஓரிடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(இ) வீட்டு வசதிகள்:**

தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரியம் ஒதுக்கீடு செய்த வீடுகளில்/மனைகளில்/அடுக்குமாடி வீடுகளில், ஆதிதிராவிடர்/ பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவிகிதத்திலும், சலவையாளர்/நாவிதர்களுக்கு ஒதுக்கப்பட்ட 5 சதவிகிதத்திலும் மற்றும் பொது மக்களுக்கு ஒதுக்கப்பட்ட 37 சதவிகிதத்திலும் ஒவ்வொரு சதவிகிதம் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**(ஈ) போக்குவரத்து வசதிகள்:**

1996 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களுக்கு முன்னர் மத்திய அல்லது மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியத்தைப் பெற்று வந்தவர்களுக்கு மட்டுமே மாநில அரசின் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகைகள் வழங்கப்பட்டன. இவ்வரசு மேற்குறிப்பிட்ட சலுகையை விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெற்று வந்தவர்களின் விதவைகளுக்கும் மற்றும் அவர்களுடைய சட்டப்படியான வாரிசுகளுக்கும் போக்குவரத்துத் துறையின் 05-11-1996 ஆம் நாளிட்ட 240 ஆம் எண் அரசாணையில் நீட்டித்து ஆணை வெளியிட்டுள்ளது.

**(உ) ஈமச்சடங்குச் செலவுகள்:**

விடுதலைப் போராட்ட வீரர் இறந்து போவதை அடுத்து ஈமச் செலவுக்காக விடுதலைப் போராட்ட வீரரின் மனைவிக்கு அல்லது அவருடைய சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு ரூ.1000/- (ரூபாய் ஓராயிரம் மட்டும்) உடனடியாக வழங்கப்பட்டு வந்தது. அரசு ஆணை எண் 520, நாள் 17-4-2000 படி தற்போது இத்தொகை ரூ.2000/- ஆக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. மாநில அரசின்/மத்திய அரசின் ஓய்வூதியம் அல்லது இவ்விரண்டு ஓய்வூதியங்களையும்



2000 மே 16]

பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் இது பொருந்தத்தக்கதாகும். இத்தொகை, சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் மூலமாக ரொக்கமாக வழங்கப்படும். இறந்து போன விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் வட்டாட்சியர் அல்லது அவரது பதவித் தரத்திற்குக் குறையாத அலுவலர் ஒருவரால் விடுதலைப் போராட்ட வீரர் இறக்க நேரிட்டால் அவரது உடல் மீது அரசு சார்பில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தப்படுகிறது.

**(ஊ) பெரியார் நினைவு சமத்துவபுரக் குடியிருப்புகளில் விடுகள் ஒதுக்கீடு செய்தல்:**

கடித நிலை எண் 122, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 25-11-1999 இல் விடுதலைப் போராட்டத் தியாகிகள் மற்றும் அவர்தம் வாரிசுதாரர்களுக்கு பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டத்தில் அரசாணை நிலை எண் 171, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 22-10-1997இல் குறிப்பிட்டுள்ள சாதிவிகிதத்திற்குள்ளேயே ஒதுக்கீடு செய்ய அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

**(எ) சுதந்திரப் போராட்டத் தியாகிகள் மற்றும் மொழிப் போராட்டத் தியாகிகளின் வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை:**

1999-2000ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட அறிக்கையை சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பித்தபொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினைத் தெரிவித்தார்கள்:

> "வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து அரசுத் துறைகளிலும் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புக்காக பெயர்கள் அனுப்பப்படும்போது விடுதலைப் போராட்டத் தியாகிகள்/மொழிக்காவலர்கள் ஆகியோரின் சட்டப்படியான வாரிசுகளுக்கு முன்னுரிமை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்"

மேற்காணும் அறிவிப்பிற்கிணங்க அரசு நிலை ஆணை எண் 59, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 4-5-1999 இல் சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு

வேலை வாய்ப்பகங்கள் மூலம், வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை அளிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(10) சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகங்களை மறவாமல் இருக்கும்பொருட்டு அவர்களின் தியாகங்களைப் போற்றிடும் வகையிலும் இளைய தலைமுறையினருக்கு எழுச்சியூட்டும் வகையிலும் இவ்வரசு மிகுந்த பொறுப்புடன் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதுகுறித்த திட்டங்கள் பின்வருமாறு:

1. ரூ.25 இலட்சம் செலவில் முன்னாள் முதல்வர் பெரியவர் திரு. எம். பக்தவச்சலம் அவர்களுக்கு சென்னையில் நினைவிடம் ஒன்று அமைக்கப்பட்டு அதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 13-3-1998 அன்று திறந்து வைத்தார்.

2. சுதந்திரப் பொன்விழா ஆண்டையொட்டி தியாகிகளின் நினைவாக, காந்தி மண்டபம் அருகே சென்னை கிண்டியில் ரூ.30 இலட்சம் செலவில் அமைக்கப்பட்ட தியாகிகள் மணி மண்டபம் 2-10-1998 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

3. வேலூர் சிப்பாய் கலவரம் எனும் சுதந்திரப் போரில் தங்கள் இன்னுயிரை ஈந்த இந்தியப் படை வீரர்களின் நினைவாக ரூ.3 இலட்சம் செலவில் நினைவுத்தூண் ஒன்று வேலூரில் அமைக்கப்பட்டு, அதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20-12-1998 அன்று திறந்து வைத்தார்.

4. மதுரை திருமங்கலத்தில் விடுதலைப் போராட்டத் தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் நினைவாக ரூ.62 இலட்சம் செலவில் நினைவு இல்லம் உருவாக்கப்பட்டு 27-12-1998 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

5. திருநெல்வேலி மாவட்டத்தில் சுதந்திரப் போராட்ட மாவீரர் பூலித்தேவன் நினைவாக புதிய மாளிகை ரூ.57 இலட்சம் செலவில் எழுப்பப்பட்டு, பூலித்தேவன் சிலையும் அமைக்கப்பட்டு 28-12-1998 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறநது வைக்கப்பட்டது.



6. ஆங்கிலேயர் கொடியை இறக்கி விட்டு செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றுவதற்காக, உயிரைப் பொருட்படுத்தாமல் கொடிக்கம்பத்தின் உச்சியில் ஏறி கொடி ஏற்றியவரும், நாட்டு விடுதலைக்காகப் பலமுறை சிறை சென்றவருமான ஆரியா என்ற பாஷ்யம் அவர்களின் சிலை சென்னையில் உள்ள தியாகிகள் மணிமண்டபத்தின் முகப்பில் அமைக்கப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 17-7-1999 அன்று சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

7. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட 200-வது ஆண்டை நினைவுகூர்ந்திடும் வகையில், 16-10-1999 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற நினைவாஞ்சலி நிகழ்ச்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்று புகழாஞ்சலி செலுத்தினார்கள். அதே நாளில் கயத்தாறில் அரசால் நடத்தப்பட்ட விழாவில் வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

8. 2000-2001 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கையை சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பித்தபொழுது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினைத் தெரிவித்தார்கள்.

"மருதுபாண்டியர் நடத்திய சுதந்திரப் போராட்டத்தின் விளைவாக அவர்கள் தூக்கிலிடப்பட்ட இருநூறாவது ஆண்டினை நினைவுகூர்ந்திடும் வகையில், நினைவுச்சின்னம் அமைத்து 24-10-2001 அன்று புகழாஞ்சலி நிகழ்ச்சி நடத்துவதற்கான வழிமுறைகளை வகுத்திட ஏற்பாடுகள் செய்யப்படும்".

**(11) மத்திய அரசின் ஓய்வூதியத் திட்டம்:**

மத்திய அரசு செயல்படுத்தும் இத்திட்டம் 15-08-1972 முதல் செயலில் உள்ளது. 01-08-1980 முதல் "சுதந்திரத்தா சைனிக் சம்மன் பென்சன் திட்டம்" என்று இத்திட்டம் மறு பெயரிட்டு பின்வரும் சலுகைகளுடன் இத்திட்டத்தை மத்திய அரசு மாற்றி அமைத்தது.

[2000 மே 16

(அ) ஓய்வூதியதாரர்களின் ஆண்டு உச்ச வருமான வரம்பு ரூ.5000/- என்பது 01-08-1980 முதல் நீக்கப்பட்டது.

(ஆ) ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் பெண் விடுதலைப் போராட்ட வீரர் ஆகியோரைப் பொறுத்தமட்டில் ஓய்வூதியம் அனுமதிக்கப்படுவதற்குச் சிறைத் தண்டனை அனுபவித்த காலம் ஆறு மாதத்திலிருந்து மூன்று மாதங்களாகக் குறைக்கப்பட்டது.

(இ) விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு குறைந்த பட்சம் ஆறு மாதங்கள் சிறைத் துன்பம் அனுபவித்தவர்கள் மைய அரசு சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதியுடையவராகிறார்கள். அவர்கள் தங்களது சிறைத்துன்பத்திற்கு ஆதாரமாக சிறைச்சான்று சமர்ப்பிக்க வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள சிறைச்சான்று இல்லாத பட்சத்தில், சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட "ஆவணங்கள் இல்லை" என்பதற்குரிய சான்றும், தான் சிறையிலிருந்த அதே காலத்தில் தன்னுடன் குறைந்த பட்சம் ஓராண்டு காலம் சிறைத் துன்பம் அனுபவித்தவரும் மைய அரசு ஓய்வூதியம் பெறுபவருமாகிய இருவரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்டுள்ள சக கைதி சான்றிதழ் படிவத்தில் பெறப்பட்ட இரு சக கைதி சான்றிதழ்கள் சமர்ப்பித்தல் வேண்டும் (அல்லது) தற்போதுள்ள அல்லது முன்னாள் சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினர் எவரேனும் ஒருவரிடமிருந்து சான்றாளரின் சிறைத்துன்ப காலத்தையும், மனுதாரரின் சிறைத் துன்ப காலத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டு சக கைதி சான்றிதழ் குறிப்பிட்ட படிவத்தில் பெற வேண்டும்.

(ஈ) ஆறு மாதம் அல்லது அதற்கும் மேலாகத் தலைமறைவாக இருந்தவர்கள், ஆனால் அரசு ஆவணங்கள் கிடைக்கப் பெறாதவர்கள், இரண்டாண்டுகள் அதற்கும் மேலாக சிறைத்தண்டனை அனுபவித்துள்ள பிரபலமான விடுதலைப் போராட்ட வீரர் எவரேனும் ஒருவரிடமிருந்து குறிப்பிட்ட படிவத்தில் சான்றிதழ் பெற்று தக்க ஆதாரமாக சமர்ப்பிக்கலாம். மேலும், மேற்படி அரசு ஆவணங்கள் கிடைக்கவில்லை என்பதற்கான சான்றிதழ் சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும். சான்றிதழ் அளிப்பவர் மனுதாரரின் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

(உ) 10 சவுக்கடிகள்/கசையடி அல்லது பிரம்படி பட்டு ஒருவர் துன்பப்பட்டிருந்தால் அது ஆறு மாதத்திற்குக் குறையாமல் சிறைத் தண்டனை அனுபவித்ததற்கு ஈடாகக் கருதப்படும்.



2000 மே 16]

(ஊ) மேலும், இந்தியாவிற்கு வெளியே நடந்த சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டு குறைந்தபட்சம் ஆறு மாதங்களோ அல்லது அதற்கு மேலோ சிறைத் துன்பம்/காவல் துன்பம் அனுபவித்த முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்களும் மைய அரசு சுதந்திரப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாகிறார்கள்.

(எ) விண்ணப்பதாரர்கள் ஐந்து ரூபாய்க்கான முத்திரைத் தாளில் பிரமாண வாக்குமூலம் அளிக்க வேண்டும். இவ்வாக்குமூலம் முதன்மை நீதிபதியின் முன்னிலையில் அளிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

(ஏ) விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான மத்திய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் வழங்கத்தக்க மாதாந்திர ஓய்வூதியம் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம் இணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஐ) மத்திய விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுபவர் இறக்கநேரின் அவர் பெற்று வந்த மத்திய அரசு மாதாந்திர ஓய்வூதியத் தொகையான ரூபாய் 3000/- த்துடன் மாநில அரசின் பங்கான ரூபாய் 500-ம் அவரது சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு தொடர் ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

(ஒ) 01-08-1998 முதல் மைய அரசு ஓய்வூதியதாரர்களுக்கு அவர்களது ஓய்வூதியத் தொகையில் 7 சதவிகிதம் அகவிலைப்படி மைய அரசு அறிவித்து வழங்கியது. அது தற்பொழுது 20 சதவிகிதமாக 01-08-1999 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

(12) 31-03-2000 அன்றைய நிலவரப்படி மாநில, மத்திய அரசுகளின் ஓய்வூதியங்களைப் பெறும் தமிழ் நாட்டிலுள்ள விடுதலைப் போராட்ட வீரர்கள் குறித்த விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | விடுதலைப் போராட்ட வீரர் மாநில ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை (ரூ. 3,000/-+15 மருத்துவப்படி) | 1674 |
| 2. | விடுதலைப் போராட்ட வீரர் மாநிலத் தொடர் ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை (ரூ .1,500/-+15 மருத்துவப்படி) | 2524 |

[2000 மே 16

| | | |
|---|---|---|
| 3. | விடுதலைப் போராட்ட வீரர் மைய அரசு ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை (ரூ 3,000/-+15 மருத்துவப்படி) | 1510 |
| 4. | மைய அரசின் தொடர் ஓய்வூதியம் பெறும் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை (ரூ. 3,000/-+15 மருத்துவப்படி) | 1486 |
| 5. | வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள் (ரூ. 50/-மாதம் ஒன்றுக்கு) | 7 |
| 6. | சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள் (ரூ. 500/- மாதம் ஒன்றுக்கு) | 173 |

(13) 1987 ஆம் ஆண்டு வன்னியர் சங்கத்தினரால் நடத்தப்பட்ட இடஒதுக்கீடு போராட்டத்தில் கலந்து கொண்டு உயிர் நீத்தவர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்குதல்;-

இட ஒதுக்கீடு கேட்டு வன்னியர் சங்கத்தினரால் 1987 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சமூக நீதிப் போராட்டத்தில் உயிர் நீத்தோரின் நினைவாக அவர்களது வாரிசுதாரர்களுக்குக் குடும்ப ஓய்வூதியமாக மாதம் ஒன்றிற்கு ரூ. 1,500/- அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

(14) இத்திட்டங்களுக்காக 2000-2001 ஆம் ஆண்டில் ரூ. 14,06,66,000/-- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இணைப்பு-1

### மாநில அரசால் விடுதலைப் போராட்ட விரர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை விவரம்

| வ.எண். | கால அளவு | ஓய்வூதியத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1. | 01-10-1966 முதல் | 50/- |
| 2. | 15-08-1972 முதல் | 75/- |
| 3. | 01-04-1979 முதல் | 100/- |
| 4. | 25-01-1981 முதல் | 150/- |



2000 மே 16]

## இணைப்பு- 1—தொடர்ச்சி

| வ.எண். | கால அளவு | ஓய்வூதியத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 5. | 10-06-1986 முதல் | 250/- |
| 6. | 01-08-1989 முதல் | 350/- |
| 7. | 01-01-1991 முதல் | 400/- |
| 8. | 01-08-1992 முதல் | 1,000/- |
| 9. | 01-09-1995 முதல் | 1,500/- |
| 10. | 15-08-1997 முதல் | 3,000/- |

## இணைப்பு- 2

### மத்திய அரசு ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மாநில அரசால் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை விவரம்

| வ.எண். | கால அளவு | ஓய்வூதியத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1. | 15-08-1972 முதல் | 75/- |
| 2. | 25-01-1981 முதல் | 100/- |
| 3. | 01-08-1992 முதல் | 250/- |
| 4. | 01-04-1997 முதல் | 500/- |

53-137—21

[2000 மே 16

## இணைப்பு- 3

**மாநில விடுதலைப் போராட்ட வீரர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் மாதாந்திர குடும்ப ஓய்வூதியத் தொகை விவரம்**

| வ.எண். | கால அளவு | ஓய்வூதியத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1. | 01-10-1966 முதல் | 50/- |
| 2. | 15-08-1972 முதல் | 75/- |
| 3. | 01-04-1979 முதல் | 100/- |
| 4. | 25-01-1981 முதல் | 150/- |
| 5. | 10-06-1986 முதல் | 250/- |
| 6. | 01-08-1989 முதல் | 350/- |
| 7. | 01-01-1991 முதல் | 400/- |
| 8. | 01-08-1992 முதல் | 500/- |
| 9. | 01-09-1995 முதல் | 750/- |
| 10. | 15-08-1997 முதல் | 1,500/- |

## இணைப்பு- 4

**விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மத்திய அரசால் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை விவரம்**

| வ.எண். | கால அளவு | ஓய்வூதியத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1. | 15-08-1972 முதல் | 200/- |
| 2. | 01-08-1980 முதல் | 300/- |
| 3. | 01-06-1985 முதல் | 500/- |
| 4. | 14-11-1988 முதல் | 750/- |
| 5. | 12-08-1992 முதல் | 1,000/- |
| 6. | 02-10-1994 முதல் | 1,500/- |
| 7. | 15-08-1997 முதல் | 3,000/- |



2000 மே 16]

## இணைப்பு-II

(106ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### மானியக் கோரிக்கை எண் 42—பல்வகை

**2000-2001 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு**

இது கூட்டு மானியக் கோரிக்கையாகும். இந்த மானியக் கோரிக்கையில் உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கப்படும் நிதியுதவி தொடர்பான செலவு, இலங்கையிலிருந்து திருப்பியனுப்பப் பட்டோருக்குப் புது வாழ்வு அளிப்பதற்கான செலவு, தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சிறு சேமிப்புத் திட்டம் தொடர்பான செலவு ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன. வேறு எந்தக் குறிப்பிட்ட ஒரு மானியக் கோரிக்கையிலும் சேர்க்க இயலாத ஏனைய பல்வகை இனங்களும் இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த மானியக் கோரிக்கையில் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள், பெருந்தலைப்பு வாரியாக வருமாறு:—

| கணக்குத் தலைப்புகள் | 1999-2000 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 1999-2000 திருத்த மதிப்பீடு | 2000-2001 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 2047. ஏனைய வரிவிதிப்புப் பணிகள் | 3765 | 3479 | 2886 |
| 2059. பொதுப் பணிகள் | — | — | 3000 |
| 2070. ஏனைய நிருவாகப் பணிகள் | 191 | 254 | 249 |
| 2075. பல்வகைப் பொதுவான பணிகள் | 30780 | 12866 | 18073 |
| 2235. சமூகப் பாதுகாப்பும் நலனும் | 11070 | 11450 | 10811 |
| 2250. ஏனைய சமூகப் பணிகள் | 18 | 18 | 18 |
| 2402. மண்வள, நீர்வளப் பாதுகாப்பு | — | — | 500 |
| 2801. மின்சக்தி | — | — | 100 |
| 3604. உள்ளாட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் | — | — | 3800 |

[2000 மே 16

இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள சில முக்கியத் திட்டங்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:—

## சிறுசேமிப்பு

சிறுசேமிப்புத் துறையின் முக்கிய பணியானது, மத்திய அரசால் உருவாக்கப்படும் பல்வேறு சிறுசேமிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதே ஆகும்.

திரட்டப்படும் நிகர சிறுசேமிப்புத் தொகையில் 80 விழுக்காட்டை 25 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தத்தக்க நீண்ட காலக் கடனாக மைய அரசு மாநில அரசுக்கு வழங்கி வருகிறது. 12.5 விழுக்காடு வட்டி விகிதத்தில் வழங்கப்படும் இக்கடனுக்கு 5 ஆண்டு கால தவணை நீட்டிப்பும் உள்ளது.

**இலக்கும் சாதனையும்:**

கடந்த ஏழாண்டுகளில் சிறுசேமிப்பின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட நிகர வசூல் இலக்கு, வசூல் தொகை மற்றும் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன் தொகை விவரங்கள் பின்வருமாறு:

| ஆண்டு | இலக்கு | மொத்த வசூல் | நிகர வசூல் | மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்) | | |
| 1993-1994 | 590.00 | 2211.66 | 621.47 | 466.10 |
| 1994-1995 | 800.00 | 2650.38 | 791.08 | 593.31 |
| 1995-1996 | 700.00 | 1956.36 | 490.70 | 368.03 |
| 1996-1997 | 625.00 | 2233.08 | 495.80 | 371.85 |
| 1997-1998 | 775.00 | 2432.51 | 547.46 | 410.60 |
| 1998-1999 | 1400.00 | 2905.93 | 1154.95 | 866.21 |
| 1999-2000 | 1600.00 | 3479.79 (தோராயமாக) | 1603.30 (தோராயமாக) | 1013.56 |



2000 மே 16]

**சிறுசேமிப்புத் திட்டங்கள்:**

அனைத்துப் பிரிவு மக்களும் பணத்தைச் சேமிக்க ஏற்ற வகையில் பல்வேறு சிறுசேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. அவை பின்வருமாறு:

(அ) வரிச்சலுகை உள்ள திட்டங்கள்:

1. பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்
2. தேசிய சேமிப்புப் பத்திரம் (8வது வெளியீடு)
3. தேசிய சேமிப்புத் திட்டம்.

(ஆ) உயர் வருவாய் அளிக்கும் திட்டங்கள்:

கிஸான் விகாஸ் பத்திரம்

(இ) தொடர் வருவாய் அளிக்கும் திட்டங்கள்:

1. அஞ்சலக மாதாந்திர வருமானத் திட்டம்
2. ஓய்வு பெறும் அரசு ஊழியருக்கான வைப்புத் திட்டம்
3. ஓய்வு பெறும் பொதுத் துறை நிறுவன ஊழியருக்கான வைப்புத் திட்டம்.

(ஈ) பிற திட்டங்கள்:

1. அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம்
2. அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம்
3. அஞ்சலக சேமிப்புத் திட்டம்
4. சம்பளப் பட்டியல் சேமிப்புத் திட்டம்
5. சஞ்சாயிகா சேமிப்புத் திட்டம்.

சிறுசேமிப்பு முகவரமைப்பு:

சிறுசேமிப்பு முகவரமைப்பின்கீழ் மூன்று வகையான முகவர்கள் உள்ளனர்.

1. நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்பு
2. மகளிர் முகவரமைப்பு
3. அங்கீகரிக்கப்பட்ட (பொது வருங்கால வைப்பு நிதி) முகவரமைப்பு.

[2000 மே 16

## முகவரமைப்பின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | முகவரமைப்பு | செயல்படுத் தப்படும் திட்டங்கள் | மத்திய அரசு வழங்கும் ஊக்கத் தொகை | மாநில அரசு வழங்கும் ஊக்கத் தொகை | கால அளவு | முகவர் களின் எண்ணி க்கை |
|---|---|---|---|---|---|---|
| 1. | நிலைப்படுத்தப் பட்ட முகவரமைப்பு | தேசிய சேமிப்புப் பத்திரம் | 1 % | 1 % | | |
| | | தேசிய சேமிப்புத் திட்டம் | 1 % | 1 % | | |
| | | மாதாந்திர வருமானத் திட்டம் | 1 % | 1 % | | |
| | | கிசான் விகாஸ் பத்திரம் | 1 % | 1 % | | |
| | | அஞ்சலக கால வைப்புத் திட்டம் | | | மாதந் தோறும் | 9185 |
| | | 1 ஆண்டு | 1 % | 1 % | | |
| | | 2 ஆண்டுகள் | 1 % | 1 % | | |
| | | 3 ஆண்டுகள் | 1 % | 1 % | | |
| | | 5 ஆண்டுகள் | 1 % | 1 % | | |
| 2. | மகளிர் முகவரமைப்பு | அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் | 4% | 2% | மாதந் தோறும் | 14635 |
| 3. | பொது வருங்கால வைப்பு நிதி முகவரமைப்பு | பொது வருங்கால வைப்பு நிதி | 1 % | 1 % | மாதந் தோறும் | 1064 |
| | | ஓய்வுபெறும் அரசு ஊழியருக்கான வைப்புத் திட்டம்/ஓய்வு பெறும் பொதுத் துறை நிறுவன ஊழியருக்கான வைப்புத் திட்டம் | 1 % | 1 % | | |



2000 மே 16]

## வருங்காலத் திட்ட அணுகுமுறை:

பொது மக்களின் வருமானம் தொடர்ந்து அதிகரித்துவரும் நிலையில், அவர்களிடையே சேமிக்கும் மனப்பான்மையும் அதிகரிக்கின்றது. முதலீடு செய்வதற்கு பல்வேறு விதமான வாய்ப்புகள் இருந்தபோதிலும், முதலீட்டாளர்களின் விருப்பத்திற்கேற்ப பல்வகையான திட்டங்களைக் கொண்டதும், மற்றவற்றை ஒப்பிடும்போது நீண்டகால சேமிப்பின் அடிப்படையில் அதிக பணப்பயன் தரத்தக்கதுமானவை சிறுசேமிப்புத் திட்டங்களாகும். அவை வீட்டு வருமானச் சேமிப்பிற்கு சீரியதொரு ஆதாரமாகும். சிறுசேமிப்பு முகவர்களை முனைப்பாக ஈடுபடுத்தி அதன்மூலம் சிறுசேமிப்பு அமைப்பு ஒரு முழுமையான மக்கள் இயக்கமாக மாற்றியமைக்கப்பட்டு வருகிறது. சிறுசேமிப்பு முகவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து அவர்களின் திறனை பரவலான முறையில் பயன்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

சிறுசேமிப்புத் திட்டங்கள் குறித்த சிறப்பு அம்சங்களை முதலீட்டாளர்கள் அறிந்துகொள்ள ஏதுவாக சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் கணினியுடன் இணைந்த தகவல் பரிமாறிக்கொள்ளும் சாதனத்தை அரசு ஏற்கெனவே நிறுவியுள்ளது. இது ஏனைய மாவட்டத் தலைமையிடங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்படும். சிறுசேமிப்பில் முதலீடு செய்பவர்களுக்கு உரிய வசதிகளை விரைவில், எளிதாகக் கிடைக்கச் செய்வதற்கு ஏதுவாக அஞ்சலகங்களில் இதற்கான வசதிகளை மாநில அரசு செய்து தருகிறது. முகவர்களுக்குப் பயிற்சி அளித்தல், திட்டத்தில் சிறப்பாகப் பங்காற்றும் அரசு அலுவலர்களுக்கும், அஞ்சல் துறை அலுவலர்களுக்கும் பரிசளித்து ஊக்குவித்தல் போன்றவை சிறுசேமிப்புத் துறை இயக்ககம் ஆண்டு வசூல் இலக்கை எய்திட உதவுகின்றன.

## பரிசுச் சீட்டு

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம் மறைந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களால் 15-8-1968 ஆம் நாளன்று முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1975 செப்டம்பரிலிருந்து 1976 ஆகஸ்டு வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு, பின்னர் மீண்டும் செயல்படுத்தப்பட்டது. ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைகள் வழங்குதல், கிராமப் பகுதிகளில் குடிநீர் வழங்குதல், கிராமப் பகுதிகளில் சுகாதார வசதிகள் அமைத்துத் தருதல் முதலிய நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக வரி அல்லாத நிதி ஆதாரங்களைத் திரட்டுவதே

[2000 மே 16

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பரிசுச் சீட்டுகள் விற்பனையின் மூலம் கிடைக்கப் பெறும் நிகர ஆதாயத் தொகையில் 75 விழுக்காடு நலத்திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வோராண்டும் டிசம்பர்த் திங்களில் நடைபெறும் முதல் குலுக்கலின் மூலம் கிடைக்கக்கூடிய நிகர ஆதாயத் தொகை முன்னாள் இராணுவத்தினர் நலத்திற்காக ஒதுக்கப்படுகிறது.

**பரிசுச் சீட்டுச் சட்டம்:**

பரிசுச் சீட்டுகள் முறைப்படுத்தல் சட்டம் 1998, ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டத்துக்குப் பதிலாகக் கொண்டுவரப்பட்டு, 7-7-1998 முதல் நடைமுறையில் இருந்து வருகிறது.

உச்ச நீதிமன்றம் தனது 7-5-1999 நாளிட்ட தீர்ப்பில் ஒரு மாநிலம், தான் பரிசுச் சீட்டு நடத்துவதைத் தடைசெய்தால்தான் அம்மாநிலத்திற்குள் பிற மாநில பரிசுச் சீட்டுக்களின் விற்பனையையும் தடைசெய்ய இயலும் எனத் தீர்ப்பளித்துள்ளது.

## மறுவாழ்வு

### 1. அகதிகள்

இலங்கையில் 1983 ஆம் ஆண்டில் தொடர்ந்து ஏற்பட்ட இனக் கலவரத்தின் காரணமாக இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டில் கடற்கரை ஓர மாவட்டங்களில் வந்து புகலிடம் தேடி வந்தனர். இலங்கையிலிருந்து தமிழர்கள் அகதிகளாக இந்தியாவிற்கு வருவது எண்ணிக்கையில் மாறுதல் இருந்தாலும், தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. 1987-91 மற்றும் 1992-95 ஆகிய இரு காலகட்டங்களில் பல இலங்கை அகதிகள் திரும்ப இலங்கைக்கு அனுப்பப்பட்டனர். 29-2-2000 நாள் நிலவரப்படி தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 129 அகதிகள் முகாம்களில் மொத்தம் 65934 இலங்கை அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மைய அரசினால் நிர்ணயிக்கப்பட்டபடி பல்வேறு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவர்கள் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு முகாம்களில் தங்கவைக்கப்பட்டு அந்த முகாம்களுக்கு மின்சாரமும், தண்ணீரும் இலவசமாக வழங்கப்படுகிறது. அவர்களுக்கு பண உதவி மட்டுமின்றி, மானிய விலையில் அரிசி, உடைகள் மற்றும் பாத்திரங்கள் வழங்கப்படுகின்றன.



2000 மே 16]

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகளின் குழந்தைகளுக்கு அவர்கள் பள்ளிகளில் படிக்கும்வரை சீருடை, மதிய உணவு மற்றும் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

அகதிகளில் போராளிகள் மற்றும் சந்தேகத்திற்குரியவர்கள் என்று கருதப்படும் நபர்கள் செங்கல்பட்டு, வேலூர் மற்றும் மேலூர் ஆகிய இடங்களிலுள்ள சிறப்பு முகாம்களில் தங்கவைக்கப்படுகின்றனர்.

அகதிகள் பராமரிப்பிற்கான பல்வேறு செலவினங்களும் முதலில் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டு பின்னர் மைய அரசினால் ஈடுசெய்யப்பட்டு வருகின்றன.

இலங்கை அகதிகளுக்கு வழங்கப்படும் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு உதவிகள்:

**1. பணக்கொடை :**

தமிழகத்திலுள்ள அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு மைய அரசு நிர்ணயித்துள்ளவாறு கீழ்க்கண்ட விகிதங்களில் பணக் கொடை அளிக்கப்பட்டு வருகிறது.

(பிரதி மாதம்)

| | | |
|---|---|---|
| 1. | தனி நபர் குடும்பம்/குடும்பத் தலைவர் | ரூ. 200 |
| 2 | கூடுதலாக உள்ள பெரியவர்கள் (12 வயது மற்றும் அதற்கு மேல்) | ரூ. 144 |
| 3 | சிறியவர்கள் (முதல் நபர்) | ரூ. 90 |
| 4 | ஏனையோர் (12 வயதுக்குள்) | ரூ. 45 |

முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு மாதந்தோறும் ரூ. 1 கோடி வரை பணக்கொடை வழங்கப்பட்டு வருகிறது.

**2. மலிவு விலையில் அரிசி :**

முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு மலிவு விலையில் அரிசி மைய அரசினால் நிர்ணயிக்கப்பட்ட அளவில் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது:

[2000 மே 16

(நாளொன்றுக்கு)

| | | | |
|---|---|---|---|
| (1) | பெரியவர்கள் (8 வயதும் அதற்கு மேலும்) | 400 கிராம் | (கிலோ 1 க்கு ரூ. 0.57 வீதம்) |
| (2) | சிறியவர்கள் (8 வயதிற்குக் கீழ்) | 200 கிராம் | (கிலோ 1க்கு ரூ. 0.57 வீதம்) |

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தங்களது நியாய விலைக் கடைகள் மூலமாக அகதிகளுக்கு அரிசி வழங்கி இதற்கான விலை வித்தியாசத் தொகையை அரசிடமிருந்து பெற்றுக்கொள்கிறது. இவ்வாறு அகதிகளுக்கு மலிவு விலையில் அரிசி வழங்குவதில் ஆண்டிற்கு ரூ. 5 கோடி செலவாகிறது.

**3. துணிமணிகள்:**

இலங்கை அகதிகளுக்கு துணிமணிகள், பாய் போன்றவை ஆண்டுதோறும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒவ்வொரு குடும்பத்திற்கும் போர்வைகள் வழங்கப்படுகின்றன. இதற்கு ஆண்டுதோறும் ஏறத்தாழ ரூ. 2 கோடி செலவிடப்படுகின்றது.

இவை மட்டுமின்றி, தமிழக அரசு ஆண்டுதோறும் பொங்கல் விழாவின்போது ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகளுக்கும் வேட்டி / சேலைகள் வழங்கி வருகிறது. இதற்கு ஒவ்வோர் ஆண்டும் சுமார் ரூ. 35 இலட்சம் செலவிடப்படுகிறது.

**4. பாத்திரங்கள்:**

இலங்கை அகதிகளின் குடும்பங்களுக்கு இரண்டாண்டிற்கு ஒரு முறை எட்டு வகையான பாத்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கு இரண்டாண்டிற்கு ஒரு முறை ரூ. 15 இலட்சம் செலவிடப்படுகிறது.

**5. குடியிருப்பு வசதிகள்:**

1990-91 ஆம் ஆண்டில் அகதிகளைத் தங்க வைப்பதற்காகக் கட்டப்பட்ட தற்காலிகக் குடிசைகள் கால ஓட்டத்தின் காரணமாகப் பழுதடைந்துவிட்டதால், அவற்றைப் பழுது பார்க்கவும், புதுப்பிக்கவும் வேண்டிய நிலை ஏற்பட்டது.

மைய அரசின் ஒப்புதல் பெற்று 1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டுகளில் ரூ.5,72,41,700 செலவில் 7500 குடிசைகள்



2000 மே 16]

பழுதுபார்க்கப்பட்டு/புதுப்பிக்கப்பட்டு தேவையான அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

புதிதாக வரக்கூடிய அகதிகளைத் தங்க வைப்பதற்காக புதிய குடிசைகள் கட்ட வேண்டிய அவசியம் குறித்து மாநில அரசு வலியுறுத்தியதன் விளைவாக, 1999-2000 ஆம் நிதியாண்டில் குடிசை ஒன்றிற்கு ரூ.7,700 வீதம் புதிய குடிசைகள் கட்டுவதற்கு ரூ.2,31,00,000-க்கான செலவினத்திற்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கட்டுமானப் பொருட்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் ஊதியம் ஆகியவற்றின் உயர்வினால் வீடுகளின் கட்டுமான மதிப்பு உயர்ந்துள்ளதால் மைய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி 1999-2000-ல் குடிசை ஒன்றிற்கு ரூ. 9,400 வீதம் 2457 குடிசைகள் கட்ட மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

மின் வசதி, தண்ணீர் வசதி மற்றும் துப்புரவு வசதி ஆகியவை முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள அகதிகளுக்கு இலவசமாக செய்து தரப்பட்டுள்ளன.

**6. மருத்துவ வசதிகள்:**

முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு, அருகில் உள்ள அரசினர் மருத்துவமனைகளிலும் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவ வசதிகள் செய்து தரப்படுகின்றன.

**7. கல்வி வசதிகள்:**

இலங்கை அகதிகளுக்கு கல்வி வாய்ப்புகள் வழங்குவதில் தமிழ்நாடு அரசு மிகவும் தாராளமாக உள்ளது. அகதிகளின் குழந்தைகள் இலங்கையில் படித்தமைக்கான பள்ளி மாற்றுச் சான்றிதழ்கள் இல்லாமலேயே தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன் கல்லூரி வரை அவர்களது கல்வியைத் தொடரவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு தமிழக அரசின் பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, விவசாயக் கல்லூரி மற்றும் தொழில்நுட்பப் பயிலகங்களில் அரசு ஆணைகளின்படி இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு சீருடைகள், மதிய உணவு, பயணச்சீட்டு, பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. முகாமிற்கு வெளியே தங்கிப் படிக்கும் குழந்தைகளுக்கான பணக்கொடை மற்றும் இதர நிவாரண உதவிகள், முகாமிலுள்ள மாணவர்களின் பெற்றோர்களிடம் வழங்கப்படுகின்றன.

[2000 மே 16

**8. அகதிகளை அவர்களின் தாயகத்திற்கு மீள அனுப்புதல்:**

சொந்த விருப்பத்தின் பேரில், தங்களது தாய்நாட்டிற்கு அல்லது வேறு வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்பும் அகதிகளுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர்கள் மூலம் இந்தியாவைவிட்டு வெளியேற அனுமதி வழங்கப்படுகிறது. இவ்வாறு வெளியேற விரும்பும் அகதிகள் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்க ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஆணையர் அலுவலகத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் தொடர்ந்து வரும் அமைதியின்மை காரணமாக அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்காக மைய அரசினால் மேற்கொள்ளப்படும் ஏற்பாடுகள் மிகக் குறைந்த வரவேற்பையே பெற்றுள்ளன.

**9. தாயகம் திரும்பியோர்:**

பர்மா, இலங்கை மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளில் வசித்து வந்த இந்திய வம்சாவழியினர், அந்த நாடுகளில் ஏற்பட்ட தேசிய அரசியல் கொள்கை மாற்றங்களின் காரணமாக இந்தியாவிற்குத் திரும்பி வரத் தொடங்கினர். 31-12-1999 வரை பர்மாவிலிருந்து 1,44,445 நபர்களும், இலங்கையிலிருந்து 4,61,586 நபர்களும், வியட்நாமிலிருந்து 2,055 நபர்களும் இந்தியாவிற்குத் திரும்பியுள்ளனர். இவ்வாறு தாயகம் திரும்புகிற இந்தியர்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மண்டபம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள கொட்டப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்படுகின்றனர். பின்னர் தோட்டத் தொழில், வேளாண்மை, வீட்டு வசதி, வியாபாரம், தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் வளர்ச்சி வங்கித் திட்டங்கள், சுய வேலைவாய்ப்புத் திட்டம் முதலிய பல்வேறு திட்டங்களில் ஏதாவது ஒரு திட்டத்தின் கீழ் இவர்களுக்கு மறுவாழ்வு உதவிகள் அளிக்கப்படுகின்றன. இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரத்தின் காரணமாக 1983 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் இந்தியர்களைத் தாயகத்திற்குத் திருப்பியனுப்பும் ஏற்பாடுகள் நிறுத்தப்பட்டு உள்ளன.

**பொதுப் பணிகள்**

அரசு அலுவலகக் கட்டடங்களை செப்பனிட்டுப் பராமரித்தல் செய்வதற்காக சிறப்புத் திட்டமாக 2000-2001 ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.30 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.



2000 மே 16]

**மண்வள, நீர்வளப் பாதுகாப்பு**

தரிசு நிலங்களை சீர்திருத்தம் செய்து மேம்படுத்துவதற்காக "தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்" கீழ் 2000-2001 ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.5 கோடி தனி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**உள்ளாட்சி மன்றங்கள்**

சிறுசேமிப்பு வசூலை அதிகரிப்பதற்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், உள்ளாட்சி மன்றங்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.38 கோடி, 2000-2001 ஆம் நிதியாண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**ஏனைய பொதுவான பணிகளும், நிருவாகப் பணிகளும்**

இந்தியக் குடியரசுத் தலைவர், குடியரசு துணைத் தலைவர், பிரதமர், அமைச்சர் பெருமக்கள், ஏனைய சீர்மக்கள் போன்ற மிக முக்கியமான பிரமுகர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தரும்போது ஆகும் செலவு இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. தேசிய அளவிலும், உலக அளவிலுமான விழா கொண்டாட்டங்கள், சிறப்பு நாட்களின்போது நடைபெறும் கொண்டாட்டங்கள் தொடர்பான செலவும் இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

**சமூகப் பாதுகாப்பும் நலனும்**

இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ள முக்கிய செலவினங்கள் வருமாறு:

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தாயகம் திரும்பியோர் துயர் தணிப்பு நடவடிக்கைக்கான மானியம் | 2326.00 |
| 2 | தொகுதி ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திற்கு தவணைக் கட்டணத் தொகை செலுத்துதல் | 2665.00 |
| 3 | முன்னாள் படை வீரர் நல இயக்ககத்திற்கு நிதி உதவி | 91.41 |

[2000 மே 16

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 4 | மாவட்ட முப்படை வீரர் நலவாரியம் | 343.33 |
| 5 | போர்க்களத்தில் பெரும் வீரச் செயல்கள் புரிந்த வீரர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மானியம் | 331 |
| 6 | முன்னாள் படைவீரர்கள் நலநிதி | 1.00 |
| 7 | இறந்துவிட்ட அரசுப் பணியாளர்களின் குடும்பத்திற்கு கருணைத் தொகை | 3500.00 |
| 8 | தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு வருங்கால வைப்பு நிதி-பணிக்கொடைத் திட்டம் | 1090.00 |
| 9 | மானிய உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கான சிறப்பு வருங்கால வைப்பு நிதி-பணிக்கொடைத் திட்டம் | 60.00 |
| 10 | கிராம அலுவலர்கள் சிறப்பு வருங்கால வைப்பு நிதி. | 12.25 |
| 11 | ஏழைத் தொழிலாளர்களுக்கு விபத்து நிவாரணத் திட்டம் | 190.00 |
| 12 | தமிழ்நாடு அரசுப் பணியாளர் சுகாதார நல நிதிக்கு அரசின் பங்குத் தொகை | 40.00 |
| 13 | விபத்தில் பலியானவர்களுக்கு நிதியுதவி | 100.00 |
| 14 | சாதி, வகுப்பு மோதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கத்தக்க இழப்பீட்டுத் தொகை | 200.00 |
| 15 | இலங்கை அகதிகளுக்கு வேட்டிகள், புடவைகள் இலவசமாக வழங்குதல் | 35.00 |
| 16 | மாநில மின்முறைப்படுத்தல் ஆணையத்திற்கு நிதியுதவி | 100.00 |
| 17 | உள்ளாட்சி மன்றங்கள் ஊக்கத் தொகை திட்டம் | 3800.00 |



2000 மே 16]

இந்த நிதி ஒதுக்கங்கள் தொடர்பான, முக்கிய பெருந்தலைப்பு வாரியான விவரங்கள் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| கணக்கு தலைப்புகள் | 1999-2000 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 1999-2000 திருத்த மதிப்பீடு | 2000-2001 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 4055. காவல் துறை குறித்த மூலதனச் செலவு | 4909.87 | 4910.03 | 5909.86 |
| 4215. குடிநீர் வழங்கல், துப்புரவு குறித்த மூலதனச் செலவு | 5000.00 | 5000.00 | 50275.00 |
| 4216. வீட்டு வசதி குறித்த மூலதனச் செலவு | 3041.22 | 2806.20 | 2487.57 |
| 4217. நகர்ப்பகுதி வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 200.03 | 1940.76 | 1426.15 |
| 4225. ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு | 4169.76 | 2985.86 | 2201.17 |
| 4250. ஏனைய சமூகப்பணிகள் குறித்த மூலதனச் செலவு | 233.79 | 270.15 | 23.04 |
| 4425. கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு | 285.01 | 360.50 | 70.60 |
| 4515. ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | - | - | 8100.00 |
| 4711. வெள்ளக் கட்டுப்பாடுத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 1765.95 | 1861.01 | 2219.87 |
| 4801. மின்சக்தித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 10000.00 | (-)72605.00 | 10000.00 |

[2000 மே 16

## இணைப்பு-III

(106 ஆம் பக்கத்திலுஷ்ள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 60

## பல்வகை மூலதனச் செலவு

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001

காவல் துறை, எழுதுபொருள்-அச்சுத் துறை, குடிநீர் வழங்கல், துப்புரவு, வீட்டு வசதி, நகர்ப்பகுதி வளர்ச்சி, ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரின் நலன், ஏனைய சமூகப் பணிகள், மீனளம், கூட்டுறவு, மலைப் பகுதிகள், வெள்ளக் கட்டுப்பாடு திட்டங்கள், மின்சக்தித் திட்டங்கள், சுற்றுலா ஆகிய துறைகள் குறித்த மூலதனச் செலவு இந்த மானியக் கோரிக்கையில் அடங்கும்.

இக்குறிப்பு இந்த மானியக் கோரிக்கையில் இடம் பெற்றுள்ள முக்கியமான நிதி ஒதுக்கங்களில் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டுகிறது.

இம்மானியக் கோரிக்கையின் சில முக்கிய திட்டங்களும் அவற்றிற்கான நிதி ஒதுக்கங்கள் குறித்த விவரங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### காவல் துறை

முறையான வீட்டுவசதியில்லாத காரணத்தால் காவல் துறைப் பணியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகளைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் மூலமாக, காவலர் குடியிருப்புகள் கட்டும் பணியை அரசு மேற்கொண்டுள்ளது. அதற்காகவும், காவலர் பயிற்சிக் கழகத்திற்கு கட்டடம் கட்டுவதற்காகவும் 2000-2001 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூ.59.10 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.



2000 மே 16]

### குடிநீர் வழங்கல் - துப்புரவு

குடிநீர் வழங்கல் திட்டங்களை செயற்படுத்துவதற்காக நகர்ப் பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு மூலதன மானியம் வழங்கிட ரூ. 80 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், குறைந்த அளவு தேவைகள் திட்டத்தின்கீழ் மாநிலத்தில் ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக ரூ.411 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

### வீட்டு வசதி

தமிழ்நாடு அரசுப் பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் பணியாளர் குடியிருப்புகள் மற்றும் வீடுகள் கட்டுவதற்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு புதிய விடுதி கட்டுவதற்கும், வீட்டு வசதி மேம்பாட்டு நிதியுதவி நிறுவனம் (HDFC) மற்றும் வீட்டுவசதி நகர்ப்பகுதி வளர்ச்சி நிறுவனம் (HUDCO) மூலம் பெறப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்த தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு 2000-2001 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூ. 24.88 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

### ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலன்

ஆதிதிராவிடர்களுக்கான அரசுப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்காக, 2000-2001ஆம் ஆண்டிற்கான வரவு—செலவுத் திட்டத்தில் ரூ.1.44 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடருக்கான அரசு மாணவியர் இல்லங்கள் கட்டுவதற்காக ரூ. 13.86 கோடி, 2000-2001ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**கூட்டுறவு**

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களில் முதலீடுகளுக்கு 2000-2001 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.2.23 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**ஊரக வளர்ச்சித் திட்டங்கள்**

ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதியின்கீழ் ஊரகச் சாலைகள், பாலங்கள், வடிகால் ஆகியவற்றை மேம்படுத்திட ரூ.81.00 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள்**

சென்னை மாநகரில் நதி மற்றும் கால்வாய் சீரமைப்புத் தூய்மைப் பணிகளை மேற்கொள்வதற்காக மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.22.00 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**மின் சக்தி**

தமிழ்நாடு மின் வாரியத்திற்கு பங்கு மூலதன உதவி வழங்குவதற்காக ரூ.100.00 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.





## இணைப்பு-IV

(106 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### மானியக் கோரிக்கை எண்—61

### மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001

இந்த மானியக் கோரிக்கையில் மாநில அரசு, பல்வேறு நிறுவனங்களுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் வழங்கும் கடன்கள், முன்பணங்கள் ஆகியவை குறித்த நிதியொதுக்கம் அடங்கும். இந்த மானியக் கோரிக்கையில் செய்யப்பட்டுள்ள முக்கிய நிதி ஒதுக்கங்கள் பற்றி இக்குறிப்பில் விளக்கப்பட்டுள்ளன. பகுதிவாரியான தனித்தனி விவரங்கள் பின்வருமாறு:—

| வளர்ச்சித் துறை | 1999-2000 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 1999-2000 திருத்த மதிப்பீடு | 2000-2001 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. பயிர் வளர்ப்பு, மண்வள, நீர்வளப் பாதுகாப்பு, மீனளம், மலைத் தோட்டங்கள், வேளாண்மை நிதியுதவி நிறுவனங்கள், ஏனைய வேளாண்மைத் திட்டங்கள், ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம். | 1995.50 | 2640.32 | 2710.10 |
| 2. வீட்டு வசதி | 1037.32 | 1079.10 | 875.62 |
| 3. நகர்ப் பகுதி வளர்ச்சி | 1354.65 | 1354.65 | 8500.03 |

[2000 மே 16

| (1) | (2) | (3) | (4) |
| --- | --- | --- | --- |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 4. குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு | 19361.84 | 19366.69 | 10923.03 |
| 5. ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் | 487.40 | 487.08 | 487.08 |
| 6. அரசுப் பணியாளர்கள் முதலியோருக்குக் கடன்கள் | 13868.28 | 15126.64 | 15743.24 |

**ஊரக வளர்ச்சி**

2. ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதியின்கீழ் ஊரகச் சாலைகள், பாலங்கள் மற்றும் வடிகால் அமைப்புகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கடனாக ரூ.27.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**குடிநீர் வழங்கல்-துப்புரவு**

3. குடிநீர் வழங்கல்-துப்புரவுத் திட்டங்களுக்காக 2000-2001 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.109.23 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு:

| | 2000-2001 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
| --- | --- |
| 1. தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் செயற்படுத்தும் திட்டங்கள் | : |
| (i) குடிநீர் வழங்கு திட்டங்கள் | 4605.54 |
| (ii) வடிகால் திட்டங்கள் | 63.76 |
| 2. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் செயற்படுத்தப்படும் திட்டங்கள்: | |
| (i) குடிநீர் வழங்கல் நிலை உயர்த்துதல் (சென்னை குடிநீர் வழங்கும் இரண்டாம் திட்டம்) | 6253.72 |



2000 மே 16]

4. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம், அரசிடமிருந்து கடன் தொகையைப் பெற்றும் பிற முகமைகளிடமிருந்து நிதியுதவி பெற்றும் பல்வேறு மூலதனத் திட்டங்களைச் செயல்படுத்துகிறது. சென்னை இரண்டாவது குடிநீர் திட்டத்தின்கீழ் சென்னையில் குடிநீர் அனுப்புகை மற்றும் பங்கீட்டு முறை நிலை உயர்த்துதல், கழிவு நீரை சுத்திகரித்தல், சென்னையின் கழிவு நீரகற்று முறையில் நடைமுறை மேம்பாடுகள் செய்தல் ஆகியவை இவ்வாரியத்தால் செயல்படுத்தப்படுகிற சில முக்கிய திட்டங்களாகும். இத்திட்டங்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**வீட்டு வசதி-நகர்ப் பகுதி வளர்ச்சி**

5. வீட்டு வசதி-நகர்ப் பகுதி வளர்ச்சிக்கான கடனாக 2000-2001 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.93.76 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கான ஊரக வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் வீட்டு வசதி சங்கங்கள் திருப்பிச் செலுத்த வேண்டிய கடனை கொடுப்பதற்காக தமிழ்நாடு வீட்டு வசதி கூட்டுறவு இணையத்திற்கு ரூ.8.76 கோடியும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் அடிப்படை வசதி மேம்பாட்டுத் தேவைகளை நிறைவு செய்வதற்கு உலக வங்கி நிதியுதவி திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு நிதி நிறுவனத்திற்குக் கடனாக ரூ.85.00 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசுப் பணியாளர்களும், ஏனையோரும்**

6. அரசுப் பணியாளர்களுக்குப் பல்வேறு வகைப்பட்ட முன் பணங்கள் வழங்குவதற்காக 2000-2001 வரவு—செலவுத் திட்டத்தில் ரூ.157.43 கோடி நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர்கள் வீடு கட்டிக்கொள்வதற்கு முன்பணம் வழங்குவதற்காக ரூ.100.00 கோடியும், இயக்க ஊர்திகள் வாங்குவதற்காக ரூ.28.50 கோடியும், கைத்தறி மற்றும் கதர் துணிகள் வாங்க முன்பணமாக ரூ.16.00 கோடியும், கல்லூரிகள், பல்தொழில் பயிற்சி பயிலகங்களில் மேற்படிப்பைத் தொடர ரூ.3.20 கோடியும், திருமணக் கடன் முன்பணமாக ரூ.4.50 கோடியும்,

[2000 மே 16

டான்சி நிறுவனத்திடமிருந்து பொருள்கள் வாங்குவதற்கு ரூ.60 இலட்சமும் முக்கிய நிதி ஒதுக்கங்களாகும்.

மேலும் அரசுப் பணியாளர்கள் கணினிகள் வாங்குவதற்கு முன்பணம் வழங்கிட ரூ.50 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. 2000-2001 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ள ஏனைய முக்கிய நிதி ஒதுக்கங்கள் பின்வருமாறு:

| | 2000-2001 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| **I. ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலன்** | |
| 1. தொழிற்கல்வி, பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு பயில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்குக் கடன்கள் | 452.08 |
| 2. கிருஸ்துவர்களாக மாறிய, ஆதிதிராவிடர்களுக்கு, தொழில் முறைக் கல்வி, பட்ட மேற்படிப்பு மற்றும் பட்டப் படிப்பு கல்வி பயில கடன்கள். | 10.00 |
| **II. கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள்** | |
| 1. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்குக் கடன்கள் | 10.00 |
| 2. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை வங்கிகளைச் சேர்ந்த பெண் உறுப்பினர்களுக்குக் கடன் | 6.25 |
| 3. நகர்ப் பகுதி கூட்டுறவு வங்கிகளைச் சேர்ந்த பெண் உறுப்பினர்களுக்குக் கடன் | 5.00 |
| 4. பெண் உறுப்பினர்களுக்கு அவ்வங்கிகளில் கடன்வாங்கும் திறனை அதிகரிப்பதற்கான பங்கு மூலதனத்திற்கு வட்டியில்லாத கடன் உதவித் தொகை | 2.00 |



2000 மே 16]

8. முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடன்களிலிருந்து வசூலாகும் கடன் தவணைத் தொகை ரூபாய் 275 கோடியே 38 இலட்சமாக இருக்கும் என்று 2000-2001 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்டுள்ளது.

## கோரிக்கை எண் 8—தேர்தல்கள்

### வரைவு உரை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

'மானியக் கோரிக்கை எண் 8 - தேர்தல்கள்' என்பதன் கீழ் 2000-2001 ஆம் நிதியாண்டின் செலவுகளுக்காக ரூ.31,71,00,000/- (ரூபாய் முப்பத்தோரு கோடியே எழுபத்தோரு இலட்சம் மட்டும்) அரசுக்கு வழங்க வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன். இம்மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்படும் நிதியில் ரூ.30,44,61,000/- பெரும்பாலும் தேர்தல் நிர்வாகத்தில் உள்ள அலுவலர் மற்றும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் பயணப்படி போன்ற பிற செலவினங்களுக்கும், இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவிக்கும் வாக்காளர் பட்டியல் திருத்தத்திற்கும் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள விடுபட்ட வாக்காளர் மற்றும் புதிதாகச் சேர்க்கப்படும் வாக்காளர்கள் ஆகியோருக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தயாரித்து வழங்குவதற்கும், ஊராட்சிகள் மற்றும் உள்ளாட்சித் தேர்தல் செலவினங்களுக்கும் தேவைப்படுகிறது. மீதமுள்ள ரூ.1,26,39,000/- மாநில தேர்த்தல் ஆணையத்தின் ஏனைய நிர்வாகப் பணிகளுக்கு தேவைப்படுகிறது.

மக்களவைக்கும், தமிழக சட்டப் பேரவைக்குமான பொதுத் தேர்தல்கள் ஒரேநேரத்தில் 1996 ஆம் ஆண்டு நடைபெற்றன. 1998 பிப்ரவரி மற்றும் 1999 செப்டம்பர் திங்களில் மக்களவைக்கு பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. எனவே தமிழக சட்டப் பேரவைக்கு 2001-ஆம் ஆண்டிலும் மக்களவைக்கு 2004 ஆம் ஆண்டிலும் அடுத்த பொதுத் தேர்தல் நடைபெற வேண்டும். தமிழக சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான அட்டவணையை இந்தியத் தேர்தல் ஆணையம் உரிய நேரத்தில் முடிவெடுக்கும்.

மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**க. அன்பழகன்,**
கல்வி அமைச்சர்

[2000 மே 16

## இணைப்பு-V

(106ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### கோரிக்கை எண் 8—தேர்தல்கள்

#### கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001

மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்பதன் கீழ் 2000-2001 ஆம் ஆண்டிற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்குச் செலவிட தேவைப்படும் தொகை ரூ.31,71,00,000/- (அனுமதிக்கப்பட வேண்டியது) ஆகும்.

**2015. தேர்தல்கள் (I திட்டத்தில் சேராதது)**

102. தேர்தல் அதிகாரிகள்

எஎ. சட்டப் பேரவை மற்றும்
நாடாளுமன்றத் தொகுதிகள் ரூ.4,33,64,000/-

**103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்**

எஎ. சட்டப் பேரவைத் தொகுதிகள் ரூ.7,57,17,000/-

**104. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரேநேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

எஎ. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரேநேரத்தில் நடைபெறும் தேர்தல்கள் ரூ.21,81,000/-

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

எஎ. இடைத் தேர்தல்கள் ரூ.21,000/-
(அடையாள ஒதுக்கீடு)

எபி. மக்களவைக்குத் தேர்தல் ரூ.22,000/-
(அடையாள ஒதுக்கீடு)

**106. மாநிலச் சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

எஎ. மாநில சட்டப் பேரவை ரூ.9,97,60,000/-



2000 மே 16]

**108. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குதல்**

எஎ. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் ரூ.8,33,96,000/-

**109. ஊராட்சிகள், உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடத்துவதற்கான செலவுகள் ரூ.33,14,000/-**

2070. ஏனைய நிர்வாகப் பணிகள்

எபி. மாநில தேர்தல் ஆணையம் ரூ.90,47,000/-

கூட்டுக: திருப்பி வசூலிப்பவை ரூ.2,78,000/-

மொத்தம் **ரூ.31,71,00,000/-**

2. மேற்சொன்ன இனங்களுக்கான மதிப்பீடுகள், கீழே விளக்கமாகக் கூறப்பட்டுள்ள பல்வேறு இனங்களுக்குச் செலவு செய்யப்படுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

**102. தேர்தல் அதிகாரிகள்**

எஎ. சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள் மதிப்பீடு ரூ.4,33,64,000/-

தலைமைச் செயலகத்தில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அலுவலகப் பணியில் உதவி புரிய ஒரு கூடுதல் தலைமைத் தேர்தல் அதிகாரி, ஒரு இணை தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் இரு துணைச் செயலாளர்கள், ஒரு சார்புச் செயலாளர் ஆகியோர் உள்ளனர்.

இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையாளர், தலைமைச் செயலர் அவர்களுக்கு அனுப்பியுள்ள 22-8-1997 நாளிட்ட கடிதத்தில் வாக்காளர் பட்டியலை கணினிமயமாக்குவதற்கும் தமிழகத்தில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் பணிக்காகவும், தகுந்த ஓர் அதிகாரியை தெரிவு செய்து தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அடுத்ததாக நியமனம் செய்ய மாநில அரசு கருதலாம் என அறிவுறுத்தியதன் அடிப்படையில் தற்போதுள்ள இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி பதவி தவிர, கூடுதல் தலைமைத் தேர்தல் அதிகாரி (கணினிமயம்) பதவி ஒன்று உருவாக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மேலும் தேர்தல் அறிக்கைகளைத்

[2000 மே 16

தயார் செய்வதற்கும், புகைப்பட அடையாள அட்டை வழங்கும் பணிக்காகவும், துணைச் செயலர் பதவி உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதுதவிர, ஓர் உதவி தலைமைத் தேர்தல் அதிகாரி பதவி, சார்புச் செயலாளர் நிலையில் இருந்த பணியிடம் 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது துணைச் செயலர் பதவியாக உயர்த்தப்பட்டது. எதிர்வரும் 2001 ஆம் ஆண்டு நடைபெற உள்ள தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தல்களுக்காக இந்தத் துணைச் செயலர் பதவி நீட்டிக்கப்பட்டு உள்ளது. மேலும் இத்துறையில் ஆறு பிரிவுகள் நிரந்தரமாகவும், ஒரு பிரிவு தற்காலிகமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், வருவாய் கோட்ட அதிகாரிகளின் அலுவலகங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய மாநகராட்சி ஆணையர்களின் அலுவலகங்கள் ஆகியவற்றில் தேர்தல் சம்பந்தப்பட்ட பணிகளை கவனிப்பதற்கென நிரந்தரமாக ஓர் உதவியாளர் பணியிடம் உள்ளது. சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில் சென்னை மாநகர ஆணையர் அலுவலகத்தில் ஒரு மாவட்ட வருவாய் அதிகாரி(தேர்தல்கள்) என்ற பதவி தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு வட்டாட்சியர், மூன்று உதவியாளர்கள், ஓர் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர், ஒரு பதிவேடு எழுத்தர், ஓர் அலுவலக உதவியாளர் ஆகிய நிரந்தரப் பணியிடங்கள் உள்ளன.

மேலே குறிப்பிட்ட அலுவலர்களின் ஊதியச் செலவுகள், பயணச் செலவுகள், அலுவலக செலவினம், இதர செலவினம், தபால் தந்தி தொலைபேசி கட்டணங்கள், தேர்தல் சம்பந்தப்பட்ட சிறப்பு பணிகளுக்காக வழங்கப்படும் ஊதியங்கள் போன்றவை இக்கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.

**103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்**

எள. சட்டப் பேரவைத் தொகுதிகள்

மதிப்பீடு

ரூ.7,57,17,000/-

இம்மாநிலத்திலுள்ள சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுவதற்கான எல்லாவிதமான



2000 மே 16]

செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் கணக்கிடப்படும். இப்பணிக்காக தற்காலிகமாக நியமிக்கப்படும் அலுவலர்கள், பணியாளர்களின் ஊதியம், எழுதுபொருள் அச்சிடும் செலவுகள் போன்றவையும் இத்தலைப்பின்கீழ் அடங்கும்.

இதுதவிர சென்னை ஆவணக் காப்பகத்தின் வாக்காளர் பட்டியல்களைப் பராமரிப்பதற்கான நிரந்தரப் பணியிடங்களான ஓர் உதவியாளர், ஒரு பதிவேடு எழுத்தர் ஆகியோரின் செலவினங்களுக்கும் இத்தலைப்பின்கீழ் ஒதுக்கீடு தேவைப்படுகிறது.

1950ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 21-வது பிரிவின்படி நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றத்திற்கு நடைபெறும் ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்கு முன்னரும் மற்றும் இடைத் தேர்தலுக்கு முன்னரும், வாக்காளர் பட்டியல்கள் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் விதிகளுக்குட்பட்டு திருத்தி அமைக்கப்பட வேண்டும். இந்தியத் தேர்தல் ஆணையம் தகுதியேற்படுத்தும் நாளை அறிவித்து திருத்தம் மேற்கொள்ள வேண்டுமென ஆண்டின் எந்தக் காலத்தில் அறிவுறுத்தினாலும், திருத்தம் மேற்கொள்ளப்படும். இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி எந்த ஒரு தொகுதியின் வாக்காளர் பட்டியலையும் சிறப்புத் திருத்தம் செய்யும் பணி மேற்கொள்ளப்படலாம்.

வாக்காளர் பட்டியல்கள் வாக்குத் பதிவு அதிகாரிகளால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி வாக்குப் பதிவு அதிகாரிகளின் உதவியுடன் தயாரித்து திருத்தப்படுகின்றன. தலைமைத் தேர்தல் அதிகாரியின் மேற்பார்வை அறிவுரைகள் மற்றும் கட்டுப்பாட்டின்கீழ் மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரில் மாநகராட்சி ஆணையாளரும் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் திருத்துதல் பணிகளை ஒருமுகப்படுத்தி கண்காணித்து வருகின்றனர்.

1999ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் மக்களவைத் தேர்தல்கள் நடந்து முடிந்த பின், இந்தியத் தேர்தல் ஆணையம் 1-1-2000-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல்களை சுருக்க முறையில் திருத்த வேண்டுமென அறிவித்தது. வரைவு வாக்காளர் பட்டியல்கள் 15-11-1999 அன்று வெளியிடப்பட்டன. சேர்த்தல், நீக்கல் போன்றவற்றிற்கு மனுக்கள் 30-11-1999 வரை பெறப்பட்டன. இந்த மனுக்கள் மீது முடிவு எடுக்கப்பட்ட பின் 2000 ஆம் ஆண்டின் துணை வாக்காளர் பட்டியல்கள் 7-1-2000 அன்று இறுதியாக வெளியிடப்பட்டன.

ஒவ்வொரு ஆண்டின் கடைசி மூன்று மாதங்களில் மேற்கொள்ளப்படும், வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியில் ஈடுபடுத்தப்படும் பணியாளர் ஊதியம், வாக்காளர் பட்டியல் அச்சிடுதல் போன்ற செலவினங்களுக்காக இந்தத் தலைப்பின்கீழ் நிதி தேவைப்படுகின்றது.

**கணினிப்பொறி உள்கட்டமைப்பு**

வாக்காளர் பட்டியல்கள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட வேண்டும் என்ற இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைக்கிணங்க மாநில தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலகங்களிலும் கணினிப் பொறி மையங்கள் அமைக்கப்பட்டு, இக்கணினிகளை இயக்க கணினி வல்லுநர்கள் இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு 24-3-1999 முதல் பணிபுரிந்து வருகின்றனர். இதற்குத் தேவையான மென்பொருட்களை காமத்டெக்னாலிஜி என்ற தனியார் நிறுவனம் தயாரித்து கொடுத்துள்ளது. கணினி வல்லுநர்களுக்கான மதிப்பூதியம் இந்தத் துணைக் கணக்கில் பற்று வைக்கப்படுகிறது. இந்தத் செலவில் பாதியை மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது.

**104. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

எஎ. மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் நடைபெறும் தேர்தல்கள்

மதிப்பீடு ரூ.21,81,000/-

மக்களவைக்கும், சட்டமன்றப் பேரவைக்கும் ஒரேநேரத்தில் தேர்தல் நடைபெறும்போது ஏற்படும் செலவினங்கள் அனைத்தும் இதன்கீழ் மேற்கொள்ளப்படுகிறது. 1996ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவைக்கும் மக்களவைக்கும் தேர்தல்கள் ஒரேநேரத்தில் நடைபெற்றன. இவை தவிர மாவட்டங்களில் வாக்குப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. தனியார் கட்டடங்களுக்கான வாடகை, அதற்கான காவலர்களின் சம்பளம், வாக்குப் பெட்டிகளை பராமரிக்கும் செலவுகள் மற்றும் இத்துறையில் உள்ள மொத்த வாகனங்களின் பராமரிப்பு, பெட்ரோல் செலவுகள் போன்ற ஆண்டுதோறும் ஏற்படக்கூடிய செலவினங்களும் இதன்கீழ்



அடங்கும். மேற்கூறிய செலவினங்களுக்காக இத்தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

எஎ. இடைத் தேர்தல்கள்

மதிப்பீடு ரூ.21,000/- (அடையாள ஒதுக்கீடு)

மக்களவைத் தொகுதிகளில் இடைத் தேர்தல்கள் நடைபெற்றால் அதற்காகும் அனைத்துச் செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். நாடாளுமன்றத்தில் தமிழகத்தில் உள்ள தொகுதிகளில் காலியிடம் ஏதும் இல்லாததால் இத்தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் அனைத்தையும் மைய அரசே ஏற்றுக்கொள்கிறது.

எபி. நாடாளுமன்ற மக்களவைக்குத் தேர்தல்

மதிப்பீடு ரூ.22,000/- (அடையாள ஒதுக்கீடு)

மக்களவைக்கு மட்டும் பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் எல்லாம் முதலில் இத்தலைப்பின்கீழ் பதியப் பெற்று பின்னர் மைய அரசிடமிருந்து பெறப்படும்.

1999ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் 13-வது மக்களவைக்கு பொதுத் தேர்தல் நடைபெற்றது. இதன் காலம் 2004 ஆம் ஆண்டு முடிவுறும். எனவே இத்தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டும் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் அனைத்தையும் மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.

**106. மாநில சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

எஎ. மாநில சட்டப் பேரவை

மதிப்பீடு ரூ.9,97,60,000/-

மாநில சட்டமன்றப் பேரவைக்கு மட்டும் பொதுத் தேர்தலோ அல்லது இடைத் தேர்தலோ நடைபெற்றால் அதன் தொடர்பான செலவினங்கள் இதன்கீழ் மேற்கொள்ளப்படும். மக்களவைக்கும், தமிழக

[2000 மே 16

சட்டப் பேரவைக்கும் பொதுத் தேர்தல் 1996 ஆம் ஆண்டு ஒரே நேரத்தில் நடைபெற்றன. எனவே சட்டமன்றப் பேரவைக்கு அடுத்த பொதுத் தேர்தல் 2001 ஆம் ஆண்டு நடைபெற வேண்டும். சட்டப் பேரவையில் தற்போது திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்கான இடம் காலியாக உள்ளது. 2001 ஆம் ஆண்டு நடைபெற உள்ள தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தலுக்கு செலவிட பகுதி நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது. பொதுத் (தேர்தல்கள்) துறையில் உள்ள போட்டோ நகல் எடுக்கும் கருவி, மூன்று மின் தட்டச்சுகள் மற்றும் ஒரு மின் படிபெருக்கி ஆகியவற்றின் பராமரிப்புக்காகவும் இதர செலவினங்களுக்காகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான செலவினங்கள் அனைத்தையும் மாநில அரசு மேற்கொள்கிறது.

**108. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குதல்.**

எஎ. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம்.

மதிப்பீடு ரூ.8,33,96,000/-

வாக்காளர் பதிவு விதிகள் 1960-ன் விதி 28-ன்படி வாக்காளர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டைகள் வழங்கும் அதிகாரம் தேர்தல் ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் நடத்துகை விதிகள் 1961-பிரிவு 35(3) மற்றும் 37(2)(பி)ன் படி ஒரு தொகுதியில் உள்ள வாக்காளர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட்டிருப்பின், அந்த வாக்காளர்கள் செலவினங்களுக்காகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஓட்டுச்சாவடியில் வாக்காளர் அடையாள அட்டைகளை காண்பிக்க வேண்டும். அவ்வாறு காண்பிக்க மறுத்தால், அவர்களுக்கு வாக்குச் சீட்டு வழங்கவும், வாக்களிக்க அனுமதி மறுக்கவும் இந்த விதிகளில் வகை செய்யப்பட்டுள்ளது. இவ்விதிகளை மேலும் செவ்வனே செயற்படுத்த வாக்காளர் பட்டியலின் படிவத்தை இந்தியத் தேர்தல் ஆணையம் 1997-ல் மாற்றியமைத்துள்ளது. இப்புதிய படிவத்தில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வரிசை எண்ணிற்கென ஒரு தனிக்கட்டமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திருத்தத்தை 1997 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலிலிருந்து அறிமுகப்படுத்தியுள்ளது.



2000 மே 16]

தேர்தல் ஆணையத்தின் இந்த அறிவுரைக்கிணங்க, தமிழ்நாட்டில் வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ் வாக்காளர்களைப் புகைப்படமெடுத்து, அதன் பிறகு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகளைத் தயாரித்து வழங்கும் பணி, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் 1995 ஆம் ஆண்டு ஜூன் மாதம், ஒரு வாக்காளர் அடையாள அட்டைக்கு ரூ.15/- என்கிற வீதத்தில் ஒப்படைக்கப்பட்டது. மூன்று சுற்று புகைப்படமெடுக்கும் பணிகள் முடிவடைந்த நிலையில் மொத்தமுள்ள 4,55,77,323 வாக்காளர்களில் 3,07,77,496 வாக்காளர்கள் புகைப்படமெடுக்கப்பட்டுள்ளனர். இது மொத்தமுள்ள வாக்காளர்களில் 68.74 சதவிகிதமாகும். இப்பணிக்காக இதுவரை அரசு ரூ.40 கோடியை முன்பணமாக தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. (ரூ. 16 கோடி ஜூலை 1995-லும், ரூ.4 கோடி ஏப்ரல் 1996-லும் ரூ.16 கோடி நவம்பர் 1996-லும் மற்றும் ரூ.4 கோடி டிசம்பர் 1998-லும் வழங்கப்பட்டது.)

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கும் திட்டப் பணிக்காக 14-8-1995 அன்று தோற்றுவிக்கபட்ட சிறப்புப் பணியாளர்கள் பணியிடங்கள் 13-8-1997 வரை நீட்டிக்கப்பட்டன. பிறகு அத்தியாவசியமாகத் தேவைப்பட்ட குறிப்பிட்ட சில பணியிடங்கள் மட்டும் தக்க வைத்துக் கொள்ளப்பட்டு இப்பணியிடங்களுக்கு 15-10-2000 வரை நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கும் பணி 1995 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டபோதிலும் 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவை மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு நடைபெற்ற பொதுத் தேர்தல்களினாலும். 1998 ஆம் ஆண்டு 12ஆவது மக்களவை மற்றும் 1999 ஆம் ஆண்டு 13வது மக்களவைக்கு நடைபெற்ற பொதுத் தேர்தல்களினாலும், உள்ளாட்சித் தேர்தல்களினாலும் இடையே தமிழ்நாடு மின்னணு நிறுவனம் பொதுமக்களுக்கான குடிமைப்பொருள்களை வழங்கும் குடும்ப அட்டைகளை தயாரித்து உடனடியாக வழங்க வேண்டியிருந்த பணியை மேற்கொண்டதாலும் வாக்காளர் பட்டியல் திருத்தங்கள் இடையே அறிவிக்கப்படுவதாலும் இப்பணியினை நடைமுறைப்படுத்ததுவதிலும் காலதாமதம் ஏற்பட்டதோடு முன்னேற்றமும் தடைப்பட்டது. மேலும் மின்னணு புகைப்படம் எடுத்து அதனை வாக்காளர் பட்டியல்களின்

[2000 மே 16

விவரங்களுடன் இணைத்தல்; மின்னணு நிறுவனத்தின் மாநிலப் பொது மையத்தின் சிறு அளவிலான வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகளைத் தயாரித்தல்; மாவட்ட அளவில் அவற்றைச் சரிபார்த்தல்; தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தில் அச்சிடுதல், பிறகு மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மூலமாக வாக்காளர் பதிவு அலுவலர்களால் அவற்றை சம்பந்தப்பட்ட வாக்காளர்களுக்கு வழங்குதல் என இப்படி படிப்படியாகச் செய்யப்படுகிறது.

13ஆவது மக்களவைக்கான தேர்தலுக்குப் பிறகு 1-1-2000 நாளினை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தத்திற்கு தேர்தல் ஆணையம் ஆணயிட்டது. 7-1-2000 ஆம் நாளன்று வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலின்படி மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 4,79,78,404 என உயர்ந்தது. ஆகவே 7-1-2000 நாளன்று மின்னணு புகைப்படம் எடுக்க வேண்டிய எஞ்சிய வாக்காளர்களின் எண்ணிக்கை 1.72 கோடி என்ற அளவில் உள்ளது. வாக்காளர் புகைப்பட அட்டைகள் வழங்குவதில் ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்ட திட்ட முறைகளில் ஏற்பட்ட நடைமுறைச் சிக்கல்களைக் களைய மையத்தில் புகைப்படம் எடுத்த உடன் புகைப்பட அடையாள அட்டைகள் மையத்திலேயே உடனடியாக வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் பரிசோதனை முறையில் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதியில் மேற்கொள்ளப்பட்டு வெற்றியடைந்ததைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, இதனைச் செயல்படுத்துவதற்கான நிறுவனங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இப்பணியினை முழுமையாக இந்நிறுவனங்களிடம் ஒப்படைப்பதற்கு முன்னதாக இவர்களுடைய பணியின் செயலாக்கத் திறமையை மேற்காணும் பொருட்டு இரண்டு சட்டமன்றத் தொகுதிகளில் பரிசோதனை முறையில் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. அடையாள அட்டையில் வாக்காளர் அடையாள அட்டையின் தொடர் எண்ணைக் குறிப்பிடுவதில் எழுந்துள்ள சிக்கலைத் தவிர்ப்பதற்கு தேர்தல் ஆணையம் அறிவுரைகள் வழங்கப்பட உள்ளதால், இப்பணியில் சற்று தேக்கம் ஏற்பட்டுள்ளது. அஸ்ஸாம், கேரளா, தமிழ்நாடு, மேற்கு வங்காளம் மற்றும் பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களுக்கு அடுத்த ஆண்டின் முற்பகுதியில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலின்போது வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் உபயோகப்படுத்துவதற்கு இந்திய தேர்தல்



2000 மே 16]

ஆணையம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள உறுதி கொண்டுள்ளது. இக்கட்டாயத்தின் அடிப்படையில் இதற்கான பணிகளை எவ்வளவு விரைவில் முடிக்க இயலுமோ அவ்வளவு விரைவில் முழு மூச்சுடன் முடிக்க வேண்டும் என இம்மாநிலத்தின் அனைத்துத் தேர்தல் அதிகாரிகளுக்கும் இந்திய தேர்தல் ஆணையம் அறிவுரை வழங்கியுள்ளது.

**109. ஊராட்சிகள், உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடத்துவதற்கானச் செலவுகள்**

மதிப்பீடு ரூ.33,14,000/-

ஊராட்சி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2070. ஏனைய நிர்வாகப் பணிகள்**

எபி. மாநில தேர்தல் ஆணையம்

மதிப்பீடு ரூ.90,47,000/-

மாநில தேர்தல் ஆணையத்தின் நிர்வாகப் பணிகளுக்கு இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கூட்டுக: திருப்பி வசூலிப்பவை ரூ.2,78,000/-

இத்துறையில் பணிபுரியும் அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை முன்பணம் போன்ற இனங்களிலிருந்து திரும்பப் பெறப்படும் தொகையை திருப்பி வசூலித்தல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,78,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## உள்ளாட்சித் தேர்தல்கள்

இந்திய அரசமைப்பின் 73ஆவது மற்றும் 74ஆவது சட்டத் திருத்தங்கள், மக்களாட்சி முறையில் உள்ளாட்சி அமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதன் வாயிலாக பரவலாக்கப்பட்ட வலுவான உள்ளாட்சி நிர்வாகத்திற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக நீதிக்கும் உறுதியளிக்கிறது. மேற்கூறிய 73ஆவது சட்டத் திருத்தம் ஊராட்சிகளில் அடித்தள அளவில் பரவலாக்கப்பட்ட ஜனநாயக அமைப்பிற்கு வழி வகுக்கிறது.

[2000 மே 16

2. அரசமைப்புச் சட்டத்தின் சில சிறப்பம்சங்களை உள்ளடக்கிய வகையில் 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டது. இச் சட்டம் பல புதிய சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது. அவைகள் முறையே, (1) சிற்றூராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி என்னும் மூன்றடுக்கு ஆட்சி முறையை உருவாக்கி ஆளுதல்; (2) தங்களது வளர்ச்சிப் பணியில் மக்களும் பங்கெடுத்துக்கொள்ளும்பொருட்டு கிராம சபைகளை உருவாக்குதல்; (3) உள்ளாட்சி அமைப்புகளுக்கென மாவட்டத் திட்டக் குழுக்களை உருவாக்குதல்; (4) உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தான பட்டியல் உறுதியாக்கம் செய்தல்; (5) மூன்றடுக்கு அமைப்பில் உள்ள அனைத்து பதவியிடங்களுக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கென அந்தந்த உள்ளாட்சி அமைப்பு பகுதியில் உள்ள மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கேற்ப சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்தல்; (6) உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு பிரிவினைகள் செய்ய வழி வகுத்தல்; (7) உள்ளாட்சி அமைப்புகளுக்கு குறித்த காலத்தில் முறையாகவும், சுதந்திரமாகவும், நியாயமாகவும் தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்தல்; (8) சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாவட்ட ஊராட்சி நடவடிக்கைகளில் வாக்களிக்கும் உரிமை இன்றி பதவி வழி உறுப்பினர்களாக பங்குபெற வகை செய்தல்; மற்றும் (9) கிராமப்புற உள்ளாட்சி அமைப்பின் ஆட்சி எல்லையிலிருந்து பேரூராட்சிகளை நீக்குதல் ஆகும்.

3. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் கீழ்மட்டத்திலிருந்து ஜனநாயக முறைப்படி பரவலாக்கப்பட்ட அமைப்பினை உருவாக்குவதே மேற்கூறிய 74ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, சென்னை மாநகராட்சி சட்டம், 1919, மதுரை மாநகராட்சி சட்டம், 1971 மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம், 1981 ஆகியன கீழ்வரும் நோக்கங்களுக்கு ஏற்றவாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளன:-

(1) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு பிரிவினைக்கு வரையறை செய்தல்; (2) அனைத்து பதவிகளிலும் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்தல்; (3) அனைத்து பதவிகளிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான அந்தந்த நகர்ப்புற பகுதியில் உள்ள அவ்வின மக்கள் தொகையின் விகிதாசாரத்திற்கேற்ப சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்தல்; (4)



2000 மே 16]

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தொடர்ச்சியாக குறித்த காலங்களில் சுதந்திரமாகவும் நியாயமாகவும் தேர்தல்கள் நடத்துதல்; (5) ஒவ்வொரு நகர்ப்புற அமைப்பும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு நிலையாக தொடர்ந்து செயல்பட வழிவகை செய்தல்; (6) சட்டமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் நடவடிக்கைகளில் வாக்களிக்கும் உரிமை இன்றி பதவி வழி உறுப்பினர்களாக பங்கு பெற வழிவகை செய்தல்; (7) கிராமப்புற உள்ளாட்சி அமைப்பின் ஆட்சி எல்லையிலிருந்து பேரூராட்சிகளை நீக்கி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின்கீழ் கொணர்தல். கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம் மாநகராட்சிகளுக்கும் பொருந்தும். பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகள் சம்பந்தப்பட்ட அனைத்து சட்டங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (தமிழ்நாடு சட்டம் 9/1999) இயற்றப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இச்சட்டம் விரைவில் நடைமுறைக்கு கொண்டு வரப்படவுள்ளது.

**உள்ளாட்சிகளுக்குத் தேர்தல் நடத்துதல்**

4. "சாதாரணத் தேர்தல்கள்" என்ற சொற்றொடர், ஓர் உறுப்பினருக்கென நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிவுறும்போது அதனை நிரப்ப நடத்தப்படும் தேர்தலைக் குறிக்கும். அதாவது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் உள்ளாட்சிகளுக்கான பொதுத் தேர்தல்களை இது குறிக்கும். "தற்செயல் தேர்தல்கள்" என்பது கீழ்க்கண்ட காரணங்களின் விளைவாக நடத்தப்படும் இடைத் தேர்தல்களைக் குறிக்கும்:—

(1) உறுப்பினரின் மரணம்;

(2) உறுப்பினர் தனது பதவியை ராஜினாமா செய்தல்;

(3) தேர்தல் மனுவினால் உறுப்பினர் பதவியை இழத்தல் மற்றும்

(4) சட்டத்தில் குறிப்பிட்டுள்ள தகுதியின்மைகளுக்கு ஆளாகி பதவியை இழத்தல்.

## தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்

5. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையமானது, இந்திய அரசமைப்புச் சட்டக்கூறு 243K மற்றும் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 239இன்படியும் உள்ளாட்சி அமைப்புகளின் அனைத்து தேர்தல்களுக்கான வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதற்கும், தேர்தல் நடத்துவதற்கான கண்காணிப்பு, நெறிப்படுத்துகை, கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக தோற்றுவிக்கப்பட்ட ஒரு சட்டரீதியான அமைப்பாகும். அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல்களையும் நடத்தும் பொறுப்பு, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையாளரின் தலைமையில் இயங்கும் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர், இரண்டு ஆண்டுகளுக்கு பதவி வகிக்கலாம். மொத்தத்தில் ஆறு ஆண்டுகளுக்கு மிகைப்படாமல் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் மேற்கொண்டு இருமுறை தொடர்ந்து மறு நியமனம் செய்யப்படலாம். தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டவர் தனது பதவிக் காலத்தில் 62 வயதை நிறைவு செய்தால் பதவியிலிருந்து ஓய்வு பெறுவார்.

6. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் முதல் ஆணையாளர் அரசால் நியமனம் செய்யப்பட்டு 15-7-1994 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். இரண்டாவது மாநிலத் தேர்தல் ஆணையாளரின் பதவிக் காலம் 15-7-1998 முதல் 10-2-2000 வரையாகும். தற்பொழுதுள்ள மூன்றாவது மாநிலத் தேர்தல் ஆணையாளர் 14-2-2000 அன்று பொறுப்பேற்றுள்ளார். தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையாளருக்கு உதவியாக ஒரு முதுநிலை இந்திய ஆட்சிப் பணி அதிகாரி செயலாளராகவும் மற்றும் அரசு தலைமைச் செயலகத்தின் நிதி, சட்டத் துறையிலிருந்தும், மற்றும் ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகத் துறை மற்றும் வருவாய்த் துறைகளிலிருந்து நியமிக்கப்பட்ட மூத்த அதிகாரிகளும் இதர பணியாளர்களும் செயல்புரிகின்றனர். தேவையான உள் அமைப்புகளுடனும் போதிய வசதிகளுடனும் மாநிலத் தேர்தல் ஆணைய அலுவலகம் நிறுவப்பட்டு வடபழனி, சென்னை-26, என்னும் இடத்தில் தனியார் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.



## உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல், 1996

7. தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் நடைபெறாமல் இருந்த நிலையில், தற்போதைய அரசு 1996 ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களை உடனடியாக நடத்துவதென்று கொள்கை அளவிலான முடிவை அறிவித்தது. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் இத்தேர்தல்களை நடத்த துரித நடவடிக்கை மேற்கொண்டது. இது சிக்கலான பொறுப்பு நிறைந்த பணியாகும். தேர்தல் நடத்துவதற்கான சட்டம், விதிகள், அறிவுரைகள், நடைமுறைகள் புதிதாக உருவாக்கப்பட்டன. அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதென்பது இந்தியாவில் எந்த மாநிலமும் அனுபவித்திராத ஒரு கூடுதல் சுமையாகும். தேர்தல் பொருட்களை கொள்முதல் செய்வதற்கு எடுக்கப்படும் பெரிய அளவிலான நடவடிக்கைகள் மட்டுமல்லாது, மிக அதிக எண்ணிக்கையிலான வாக்குச் சாவடிகள், வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கை, பணியமர்த்தப்படும் தேர்தல் பணியாளர்கள் மற்றும் காவல் துறையினரின் எண்ணிக்கை, வாக்களிப்போரின் எண்ணிக்கை, போட்டியின் தீவிரம் ஆகிய காரணங்களால் சட்டமன்ற மற்றும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்களை ஒப்பிடுகையில் உள்ளாட்சித் தேர்தல்கள் அளவிலும் தரத்திலும் மிகப் பிரமாண்டமானதும் கடுமையானதும் ஆகும். சட்டமன்றத்திற்கும் நாடாளுமன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய பதவி இடங்கள் 273 (234+39=273) மட்டுமே. ஆனால் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பதவி இடங்கள் 1,17,284 ஆகும். உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களுக்கு மொத்தம் 22,301 வகையான வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட்டன. ஆனால் சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்றத்திற்கு மொத்தம் 273 வகையான வாக்குச் சீட்டுகள் மட்டுமே அச்சடிக்கப்பட்டன.

8. தற்போது தமிழ்நாட்டில் 12,619 சிற்றூராட்சிகளும், 385 ஊராட்சி ஒன்றியங்களும், 28 மாவட்ட ஊராட்சிகளும் உள்ளன. இந்த மூன்று வகையான அமைப்புகளில் உள்ள வார்டுகள் மற்றும் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பதவியிடங்கள் பற்றிய விவரம் பின்வருமாறு:—

[2000 மே 16

## அட்டவணை 1

**ஊராட்சி, உள்ளாட்சி அமைப்பிலுள்ள வார்டுகள் மற்றும் பதவியிடங்களின் விவரங்கள்**

| நாட்டுப்புற உள்ளாட்சி அமைப்பு | மொத்த வார்டுகள் எண்ணிக்கை | மொத்த பதவியிடங்கள் | |
|---|---|---|---|
| | | உறுப்பினர்கள் | தலைவர்கள் |
| சிற்றூராட்சி | 41,155 | 97,512 | 12,619 |
| ஊராட்சி ஒன்றியம் | 6,505 | 6,505 | - |
| மாவட்ட ஊராட்சி | 649 | 649 | - |
| மொத்தம் | 48,309 | 1,04,666 | 12,619 |

9. மூன்றடுக்கு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள வார்டுகள் மற்றும் 6 மாநகராட்சிகள், 102 நகராட்சிகள் மற்றும் 611 பேரூராட்சிகளுக்கு நேரடித் தேர்தல்கள் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பதவியிடங்கள் பின்வருமாறு:-



2000 மே 16]

## அட்டவணை 2

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள வார்டுகள் மற்றும் பதவியிடங்களின் விவரம்**

| நகர்ப்புற உள்ளாட்சி | எண்ணிக்கை | மொத்த வார்டுகள் | மொத்த வார்டு உறுப்பினர்கள் | மொத்த மேயர்/ தலைவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| மாநகராட்சி | 6 | 474 | 474 | 6 |
| நகராட்சிகள் | 102 | 3,392 | 3,392 | 102 |
| பேரூராட்சிகள் | 611 | 9,794 | 9,794 | 611 |
| மொத்தம் | 719 | 13,660 | 13,660 | 719 |

மொத்தம் உள்ள 636 பேரூராட்சிகளில், 25 பேரூராட்சிகள் சிற்றூராட்சிகளாக மாற்றப்பட்டுள்ளன. எனினும் இப்பேரூராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏற்காடு பேரூராட்சி தவிர சிற்றூராட்சிகளிலும் தொடர்ந்து பதவியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏற்காடு பேரூராட்சி ஏற்காடு ஊராட்சி ஒன்றியமாக மாற்றப்பட்டு அவ்வமைப்புக்கு உறுப்பினர்கள் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

### சாதாரணத் தேர்தல்கள்

10. தமிழ்நாட்டில் உள்ளாட்சிகளுக்கான சாதாரணத் தேர்தல்கள் இரு கட்டமாக முறையே 9-10-1996 மற்றும் 12-10-1996 ஆகிய நாட்களில் நடைபெற்றது. நேரடித் தேர்தல்கள் யாவும் 17-10-1996 அன்றுடன் முடிக்கப்பட்டது. குற்றாலம் மற்றும் பவானிசாகர் பேரூராட்சிகளுக்கான சாதாரணத் தேர்தல்கள் ஜூன் 1998-ல் நடத்தப்பட்டன. புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஏற்காடு ஊராட்சி ஒன்றியத்திற்கும் மற்றும் அதில் அடங்கியுள்ள 9 சிற்றூராட்சிகளுக்கும் பிப்ரவரி 2000-ல் தேர்தல்கள்

நடத்தப்பட்டன. நேரடித் தேர்தல்கள் முடிவுற்றதும் மாநிலத் தேர்தல் ஆணையம் மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு தலைவர்/துணைத் தலைவர் பதவியிடங்களுக்கான தேர்தல்களையும் நடத்தியது. இதைத் தவிர மாநகராட்சிகளில் துணை மேயர் பதவிக்கும், மற்ற நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் துணைத் தலைவர் பதவிக்கும் தேர்தல்களையும் நடத்தியது. இந்த தேர்தல்கள் 25-10-1996 அன்று நடைபெற்றன.

11. மேற்படி தேர்தல் மட்டுமல்லாது, மாநகராட்சிகளில் வார்டு குழுத் தலைவர் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சட்டப் பிரிவுகளின்கீழ் அமைக்கப்பட வேண்டிய குழுக்கள் மற்றும் நிலைக் குழுக்களின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க மாநிலத் தேர்தல் ஆணையத்தால் தேர்தல்கள் நடத்தப்பட்டன. மொத்தத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் அனைத்தும் சாராரும் பாராட்டும் வகையில் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்தப்பட்டன.

## இடைத் தேர்தல்கள்

12. உள்ளாட்சி அமைப்புகளில் ஏற்படும் காலி இடங்களின் அடிப்படையில் மாநிலத் தேர்தல் ஆணையர் ஒவ்வொரு ஆண்டும் இரு முறை இடைத் தேர்தல்களை நடத்திட வேண்டியுள்ளது. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் தற்செயல் காலியிடங்களை நிரப்பிட இதுவரை டிசம்பர் 1996, ஜூன் 1997, நவம்பர் 1997, ஜூன் 1998, டிசம்பர் 1998, மே 1999 மற்றும் ஜனவரி 2000 ஆகிய ஏழு இடைத் தேர்தல்களை நடத்தியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-



## அட்டவணை 3

**ஊராட்சி அமைப்புகளில் ஏற்பட்ட காலியிடங்கள் பதவியிடங்களுக்கு இடைத் தேர்தல்கள் நடத்தப்பட்ட விவரங்கள்**

| இடைத் தேர்தல் நடத்தப்பட்ட மாதமும் வருடமும் | சிற்றூராட்சி வார்டு உறுப்பினர் | சிற்றூராட்சித் தலைவர் | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| டிசம்பர் 1996 | 1,800 | 22 | 7 | - | 1,829 |
| ஜூன் 1997 | 242 | 35 | 13 | 1 | 291 |
| நவம்பர் 1997 | 289 | 24 | 9 | 2 | 324 |
| ஜூன் 1998 | 271 | 24 | 9 | 2 | 306 |
| டிசம்பர் 1998 | 859 | 65 | 33 | - | 957 |
| மே 1999 | 477 | 52 | 16 | 4 | 549 |
| ஜனவரி 2000 | 734 | 63 | 26 | 4 | 827 |
| **மொத்தம்** | **4,672** | **285** | **113** | **13** | **5,083** |

[2000 மே 16

## அட்டவணை 4

**நகராட்சி அமைப்புகளில் ஏற்பட்ட காலியிட பதவியிடங்களுக்கு இடைத் தேர்தல்கள் நடத்தப்பட்ட விவரங்கள்**

| இடைத் தேர்தல்கள் நடத்தப்பட்ட மாதம்/வருடம் | மாநகராட்சி | | நகராட்சி | | பேரூராட்சி | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | உறுப்பினர் | மேயர் | உறுப்பினர் | தலைவர் | உறுப்பினர் | தலைவர் | |
| டிசம்பர் 1996 | - | - | 2 | - | 22 | - | 24 |
| ஜூன் 1997 | 3 | - | 8 | 1 | 25 | - | 37 |
| நவம்பர் 1997 | - | - | 13 | - | 30 | 1 | 44 |
| ஜூன் 1998 | 2 | - | 7 | - | 45 | 3 | 57 |
| டிசம்பர் 1998 | 3 | - | 11 | - | 74 | 5 | 93 |
| மே 1999 | 4 | - | 7 | - | 36 | 2 | 49 |
| ஜனவரி 2000 | 1 | - | 12 | - | 65 | 1 | 79 |
| மொத்தம் | 13 | - | 60 | 1 | 297 | 12 | 383 |

### காலி பதவியிடங்கள் பற்றிய மதிப்பீடு

13. உள்ளாட்சி அமைப்புகளில் ஏற்படும் காலியிடங்கள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளின் அடிப்படையில் மாநிலத் தேர்தல் ஆணையத்தால் இடைத் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. 28-02-2000 ஆம் தேதியின்படி நேரடி தேர்தல்களை நடத்திடுவதற்கு கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு காலியிடங்கள் உள்ளன. இந்தக் காலியிடங்களுக்கு தேர்தல் நடத்திட மாநிலத் தேர்தல் ஆணையம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.



2000 மே 16]

## அட்டவணை 5

**ஊராட்சி அமைப்புகளில் 28-2-2000 தேதியில் காலியாக உள்ள பதவியிடங்கள்**

| வ.எண். | வகைப்பாடு | சிற்றூராட்சி உறுப்பினர் | சிற்றூராட்சித் தலைவர் | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் |
|---|---|---|---|---|---|
| 1. | இறப்பு | 28 | 1 | 4 | - |
| 2. | இராஜினாமா | 20 | - | 1 | - |
| 3. | தகுதியின்மையாக்குதல் | 32 | 1 | - | - |
| 4. | 10/96 முதல வேட்பு மனு தாக்கல் இல்லாமை | 44 | 4 | - | - |
| 5. | 12/98 முதல் வேட்பு மனு தாக்கல் இல்லாமை | 11 | - | - | - |
| | மொத்தம் | 135 | 6 | 5 | - |

[2000 மே 16

## அட்டவணை 6

**நகராட்சி அமைப்புகளில் 28-2-2000 தேதியில் உள்ள காலியிட பதவியிடங்கள்**

| வ. எண் | வகைப்பாடு | மாநகராட்சிகள் | | நகராட்சிகள் | | பேரூராட்சிகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மேயர் | உறுப்பினர் | தலைவர் | உறுப்பினர் | தலைவர் | உறுப்பினர் |
| 1. | இறப்பு | - | 3 | - | 3 | 1 | 11 |
| 2. | இராஜினாமா | - | - | - | 2 | - | 6 |
| 3. | தகுதியின்மையாக்குதல் | - | - | - | - | - | 5 |
| 4. | 10/96 முதல் வேட்புமனு தாக்கல் இல்லாமை | - | - | - | 1 | - | 2 |
| | மொத்தம் | - | 3 | - | 6 | 1 | 24 |

### வரவு-செலவு ஒதுக்கீடு

14. ஊராட்சி அமைப்புகளுக்கு சாதாரண மற்றும் இடைத் தேர்தல்கள் நடத்திடுவதற்கான நிதியை அரசு வழங்குகிறது. நகராட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல் மற்றும் இடைத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவினங்களை நகராட்சி அமைப்புகள் தங்கள் நிதியிலிருந்தே மேற்கொள்கின்றன. இதற்கு முந்தைய ஆண்டுகளில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் 2000-2001 ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு விவரங்கள் பின்வருமாறு:—



2000 மே 16]

| கணக்குத் தலைப்பு | 1996-97 உள்ளபடியான செலவு | 1997-98 உள்ளபடியான செலவு | 1998-99 உள்ளபடியான செலவு | 1999-2000 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 1999-2000 திருத்திய மதிப்பீடு | 2000-2001 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | | |
| (i) 2070.00 ஏனைய நிர்வாகப் பணிகள் -001. 1. ஏபி. மாநிலத் தேர்தல் ஆணையம் | 72.19 | 67.41 | 73.39 | 82.81 | 79.82 | 90.47 |
| (ii) 2015.00.109-செலவுகள் ஊராட்சி-உள்ளாட்சி அமைப்பு தேர்தல் நடத்துதல் 1.ஏஏ. ஊராட்சி ஒன்றிய தேர்தல்கள் | 3033.28 | 16.66 | 17.31 | 20.82 | 78.47 | 33.11 |
| (iii) 2015.00.109.1. ஏடி. நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் நடத்துதல் | 746.11 | 8.69 | 0.13 | .. | 0.01 | 0.03 |

[2000 மே 16

## இணைப்பு-VI

(178ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### அரசுப் பணியிடங்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோரின் இட ஒதுக்கீடு சம்பந்தமான வெள்ளை அறிக்கை

2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை 24-3-2000 அன்று சட்டமன்றப் பேரவையில் வைத்து நான் ஆற்றிய உரையில் "மாநில அரசுப் பணியிடங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் ஆகியோரின் இட ஒதுக்கீடு, அவர்களின் தற்போதைய பிரதிநிதித்துவம் மற்றும் இதன் மீது அரசு எடுத்து வருகின்ற நடவடிக்கைகள் பற்றிய வெள்ளை அறிக்கை ஒன்று சட்டமன்றத்தில் நடப்புக் கூட்டத் தொடரில் வைக்கப்படும்'' என்று அறிவித்திருந்தேன். எனது அந்த அறிவிப்பினையொட்டி இந்த வெள்ளை அறிக்கை அவை முன் வைக்கப்படுகிறது.

2. தமிழ்நாட்டில் இட ஒதுக்கீட்டின் வரலாறு:

2.1. ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் சமூக-பொருளாதார மேம்பாட்டிற்கான கொள்கைகளைப் பின்பற்றுவதில் தமிழ்நாடு அரசு முன்னோடியாக விளங்கிவருகிறது. "வகுப்புவாரியான முதல் அரசாணை" (வகுப்புவாரியான இடஒதுக்கீடு) 1921 ஆம் ஆண்டிலேயே வெளியிட்டு இடஒதுக்கீட்டிற்கான வரலாற்றை தமிழ்நாடு தொடங்கி வைத்தது. விகிதாச்சார அடிப்படையிலான அரசு நியமனங்கள் 1927 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டன. இந்த நியமன முறை 1947 ஆம் ஆண்டு வரை பின்பற்றப்பட்டது. 1934 ஆம் ஆண்டு சென்னை மாகாண பிற்படுத்தப்பட்டோர் லீக் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு என்று தனி இட ஒதுக்கீடு வேண்டுமென்று அவர்கள் வைத்த கோரிக்கையையொட்டி பிற்படுத்தப்பட்ட இந்துக்களுக்கென (Backward Hindus) தனி ஒதுக்கீட்டை ஏற்படுத்தி, 1947 ஆம் ஆண்டு அரசு ஆணை பிறப்பித்தது.

2.2. இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவு 16(4)-ன்படி அரசுப் பணிகளில் பின்தங்கிய வகுப்பினரின் பங்கேற்பு போதுமான அளவில் இல்லை என அரசு கருதும்பொழுது, அப்பின்தங்கிய வகுப்பினருக்கு



2000 மே 16]

நியமனங்களில் அல்லது பணியிடங்களில் ஒதுக்கீட்டு விதிகள் அமைக்கலாம்.

2.3. இடஒதுக்கீடு வரலாற்றில் 1951 ஆம் ஆண்டு மிக முக்கியமான ஆண்டாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டம் செயலாக்கத்திற்கு வந்தவுடனேயே வகுப்புவாரியான இடஒதுக்கீட்டு அரசு ஆணைக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. அந்த எதிர்ப்பின் காரணமாக உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன. உச்சநீதிமன்றம் வகுப்புவாரியான இடஒதுக்கீடு ஆணை செல்லாது என தீர்ப்பு அளித்தது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் மிகப்பெரிய எழுச்சியும், போராட்டமும் ஏற்பட்டது. இந்தப் போராட்டத்தை தந்தை பெரியார் அவர்கள் தலைமையிலான திராவிடக் கழகமும், பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகமும் முன்னின்று நடத்தின. இந்தப் போராட்டத்திற்கு அன்றைய ஆளும் கட்சியான காங்கிரசும் ஆதரவளித்தது குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்து மத்திய அரசு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தமாக 15(4) என்ற பிரிவை ஏற்படுத்தியது. புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட 15(4) என்ற பிரிவின் மூலமாகவே கல்வி மற்றும் சமூக நிலையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு ஏற்படுத்த வேண்டுமென்ற நடைமுறை தோன்றியது.

1951 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 20 நியமனங்கள் கொண்ட சுழற்சி முறை, பின்வரும் விழுக்காட்டின்படி அறிமுகப்படுத்தப்பட்டது:—

| | | |
|---|---|---|
| ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் | - | 15% |
| பிற்படுத்தப்பட்டோர் | - | 25% |
| பொதுப் போட்டி | - | 60% |

மாநிலங்களின் ஒருங்கிணைப்பிற்குப் பின், 1954-ல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் தொகையைக் கணக்கிற்கொண்டு நியமனங்களில் இடஒதுக்கீடு பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டது:—

| | | |
|---|---|---|
| ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் | - | 16% |
| பிற்படுத்தப்பட்டோர் | - | 25% |
| பொதுப் போட்டி | - | 59% |

2.4. அரசு 1969-ல் திரு. ஆ. நா. சட்டநாதன் அவர்களின் தலைமையில் பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு ஒன்றை அமைத்தது. சட்டநாதன் குழுப் பரிந்துரையின் அடிப்படையில், இட ஒதுக்கீட்டின் விழுக்காடு பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டது:— [அரசாணை (நிலை) எண் 695, சமூக நலத்துறை, நாள் 7-6-1971]

| | | |
|---|---|---|
| ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் | - | 18% |
| பிற்படுத்தப்பட்டோர் | - | 31% |
| பொதுப் போட்டி | - | 51% |

அரசு 1979 ஆம் ஆண்டு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், அவ்வகுப்பினருக்குரிய சலுகைகளைப் பெற வேண்டுமானால், அவர்களின் ஆண்டு வருமானம் ரூ.9000-க்கு மேற்பட்டிருக்கக்கூடாது என்று உச்சவரம்பு விதித்து ஆணையிடப்பட்டது. அந்த ஆணையை மறுத்து எழுந்த பெரும் எதிர்ப்பின் காரணமாக 1980-ல் அரசு இதனை மறுஆய்வு செய்து வருமான வரம்பினை நீக்கியது.

1980-ல் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு விழுக்காட்டை 31%-ல் இருந்து 50% ஆக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டது. (அரசாணை (நிலை) எண் 73, சமூக நலத்துறை, நாள் 1-2-1980)

1982 ஆம் ஆண்டு திரு. ஜெ.அ. அம்பாசங்கர் அவர்களின் தலைமையில் இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவை அரசு அமைத்தது. அந்தக் குழு 1985 ஆம் ஆண்டு அறிக்கையை அரசுக்கு அளித்தது.

மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு தனி ஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வந்ததையொட்டி, 1989ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோருக்கான 50 விழுக்காடு இடஒதுக்கீட்டில், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு 20 விழுக்காடு ஒதுக்கியும், மீதமுள்ள 30 விழுக்காட்டை பிற்படுத்தப்பட்டோருக்கு ஒதுக்கியும் ஆணை வெளியிடப்பட்டது. (அரசாணை (நிலை) எண் 242, பிற்படுத்தப்பட்டோர் நலன், சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத் துறை, நாள் 28-3-1989] இதன்படி இட ஒதுக்கீட்டு அளவு பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டது:—

| | | |
|---|---|---|
| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் | - | 18% |
| பிற்படுத்தப்பட்டோர் | - | 30% |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் | - | 20% |
| பொதுப்போட்டி | - | 32% |



1990 ஆம் ஆண்டில் சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பினை ஒட்டியும், தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியினர் மக்கள்தொகையை கருத்திற்கொண்டும், பொதுப் போட்டிக்கான ஒதுக்கீட்டிலிருந்து, தனியே 1 விழுக்காடு பழங்குடியினருக்கு மீதமுள்ள 31 விழுக்காடு பொதுப்போட்டிக்கும் வைத்து, ஆணை வெளியிடப்பட்டது. [அரசாணை (நிலை) எண் 1090, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 22-6-1990]

2.5. 1990 ஆம் ஆண்டு முதல் இடஒதுக்கீடு விழுக்காடு பல்வேறு வகுப்பினருக்கு பின்வருமாறு இருந்து வருகிறது:—

| | | | |
|---|---|---|---|
| (1) | பொதுப் போட்டி | - | 31% |
| (2) | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | - | 30% |
| (3) | மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் | - | 20% |
| (4) | ஆதிதிராவிடர் | - | 18% |
| (5) | பழங்குடியினர் | - | 1% |

**இட ஒதுக்கீட்டினைக் கண்காணிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்:**

3.1. பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நலனையும் முன்னேற்றத்தையும் கருத்திற்கொண்டு, இவ்வரசால் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலனுக்கான திட்டங்களை செயல்படுத்துவதற்காக 1969 ஆம் ஆண்டிலேயே பிற்படுத்தப்பட்டோருக்கென்று தனி இயக்ககம் உருவாக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்டோர் நலனைக் கவனிப்பதற்கென்று தனியே அமைச்சர் நியமிக்கப்பட்டார்.

3.2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனைக் கவனிக்கும் பொருட்டு சமூக நலத் துறை பின்வரும் இரு புதிய துறைகளாகப் பிரிக்கப்பட்டது:

(அ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை;

(ஆ) பிற்படுத்தப்பட்டோர் நலன் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத் துறை.

[அரசாணை (நிலை) எண் 415, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 25-7-1988]

[2000 மே 16

மேலே இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலன், முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத் துறை மேலும் பின்வருமாறு பிரிக்கப்பட்டது:

(அ) பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் துறை;

(ஆ) சமூக நலன் மற்றும் சத்துணவு திட்டத் துறை.

(அரசாணை (நிலை) எண் 665, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 18-12-1989)

மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கான திட்டங்களை செயல்படுத்துவதற்காக 1989 ஆம் ஆண்டில் தனி இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டது.

பழங்குடியினரின் அன்றாடப் பிரச்சினைகளை உடனுக்குடன் ஆய்ந்து அரசு தீட்டும் அரிய திட்டங்கள் தகுதி வாய்ந்த பழங்குடியினர்களுக்கு விரைவில் சென்றடைய வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு அரசு தனியாக பழங்குடியினர் நல இயக்ககம் எனும் ஒரு இயக்ககத்தை புதிதாக ஏற்படுத்தியுள்ளது.

(அரசாணை நிலை எண் 29, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 31-03-2000).

3.3. நேரடி நியமன முறையிலும் மற்றும் பணிமாற்றல் நியமன முறையிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு நிரப்பப்படாத பணியிடங்களை ஓராண்டுக்கு மட்டும் முன்கொணர்ந்து நிரப்பும் முறைக்கு (Carry forward) 1977 ஆம் ஆண்டு ஆணையிடப்பட்டது.

3.4. நேரடி நியமனத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டு நிரப்பப்படாத காலியிடங்களை மற்ற வகுப்பினரால் நிரப்பக் கூடாதென்ற தடை (Ban on dereservation) 27-7-1989 ஆம் நாளிட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் அரசாணை (நிலை) எண் 1352-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. பிற்படுத்தப்பட்டோர் நலன், சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத் துறையின் அரசாணை (நிலை) எண் 731, நாள் 21-8-1989-ல் நேரடி நியமனத்தில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு, ஒதுக்கப்பட்டு நிரப்பப்படாத காலியிடங்களை மற்ற வகுப்பினரால் நிரப்பக் கூடாதென்ற தடை அறிமுகப்படுத்தப்பட்டு அதன் மூலம்



2000 மே 16]

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினருக்கு நேரடி நியமனத்தில் முன்கொணர் முறை கொண்டுவரப்பட்டது.

3.5. அரசுத் துறைகளிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணியிடங்கள் முறையாக நிரப்பப்படுவதைக் கண்காணிப்பதற்கும், அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு நிரப்பப்படாத பணியிடங்களை ஒரு காலவரையறைக்குள் நிரப்புவதற்குரிய வழிமுறைகளைக் கண்டறிவதற்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் தலைமையிலும், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் தலைமையிலும் இரு உயர்நிலைக் குழுக்கள் முறையே 13-9-1997 ஆம் நாளிட்ட, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அரசாணை (நிலை) எண் 156 மற்றும் 1-6-1998 ஆம் நாளிட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் அரசாணை (நிலை) எண் 25-ல் அமைக்கப்பட்டன. 15-2-1999 மற்றும் 16-2-1999-ல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இரு உயர்நிலைக் குழுக்களும் வழங்கிய பரிந்துரைகள் ஆய்வு செய்யப்பட்டன.

முக்கியமான இப்பிரச்சினையின் ஆழமான தன்மையைக் கருதி இரு குழுக்களின் பரிந்துரைகளைப் பரிசீலனை செய்து அமைச்சரவை முடிவெடுப்பதற்கேதுவாக அறிக்கை வழங்கிட, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் ஆகியோரைக் கொண்ட அமைச்சரவை துணைக் குழு ஒன்று அமைக்கலாம் என அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அதன்படி, இரு உயர்நிலைக் குழுக்களின் பரிந்துரைகள் மற்றும் அவற்றின் மீதான அமைச்சரவை துணைக் குழுவின் அறிக்கைகள் 11-5-1999-ல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வைக்கப்பட்டன.

**3.6. அதைத் தொடர்ந்து அரசால் முக்கியமான பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன:**

(i) நேரடி நியமனங்களில் பத்தும் அதற்கு மேலும் எண்ணிக்கை உள்ள பணிநிலை பிரிவுகளுக்கு மட்டும் இடஒதுக்கீடு பின்பற்ற வேண்டும்

[2000 மே 16

என்று இருந்ததை மாற்றி ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கை உள்ள பணிநிலை பிரிவுகளுக்கும் (Cadre Strength) இடஒதுக்கீட்டு முறையை அமல்படுத்தலாம்; இவ்விட ஒதுக்கீட்டு முறையை நடப்பிலுள்ள இனசுழற்சி அடிப்படையில் பின்பற்றலாம். [அரசாணை (நிலை) எண் 162, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை (ஆர்) நாள் 21-9-1999]

(ii) நேரடி நியமன முறையில் (Direct Recruitment) தற்போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு உள்ள நிரப்பப்படாத பின்னடைவுப் பணியிடங்களை முன்கொணர்ந்து, நிரப்பும் முறையை (carry forward) பிற்படுத்தப்பட்டோருக்கும் விரிவுபடுத்தலாம். பணிமாறுதல் முறை மூலம் நியமனங்களில் (Recruitment by transfer) நிரப்பப்படாத பணியிடங்களை முன்கொணர்ந்து நிரப்பும் முறையை (carry forward) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு உள்ளது போல், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினருக்கும் விரிவுபடுத்தலாம். (அரசாணை நிலை எண் 34, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 2-5-2000).

(iii) இடஒதுக்கீட்டு முறையை பல்கலைக்கழகங்கள், தலைமைக் கூட்டுறவு நிறுவனங்கள்/வங்கிகள், மாவட்ட மத்தியக் கூட்டுறவு நிறுவனங்கள்/வங்கிகள், பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றிற்கும் விரிவுபடுத்தலாம். (கடித எண் 56753/ஆர்/99-3, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (ஆர்) துறை. நாள் 28-10-1999).

(iv) 1-4-1989 முதல் ஒவ்வொரு பதவியிலும் நிரப்பப்படாமல் உள்ள பின்னடைவுப் பணியிடங்களை (Backlog vacancies) முன்கொணர்ந்து (carry forward) அவைகளை உடனடியாக நிரப்புவது சிரமமாக இருப்பினும், அத்தகைய பின்னடைவுப் பணியிடங்களின் எண்ணிக்கையை உடனடியாக மதிப்பீடு செய்ய வேண்டும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் ஆகியோர்களுக்கு உரிய பின்னடைவுப் பணியிடங்களை ஒவ்வொரு பதவியிலும் கணக்கில் கொண்டு அதனை ஈடுசெய்து நிரப்பும் வகையில் அத்துறையிலுள்ள நுழைவுப் பதவியில் (Entry level post) படிப்படியாக ஐந்தாண்டு காலத்திற்குள் நியமனம் செய்யலாம். 1-4-1989 முதல் பின்னடைவு அடிப்படையிலான குறைவுக்



2000 மே 16]

காலிப் பணியிடங்கள் குறித்த விவரங்களைக் கண்டறிந்து அதற்கீடான நுழைவுப் பணியிடங்களைத் தோற்றுவிப்பதற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை / பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை ஆகியவை கடித எண் 12360/99-9, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (ஆர்) துறை, நாள் 8-6-1999-ல் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையும் ஆணை வெளியிட்டுள்ளது. (அரசாணை நிலை எண்.33, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 2-5-2000).

(v) எங்கெல்லாம் இடஒதுக்கீட்டு முறைக்கு வகை செய்யப்பட்டிருக்கிறதோ, அங்கெல்லாம் இனசுழற்சி முறையை சரியாகக் கடைபிடிக்காத நியமன அதிகாரிகள் மீது தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீடு) விதி 17(பி)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து கடுந்தண்டனை வழங்கலாம். (அரசாணை (நிலை) எண் 162, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் 21-9-1999).

**4. அரசுத் துறைகள்/பொதுத்துறை நிறுவனங்கள், தலைமை கூட்டுறவு நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், மாநகராட்சிகள் மற்றும் சட்டப்படியான நிறுவனங்களில் இடஒதுக்கீட்டுப் பிரிவினரின் எண்ணிக்கை பற்றிய ஆய்வு:—**

ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினரின் எண்ணிக்கை குறித்து 105 அரசுத் துறைகளுள், 96 துறைகளில் ஆய்வு செய்யப்பட்டது. மீதமுள்ள பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கான தணிக்கைத் துறை, ஒழுங்கு நடவடிக்கைத் துறை, பள்ளிசாரா முதியோர் கல்வித் துறை, ஆளுநரின் செயலகம், உயர்நீதிமன்றம், மோட்டார் வண்டிகள் பராமரிப்புத் துறை, ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சித் துறை, சட்டப்படியான வாரியத்தின் தலைமை தணிக்கையாளர் மற்றும் தணிக்கையாளர் மற்றும் பொது சுகாதாரம் பயிற்சி ஆகிய 9 துறைகளில் விரைவில் ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது. ஆய்வு செய்யப்பட்ட துறைகளில் அவர்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளன:

அரசுத் துறைகளில் 1-1-1999 அன்றைய நிலையில் ஆதிதிராவிடர் பழங்குடியினர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோரின் எண்ணிக்கை பற்றிய விவரம் ஆய்வு செய்யப்பட்ட மொத்த துறைகள்: 96 [2000 மே 16

| வரிசை எண் (1) | பணியிடத் தொகுதி (2) | பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை (3) | தற்பொழுது உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை (4) | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆதி திராவிடர் (அ) | பழங் குடியினர் (ஆ) | மி.பி.ப. /சீ.ம. (இ) | பி.ப. (ஈ) |
| 1 | ஏ | 4588 | 475 | 17 | 384 | 2571 |
| 2 | பி | 169682 | 22822 | 744 | 27923 | 93426 |
| 3 | சி | 424131 | 62687 | 3742 | 64302 | 212259 |
| 4 | டி | 153158 | 41414 | 2194 | 22947 | 52889 |
| மொத்தம் | | 751559 | 127398 | 6697 | 115556 | 361145 |

பொதுத் துறை நிறுவனங்கள், தலைமை கூட்டுறவு நிறுவனங்கள், மாநகராட்சிகள், சட்டப்படியான நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுள் 96 ஆய்வு செய்யப்பட்டன. இன்றைய நிலையில் மொத்தப் பணியிடங்களில் பிரிவு வாரியாக உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

பொதுத்துறை நிறுவனங்கள், தலைமைக் கூட்டுறவு நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், மாநகராட்சிகள் மற்றும் சட்டப்படியான நிறுவனங்களில் 1-1-1999 அன்றைய நிலையில் ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோரின் எண்ணிக்கை பற்றிய விவரம் ஆய்வு செய்யப்பட்டவை: 96



2000 மே 16]

| வரிசை எண் (1) | பணியிடத் தொகுதி (2) | பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை (3) | தற்பொழுது உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை (4) | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆதி திரா விடர் (அ) | பழங் குடியினர் (ஆ) | மி.பி.ப. /சீ.ம. (இ) | பி.ப. (ஈ) |
| 1 | ஏ | 3660 | 116 | 3 | 281 | 2173 |
| 2 | பி | 24297 | 2088 | 77 | 2316 | 14260 |
| 3 | சி | 214302 | 41681 | 1250 | 34827 | 108278 |
| 4 | டி | 76496 | 27483 | 1236 | 10074 | 29986 |
| மொத்தம் | | 318755 | 71368 | 2566 | 47498 | 154697 |

5. இட ஒதுக்கீட்டுப் பிரிவினருக்கு சில பணிப் பிரிவுகளில் குறைவான பங்கேற்பு ஏற்படுவதற்கு பின்வரும் காரணங்களைக் குறிப்பிடலாம்:

(i) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்கான இட ஒதுக்கீடு அளவுகள் காலப்போக்கில் மாறுதல்களுக்கு உள்ளாகி இருக்கின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தொடக்கத்தில், அதாவது 1951 ஆம் ஆண்டு 15 சதவீதம் என்று இருந்த இட ஒதுக்கீடு அளவு 1971-ல் தான் 18 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. பழங்குடியினருக்கு என்று தனியாக தொடக்கத்தில் ஒதுக்கீடு இல்லாத நிலையில் 1990-ல் தான் 1 சதவீதம் இட ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கிடு 1951 ஆம் ஆண்டு 25 சதவீதமாக இருந்தது. 1971-ல் அது 31 சதவீதமாக உயர்ந்து, அதற்குப் பிறகு 1980-ல் 50 சதவீதமாக உயர்ந்திருக்கிறது. 1951 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோருக்கு 25 சதவீதம் இட ஒதுக்கீடு இருந்த நிலையில் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கென தனி இட ஒதுக்கீடு கிடையாது. ஆனால் 1989-ல்தான் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 சதவீதம் என்று தனியே இட ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டது. மேலும் 1989-ல் தான் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும், மிகப்

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கும் ஒதுக்கப்பட்டு நிரப்பப்படாத காலியிடங்களை மற்ற வகுப்பினரைக் கொண்டு நிரப்பப்படுவதற்கு தடை அறிமுகப்படுத்தப்பட்டது. 2-5-2000 அன்றுதான், பிற்படுத்தப்பட்டோருக்கு உள்ள நிரப்பப்படாத பின்னடைவுப் பணியிடங்களை முன்கொணர்ந்து நிரப்பும் முறை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இப்படி இட ஒதுக்கீடு வரலாற்றில் அளவு ரீதியாக ஏற்பட்ட மாறுதல்கள் காரணமாக பணி இட ஒதுக்கீடுகளிலும் ஏற்றத்தாழ்வுகள் இருந்து வந்திருக்கின்றன. இந்த ஏற்றத் தாழ்வுகளை சரிசெய்வதற்கு இடஒதுக்கீடு அளவு ஒரு குறிப்பிட்ட நிலையை அடைந்த 1-4-1989 என்ற நாளை அடிப்படை அளவுகோலாக வைத்துக் கணக்கிடப்படுகிறது.

(ii) நேரடி நியமனங்களிலும், குறிப்பிட்ட எட்டுப் பணிகளில் பணிமாற்றல் முறை நியமனங்களிலும் இட ஒதுக்கீடு கடைபிடிக்கப்படுகிறது. இதுவரை, பத்தும் அதற்கு மேலும் எண்ணிக்கை கொண்ட பணி நிலை பிரிவுகளுக்கு மட்டுமே நேரடி நியமன முறையில் இடஒதுக்கீடு கடைபிடிக்கப்பட்டது. பெரும்பாலும் தொகுதி 'ஏ'-ல் உள்ள பதவிகள், பத்துக்கும் கீழ் எண்ணிக்கை கொண்ட பணிநிலை பிரிவுகளாக உள்ளன. இதனைக் கருத்திற்கொண்டு ஒன்றிற்கு மேற்பட்ட எண்ணிக்கை கொண்ட பணி நிலை பிரிவுகளுக்கும் இடஒதுக்கீடு பொருந்துமென ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இட ஒதுக்கீட்டின்கீழ் பெரும்பாலான பதவிகள் கொண்டு வரப்படும் என்பதை இது உறுதி செய்யும்.

(iii) அரசுப் பணியில் நேரடி நியமனத்தைத் தவிர, பதவி உயர்வு முறை மூலமும் நியமனங்கள் செய்யப்படுகின்றன. நிர்வாக சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின்படி, நேரடி நியமனம் மற்றும் பதவி உயர்வு நியமனத்திற்கு 1:2 என்ற விகிதம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. கருணை அடிப்படை நியமனங்கள் அரசு ஊழியர் எந்த வகுப்பினர் என்று பாராது வழங்கப்படும் சலுகை என்பதால், மேற்படி நியமனங்களுக்கு இடஒதுக்கீட்டு விதி பின்பற்றப்படுவதில்லை.

(iv) இதுவரை நடைமுறையில் இருந்த இன சுழற்சி முறையில் (Roster) முதல் பத்து இடங்களில் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஒரு இடம் என்று இருந்ததை தற்போது ஆதிதிராவிடருக்கு இருப்பது போல் இரண்டு இடங்கள் என்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக முதல் பத்து



பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும்போது மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு பணி நியமனங்களில் இதுவரை ஏற்பட்டு வந்த குறைவு இனி சரிசெய்யப்படும்.

6. 1-4-1989 முதல் இதுவரை பணி நியமனங்களில் ஏற்பட்டுள்ள பின்னடைவு தொடர்பாக சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து பெறப்பட்டுள்ள விவரங்கள் பின்வருமாறு தொகுத்து அளிக்கப்படுகின்றன:—

அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட பின்னடைவு காலியிடங்களின் விபரங்கள்:—

| வ்ரிசை எண் | பணியிடத் தொகுதி | * பிற்படுத்தப் பட்டோர் | மிகப் பிற்படுத்தப் பட்டோர்/ சீர்மரபினர் | ஆதி திராவிடர் | பழங் குடியினர் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | ஏ | - | 97 | 168 | 5 |
| 2 | பி | - | 542 | 1545 | 130 |
| 3 | சி | - | 2300 | 2537 | 825 |
| 4 | டி | - | 2324 | 657 | 134 |
| | மொத்தம் | - | **5263** | **4907** | **1094** |

*2-5-2000 அன்றுதான் பிற்படுத்தப்பட்டோருக்கு முன்கொணர் முறை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

7. 1-4-1989 முதல் இடஒதுக்கீடு வகுப்பினரின் பணி நியமனங்களில் பின்னடைவைச் சரிசெய்யும் பொருட்டு, 11-5-1999 அன்று பின்னடைவைக் கணக்கிடவும், இதற்குச் சமமான எண்ணிக்கையில் நுழைவு நிலைப் பதவிகளை உருவாக்கவும் அரசு முடிவெடுத்தது. இது, ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர்-சிறுபான்மையினர் நலத் துறை ஆகிய துறைகளில் கண்காணிக்கப்பட்டு வருகிறது. நுழைவு நிலைப் பதவிகள் படிப்படியாக நிரப்பப்படும் என்பதற்கு அரசு உறுதி அளிக்கிறது. ஆதிதிராவிடர்

மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட பின்னடைவு காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு சிறப்பு நியமன நடவடிக்கைகளை இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அதைப்போல பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு தற்போது அளிக்கப்பட்டுள்ள முன்கொணர் சலுகையினால், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ள இடஒதுக்கீடு அளவு குறைவின்றி பாதுகாக்கப்படும்.

அரசு தொடர்ந்து மேற்கொண்டு வரும் இந்த முயற்சிகளுக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த வெள்ளை அறிக்கையை அவை முன் வைக்கிறேன்.

D
V211,31'800
P00-107.1

322784
சென்னை-600 008

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.